2831

T.N.L.A Debates

Official Report

Vol IV No 142

27, 28th March 1985

V211,31 N85
N85.4.142
136376

27/86

வெளியீடு 25-10-1985 Issued 25—10—1985

2831

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

புதன்கிழமை, மார்ச் 27, 1985 - தொகுதி IV எண் 1
Wednesday the 27th March 1985 - Volume IV No 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009
**Legislative Assembly Secretariat, Fort St. George,**
**Madras - 600 009**

**விலை [ரூ. 3-50 காசுகள்]** **[ Price Rs. 3-50 paise**

D
V2ll,31 N85
N85·4·1 92

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்
136376
சென்னை-600 008.

# உள்ளடக்கம்

27—3—1985


| | பக்கங்கள் |
|---|---|
| i) தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும் | i—ii |
| ii) Personal of the Government of Tamil Nadu | v—vii |
| iii) தமிழ்நாடு சட்டமன்ற பேரவையின் முக்கிய அலுவலர்கள் | ix—x |
| iv) தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை உறுப்பினர்கள் (தமிழ் அகர வரிசைப்படி (தயாரிக்கப்பட்ட பெயர்ப் பட்டியல் | xi—xx |
| 1. வினாக்கள்— விடைகள்— | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. | 1—19 |
| 2. அறிவிப்புகள்— | |
| (அ) அரசினர் சட்ட முன்வடிவுகள் (மே. செ.) | 19—20 |
| (ஆ) ஆளுநரிடமிருந்து வந்துள்ள செய்தி .. | 20 |
| (இ) முன்பண மானியக் கோரிக்கைகள் மொழிதல் (ஆ.இ.). | 48 |
| (ஈ) நிதி ஒதுக்க (உடனடிச் செலவிற்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு 1985 (ஆ. இ.). | 52 |
| 3. ஒழுங்குப் பிரச்சினை— | |
| உறுப்பினர்களது அறிவிப்புகளை எடுத்துக் கொள்ளாமல் அமைச்சரை தன்னிலை விளக்கம் அளிக்க அனுமதித்தல் | 20—37 |
| 4. தன்னிலை விளக்கம்— | |
| தன் வீடு சோதனையிடப் பெற்றதாக வெளியான செய்தி குறித்து உள்ளாட்சித் துறை அமைச்சரின் அறிக்கை. | 37—39 |
| 5. கவன ஈர்ப்பு— | |
| இலங்கைத் தமிழின மக்களுக்கும் தமிழக மீனவர்களுக்கும் ஏற்பட்டு வரும் இன்னல்கள் | 39—48 |
| 6. முன்பண மானியக் கோரிக்கைகள் 1985–86 .. | 49—52 |

7. அரசினர் சட்ட முன்வடிவுகள்—

(அ) நிதி ஒதுக்க (உடனடிச் செலவிற்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு 1985. 52—53

(ஆ) நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு 1985. .. 53—78

(இ) கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவு 1985. 78—91

(ஈ) பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு 1985. 91—118

(உ) பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு 1985. 115—122

8. அறிக்கை அளித்தல் (விதி-111) —

மின் அணுவியல் சாதனங்களின் உற்பத்தியை விரைவாக்கிடும் பாரதப் பிரதமரின் திட்டம். 113—115

9. பேரவைமுன் வைக்கப்பெறற ஏடுகள் 122—125

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.

### தமிழ்நாடு ஆளுநர் :

திரு. சுந்தர்லால் குரானா.

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்): பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர் மற்றும் அனைத்திந்தியப் பணியாளர்கள், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்ட துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்பு, திட்டம், சர்க்கரைப் பாகு கழிவு, தொல்பொருள் இயல், மதுவிலக்கு (மது அருந்த அனுமதி வழங்கல் நீங்கலாக), ஆயத்துறை மற்றும் பயண இசைவுச் சீட்டு.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்): நிதி, வருவாய், சட்டமன்றம், தேர்தல்கள், புள்ளி விவரங்கள், இளைஞர் அணி மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின்துறை அமைச்சர்): மின்சாரம், இரும்பு எஃகு கட்டுப்பாடு, அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, எழுது பொருள் அச்சுத்துறை, மற்றும் அரசு அச்சகம்.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (தொழிலாளர் நலத்துறை அமைச்சர்): தொழிலாளர், கால்நடை பராமரிப்பு, பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிவுத் துறை மற்றும் முத்திரைச் சட்டம்.

5. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் (செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்): செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், அறநிலையத் துறை, வனங்கள், சின்கோனா, மற்றும் மது அருந்த அனுமதி வழங்கல்.

6. மாண்புமிகு திரு. க. இராசாராம் (தொழில்துறை அமைச்சர்): பெருந்தொழில்கள், சுரங்கம் மற்றும் கனிவளம், மின்னணுவியல் அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல்.

7. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் (உள்ளாட்சித் துறை அமைச்சர்): நகராட்சிகள், ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி கிராமப்புறக் கடன் சம்மந்தப்பட்டவை.

8. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்): கல்வி, ஆட்சிமொழி, தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாடு.

9. மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து (வேளாண்மைத் துறை அமைச்சர்): வேளாண்மை, வேளாண்மை மறு நிதி, வேளாண்மைப் பொறியியல் பிரிவு, வேளாண் பொறியியல், வேளாண் பணி கூட்டுறவு சங்கங்கள், குடிநீர் வழங்கு மற்றும் கழிவு நீரகற்று வாரியம்.

10. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (சட்ட அமைச்சர்): சட்டம், நீதி மன்றங்கள், சிறைகள், எடைகள்-அளவைகள் பற்றி சட்டம் இயற்றுதல், கம்பெனிகள் பதிவு மற்றும் கடன் நிவாரணம் (கடன் வழங்கல், சிட்டு நிதி இவைகள் பற்றி சட்டம் இயற்றல் உள்பட).

11. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்): மக்கள் நல்வாழ்வுத் துறை, சுற்று சூழல் மாசுக் கட்டுப்படுத்தல்.

12. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி (போக்குவரத்துத் துறை அமைச்சர்): போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள்.

13. மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு (உணவு அமைச்சர்): உணவு, விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் மக்கள் தொகைக் கணக்கு.

14. மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் (கைத்தறி துறை அமைச்சர்): கைத்தறி மற்றும் நெசவாலைகள்.

15. மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் (சத்துணவு அமைச்சர்): சத்துணவு.

16. மாண்புமிகு திரு. தா. வீராசாமி (வணிக வரித்துறை அமைச்சர்): வணிக வரிகள்.

17. மாண்புமிகு திரு. என். நல்லுசாமி (வீட்டு வசதித்துறை அமைச்சர்): வீட்டு வசதி மற்றும் குடிசைமாற்று வாரியம், நகர அமைப்பு மற்றும் இட வசதிக் கட்டுப்பாடு.

18. மாண்புமிகு திரு. அனூர் பு. கோ. ஜகதீசன் (ஊரகத் தொழில் அமைச்சர்): கிராம, குடிசை, சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள்.

19. மாண்புமிகு திரு. த. இராமசாமி (மறுவாழ்வு மற்றும் வேலை வாய்ப்புத் துறை அமைச்சர்): வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி, வெளி நாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள்.



2831

20. மாண்புமிகு திரு. எ. அருணாசலம் (ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்): ஆதி திராவிடர் நலம், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் பிணைத் தொழிலாளர்.

21. மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் (பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்): பிற்பட்டோர் நலம் மற்றும் மீன் வளம்.

22. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூக நலத்துறை அமைச்சர்): மகளிர் குழந்தைகள் உள்ளிட்ட சமூக நலம், பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், சீர்திருத்த நிர்வாகம்.

23. மாண்புமிகு திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி (கதர்த்துறை அமைச்சர்): கதர், பூமிதானம் மற்றும் கிராம தானம்.

24. மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் (பொதுப் பணித்துறை அமைச்சர்): பொதுப்பணித் துறை, சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள் மற்றும் வக்ஃப்.

25. மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் (கூட்டுறவுத் துறை அமைச்சர்): கூட்டுறவு.

---

* 3—3—1985 அன்று பதவியேற்றனர்.

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

### GOVERNOR OF TAMIL NADU:

Thiru SUNDAR LAL KHURANA.

### MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. The Hon. Dr. M. G. RAMACHANDRAN (Chief Minister): Public, General Administration, Indian Administrative Service and other All-India Services, District Revenue Officers, Deputy Collectors, Police, Prevention of Corruption, Planning, Molasses, Archaelogy, Prohibition excluding grant of Liquor Permits, Excise and Passports.

2. The Hon. Dr. V. R. NEDUNCHEZHIAN (Minister for Finance): Finance, Revenue, Legislature, Elections, Statistics, Youth Service Corps and Ex-servicemen.

3. The Hon. Thiru S. RAMACHANDRAN (Minister for Electricity): Electricity, Iron and Steel Control, Newsprint Control, Stationery and Printing and Government Press.

4. The Hon. Thiru K. A. KRISHNASAMY (Minister for Labour): Labour, Animal Husbandry, Milk, Dairy Development, Registration and Stamp Act.

5. The Hon. Thiru R. M. VEERAPPAN (Minister for Information and Religious Endowments): Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest, Cinchona and grant of Liquor permits.

*6. The Hon. Thiru K. RAJARAM (Minister for Industries): Large Scale Industries, Mines and Minerals, Electronics, Science and Technology.

7. The Hon. Thiru P. U. SHANMUGAM (Minister For Local Administration): Municipal Administration Panchayats, Panchayat Unions, Community Development and Rural Indebtedness.

8. The Hon. Thiru C. ARANGANAYAGAM (Minister for Education): Education, Official Language, Tamil Development and Culture.

9. The Hon. Dr. K. KALIMUTHU (Minister for Agriculture): Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering, Agro-Service Co-operative Societies, Water-Supply and Drainage Board.

10. The Hon. Thiru C. PONNAIYAN (Minister for Law): Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits.

11. The Hon. Dr. H. V. HANDE (Minister for Health): Health and Environmental Pollution Control.

12. The Hon. Thiru S. MUTHUSAMY (Minister for Transport): Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports and Highways.

13. The Hon. Thiru S. THIRUNAVUKKARASU (Minister for Food): Food, Price Control and Census.

14. The Hon. Thiru V. V. SWAMINATHAN (Minister for Handlooms): Handlooms and Textiles.

15. The Hon. Thiru R. SOUNDARARAJAN (Minister for (Nutritious Meals): Nutritious Meals.

* 16. The Hon. Thiru T. VEERASAMY (Minister for Commercial Taxes): Commercial Taxes.

* 17. The Hon. Thiru N. NALLUSAMY (Minister for Housing): Housing and Slum Clearance Board, Town-Planning and Accommodation Control.

* 18. The Hon. Thiru ANOOR P. G. JAGADEESAN (Minister for Rural Industries): Rural Industries including Village, Cottage and Small Industries.

* 19. The Hon. Thiru T. RAMASAMY (Minister for Rehabilitation and Employment): Employment and Training, Indians Overseas, Refugees and Evacuees.



* 20. The Hon. Thiru A. ARUNACHALAM (Minister for Adi-Dravidar Welfare): Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour.

21. The Hon. Thiru M. R. GOVENDAN (Minister for Backward Classes): Backward Classes and Fisheries.

22. The Hon. Thirumathi GOMATHI SRINIVASAN (Minister for Social Welfare): Social Welfare including Women and Children Welfare, Beggars Home, Orphanges ond Correctional Administration.

23. The Hon. Thirumathi VIJAYALAKSHMI PALANISAMY (Minister for Khadi): Khadi, Bhoodan and Gramdhan.

24. The Hon. Thiru Y. S. M. YUSUF (Minister for Public Works): Public Works Department, Irrigation including Minor Irrigation and Wakf.

25. The Hon. Thiru K. K. S. S. R. RAMACHANDRAN (Minister for Co-operation): Co-operation.

---

* Sworn-in on 3rd March 1985.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

---

### †பேரவைத் தலைவர்.

மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்.

### †பேரவைத் துணைத் தலைவர்.

மாண்புமிகு திரு. வி. பி. பாலசுப்ரமணியன்.

### ††மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

திரு. மா. சின்னராசு.
திரு. செ. செம்மலை.
திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்.
திரு. மு. இராமநாதன்.
திரு. வே. இரா. ஜெயராமன்.

### சட்டமன்றப் பேரவைச் செயலாளர்.

திரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ.,பி.எல்.

### துணை செயலாளர்கள்.

திரு. இரா. பாலகுரு, பி.ஏ.
திரு. பி. எம். பத்மநாப நம்பியார், பி.ஏ., பி.ஜி.எல்.
திரு. பெ. பள்ளிகொண்ட பெருமாள், பி.ஏ., பி.எல்.

### குழு அலுவலர்கள்.

திரு. கா. சீனிவாசன், பி.எஸ்சி.
திரு. கு. அ. சீனிவாசன், பி.ஏ.

### சார்புச் செயலாளர்கள்.

திரு. வி. சீதாராமன், பி.காம்., பி.ஜி.எல்.
திரு. செ. சு. ஜானகிராமன், பி.ஏ., பி.எல்.
திரு. பெ. பாலகிருஷ்ணன், பி.காம்.
திரு. பெ. ச. கனகசபாபதி, பி.ஏ., பி.எல்.
திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி.ஏ.
திரு. வ. சா. ஜான், பி.ஏ.
திரு. கா. செ. சுந்தரராஜன், பி.ஏ., பி.ஜி.எல்.

### எஸ்டேட் அலுவலர்கள்.

திரு. கே. தியாகராஜன், பி.ஏ., பி.எல்.
திரு. கேசவராம், பி.ஏ.

### பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்.

திரு. பி. கோதண்டராமன்.

### துணை செயலாளர் (பதிப்பாளர்).

திரு. ஜி. எஸ். அனந்த நாராயணன், பி.லிட்.

### தலைமை நிருபர்.

திரு. வை. இராமச்சந்திரன், எம்.ஏ., எல்.எல்.பி.

† 27—2—85 அன்று தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள்.
†† 11—3—85 அன்று தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி) தயாரிக்கப்பட்ட பெயர்ப்பட்டியல்.

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 1. அப்துல் சமத், திரு. ஆ. கா. அ. | திருவல்லிக்கேணி |
| 2. அப்துல் மஜீத், திரு. எச். | வாணியம்பாடி |
| 3. அரங்கநாயகம், திரு. செ. | தொண்டாமுத்தூர் |
| 4. அரிக்குமார், திரு. இரா. | பேரணமல்லூர் |
| 5. அருணாசலம், திரு. இரா. | நாமக்கல் (செ.வ.) |
| 6. அருணாசலம், திரு. எ. | வரகூர் (செ.வ.) |
| 7. அன்பழகன், திரு. க. | பார்க் டவுன் |
| 8. அன்பழகன், திரு. கே. | ஓமலூர் |
| 9. அன்பழகன், திரு. தி. | நாட்ராம்பள்ளி |
| 10. அன்பழகன், திரு. பொ. | இளையான்குடி |
| 11. ஆண்டி அம்பலம், திரு. மெ. | நத்தம் |
| 12. ஆதிமூலம் என்கிற தில்லை காந்தி | ஆண்டிமடம் |
| 13. ஆபிரகாம், திரு. ம. | ஆலந்தூர் |
| 14. ஆறுமுகம், திரு. அ. | வந்தவாசி |
| 15. ஆறுமுகம், திரு. எச். ஜி. | பென்னாகரம் |
| 16. ஆறுமுகம், திரு. ஆர். எஸ். | ஓட்டப்பிடாரம் (செ.வ.) |
| 17. ஆறுமுகம், திரு. ஏ. எஸ். ஏ. | விருதுநகர் |
| 18. ஆறுமுகம், திரு. செ. | மதுராந்தகம் |
| 19. ஆறுமுகம், திரு. சேலம் மு. | சேலம்-2. |
| 20. ஆனந்த கிருஷ்ணா, திரு. ஜி. | பூந்தமல்லி |
| 21. ஆனந்தன், திரு. மு. | உளுந்தூர்பேட்டை |
| 22. இரகுபதி, திரு. கோ. | காட்பாடி |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 23. இரகுமான்கான், திரு. அ. | சேப்பாக்கம் |
| 24. இரத்தினம், திரு. எம். வி. | பொள்ளாச்சி |
| 25. இரத்தினவேலு, திரு. சே. | முசிறி |
| 26. இராசமாணிக்கம், திரு. ஆர். | அரூர் (செ.வ.) |
| 27. இராசமாணிக்கம், திரு. எல்ல. | தாம்பரம் |
| 28. இராசரத்தினம், திரு. எப். எம். | கொளச்சல் |
| 29. இராசரத்தினம் என்கிற மணி, திரு. எம். | விழுப்புரம் |
| 30. இராசாங்கம், திரு. மு. | திருவிடைமருதூர் |
| 31. இராசாம்பாள், திருமதி த. | நலைவாசல் (செ.வ.) |
| 32. இராசாராம், திரு. க. | பனமரத்துப்பட்டி |
| 33. இராசாராமன், திரு. எஸ். | பாபநாசம் |
| 34. இராசு, திரு. வி. கே. | அரக்கோணம் (செ.வ.) |
| 35. இராசேந்திரன், திரு. எஸ். என். | தூத்துக்குடி |
| 36. இராமச்சந்திரன், டாக்டர் எம். ஜி. | ஆண்டிப்பட்டி |
| 37. இராமச்சந்திரன், திரு. கே. எஸ். எம். | போடிநாயக்கனூர் |
| 38. இராமச்சந்திரன், திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். | சாத்தூர் |
| 39. இராமச்சந்திரன், திரு. ச. | பன்ருட்டி |
| 40. இராமச்சந்திரன், திரு. சோ. மா. | அண்ணாநகர் |
| 41. இராமச்சந்திரன், திரு. ப. ந. | பட்டுக்கோட்டை |
| 42. இராமசாமி, திரு. எஸ். என். | சாத்தான்குளம் |
| 43. இராமசாமி, திரு. த. | இராமநாதபுரம் |
| 44. இராமநாதன், திரு. மு. | கோயம்புத்தூர் மேற்கு |
| 45. இராமலிங்கம், டாக்டர் கே. பி. | ராசிபுரம் |
| 46. இளங்கோவன், திரு. ஈ. கே. கி. ச. | சத்தியமங்கலம் |
| 47. ஈஸ்வரன், திரு. ஆர். | வாசுதேவநல்லூர் (செ.வ.) |
| 48. உச்சி, திரு. கே. | கூடலூர் |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 49. உத்திராபதி, திரு. பொ. | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 50. எத்திராசன், திரு. கி. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 51. கணபதி, திரு. கே. ஆர். | சிதம்பரம் |
| 52. கதிர்வேலு, திரு. மா. | ராணிப்பேட்டை |
| 53. கந்தசாமி, திரு. கா. வே. | கிணத்துக்கடவு |
| 54. கந்தசாமி, திரு. பெ. | பொங்கலூர் |
| 55. கல்லன், திரு. கே. | உதகமண்டலம் |
| 56. கலிதீர்த்தான், திரு. சோ. | சங்கராபுரம் |
| 57. காளிமுத்து, டாக்டர் கா. | மதுரை கிழக்கு |
| 58. கிருஷ்ணசாமி, திரு. கே. வ. | ஆயிரம் விளக்கு |
| 59. கிருஷ்ணசாமி, திரு. வி. இரா. | அணைக்கட்டு |
| 60. கிருஷ்ணமூர்த்தி, திரு. கி. | கும்பகோணம் |
| 61. கிருஷ்ணராஜ், திரு. ஜி | சேலம்-1 |
| 62. குப்புசாமி, திரு. கு. | ஒட்டன்சத்திரம் |
| 63. குமர குருபர ராமநாதன், திரு. ச | விளாத்திகுளம் |
| 64. குமரி அனந்தன், திரு. | ராதாபுரம் |
| 65. குமாரதாஸ், டாக்டர் தே. | கிள்ளியூர் |
| 66. குருசாமி என்கிற அண்ணாதாசன், திரு. எம். | திருவரம்பூர் |
| 67. கோமதி சீனிவாசன், திருமதி | வலங்கைமான் (செ.வ.) |
| 68. கோவிந்தசாமி, திரு. ஆர். | குடியாத்தம் |
| 69. கோவிந்தசாமி, திரு. ச. | எடப்பாடி |
| 70. கோவேந்தன், திரு. எம். ஆர். | பேராவூரணி |
| 71. சங்கரலிங்கம், திரு. ச. | சங்கரநாயனார் கோவில் (செ. வ.) |
| 72. சண்முகம், திரு. இரா. | திருத்தணி |
| 73. சண்முகம், திரு. என் | சோளிங்கர் |
| 74. சண்முகம், திரு. ப. உ. | மேல் மலையனூர் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 75. சண்முகையா பாண்டியன், திரு. | ஆலங்குளம் |
| 76. சந்திரசேகரன், திரு. ஆ. | சோழவந்தான் |
| 77. சந்திரசேகர், திரு. மு. | ஓகையூர் |
| 78. சம்சுல் ஆலம், திரு. வி. எஸ். டி. | பாளையங்கோட்டை |
| 79. சமரசம், டாக்டர் கோ. | காவேரிப்பட்டினம் |
| 80. சரோஜா, திருமதி இரா. | உப்பிலியாபுரம் (ஆ.வா.) |
| 81. சாமிக்கண்ணு, திரு. தா. | செங்கம் (செ.வ.) |
| 82. சித்தன், திரு. என். எஸ். வி. | திருமங்கலம் |
| 83. சிந்தன், திரு. வி. பி. | வில்லிவாக்கம் |
| 84. சிவக்குமார், திரு. ஆ. | சமயநல்லூர் (செ.வ.) |
| 85. சிவக்குமார், திரு. எம். | கூனூர் (செ.வ.) |
| 86. சிவஞானம், திரு. என். | திருவோணம் |
| 87. சிவப்பிரகாசம், திரு. சீ. | சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 88. சிவராமன், திரு. எஸ். | சின்னசேலம் |
| 89. சிவராஜ், திரு. க. | ரிஷிவந்தியம் |
| 90. சின்னக்குழந்தை, திரு. மு. | ஆரணி |
| 91. சின்னச்சாமி, திரு. ரா. | தர்மபுரி |
| 92. சின்னசாமி, திரு. வே. கு. | பவானிசாகர் |
| 93. சின்னராசு, திரு. க. இரா. | கிருஷ்ணகிரி |
| 94. சின்னராசு, திரு. மா. | மேட்டுப்பாளையம் |
| 95. சுந்தரதாஸ், திரு. மா. | விளவன்கோடு |
| 96. சுப்புராயர், திரு. சி. | கம்பம் |
| 97. சுப்பராயன், திரு. கு. | திருப்பூர் |
| 98. சுப்பிரமணிய ஆதித்தன் என்கிற சுப்பிரமணியன், திரு. எஸ். ஆர். | திருச்செந்தூர் |
| 99. சுப்பிரமணியன், திரு. உ. | சிவகங்கை |
| 100. சுப்பிரமணியன், திரு. வீ. | கண்டமங்கலம் (செ.வ.) |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 101. சுவாமிநாதன், திரு. வி. வி. | புவனகிரி |
| 102. செங்காளியப்பன், திரு. ஆர். | சிங்காநல்லூர் |
| 103. செங்கோட்டையன், திரு. கு. அ. | கோபிச்செட்டிப்பாளையம் |
| 104. செங்கோட்டையன், திரு. பெ. | கபிலர்மலை |
| 105. செம்மலை, திரு. செ. | தாரமங்கலம் |
| 106. செல்லமுத்து, திரு. மொ. | திருவாரூர் (செ.வ.) |
| 107. செல்லப்பா, திரு. வி. கோ. | கடலூர் |
| 108. செல்வராசன், திரு. அ. | துறைமுகம் |
| 109. சேகர் என்கிற குலசேகரன், திரு. கே. பி. | பொன்னேரி (செ.வ.) |
| 110. சொர்ணலிங்கம், திரு. கா. | திருவாடனை |
| 111. சோலைராசு, திரு. க. | மருங்காபுரி |
| 112. சைதை துரைசாமி, திரு. சா. | சைதாப்பேட்டை |
| 113. சௌந்திரராசன், திரு. ஆர். | ஸ்ரீரங்கம் |
| 114. சௌரிராஜன், டாக்டர் கே. | தியாகராயநகர் |
| 115. ஞானசுந்தரம், திரு. சா. | மன்னார்குடி |
| 116. டேனியல்ராஜ், திரு. எஸ். | ஸ்ரீவைகுண்டம் |
| 117. தங்கமணி, திரு. மு. | மாயூரம் |
| 118. தங்கமணி, திரு. கே. எம். | திண்டிவனம் |
| 119. தங்கராசு, திரு. ஏ. | குறிஞ்சிப்பாடி |
| 120. தங்கராசு, திரு. செ. | மங்களூர் (செ.வ.) |
| 121. தங்கவேல்ராஜ், திரு. ப. ம. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 122. தங்கவேலு, திரு. வி. | வால்பாறை (செ.வ.) |
| 123. தமிழ்மணி, திரு. | திருப்போரூர் (செ.வ.) |
| 124. தமிழரசன், திரு. கு. | பேரணாம்பட்டு (செ.வ.) |
| 125. தனபால், திரு. ப. | சங்கரி (செ.வ.) |
| 126. தாமரைக்கனி, திரு. இரா. | ஸ்ரீவில்லிபுத்தூர் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 127. தியாகராசன், திரு. ர. | விருத்தாசலம் |
| 128. திருஞானம், திரு. பி. ஆர் | ஏற்காடு (ஆ.வா.) |
| 129. திருநாவுக்கரசு, திரு. எஸ் | அறந்தாங்கி |
| 130. திருமலைசாமிக் கவுண்டர், திரு. சு. | உடுமலைப்பேட்டை |
| 131. தீர்த்தகிரி கவுண்டர், திரு. டி. | மொரப்பூர் |
| 132. தீர்த்தராமன், திரு. ப. | பாலக்கோடு |
| 133. துரை அன்பரசன் என்கிற இராமலிங்கம், திரு. | நெல்லிக்குப்பம் |
| 134. துரை கிருஷ்ணமூர்த்தி, திரு. | தஞ்சாவூர் |
| 135. துரை கோவிந்தராசன், திரு. | திருவையாறு |
| 136. துரைராசு, திரு. எஸ். பி. | காரைக்குடி |
| 137. துரை ராமசாமி, திரு. | வெள்ளக்கோவில் |
| 138. தெய்வநாயகம், திரு. எ. | மதுரை சென்ட்ரல் |
| 139. தேவராஜ், திரு. வி. எம். | வேலூர் |
| 140. நடராசன், திரு. ஆ. | பேரூர் |
| 141. நரசிம்ம பல்லவன், திரு. க. | உத்திரமேரூர் |
| 142. நரசிம்மன், திரு. பூ. மூ. | பள்ளிப்பட்டு |
| 143. நல்லமுத்து, டாக்டர் க. | பெரம்பலூர் (செ.வ.) |
| 144. நல்லுசாமி, திரு. என். | திருச்சிராப்பள்ளி-2. |
| 145. நாச்சிமுத்து, திரு கே. சி. | மேட்டூர் |
| 146. நாராயணன், திரு. எஸ். | திருநெல்வேலி |
| 147. நாராயணன், திரு. பு. கோ. | பவானி |
| 148. நெடுஞ்செழியன், டாக்டர் இரா. | ஆத்தூர் |
| 149. பட்டாபிராமன், திரு. செ. | திருவள்ளூர் |
| 150. பரமசிவம், திரு. பா. ந. | பல்லடம் |
| 151. பரிதி இளம்வழுதி, திரு. | பெரம்பூர் |
| 152. பழனி, திரு. த. | ஆற்காடு |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 153. பழனிச்சாமி, திரு. கா. செ. | காங்கேயம் |
| 154. பழனிமுத்து, திரு. சி. | ஆத்தூர் |
| 155. பாண்டியன், திரு. பி. எச். | சேரன்மாதேவி |
| 156. பாண்டுரங்கன், திரு. மு. | கலசபாக்கம் |
| 157. பாப்பா சுப்பிரமணியன், திரு | குத்தாலம் |
| 158. பாரதி, திரு. ஜி. கே. ஜெ. | திருவொற்றியூர் |
| 159. பாரமலை, திரு. க. | மானாமதுரை (செ.வ.) |
| 160. பாலகிருஷ்ணன், திரு. ச. | மொடக்குறிச்சி |
| 161. பாலகிருஷ்ணன், திரு. வ. | சிவகாசி |
| 162. பாலச்சந்திரன், திரு. வை. | பத்மநாபபுரம் |
| 163. பாலசுப்பிரமணியன், திரு. க. | சீர்காழி (செ.வ.) |
| 164. பாலசுப்பிரமணியன், திரு. எஸ். | அம்பாசமுத்திரம் |
| 165. பாலசுப்பிரமணியன், திரு. வி. பி. | வேடசந்தூர் |
| 166. பாலன், திரு. சு. | எழும்பூர் |
| 167. பாலாஜி, திரு. கே. | காஞ்சிபுரம் |
| 168. பாலுச்சாமி, திரு. ஏ. | பரமக்குடி (செ.வ.) |
| 169. பாலுசாமி, திரு. அ. | நிலக்கோட்டை (செ.வ.) |
| 170. பிச்சை, திரு. மு. | அருப்புக்கோட்டை |
| 171. பிரணவநாதன், திரு. அ. | கடலாடி |
| 172. பிரேம்குமார், திரு. ஆ. | திண்டுக்கல் |
| 173. புருசோத்தமன், திரு. எஸ். | அரியலூர் |
| 174. புஷ்பராசு, திரு. த. | திருமயம் |
| 175. பெரியசாமி, திரு. அ. | தாராபுரம் (செ.வ.) |
| 176. பெரியசாமி, திரு. ரா. | தொட்டியம் |
| 177. பெருமாள், திரு. தெ. | கடையநல்லூர் |
| 178. பெருமாள் பிள்ளை, திரு. கோ. | கன்னியாகுமரி |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 179. பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். | பழனி (செ.வ.) |
| 180. பொன்னுசாமி, டாக்டர் அ. | பெருந்துறை |
| 181. பொன்னுரங்கம், திரு. ப. | ராயபுரம் |
| 182. பொன்னையன், திரு. சி. | திருச்செங்கோடு |
| 183. மணவாளன், திரு. | திருப்பத்தூர் |
| 184. மணிமாறன், திரு. மா. | நன்னிலம் (செ.வ.) |
| 185. மலர்மன்னன், திரு. அ. | திருச்சிராப்பள்ளி-1 |
| 186. மனோகரன், திரு. நாஞ்சில் கி. | புரசைவாக்கம் |
| 187. மனோகரன், திரு. தி. நா. கோ. அ. | திருநாவலூர் |
| 188. மாசிலாமணி, டாக்டர் ந. | ஜெயங்கொண்டான் |
| 189. மாதவன், திரு. செ. | திருப்பத்தூர். |
| 190. மாதையன், திரு. யு. பி. | அந்தியூர் (செ.வ.) |
| 191. மாரிமுத்து, திரு. த. | குளத்தூர் (செ.வ.) |
| 192. மாரிமுத்து, திரு. மு. | திருப்பரங்குன்றம் |
| 193. மீனாட்சிசுந்தரம், திரு. மா. | வேதாரண்யம் |
| 194. முகம்மது கனி, திரு. ஜே. | புதுக்கோட்டை |
| 195. முகம்மது சலீம், டாக்டர் த. | பெரியகுளம் |
| 196. முசிறிபுத்தன், திரு. பி. | குளித்தலை |
| 197. முத்துசாமி, திரு. சு. | ஈரோடு |
| 198. முத்துராமலிங்கம், திரு. பி. கே. எம். | உசிலம்பட்டி |
| 199. முத்துராமலிங்கம், திரு. பொன் | மதுரை மேற்கு |
| 200. முத்துவேல், திரு. கே. | முதுகுளத்தூர் |
| 201. முத்தையா, திரு. இரா. | சேடப்பட்டி |
| 202. முருகன், திரு. கி. | செய்யாறு |
| 203. முருகானந்தம், திரு. டி. என். | செஞ்சி |
| 294. முனிரத்தினம், திரு. இரா. சா. | கும்மிடிப்பூண்டி |
| 205. யசோதா, திருமதி டி. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 206. ரமணி, திரு. கு. | கோயம்புத்தூர் கிழக்கு |
| 207. ரவீந்திரன், திரு. ஏ. எஸ். | திருவண்ணாமலை |
| 208. ராமஜெயம், திரு. ம. நா. | வானூர் (செ. வ) |
| 209. ராமன், திரு. கி. | இராஜபாளையம் (செ.வ.) |
| 210. ராஜாபாபு, திரு. ஜெ. | போளூர் |
| 211. ரெங்கசாமி, திரு. ஆர். | கோவில்பட்டி. |
| 212. ரெத்தினராஜ், திரு. எஸ். | நாகர்கோவில் |
| 213. லட்சுமி, திருமதி பி. | அவினாசி (செ. வ.) |
| 214. வச்சிரவேலு, திரு. எ. | தண்டராம்பட்டு |
| 215. வடிவேல், திரு. கு. | கரூர் |
| 216. வளர்மதி, திருமதி பா. | மயிலாப்பூர் |
| 217. விஜயபாலன், திரு. என். | பூம்புகார் |
| 218. விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி. ப. | வீரபாண்டி |
| 219. வீராணம்பலம், திரு. க. வெ. | மேலூர் |
| 220. வீரய்யன், திரு. கோ. | நாகப்பட்டிணம் |
| 221. வீராசாமி, திரு. தா. | ஒரத்தநாடு |
| 222. வெங்கடரமணன், திரு டி. ஆர் | தென்காசி |
| 223. வெங்கடரெட்டி, திரு. டி. | ஒசூர் |
| 224. வெங்கடாசலம், திரு. அ. | ஆலங்குடி |
| 225. வெங்கடாசலம், திரு. கி. | லால்குடி |
| 226. வெங்கடாசலம், திரு. டி. எம். | பாகூர் |

| தொடர் என்னும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
| --- | --- |
| (1) | (2) |
| 227. வேணுகோபால், திரு. எஸ். | டாக்டர் ராதாகிருஷ்ண நகர் |
| 228. வேணுகோபால், திரு. கே. வி. | தள்ளி |
| 229. ஜான் வின்சென்ட், திரு. மு. | நாங்குநேரி |
| 230. ஜகதீசன், திரு. ஆனூர் பு. கோ. | செங்கல்பட்டு |
| 231. ஜெகதீசன், திரு. சு. | அரவக்குறிச்சி |
| 232. ஜெயச்சந்திரன், திரு. சா. | காட்டுமன்னார்கோவில் (செ. வ.) |
| 233. ஜெயராமன், திரு. வே. இரா. | தேனி |
| 234. ஹேமச்சந்திரன், திரு. ஜே. | திருவட்டாறு |
| 235. | நியமன உறுப்பினர். |

**பேரவை நடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமை பெற்றவர்கள்.**

1. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்—அமைச்சர்.
2. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே—அமைச்சர்.
3. மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்—அமைச்சர்.
4. திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி—தலைமை வழக்கறிஞர்.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1985, மார்ச் 27, புதன்கிழமை.

**பங்குனி 14, ரக்தாட்சி—திருவள்ளுவர் ஆண்டு 2016.**

**சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப்** பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தர்க்கு இயல்பு.

அஞ்சாமை, ஈகை, அறிவுடைமை, ஊக்கமுடைமை ஆகிய இந்த நான்கு பண்புகளும் குறைவுபடாமல் இருத்தலே அரசுக்கு இயல்பாகும்.

### 1. வினாக்கள் — விடைகள்.

**உடுக்குறியிட்ட வினாக்கள்**

**காஞ்சிபுரம் டாப்கோ விற்பனை நிலையம்.**

20—(* வினா எண். 610) **திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் டாப்கோ விற்பனை நிலையத்தில் 25 ஆயிரம் முட்டைகள் காணாமல் போனதாக அரசுக்கு புகார் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** (அ) மற்றும் (ஆ) : 4—3—1985-ல் டாப்கோ தலைவரும், துணை மேலாளரும் காஞ்சிபுரம் சென்று டாப்கோ விற்பனை நிலையத்தில் கணக்கு பார்த்த பொழுது பதிவேட்டில் இருப்பு காட்டிய 25,215 முட்டைகள் காணவில்லை. பின்னர் பதிவேடுகளுடன் ஒப்பிட்டுப் பார்த்ததில் ரூ. 22,194 மதிப்புள்ள 47,223 முட்டைகள் குறைந்து காணப்பட்டது. இந்நிலைய பொறுப்பு பண்டக உதவியாளர் திரு. எஸ். முத்துக்கிருஷ்ணன் 6—3—1985 முதல் தற்காலிக பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். மேல் நடவடிக்கைகள் எடுக்க ஆவன செய்யப்பட்டுள்ளது.

[1985 மார்ச் 27

**திரு. இரா. தாமரைக்கனி :** பேரவைத் தலைவரவர்களே, காஞ்சிபுரம் டாப்கோ விற்பனை நிலையத்தில் சுமார் 25,000-க்கும் மேற்பட்ட முட்டைகள் ஒரேநேரத்தில் குறைவதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். அங்கே வேலை பார்த்தவர்கள் வந்த முட்டைகளைச் பொரித்துச் சாப்பிட்டார்களா? அல்லது நான் சிறுபிள்ளையில் படத்தில் பார்த்திருக்கிறேன், நாடோடிமன்னன் படத்தில் சந்திரபாபு அவர்கள் முட்டைகளை உடைத்து உடைத்துச் சாப்பிடுவார்; அதேபோல் மாயாபஜார் படத்தில் வருகின்ற கடோத்கஜன் எல்லா உணவுப் பொருட்களையும் சாப்பிட்டு விடுவார். இந்தமாதிரியெல்லாம் அந்த முட்டைகளைச் சாப்பிட்டு விட்டார்களா? யார் அந்தக் குற்றத்தைச் செய்தது? அந்த முட்டைகள் எப்படிக் களவு போயின? அங்கே வேலை பார்க்கக்கூடியவர்கள் வேலைக்குச் செல்லும்பொழுது அவர்களைச் சோதனை செய்து பார்த்தபிறகு வேலை பார்க்க அனுமதிக்கப்படுவார்களா? இதில் எந்த அதிகாரிகள் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள்? உயர் மட்டத்தில் உள்ள அதிகாரிகளும் சம்பந்தப்பட்டிருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கடந்த 6 ஆம் தேதியன்று சஸ்பென்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள்—தற்காலிக பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள். மேல் நடவடிக்கை எடுத்து அறிக்கை அனுப்புமாறு அவர்களிடமிருந்து கேட்கப்பட்டிருக்கிறது. அறிக்கை வந்தபிறகு, யார் யார் தவறு செய்திருக்கிறார்களோ அவர்கள் அனைவர்மீதும் சட்டபூர்வமான உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**திரு. இரா. தாமரைக்கனி :** பேரவைத் தலைவரவர்களே, அங்கே திருடன் வந்து திருட முடியாது. கோழிப்பண்ணையில் இருட்டாக இருக்கும். நாகப்பாம்பு, இராஜநாகம் போன்ற இப்படிப்பட்ட பாம்புகள் அந்த முட்டைகளைச் சாப்பிடுவதற்கான வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, அங்கே கீரிப் பிள்ளையை வளர்ப்பதற்கு அரசு ஆவன செய்யுமா? அவ்வாறு செய்து இந்த முட்டைகள் பாதுகாக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும், ஒவ்வொரு கோழிக்கும் நம்பர் போட்டு, இந்தக் கோழியினுடைய முட்டை இது என்று முட்டைகளுக்கு சீல் வைத்து விற்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்றும் அறிய விரும்புகிறேன். (பதில் இல்லை)



1985 மார்ச் 27]

**தமிழகத்தில் வானூர்தி மூலம் கனிவள ஆய்வு.**

**21—(* வினா எண். 920) திரு. செ. செம்மலை :**

**திரு. மா. சின்னராசு :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள கனிவளங்களை கண்டுபிடிக்க (aerial survey) ஏதேனும் நடத்த மத்திய அரசை மாநில அரசு நாடியிருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** (அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**திரு. செ. செம்மலை :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கனிமப் பொருட்களைப் பற்றி ஆய்வு நடத்துவதற்காக நவீன முறையில் இப்படிப்பட்ட ஏரியல் சர்வேயைச் செய்வதன் மூலம் மண்ணில் புதைந்து கிடக்கின்ற அந்தக் கனிமப் பொருட்களை வெளிக்கொணர்ந்து தொழில்களைத் துவங்கலாம் என்ற ஒரு கருத்து இப்பொழுது இருந்து வருகிறது. எனவே, அந்த அடிப்படையில் தமிழ்நாட்டில் தொழில் வளத்தை அதிகப்படுத்துவதற்காக மாண்புமிகு தொழில் அமைச்சரவர்கள் இப்படிப்பட்ட நவீன முறை ஏரியல் சர்வேயை நடத்துவதற்கு முன்வருவார்களா? அதற்கு மத்திய அரசாங்கத்தினுடைய உதவி தேவைப்பட்டால்கூட அதற்காக மத்திய அரசிடமிருந்து உதவியை நாடி இப்படிப்பட்ட சர்வேயைச் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் முயற்சி மேற்கொள்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, ஏரியல் சர்வே செய்ய மத்திய அரசை மாநில அரசு இதுவரையில் நாடவில்லை. ஆனால், இரண்டு முறைகளில் நிலத்திற்கு அடியில் உள்ள கனிமப் பொருட்களைக் கண்டுபிடிப்பதற்கான முறை அரசுத் துறையால் கையாளப்படுகிறது. விமானம் மூலம் மேக்னடிக் அதாவது காந்தத்தின் மூலம் மற்றும் ரேடியோ மெட்ரிக் மூலம் — அதாவது கதிர்வீச்சு மூலம், ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதன் மூலமாக தர்மபுரி மாவட்டம்,

தென்னாற்காடு மாவட்டம், வடாற்காடு மாவட்டம், சேலம் மாவட்டம் போன்ற மாவட்டங்களில் எங்கெங்கு கனிமப் பொருட்கள் இருக்கின்றன என்பதைப் பற்றிய ஆராய்ச்சி ஏறக் குறைய 13 ஆயிரம் கிலோ மீட்டர் அளவுக்கு நடைபெற்று முடிந் திருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்காக ஐக்கிய நாட்டு வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கனிம மேம்பாட்டுத் திட்டத்தை நிறைவேற்ற அரசு ஆவன செய்துகொண்டிருக்கின்றது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. செ. செம்மலை :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி நம்முடைய அரசின் மூலம் ஏரியல் ஃபோட் டோகிராஃப் என்ற அந்த அடிப்படையில் ஆய்வு செய்யப்பட்ட பகுதிகளிலாவது தொழில்களை ஆரம்பிப்பதற்கு நம்முடைய அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்றதா என்பதை அறிய விரும்புவதோடு எந்தெந்த இடங்களில் அப்படிப்பட்ட தொழில்களை ஆரம்பிக்க நம்முடைய அரசாங்கம் முயன்று கொண்டிருக்கின்றது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** பேரவைத் தலைவர் அவர்களே, கனிமப் பொருட்கள் இருக்கின்ற இடங்களில் எல்லாம் ஏறக்குறைய தொழில் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் நடை பெற்றுக்கொண்டு வருகின்றன. பொதுவாக அவ்வாறு கண்டு பிடிக்கப்பட்டு தொழில்கள் நடைபெற ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. ஆனால் எந்தெந்த இடங்கள் என்பதைப் பற்றி தெரிந்துகொள்ளவேண்டும் என்றால் தனிக்கேள்வி போட்டால் விடை கிடைக்கும்.

**திரு. மா. சின்னரசு :** பேரவைத் தலைவர் அவர்களே, இது வரை நடத்தப்பட்ட ஆய்வுகளிலிருந்து தமிழகத்தில் என்னென்ன கனிம வளங்கள் இருப்பதாக அறியப்பட்டிருக்கின்றது? அப்படி என்றால் அந்தக் கனிம வளங்களைப் பயன்படுத்தி புதிய தொழில்கள் துவங்க அரசு அனுமதி வழங்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** பேரவைத் தலைவர் அவர்களே, நிறைய கனிமப் பொருட்கள் தமிழகத்திலே இருக் கின்றன. அவைகளைக் கண்டுபிடிக்கின்ற முயற்சிகளும்



நடத்திக்கொண்டிருக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ? அப்படி என்றால் எவ்வளவு தங்கம் எவ்வளவு பெர்சன்டேஜிலே கிடைக்கின்றது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார் களா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** பேரவைத் தலைவர் அவர்களே, தங்கம் ராசிபுரத்தில் கிடைக்கின்றது, ஜோலார் பேட்டையில் கிடைக்கின்றது என்றெல்லாம் அடிக்கடி செய்திகள் வருகின்றனவே தவிர அதை எடுக்கின்றபோது எக்கனாமிக்கலி வயபிள் என்ற நிலையில் இல்லாமல் அதாவது பொருளாதார ரீதியில் பார்க்கும்போது அதிகமான செலவு ஆகின்றது. அந்த அளவுக்கு குறைவாக தங்கம் கிடைக்கின்ற நிலை இருக்கின்றது. எனவே அந்தத் தங்கம் எடுப்பது பற்றிய ஆராய்ச்சி தற்போது மேற்கொள்ளப்படவில்லை.

**டாக்டர் ந. மாசிலாமணி :** பேரவைத் தலைவர் அவர்களே, கனிம வளங்களைக் கண்டுபிடிக்கும் ஏரியல் சர்வே திருச்சி மாவட்டத்தில் இதுவரையில் செய்யப்பட்டிருக்கின்றதா ? இல்லை என்றால் அப்படி ஏரியல் சர்வே செய்யும் திட்டம் அரசுக்கு உண்டா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில் தற்போது மேற்கொள்ளப்பட வில்லை.

**திரு. அ. பாலுசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது கண்டுபிடிக்கப்பட்ட கனிம வளங்கள் என்னென்ன ? அந்தக் கனிம வளங்களை மக்களுக்குத் தருகின்ற வகையில் அவர்கள் அதைப் பயன்படுத்துகின்ற வகையில் மத்திய அரசு ஆராய்ச்சி நடத்தியதா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** பேரவைத் தலைவர் அவர்களே, என்னென்ன கனிம வளங்கள் கண்டுபிடிக்கப்பட்டன என்பதை பற்றி தனிக் கேள்வி போட்டால் விடை கிடைக்கும்.

தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆனால் அவை என்னென்ன என்பதை அறிய தனிக்கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. உ. சுப்பிரமணியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, சில ஆண்டுகளுக்கு முன்பு உலக ஸ்தாபனத்தின் மூலம் அதாவது சேட்டிலைட் மூலமாக நம் நாட்டில் எங்கெங்கு நீர் வளம் இருக்கின்றது, எங்கெங்கு கனிமப் பொருட்கள் இருக்கின்றன, எங்கெங்கு எண்ணெய் வளம் இருக்கின்றது என்பதைப் பற்றிய ஆய்வு நடத்தியதாக இங்கு சட்டமன்றத்தில் மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் ஒரு கேள்விக்கு பதில் சொன்னார்கள். அப்போது கூட அப்படி எந்தெந்த மாவட்டங்களில் இருக்கின்றது என்று கேட்டபோது சுமார் 10 ஆயிரத்திற்கு மேற்பட்ட மடங்கு மேக்னிஃபை பண்ணினால்தான் அதுபற்றிய விவரங்களைக் கொடுக்க முடியும், எனவே அந்த வகையில் செய்திகளைச் சேகரிக்க முயலுகிறோம் என்று அப்போது சொன்னார்கள். ஆகவே மீண்டும் அந்த சேட்டலைட் மூலம் கிடைத்த செய்திகளிலிருந்து குறிப்புகளைப் பெற அரசு முயற்சி செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** பேரவைத் தலைவர் அவர்களே, கதிர் வீச்சு என்பதைப் பற்றிச் சொல்கிறார்கள் என்று கருதுகிறேன். அது சேட்டிலைட் அல்ல. ரேடியோ மெட்ரிக் மூலமாக 1968 ஆம் ஆண்டிலிருந்து 1974 ஆம் ஆண்டு வரையில் ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ஆய்வு செய்யப்பட்டது. அந்த ஆய்வினுடைய முடிவுகளை வைத்துக்கொண்டுதான் இப்போது எல்லாக் காரியங்களையும் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். 1974 ஆம் ஆண்டிற்குப் பிறகு எந்த ஆய்வும் மேற்கொள்ளப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. இரா. சின்னராசு:** பேரவைத் தலைவர் அவர்களே, கனிமவள ஆய்வினைப் பொறுத்தவரையில் தாமபுரி மாவட்டத்தில் செய்வதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். தர்மபுரி மாவட்டத்தில் தமிழகத்திற்கு உட்பட்ட பகுதிகளில் தங்கம் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டு ஆய்வு



## இலங்கை அகதிகள் மறுவாழ்வு.

22—(*வினா எண். 602) **திரு. மா. சின்னராசு :**
**திரு. செ. செம்மலை :**
**திரு. என். எஸ். வி. சித்தன் :**
**திரு. கு. சுப்பராயன் :**
**திரு. பொ. உத்திராபதி :**
**திரு. மா. மணிமாறன் :**
**திரு. மு. இராமநாதன் :**
**திருமதி பா. வளர்மதி :**
**திரு. இரா. தாமரைக்கனி :**
**திரு. சா. துரைசாமி :**

மாண்புமிகு மறுவாழ்வு மற்றும் வேலைவாய்ப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இலங்கையிலிருந்து தமிழகம் வந்துள்ள அகதிகள் எண்ணிக்கை என்ன?

(ஆ) அகதிகள் மறுவாழ்விற்கு மத்திய அரசு வழங்கியுள்ள நிதி எவ்வளவு?

(இ) மறுவாழ்வுக்காக செயல்படுத்தும் திட்டங்கள் என்ன?

**மாண்புமிகு திரு. சு. இராமசாமி:** (அ) 25—7—1983 லிருந்து 15—3—1985 முடிய இலங்கையிலிருந்து 84,950 அகதிகள் வந்துள்ளனர். இவர்களில் ஏழை அகதிகள் 17,491 நபர்கள் முகாம்களில் உள்ளனர். மீதி நபர்கள் உறவினர், நண்பர் இவர்களுடனும் தாங்களாகவே வாழ்ந்து வருகின்றனர்.

(ஆ) ரூ. 69.36 இலட்சம்.

(இ) யாருமற்ற பணவசதியற்ற அகதிகள் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு இலவசமாக உடைகள், பாய்கள், போர்வைகள் முதலியனவும், தினசரிச் செலவிற்காக ரொக்கத் தொகையும், மலிவு விலையில் அரிசியும் வழங்கப்படுகின்றன. அகதிகள் எல்லோருடைய பிள்ளைகளுக்கும் முன்னுரிமை அடிப்படையில் கல்வியைத் தொடர வசதி தரப்பட்டுள்ளது.

[1985 மார்ச் 27]

(முற்பகல் 9.10)

**திரு. மா. சின்னராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அல்லலுற்று தாயகம் திரும்பியுள்ள தமிழ் அகதிகள், அவர்கள் அங்கே செய்து வந்த தொழில் எதுவோ அதே தொழில் தான் செய்ய முடியும் என்று கருத்து தெரிவிக்கிறார்கள், விருப்பமும் தெரிவிக்கிறார்கள். ஆகவே, மீன் பிடிக்கிறவர்களுக்கு மீன் பிடிக்கிற தொழிலும், தேயிலைத் தோட்டங்களில் பணி புரிந்தவர்களுக்கு அதே போன்று தேயிலைத் தோட்ட வேலையும் கொடுத்தால் அவர்கள் தங்கள் வாழ்க்கையை நடத்திக்கொள்ள வசதியாக இருக்கும் என்ற கோரிக்கை வந்துள்ளதா? அப்படி அவர்களுக்கு ஏற்ற தொழில் கொடுக்க அரசு முன்வருமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. த. இராமசாமி:** தலைவர் அவர்களே, பொதுவாக அகதிகளாக வந்து இப்பொழுது முகாம்களிலே இருக்கக்கூடிய பெரும்பாலோர் மீனவர்களாக இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தாங்கள் மீன் பிடிப்பதற்கான வசதி வாய்ப்புகளை ஏற்படுத்தித் தர வேண்டுமென்ற கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இருந்தாலும்கூட அகதிகள் இலங்கை நாட்டுக்கு குடிமக்கள் அங்கு நிலைமை சீரடைந்ததும் அவர்கள் அந்த நாட்டிற்குத் திரும்பி அனுப்பப்பட வேண்டியவர்கள். அவர்கள் இலங்கைக்குத் திரும்பிச் செல்லும் வரை மனிதாபிமான அடிப்படையில் தமிழ்நாட்டில் தங்கலாம். இந்த நிலையில் நிரந்தர மறுவாழ்வு உதவிகள் எதுவும் அவர்களுக்குச் செய்யக் கூடாது என்று மைய அரசு தெரிவித்துள்ளது. எனவே அவர்களின் மறுவாழ்வுக்காக எந்தவிதமான திட்டங்களும் தற்பொழுது செயல்படுத்தப்படவில்லை. முகாம்களிலுள்ள அகதிகளுக்கு மட்டும் உடனே நிவாரண உதவிகள் மட்டும் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

**திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையிலே இருந்து வருகிற தமிழர்களை கேரள அரசு கூட ஏற்றுக்கொள்வதற்கு தயாராக இருக்கிறது, மத்திய அரசு விரும்பினால் என்று கேரள முதல்வர் சொல்லியிருக்கிறார். எனவே, இங்கே வருகிற தமிழ் அகதிகளை கேரளாவிற்கு அனுப்புவதற்கு தமிழக அரசு கேரள அரசிடம் ஏதேனும்





1985 மார்ச் 27]

பேச்சு வார்த்தை நடத்தியுள்ளதா? அப்படியானால், வெளி மாநிலங்களுக்கும் அனுப்ப அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. த. இராமசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையில் முயற்சிகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. மைய அரசு அனுமதி எதிர்பார்க்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய பதிலிலே மறுவாழ்வுக்கான திட்டங்கள் எதுவும் செயல்படுத்தப்படவில்லை என்று சொன்னார்கள். மனிதாபிமான உணர்வோடு ஸ்ரீலங்காவிலிருந்து இங்கே வருகின்ற தமிழர்கள் தொழில் தொடங்குவதற்கு ஏதாவது முன்னுரிமை வழங்க அரசு முன் வந்துள்ளதா? அப்படித் தொழில் தொடங்குவதற்கு அரசு கடன் உதவி, நிதி உதவி வழங்குவதிலே ஏதாவது சலுகை கொடுக்கப்படுகிறதா? அவர்களுக்கு உதவித் தொகை வழங்குவதிலே பல தவறுகள் இடையிலே நடைபெறுவதாகச் சொல்கிறார்கள். அதை நீக்குவதற்கு அரசாங்கம் எதிர்காலத்திலே என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது?

**மாண்புமிகு திரு. த. இராமசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீலங்கையோடு செய்துகொண்ட ஒப்பந்தத்தினுடைய அடிப்படையில் தாயகம் திரும்பக்கூடிய தமிழர்களுக்கு கடன் வசதி, தொழில் துறையில் முன்னுரிமை, வேலை வாய்ப்பு போன்ற காரியங்களை அரசாங்கம் செய்து கொண்டிருக்கிறது. இருந்தாலும் அகதியாக வந்து கொண்டிருக்கிற நமது தமிழர்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் நம்முடைய தமிழக அரசு சில காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறது. முகாம்களுக்கு வெளியே தங்கி உள்ளவர்களுக்கு ரேஷன் கார்டுகள், சமையல் எரிவாயு, சமையல் எண்ணெய் முதலியன முன்னுரிமை அடிப்படையில் தரப்படுகின்றன. நண்பர்கள், உறவினர்களுடன் தங்கியிருப்போர் சிறிதுகாலம் சென்று கையிருப்புப் பணம் செலவழிந்து கஷ்டமான நிலையில் இருந்தால் அவர்கள் முகாம்களில் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். தனியார் தொண்டு நிறுவனங்களின் மூலம் மிகவும் அத்தியாவசியமான நபர்களுக்கு வேலை வாய்ப்பு செய்து தரப்படுகிறது. தனியார் நிறுவனங்களில் 173

பேர்களுக்கும் திருச்சியிலுள்ள பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் 20 பேர்களுக்கும் வேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது. சென்னை மாநகரிலுள்ள வி. ஜி. பன்னீர்தாஸ் நிறுவனம் 500 பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதாக அறிவித்திருக்கிறது; ஆனால் இன்னும் அளிக்கவில்லை. அதைப்போன்று 11 வது வகுப்பு வரையில் அகதிகளாக வந்திருக்கிற மாணவர்கள் எந்தவிதமான முன் நிபந்தனையும் இன்றி சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். கல்லூரிகளில் கூடுதல் செலவு இல்லாமல் மாணவர்களின் எண்ணிக்கையை உயர்த்தி, மறுவாழ்வுத் துறையிலிருந்து சான்றிதழ் பெற்று, அவர்களைச் சேர்த்துக் கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அகதிகளாக வந்து, ஆதரவற்ற நிலையிலுள்ள மாணவர்கள், அவர்கள் தகுதி படைத்தவர்கள் என்று வருவாய்த்துறை அதிகாரிகள் சான்று வழங்கினால், விஞ்ஞானம், மருத்துவம், பொறியியல் கல்லூரிகளில் தனியாக இடம் ஒதுக்க அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

**திரு. கு. சுப்பராயன் :** தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இலங்கையிலிருந்து வந்திருக்கிற அகதிகளுக்கு தனியார் நிறுவனங்கள் சிலவற்றிலே வேலைவாய்ப்பு ஏற்படுத்தியிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். 'சீப் லேபர்' என்ற முறையில் அகதிகளாக வந்திருக்கிற இலங்கைத் தமிழர்களின் உழைப்பை சுரண்டுகின்ற முறையிலே சில தனியார் நிறுவனங்கள் அவர்களுக்கு வேலை கொடுக்க முன்வந்திருப்பது அரசுக்குத் தெரியுமா? மற்றவர்களுக்கு வழங்குவதைவிட அவர்களுக்கு குறைந்த சம்பளம் கொடுத்து, அவர்களுடைய உழைப்பை சுரண்டுகின்ற நிலையைத் தடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. த. இராமசாமி :** தலைவரவர்களே, இப்படிப்பட்ட செய்திகள் எதுவும் அரசுக்கு வரவில்லை.

**திரு. பொ. உத்திராபதி :** தலைவரவர்களே, இலங்கையிலிருந்து வந்திருக்கக்கூடிய அகதிகளுக்கு ஏற்படுகிற முழுமையான செலவையும் மத்திய சர்க்கார் ஏற்றுக்கொள்கிறதா? அப்படி ஏற்றுக்கொள்ளாமல் குறைந்த தொகை கொடுத்தால், முழுத் தொகையையும் கொடுக்க மாநில சர்க்கார் வற்புறுத்துமா? அகதிகளாக வந்திருக்கக்கூடியவர்களுக்கு ஒரு நாளைக்குக் கொடுப்பது, குழந்தைகளுக்கு ரூ. 1.60 வீதமும் ஆண்களுக்கு 3 ரூபாய் வீதமும் சராசரியாகக் கொடுக்கப்படுகிறது. இது மிகவும்



குறைந்த உதவித் தொகை. இந்தத் தொகையை உயர்த்திக் கொடுத்து, அவர்களுடைய வாழ்க்கைக்கு உத்தரவாதம் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா? வாரத்திற்கு இரண்டு கிலோ அரிசி தான் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். அவர்களுக்குத் தேவையான அரிசி முழுவதையும நியாயவிலைக் கடைகள் மூலம் கொடுக்க தகுந்த ஏற்பாடு செயயப்படுமா?

**மாண்புமிகு திரு. த. இராமசாமி :** அகதிகளுக்கு வழங்கப்படுகின்ற அத்தனை செலவுக்கும் மத்திய அரசு பொறுப்பேற்றுக் கொள்கிறது. ஐந்து பேர் கொண்ட ஒரு குடும்பத்திற்கு மாதம ஒன்றுக்கு ரூ. 357.50 வழஙகப்படுகிறது. ஒரு குடும்பத்தில் 5 பேர்களுக்குமேல் வயதுவந்த ஒரு நபருக்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய் 82.50 வழங்கப்படுகிறது. அதைப்போன்று 12 வயதுக்கு உட்பட்டிருந்தால் மாதம் ஒன்றுக்கு ரூ. 27.50 வழங்கப்படுகிறது. மேலும் பெரியவர்களுக்கு 400 கிராம் வீதமும் சிறுவர்களுக்கு 200 கிராம் வீதமும் நாள் ஒன்றுக்கு அரிசி வழங்கப்படுகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மா. மணிமாறன் :** தலைவரவர்களே, இலங்கையிலிருந்து வருகின்ற அகதிகள் பெரும்பாலும் மீனவர்களாக இருப்பதாலும இராமேஸ்வரம் கடற்கரையிலும் மீனவர்கள் அதிகமாக இருப்பதாலும் அங்கே மீன்பிடித் தொழிலில் சிரமம் இருக்கிறது. ஏற்கெனவே அங்கே இருக்கிற மீனவர்களும் இலங்கையிலிருந்து அகதிகளாக வந்த மீனவர்களும் தொழிலில் ஏற்படுகின்ற சிரமம் காரணமாக வேறு பகுதிகளில் மீன் பிடிக்கச் செல்லும்போது அந்தந்தப் பகுதியில் இருக்கின்ற மீனவர்கள் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். இது அரசுக்கும் தெரியும். ஆகளால் இராமேஸ்வரத்தில் ஏற்கெனவே இருநதுகொண்டிருக்கிற மீனவர்களுக்கும் சிலோன் அகதிகளாக வருகின்ற மீனவர்களுக்கும் அடிக்கடி தகராறு வருகிறது. அதனால் அவர்கள் மீன்பிடித் தொழில் செய்ய முடியாமல் பாதிக்கப்பட்டிருப்பது அரசுக்குத் தெரியுமா? அப்படி இருந்தால் அவர்கள் தொடர்ந்து மீன்பிடித் தொழிலில் ஈடுபட அரசு என்ன நடவடிக்கை எடுக்கவிருக்கிறது? மேலும் அங்கே பராமரிப்புப் பணி சரியாக நடைபெறவில்லை . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பல கேள்விகளை ஒன்றாகக் கேட்டால் எல்லாவற்றுக்கும் எப்படி பதில் சொல்ல முடியும்? சுருக்கமாக, ஒவ்வொன்றாகக் கேளுங்கள்.

**திரு. மா. மணிமாறன்:** முக்கியமான பிரச்சினை. அரசு ஊழியர்கள் பராமரிப்புப் பணியைச் செய்கிறார்கள். அவர்களுடைய பராமரிப்பு சரியாக இல்லாத காரணத்தால் சீர்கேடு இருப்பதாகச் செய்தித்தாள்கள் சுட்டிக்காட்டுகின்றன. எனவே சரியான முறையில் பராமரிப்புப் பணிகளைச் செய்ய அரசு அதிகாரிகளோடு, சர்வ கட்சி உறுப்பினர்களைக்கொண்டு அமைக்கப்படும் குழுவும் இணைந்து செயல்பட அரசு ஏற்பாடு செய்யுமா?

(முற்பகல் 9.20)

**மாண்புமிகு திரு. த. இராமசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு உறுப்பினர் மணிமாறன் அவர்கள் கூறுவதைப்போல ராமேஸ்வரத்திலே உள்ள மீனவர்கள் மீன் பிடித்துக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால் இலங்கையிலிருந்து வந்து நமது முகாம்களில் தங்கியிருக்கக்கூடிய மீனவர்கள் இன்னும் மீன் பிடிக்க அனுமதிக்கப்படவில்லை. அவர்களுடைய போட்டுகள் கூட ராமேஸ்வரம் கடற்கரையில் உள்ள 'போர்ட் டிபார்ட்மென்ட்' மூலம் பாதுகாக்கப்பட்டு வருகிறது. ஆகவே அந்த மாதிரியான பிரச்சினைக்கு இடமில்லை. இலங்கையிலிருந்து அகதிகளாக வந்திருக்கின்ற மீனவர்கள் இன்னும் கடலில் கால் வைக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மு. இராமநாதன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு துயரமான சம்பவத்தைப் பற்றி கேள்வி கேட்கின்றபோது, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் கொஞ்சம் தாராளமாக அனுமதிக்க வேண்டும். எங்களை உட்காரச் சொல்லவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலில் மத்திய அரசாங்கம் வெகு விரைவில் இலங்கையில் இருக்கக்கூடிய அரசுக்கும், இப்போது வந்திருக்கக் கூடிய அகதிகளுக்கும் இடையில் உள்ள பிரச்சினைக்கு தீர்வு காணக்கூடிய சுமுக நிலை வந்துவிட்டால், அங்கே அவர்கள் செல்ல இருக்கிறார்கள் என்பதுபோல் மத்திய அரசாங்கத்திடம் இருந்து பதில் வந்திருக்கிறது என்று அவருடைய பதிலில் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் வருகின்ற செய்திகளைப் பார்க்கும் போது அந்த மாதிரி ஒரு நல்ல எண்ணம் மலரும் சூழ்நிலை இருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே மத்திய அரசு பாகிஸ்தான்



பிரிவினையின்போது அகதிகளாக வந்தவர்கள் மீது எவ்வளவு அக்கறை எடுத்துக்கொண்டு பரிவு காட்டினார்களோ, அதேபோல் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய 5 கோடி தமிழர்களும் அவர்களை வாழ வைக்கவும், மத்திய அரசு ஒரு திட்டவட்டமான முறையில் இலங்கையிலிருந்து வரக்கூடிய அகதிகளை வாழ வைப்பதற்கு பெருமளவு நிதி உதவி செய்வதற்கு மாநில அரசு வற்புறுத்தி இருக்கிறதா என்பதை கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. த. இராமசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் அமைந்திருக்கிற புரட்சித் தலைவர் அரசாங்கம் மிகுந்த முனைப்போடு மத்திய அரசாங்கத்தை வற்புறுத்தி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி பா. வளர்மதி:** பேரவைத் தலைவர் அவர்களே, கொடைக்கானல், ஊட்டி போன்ற மலைப் பகுதிகளில் காபி, தேயிலை போன்ற எஸ்டேட்டுகள் அதிகமான அளவில் இருக்கின்றன. எனவே இலங்கையிலிருந்து வந்து இருக்கின்ற அகதிகளுக்கு அங்கே வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா? இலங்கையிலிருந்து வந்திருக்கும் அகதிகள் அங்கேயுள்ள வீடுகளையும் சொத்துக்களையும் விட்டுவிட்டு வந்திருக்கிறார்கள். எனவே இழந்த அந்தச் சொத்துக்களை ஈடு செய்ய நமது அரசு மத்திய அரசை வற்புறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. த. இராமசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, வற்புறுத்துகின்ற நடவடிக்கையில் ஈடுபடும்.

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையில் இருந்து நாள்தோறும் அகதிகள் வந்து கொண்டிருக்கிறார்கள். கச்சத்தீவு நம்மிடம் இருந்தால், அவர்களை அங்கே குடியேற வைக்கலாம். ஆனால் மத்திய சர்க்கார் அதை இலங்கை அரசுக்குக் கொடுத்துவிட்டது. இனிமேல் ஒன்றும் செய்ய முடியாது என்று சொல்கிறார்கள். எனவே மத்திய அரசை வற்புறுத்த நமது அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? அதோடு, சர்வ கட்சியைச் சேர்ந்த தலைவர்களைக் கூட்டிக்கொண்டு பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு முயற்சி செய்யுமா?

**மாண்புமிகு திரு. த. இராமசாமி:** தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக நமது மதிப்பிற்குரிய மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் இந்தச் சபையில் ஏற்கனவே தெரிவித்து இருக்கிறார்கள்.

**திரு. சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையிலிருந்து வந்திருக்கக்கூடிய அகதிகள் எல்லாம் மீண்டும் தாயகம் செல்ல மாட்டோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இலங்கையில் எங்களுக்கு இனிமேல் வாழ்வே இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே தமிழகத்தில் தான் புகலிடம் வேண்டும் என்று சொல்கிறார்கள். அப்படிச் சொல்லுகின்ற தமிழர்களுக்கு இங்கேயே தங்க அரசு ஏற்பாடு செய்யுமா? அப்படி அவர்களை இங்கேயே தங்க அனுமதி அளித்தால், வேலைவாய்ப்புகளில், கடன் உதவி வழங்குவதில் அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுமா? அதோடு, ஏற்கனவே 10 ஆண்டுகளுக்கு முன்பாக பல்வேறு அகதிகள் வந்திருக்கிறார்கள். இதுபோன்று அவர்களுக்கும் வேலைவாய்ப்புகளிலும், கடன் உதவி வழங்குவதிலும் முன்னுரிமை அளிக்க அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. த. இராமசாமி:** தலைவர் அவர்களே, சாஸ்திரி-பண்டாரநாயகா ஒப்பந்தத்தின் அடிப்படையில் 1964-ல் இருந்து இங்கே வந்து கொண்டிருக்கிற, இலங்கையிலிருந்து திரும்பிக்கொண்டிருக்கிற தமிழர்களுக்கு பல்வேறு வசதிகள் வாய்ப்புகளையெல்லாம் மத்திய அரசின் மூலமாக நமது தமிழக அரசு செய்துகொண்டிருக்கிறது. இப்போது வந்திருக்கிற, இலங்கை கலவரத்தால், பல்வேறு வன்செயல்களுக்கு உள்ளாக்கப்பட்டு வந்திருக்கிற நம் தமிழர்களுக்கு அவர்களைத் தங்க வைக்கிற பாங்கினைத்தான் நம்மால் செய்ய முடிகிறது. அவர்கள் அந்த நாட்டுக்கு உரிமைப்பட்டவர்கள். ஆகவே இந்தப் பிரச்னை சம்பந்தமாக மத்திய பேரசுதான் முடிவு எடுக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, அங்கிருந்து வன்முறைச் சூழல் காரணமாக ஓடிவருகிற தமிழ் மக்களை இங்கேயே நிரந்தரமாகத் தங்குவதற்கு இங்கே வசதிகளை நாம் செய்வோமானால் இலங்கை அரசினுடைய நோக்கம்



தான் நிறைவேறும். எப்படியாவது அங்கேயிருந்து எல்லோரையும் அனுப்பிவிட வேண்டும் என்கிற அந்த நோக்கம்தான் நிறைவேறும். ஆகையால் வன்முறை காரணமாக வருகிற அந்த மக்கள் அங்கே வாழ உரிமை படைத்தவர்கள் என்ற நிலையைத்தான் நம் அரசும் இந்திய அரசும் மேற்கொண்டிருக்கிற காரணத்தினால் அதைத் திரும்பத் திரும்ப வற்புறுத்தி வருகிறோம்.

**திரு. உ. சுப்பிரமணியன்:** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலில் சுமார் 85,000 பேர்கள் வந்திருப்பதாகச் சொல்கிறார்கள். இவர்களில் ஈழத்துத் தமிழர்கள் எவ்வளவு பேர்கள், இந்திய வம்சாவளித் தமிழர்கள் எவ்வளவு பேர்கள்? இப்போது அவர்களுக்குக் கொடுக்கப்படுகிற வசதி வாய்ப்புகள் ஏற்கனவே சாஸ்திரி-பண்டாரநாயகா, நேரு-கொத்தலவாலா ஒப்பந்தங்களின் மூலமாக வந்தவர்களைவிட இப்போது அங்குள்ள கலவரத்தின் மூலம் வருகிறவர்களுக்கு அதிகமான சலுகை காட்டுவதாக அங்கேயுள்ள அகதிகள் மத்தியில் ஒரு எண்ணம் நிலவுகிறதே, அதைப்பற்றி அமைச்சர் அவர்கள் ஏதேனும் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. த. இராமசாமி:** தலைவர் அவர்களே, ஏற்கனவே ஒப்பந்தங்களின் அடிப்படையில் வந்துகொண்டிருக்கிற, தாயகம் திரும்புகிற தமிழர்களுக்கு தினந்தோறும் எந்த ரேஷன் வழங்குகிறோமோ, மாதந்தோறும் எந்த அளவு பணம் வழங்குகிறோமோ அதே அடிப்படையில்தான் வன்முறைச் செயல்களால் இங்கே வருகை தந்திருக்கிற அந்த அகதிகளுக்கும் வழங்கிக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. க. பாலசுப்பிரமணியன்:** தலைவர் அவர்களே, இலங்கையிலிருந்து வருகிற அகதிகள் பெரும்பாலோர் கடலில் மீன்பிடித் தொழில் செய்கிறவர்கள், தேயிலைத் தோட்டங்களில் பணியாற்றுகிறவர்கள் என்று சொன்னார்கள். இராமநாதபுரத்திலிருந்து கடலோர எல்லையில் உள்ள பல கிராமங்களில் மீன்பிடித் தொழில் செய்தவர்கள் குடியமர்த்தப்பட்டிருக்கிறார்கள். சமீபத்தில் கிள்ளையில் 50 குடும்பங்கள் வந்திருந்ததை நானே நேரில் சென்று விசாரித்தேன். அந்தக் குழுத் தலைவர் தெரிவித்த தகவல், நபர் ஒன்றுக்கு 15 நாட்களுக்கு ரூ. 110 விதம் கொடுப்பதாகவும், சின்னக் குழந்தைகளுக்கு ரூ. 55 விதமும் 15 நாட்களுக்கு

கொடுப்பதாகவும் தெரிவித்தார். அந்தத் தகவல் உண்மையா? அப்படிக் கொடுக்கப்படுவது உண்மை என்றால் நிச்சயமாக அதைப் பாராட்டுகிறேன் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பதில் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. த. இராமசாமி:** தலைவர் அவர்களே, நபர் ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 110 தான் வழங்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த அரசுக்கு பாராட்டுதல்களைத் தெரிவித்திருக்கிறார்கள். நன்றி.

**திரு. எம். அண்ணாதாசன்:** தலைவர் அவர்களே, 22—3—1985 அன்று திருச்சியில் உள்ள கொட்டப்பட்டு முகாமிற்கு மாண்புமிகு அகதிகள் மறுவாழ்வுத்துறை அமைச்சர் அவர்களும் மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் அவர்களும் வந்து பார்வையிட்டார்கள். அவர்களிடம், அரசாங்கத்திலிருந்து கொடுக்கப்படுகிற ரேஷன்கள் அனைத்தும் போதுமானது என்றும் எங்களுக்கு சரியாக இருக்கிறது, ஆனால் எங்களுடைய குழந்தைகளுக்கு, சின்னக் குழந்தைகளுக்கு பால் கொடுப்பது போதாத நிலையில் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கிறோம், அந்தக் குழந்தைகளைப் பாதுகாத்து திரும்பி நாங்கள் கொண்டு செல்வதற்கு குழந்தைகளுக்கு பால் வழங்க தமிழக அரசு ஏற்பாடு செய்து தருமா என்று கேட்டுள்ளார்கள். அதற்கு அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. த. இராமசாமி:** தலைவர் அவர்களே, அந்த முகாமிற்கு நானும் மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களும் சென்று அங்கே அமர்த்தப்பட்டிருக்கிற அகதிகளைச் சந்தித்து அவர்கள் குறைபாடுகளைக் கேட்கிறபோது குடிநீர்ப் பிரச்னை சம்பந்தமாக அவர்கள் குறிப்பிட்டார்கள். தண்ணீர் வசதி கொஞ்சம் கம்மியாக இருக்கிறது, அதை கொஞ்சம் சீர்படுத்தித் தாருங்கள் என்று கேட்டுக்கொண்டார்கள். எல்லா வகைகளிலும் அரசாங்கம் எங்களுக்கு அதிகமான காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறது என்றெல்லாம் பெருமகிழ்ச்சியோடு சொன்னார்களே தவிர பால் சம்பந்தப்பட்ட விவகாரங்கள் பற்றி எங்களிடத்தில் அவர்கள் கூறவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





(முற்பகல் 9.30)

**திரு. கே. பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்டபத்திலும், இராமேஸ்வரத்திலும் அகதிகளாக வந்துள்ள மீனவர்களுடைய படகுகளை அரசே தன்னுடைய செலவில் கிள்ளைக்கோ அல்லது கடலூருக்கோ கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. த. இராமசாமி:** தலைவர் அவர்களே, இலங்கை அகதிகளால் கொண்டுவரப்பட்ட படகுகள் மிகுந்த பாதுகாப்போடு, துறைமுகப் பொறுப்பிலே இருக்கிறது. இன்றைய தினம் அவர்கள் தொழில் செய்ய முடியாத நிலையில் இருக்கின்ற காரணத்தினால் அவர்களுடைய படகுகளை மற்ற இடங்களுக்கு கொண்டு செல்ல இயலாத நிலையில் இருக்கிறார்கள்.

## நெடுங்குளம் கிராமத்தில் புதிய ஏரி அமைத்தல்.

**23—( * வினா எண். 606) திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிப்புத்தூர் தொகுதி வத்திராயிருப்பு ஒன்றியம் நெடுங்குளம் கிராமத்தில் புதிய ஏரி அமைக்க பொதுமக்களிடம் இருந்து கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: (அ) மற்றும் (ஆ):** திருவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு ஒன்றியம், நெடுங்குளம் கிராமம் அருகே ஏரி அமைக்கும் பணி குறித்த கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டு திட்டம் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது, இந்தத் திட்டம் ஆய்வில் எடுத்துக்கொள்ளப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். ஆய்வு என்ற அடிப்படையில் அதிகாரிகள் காலங்கடத்திக் கொண்டிருக்கிறார்கள். இவ்வளவு

காலத்திற்குள் ஒரு ஆய்வைச் செய்யவேண்டும், இவ்வளவு காலத்திற்குள் இந்த வேலையை முடிக்க வேண்டும் என்ற வரைமுறையை அரசு ஏற்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** பேரவைத் தலைவர் அவர்களே, இத்தகு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென்ற கோரிக்கை நாளுக்குநாள் வலியுறுத்தப்பட்டு வருகின்ற காரணத்தினால், திட்டத்தை நடைமுறைப் படுத்த, அதிகமான ஆய்வுப் பணிகள் இன்று தமிழகத்தில் நடை பெற்றுக்கொண்டு வருகின்றன. அந்த முறையில் குறிப்பிட்ட காலகட்டத்தில் அந்த ஆய்வு நடத்த வேண்டுமென்று உததிரவு போட முடியாது. ஒருசில ஆய்வுகள் காடுகளிலும், ஒருசில ஆய்வுகள் சமவெளிப் பகுதிகளிலும் நடத்தப்பட வேண்டிய சூழ்நிலை வரும்—அந்தந்த இடத்திற்குத் தகுந்தாற்போல் அந்த ஆய்வு அமையும். நாம் சொல்வதற்கு ஏற்ப அந்த ஆய்வு அமைய முடியாது. தண்ணீரின் அளவு, மழையின் அளவு போன்றவற்றைப் பொறுத்துதான் ஒரு திட்டத்தை மேற்கொள்ளக்கூடிய நிலையில் பாசனத் துறை இருக்கின்ற காரணத்தினால், அந்தத் திட்டத்தை மேற்கொள்ள வேண்டுமென்றால், ஆய்வுக்கு உரிய காலம் தேவைப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என் தொகுதியிலுள்ள நெடுங்குளம் பகுதிக்குப் போனார்கள். அங்குள்ள பொதுமக்கள் கோரிக்கை மனுக்களை அமைச்சர் அவர்களிடம் கொடுத்தார்கள். அமைச்சர் அவர்களும் அந்த இடத்தைப் பார்வையிட்டார்கள். ஆதலால், இப்படி அமைச்சர் அவர்களே நேரில் பார்த்த இடத்தைப் பொறுத்த வேலைகளுக்காவது அந்த அதிகாரிகளுடைய ஆய்வு தேவையில்லை என்று அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர்களைப் பொறுத்தமட்டிலும், அந்தந்தப் பகுதிகளிலுள்ள மக்கள் தேவையைப் பற்றி மட்டும் புரிந்து கொள்ளக் கூடியவர்களாக இருக்கிறார்களே தவிர, டெக்னிகல்லாக திட்டவட்டமாக இந்தக் காரியத்திற்கு இவையெல்லாம் தேவை என்று புரிந்துகொள்ள முடியாத நிலையில் அமைச்சர்கள் இருப்பார்கள். அதற்காகத்தான் பொறியியல் வல்லுநர்களை நாம் நியமித்திருக்கிறோம். ஆகவே, அந்த ஆய்வுகள் அவர்களாலே



மேற்கொள்ளப்பட வேண்டும். அந்த ஆய்வின் அடிப்படையிலே தான் அந்தத் திட்டத்தை மேற்கொள்ள வேண்டுமா, வேண்டாமா என்று அரசு முடிவு செய்யவேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்புகள்.

### (அ) அரசினர் சட்ட முன்வடிவுகள். (மே. செ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவுகள் திருத்தம் ஏதும் இன்றி நிறைவேற்றப் பெற்றதாக மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

(1) தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 9/1985).

(2) தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 10/1985).

(3) தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 11/1985).

(4) 1985 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக்கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 12/1985).

(5) 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 13/1985).

(6) 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 14/1985).

(7) 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் மற்றும் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்தம் மற்றும் தனி வகை முறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 15/1985).

### (ஆ) ஆளுநரிடமிருந்து வந்துள்ள செய்தி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து 25—3—1985 ஆம் தேதியிட்ட கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"I have received with satisfaction your resolution thanking me for my address on the 8th March 1985 to the Members of the Legislature."

### 3. ஒழுங்குப் பிரச்னை.

உறுப்பினர்களது அறிவிப்புகளை எடுத்துக்கொள்ளாமல் அமைச்சரை தன்னிலை விளக்கம் அளிக்க அனுமதித்தல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேற்று பேரவையில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் மகன் இல்லத்தில் நடைபெற்ற மத்திய அரசு அதிகாரிகளின் சோதனை குறித்து ஓர் ஒழுங்குப் பிரச்னை எழுப்ப முயலப்பட்டது. அது ஒழுங்குப் பிரச்னையின்கீழ் வராது என்று நான் நிராகரித்தேன். அதன் பிறகு, அதே பிரச்னை குறித்து சில மாண்புமிகு உறுப்பினர்களிடமிருந்து ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு முன் அறிவிப்புகள் வந்துள்ளன. இப்பிரச்னையில் தமிழக அரசின் நேரிடைப் பொறுப்பு எதுவும் இல்லை என்கிற காரணத்தால் இப்பிரச்





னையை பேரவையில் எழுப்ப இயலாது என்று இசைவை என் அறையிலேயே மறுத்துள்ளேன். ஆயினும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், இதில் நம்மைக் குறித்துப் பிரச்னை எழுவதால் ஒரு தன்னிலை விளக்கம் அளிக்க அனுமதி கேட்டுள்ளார். பேரவை விதி 110-ன் கீழ் அவ்விதம் ஒரு தன்னிலை விளக்கம் அளிக்க மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சருக்கு அனுமதி அளிக்கின்றேன். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

*** திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் தங்களிடத்திலே வழங்கப்பட்டிருக்கிற நிலையில், அந்தத் தீர்மானத்தின் அடிப்படையில் ஒரு விவாதம் எழுப்பப்படுவதற்கான உரிமை இந்தச் சட்ட மன்றத்திலே இருக்கிறபோது, தாங்கள் அதை மறுத்துவிட்டு, அதேநேரத்திலே தனி நபர் ஒருவரை தன்னிலை விளக்கம் அளிக்கச் சொல்வது என்பது, சட்டமன்ற விதிமுறைகளுக்கு ஒத்துவராது என்று கருதுகிறேன். அது சட்டமன்ற உறுப்பினர்களுடைய அடிப்படை உரிமை மீறப்படுவதாக அமைகிறது. ஒரு உறுப்பினருடைய அடிப்படை உரிமை மட்டும் அல்ல, சட்டமன்றத்தினுடைய உரிமையையும் மறுப்பதாக அமைகிறது என்பதை தங்கள் நினைவிற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேற்றையதினம் இந்தப் பிரச்னை எழுப்பப்பட்டது. அப்போது பாயின்ட் ஆப் ஆர்டரிலே வராது என்று சொன்னேன். நான் எக்ஸ்பஞ்ச் பண்ணவில்லை. ஏற்கெனவே என்ன சொன்னேன் என்றால், பேசும்போதே ரெஸ்ட்ரெயின்ட்டாகப் பேசுங்கள், அப்போது எக்ஸ்பஞ்ச் பண்ணத் தேவையில்லை என்று சொன்னேன். Now it has come to light தருணம் இல்லை, அதனாலேயே நான் இந்த முடிவை நான் எடுக்க வேண்டியதாகிவிட்டது. நேற்று பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை என்று சொன்ன உடனேயே ஒரு பத்திரிகையிலேயும் அது வரவில்லை என்ற நிலை இருந்திருந்தால் இந்தப் பிரச்னையே வராது. நேற்று நான் பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை என்று சொன்ன பிறகும், நாம் அதை முழுவதுமாக விவாதித்தது போல் எல்லாப் பத்திரிகையிலேயும் வந்திருக்கிறது. அப்போது பாதிக்கப்பட்ட உறுப்பினர் தம் உரிமையைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் . . . . .

[1985 மார்ச் 27

**திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒரு அமைச்சருடைய உரிமையைப் பாதுகாப்பது என்பதில் எனக்கு எந்த மாறுபாடும் இல்லை. ஆனால் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் மட்டுமல்ல, he is also a Member of the House.

**திரு. க. அன்பழகன்:** உறுப்பினராகவும், அமைச்சராகவும், இரண்டு நிலைகளிலும் இருக்கிற ஒருவருடைய உரிமையைப் பாதுகாப்பதில் எனக்கும் மாறுபட்ட கருத்து கிடையாது. ஆனால் உறுப்பினர்களுடைய உரிமை மன்றத்தின் அடிப் படையான உரிமை என்பதைத் தாங்கள் மறந்துவிடக் கூடாது. இரண்டாவது, ஒத்திவைப்புத் தீர்மானம் தரப்பட்டிருக்கிற நோக்கம் என்னவென்றே இந்த அவையில் எடுத்துச் சொல்லப்பட வில்லை. நேற்றையதினம் கூட பாயின்ட் ஆப் ஆர்டரிலே சொல் கிறபோது அந்த நோக்கத்தைச் சொல்லத் தாங்கள் அனுமதிக்காத காரணத்தால் சொல்லப்படவில்லை. பத்திரி கையிலே வெளியிலே வந்த செய்திகள் எவையாக இருந்தாலும் கூட, அந்த நோக்கத்தை இங்கே சொல்ல அனுமதிக்கப்பட வேயில்லை. எனவே அந்த நோக்கத்தைச் சொல்ல முதலில் அனுமதித்து விட்டு, அதற்குத் தருகிற விளக்கமாக அமைச்சர் பதில் சொல்வாரேயானால் அல்லது தன்னிலை விளக்கமாக தருவார்களேயானால் அதுதான் இந்த அவைக்குப் பொருத்த மானது என்பதைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதனால்தான் நான் படிக்கும்போதே சொன்னேன், 'இப்பிரச்னையில் தமிழக அரசின் நேரிடைப் பொறுப்பு எதுவும் இல்லை' என்று (குறுக்கீடு). நான் சொல்லிவிடுகிறேன். உங்களுக்கு பிறகு வாய்ப்பு கொடுக் கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரிடம் சொல்கிறேன், நேற்று இங்கே திரு. ரகுமான்கான் அவர்களும், திரு. சிந்தன் அவர்களும் பாயின்ட் ஆப் ஆர்டரைக் கிளப்பினார்கள். " There is no point of order "என்று அப் போதே தீர்ப்பு கொடுத்து விட்டேன், ஆனால் அவ்வளவையும் நான் எக்ஸ்பஞ்ச் பண்ணவில்லை. (குறுக்கீடு) (கூச்சல், குழப்பம்) இல்லை. உட்காருங்கள். பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை என்று இங்கே சொன்னாலே, பத்திரிகையில் அது வந்திருக்கக் கூடாது. It should not be published ". ஆனால் பத்திரிகை களிலே வந்திருக்கிறது. (கூச்சல், குழப்பம்).



1985 மார்ச் 27]

**திரு. அ. ரகுமான்கான்:** பத்திரிகையிலே எவ்வளவோ வரும். அது வேறு இதுவேறு . . . (கூச்சல், குழப்பம்).

(முற்பகல் 9.40.)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று இதுபற்றி மாண்புமிகு உறுப் பினர்கள் ஒழுங்குப் பிரச்சனை என்ற முறையில் எழுப்பினார்கள். இது ஒழுங்குப் பிரச்சினையிலே வராது, அவை ஏதேனும் விதி முறையின் கீழே வரவேண்டும் என்றும் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அப்போது விளக்கங்கள் தரவேண்டும் என்று வாதாடும் வகையிலே பேசினார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அவை நிகழ்ச்சிக் குறிப்பிலிருந்து அவற்றை அகற்றாமல் அவை அப்படியே இருக்கின்றன. அவை எல்லா பத்திரி கைகளிலும் வந்திருக்கின்றன. நேற்றே மாண்புமிகு அமைச்சர் திரு. ப. உ. சண்முகம் விளக்கம் தரவேண்டுமென்று விரும்பினாலும் கூட, இது ஒழுங்குப் பிரச்சனை ஆகாது என்று தலைவர் அவர்கள் முடிவு எடுத்ததற்குப் பிறகு அதுபற்றி இங்கு எவர் பேசுவதும் முறையாகாது என்ற காரணத்தினால் நிறுத்தி வைக் கப்பட்டது. பத்திரிகையில் வந்ததற்குப் பிறகு, பத்திரிகையில் வந்த ஒரு செய்தி பற்றி மறுப்பு கூறவோ, அதுபற்றி நடவடிக்கை எடுக்கவோ, அமைச்சருக்கு மட்டுமல்ல, எந்த உறுப்பினருக்கும் உரிமை இருக்கிறது. வெளியிலும் அவர்கள் விளக்கம் தந்து அறிக்கைகள் வெளியிடலாம். நேற்று மாலை பத்திரிகையிலே வந்ததை, நேற்று மாலையோ அல்லது இன்று காலை செய்தித் தாளிலோ கூட மாண்புமிகு அமைச்சர் ப.உ.ச. அவர்கள் தன்னிலை விளக்கத்தை, தன்னுடைய கருத்துக்களை வெளி யிட்டு இருக்கலாம். ஆனால் வெளியிட்டு இருப்பார் களேயானால், அவை நடந்துகொண்டிருக்கும்போது, நேற்றே எழுப்பப்பட்ட பிரச்சனைக்கு இந்த அவைக்குச் சொல்லாமல் வெளியே சொல்லிவிட்டார்கள், சொல்லியது ஏன் என்று கேட்பார்கள் என்ற காரணத்தினால்தான், நேற்றே பத்திரிகைக்கு வெளியிடாமல், இன்றும் வெளியிடாமல், இந்த அவைக்கு முதன் முறையாக எடுத்துச் சொல்ல வேண்டும் என்ற முறையில்தான் தன்னிலை விளக்கம் இங்கே சொல்லப் படுகிறதே தவிர, அதற்கு இங்கேதான் சொல்ல வேண்டியது என்று இல்லை, வெளியிலே, பத்திரிகையிலே வந்த செய்தி

களுக்கு பத்திரிகைகளில் மறுப்பு தெரிவிக்கலாம். நேற்று அந்தப் பிரச்சனை எழுப்பப்பட்டுவிட்ட காரணத்தினால், மாண்புமிகு தலைவர் அவர்கள் இது பிரச்சினைகளிலே வராது என்று தெரிவித்துவிட்ட காரணத்தினாலும், நிகழ்ச்சி குறிப்பில் இடம் பெற்றுவிட்ட காரணத்தாலும், வெளியிலே அறிக்கை கொடுத்தால் அவைக்குக் கொடுக்காமல் கொடுத்து விட்டார் என்ற குற்றச்சாட்டு வரும் என்பதாலும், தன்னிலை விளக்கம் தருகிறார்கள். அதிலே தவறு இல்லை. (கூச்சல்—குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரகுமான்கான், நீங்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறீர்கள். இப்பொழுதும் சொல்கிறேன். இது ஒத்திவைப்புத் தீர்மானத்திலும் வராது, கால் அட்டன்ஷனிலும் வராது. அமைச்சர் தன்னிலை விளக்கம் கொடுக்க முன் வந்ததினால், உங்கள் ஒத்திவைப்புத் தீர்மானத்தைப் பற்றி குறிப்பிட்டேன். இதைச் சொல்லாமல், நான் தனியாக உங்களுக்கு மறுப்பு தெரிவித்து தபால் எழுதியிருக்கலாம், தன்னிலை விளக்கம் அளிக்க வேண்டுமென்று அவர்கள் கேட்டார்கள். அதனால் இதிலே இணைத்துக்கொண்டேன்.

**திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, தாங்கள் பெருந்தன்மையோடு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுக்கப்பட்டு இருப்பதாகக் குறிப்பிட்டதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நேற்றையதினம் எழுப்பப்பட்ட ஒழுங்குப்பிரச்சனை அனுமதிக்கப்படவில்லை என்று சொல்லப்பட்டதால், அந்தப் பிரச்சினை இந்த அவையில் எடுத்துக்கொள்ளப்படவில்லை என்றுதான் பொருள். இது அவையிலே எடுத்துக்கொள்ளப்படவில்லை என்ற நிலைக்கு அவைத் தலைவருடைய முடிவான கருத்து அறிவிக்கப் பட்டதற்குப் பின்னர், அந்தச் செய்தி பத்திரிகைகளில் வெளி வந்த விவாதத்தைப் பொறுத்தவரையில் இந்தச் சபையைப் பாதிக்காது. இந்தச் சபையினுடைய நடவடிக்கை பொறுத்த வரையில், அனுமதிக்கப்படவில்லை என்றால் அந்த நிகழ்ச்சி எடுத்துக்கொள்ளப்படவில்லை என்று பொருள். அதைத் தொடர்ந்து தன்னிலை விளக்கம் அளிப்பது என்பது—அனுமதிக் கப்படவில்லை என்று சபாநாயகர் தெரிவித்ததற்குப் பின்னால்—அது அனுமதிக்கப்பட்டதாக ஆகின்ற ஒரு புது நிலை ஆகின்றது. ஆனால் அந்தப் பிரச்சனை இந்த அவையிலே





இருக்கிறது என்று சொன்னால், இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மூலமாகத்தான் இந்த அவையிலே இருக்கிறது. இன்றைக்கு, இந்த அவையிலே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மூலமாக இருக்கின்ற, இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்து அதற்குப் பின்னால் தன்னிலை விளக்கமாக தன்னுடைய பதிலை அமைச்சர் சொல்லுவதுதான் முறை என்பதை நான் பணிவோடு சட்டமன்ற முறைகளுக்காகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொல்கிற மாதிரி, உறுப்பினருக்கு தன்னுடைய உரிமையைப் பாதுகாக்கக்கூடிய உரிமை இருக்கிறது. Reputation is his own property பத்திரிகையிலே வந்திருக்கிறது. அமைச்சர் காலையிலே வந்து இப்படி இருக்கிறது, தன்னிலை விளக்கம் சொல்ல வேண்டும் என்றார். அமைச்சரும் ஒரு உறுப்பினர் என்ற முறையிலே, அந்த உரிமையைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பிலே நான் இருக்கிறேன். யாராக இருந்தாலும் . . . . (குறுக்கீடு)

**திரு. கி. மனோகரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்றத்தில், திரு. ப. உ. ச. அவர்களைப்பற்றி, அவருடைய வீட்டு சோதனைகளைப்பற்றி எந்த விளக்கமும் இங்கே கேட்கப்படவில்லை. நீங்களும் அனுமதி தரவில்லை. பத்திரிகைகளிலே வந்திருக்கக் கூடும். பத்திரிகைகளிலே திரித்துப் போட்டிருக்கக்கூடும். எதையும் அவர்கள் எழுதியிருக்கக்கூடும். அதைப்பற்றி இந்தச் சபை கணக்கிலே எடுக்க வேண்டும் என்று கருதவில்லை. அதைப்பற்றிய விளக்கங்கள் வழங்கப் பட்ட பிறகு, அவர் தன்னிலை விளக்கம் கொடுத்தால் நியாயமாக இருக்குமே தவிர, மற்றபடி நீங்களாக கற்பனை செய்துகொண்டு, பத்திரிகையில் இருந்ததை வைத்துக்கொண்டு . . . . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாயின்ட் ஆப் ஆர்டர் நேற்று வராது என்று சொன்னேன். கால் அட்டன்ஷனில் எடுக்க முடியாது என்று சொன்னேன் . . . . . (குறுக்கீடு).

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று இந்தப் பிரசனை எழுப்பப்பட்ட போது ஒழுங்குப் பிரச்சனை மீது வராது என்று தாங்கள் தீர்ப்பு

அளித்து இருக்கிறீர்கள். அது சம்பந்தமாக இங்கே விவாதிக்கப் பட்ட சில பல கருத்துக்கள் நேற்று மாலை ஏடுகளிலும், காலை ஏடுகளிலும் தெளிவாக வந்திருக்கின்றன. அதற்குப் பிறகு ஒத்தி வைப்புத் தீர்மானம் (குறுக்கீடு) நீங்கள் ஆரம்பிக்கிறபோது பத்திரிகையிலே வந்தது என்று சொல்லியதால்தான் நான் பத்திரிகை செய்தி பற்றிச் சொல்கிறேன்.

**திரு. அ. ரகுமான்கான்:** ஆனால் நாங்கள் அனுமதிக்கப்பட வில்லை.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அனுமதிக்கப்பட வில்லை என்பது வே, நீங்கள் சொன்னது என்பது வேறு. நீங்கள் சொன்னதைத்தான் நானும் சொல்கிறேன். ஒத்தி வைப்புத் தீர்மானம் எந்த வகையிலும் இந்த அவையைப் பொறுத்து வந்தது அல்ல என்பதை பேரவைத் தலைவராகிய தாங்கள் சொல்லிவிட்டீர்கள். இது வெளியே நடந்தது இங்கே சொல்ல வேண்டியதில்லை என்று சொன்னால் மாண்புமிகு அமைச்சர் திரு. ப. உ. ச. அவர்களும் இங்கே தன்னிலை விளக்கம் தரவேண்டிய அவசியம் இல்லை. அவர்கள் வெளியே விளக்கத்தைச் சொல்லிவிட அனுமதிப்பீர்களானால் பிறகு ஏன் இங்கே சொல்லவில்லை என்ற நிலைமைகள் வராத அளவுக்கு அனுமதிப்பீர்களானால் அவர்கள் வெளியே சொல்வதற்குத் தயாராக இருக்கிறார்கள், ஆகவே இங்கே தன்னிலை விளக்கம் தரவேண்டிய அவசியம் இல்லை.

**திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, ஒரு பிரச்சினையை எழுப்புகிறபோது அந்தப் பிரச்சனையிலிருந்து வெளியேறுவதற்கு முயற்சிக்கின்ற முறையில் விவாதத்தை நடத்துவதில் பயன் இல்லை. அமைச்சராக இருக்கிறவர் அவருடைய நிலையை எப்படி வெளியே விளக்கம் தருவது என்பது அவருடைய உரிமை, அவருடைய கருத்து. ஆனால் அமைச்சரவையிலே உள்ள எல்லோரும் கலெக்டிவ் ரெஸ்பான்சிபிலிட்டி உள்ளவர்கள் என்ற முறையில் அவர்கள் சட்டமன்றத்திற்குப் பொறுப்பானவர்கள். அமைச்சரவையிலே உள்ள அத்தனை பேர்களும் கலெக்டிவ் ரெஸ்பான்சிபிலிட்டி உள்ளவர்கள். அமைச்சரவை சட்டமன்றத் திற்குப் பொறுப்பானது. சட்டமன்றம் நாட்டுக்கே பொறுப் பானது. நாட்டு மக்களிடத்திலே பேசப்படுகிற ஒரு பிரச்சினை





குறித்துச் சட்டமன்றம், சட்டமன்றத்திற்குரிய விதிகளுக்குட் பட்டு விவாதிப்பதற்கு கடமைப்பட்டுள்ளது. அப்போது எடுக்கப் படுகிற முடிவு எப்படி வேண்டுமானாலும் ஆகலாம். எனவே அப்படி விவாதிக்க உரிமை சட்டமன்றத்திற்கு இருக்கிறபோது அதை எடுத்துக் கொள்வதே தவறு என்று தலைவர் அவர்கள் கருதுவார்களானால், அதுவும் ஒரு வகையில் உறுப்பினர்களின் உரிமையைப் பாதிப்பதாகிறது. உள்ளபடியே நாட்டு மக்களுடைய கவனத்திற்கு ஆளாகிவிட்ட ஒரு பிரச்சினையை ஒரு அமைச்சர் சம்பந்தப்பட்டதாக எண்ணப்படுகிற ஒரு பிரச்சினையை எழுப்புகிறபோது ஒரு அமைச்சருடைய பிரச்சினை என்றாலும் கூட — அது அமைச்சரவையினுடைய பொறுப்பு, அரசாங்கத்தி னுடைய பொறுப்பு, அது இந்த அவைக்குச் சம்பந்தப்படவில்லை என்று சொல்வது வெளியில் எடுக்கப்பட்ட நடவடிக்கை சம்பந்தப்பட்டதாக இருந்தாலும் அதைப்பற்றி எழுகிற பிரச்சினை குறித்த பேச்சு மக்களிடத்திலே ஏற்பட்டிருக்கிற கருத்து இந்தச் சட்டமன்றத்தைப் பாதிக்காமல் இருக்காது இல்லையானால் ஒரு அமைச்சருக்குத் தன்னிலை விளக்கம் தருவதற்கு அவசியமே இல்லை, எனவே அப்படிப் பாதிக்கப் படுகிறபோது இந்தச் சட்ட மன்றத்திலே ஒத்திவைப்புத் தீர்மானம் என்ற பெயரிலே கருத்துச் சொல்லப்படுவதற்கு அனுமதிக்கப்படவில்லையென்று சொன்னால் சட்டமன்றத்திலே எங்களைப் போன்றவர்களுடைய உரிமை பறிக்கப்படுவதாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரும்பவும் நான் சொல் கிறேன். இந்தப் பிரச்சினையை கால் அட்டென்ஷனிலோ அட்ஜர்ன் மெண்ட் மோஷனிலோ கொண்டுவர முடியாது. உங்களுக்கு உரிமை இருக்கிறது, அதைப்போல் அமைச்சருக்கும் உரிமை இருக்கிறது. (குறுக்கீடு) நான் முடித்துவிடுகிறேன். இது நானே பிரிப்பேர் பண்ணியது, இங்கே உட்கார்ந்திருந்தபோது எழுதிய டிராப்ட் (குறுக்கீடுகள்) எல்லோரும் அமருங்கள்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர்தான் உறுப்பினர்களை உட்காரச் சொல்ல வேண்டும், தலைவர் இந்தப் பிரச்சினையில் முடிவு எடுக்கவேண்டிய பொறுப்பில் உள்ளவர் என்ற காரணத்தினால் அதைத்தான் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

[1985 மார்ச் 27

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் சொல்கிறேன், இந்த முடிவை நான் தன்னிச்சையாக எடுத்திருக்கிறேன். இங்கே அமர்ந்திருக்கும்போதுதான் இதை எழுதினேன். என்னையும் சேர்த்து சொல்லப்படுவதால் சொல்கிறேன். நான் பதவியேற்ற போது உறுப்பினர்களுடைய உரிமைகள் பாதுகாக்கப்படும் என்று சொன்னேன். அதை நான் எப்போதும் நிலைநாட்டுவேன். இப்போது உங்களுடைய உரிமை என்று சொல்கிறீர்கள், அவர்கள் அவர்களுடைய உரிமை என்று சொல்கிறார்கள், கிளாஷ் வருகிறது. ஒத்திவைப்புத் தீர்மானம் மட்டுமல்ல, இந்தச் சபையிலே எந்த விதியிலும் அதைக் கொண்டுவர முடியாது. ஏற்கெனவே நான் தெரிவித்தபடி எக்ஸ்பன்ஜ் பண்ணக்கூடாது என்ற முடிவிலே நான் இருக்கிறேன். எல்லோரும் பாயின்ட் ஆப் ஆர்டர் என்று கிளப்பி ஒவ்வொருவரையும் பேசவிட்டுவிட்டு போன செஷன் மாதிரி எக்ஸ்பஞ்ச் பண்ணிக் கொண்டிருக்க வேண்டும்.

(முற்பகல் 9.50)

அது வேண்டாம். அதைத் தவிர்ப்பதற்காகத்தான் பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை என்று சொன்னேன். அது ஒரு பிரச்சினையாக இருப்பதால் அந்த முடிவு எடுக்கப்பட்டது. நீங்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறீர்கள். அதற்கு நான் ஒரு தன்னிலை விளக்கம் அளிக்கச் சொல்லிவிட்டு நீங்கள் கொடுத்ததையே நான் இதில் சேர்க்காமல் கூட விட்டுவிட்டு தனியாகக் கூட செயலகத்தின் மூலம் அனுப்பியிருக்கலாம். இதை இணைத்து பிரச்சினையை ஒன்றாக முடித்துவிடலாம் என்று தான் நான் எடுத்தேன்.

**திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாதம் செய்வதற்காக தாங்கள் வருத்தப்படக் கூடாது. தாங்களாக எடுத்த முடிவைத்தான் தாங்கள் அறிவித்தீர்கள் என்பதிலே எனக்கு எந்தவிதமான சந்தேகமும் இல்லை. தங்களுடைய கருத்திலே இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இதுதான் வழி என்று நீங்கள் கருதி இருக்கக் கூடும். அந்தக் கருத்தின்படிதான் தாங்கள் இந்த முடிவுக்கு வந்து இருக்கிறீர்கள். ஆனால் நேற்று மாலை 4 மணிக்கு தங்கள் அலுவலிடம் தரப்பட்ட இந்த ஒத்திவைக்கவேண்டும் என்று கேட்கிற பிரச்சினை தங்கள் மூலமாக ஒரு பிரச்சினையைச் சொல்லவேண்டும்



என்பதற்காக கொடுக்கப்பட்டது. தாங்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் என்று மட்டும் குறிப்பிட்டுவிட்டு அது என்ன என்று சொல்லாமல் இருக்கிறபோது ஏற்படுகிற இடர்பாடு இருக்கிறதே அது மிகப்பெரிய இடர்பாடு. அதுதான் எங்களுடைய உரிமையைப் பாதிக்கிறது. ஒத்திவைப்பில் கொடுக்கப்பட்ட வாசகத்தை தாங்கள் படித்து விட்டால் அந்த வகையில் நாங்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்று காலை எட்டே முக்கால் மணிக்குத்தான் நான் பார்த்தேன். நான் நேற்று மாலை பார்க்கவில்லை. (குறுக்கீடு) நான் குறை சொல்லவில்லை (குறுக்கீடு) நீங்கள் கொடுக்கவில்லை என்றும் நான் சொல்லவில்லை. இன்று காலை எட்டே முக்கால் மணிக்கு நான் பார்த்தேன். அப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வந்தார்கள். தன்னிலை விளக்கம் கொடுக்கிறேன் என்று சொன்னார்கள். அதற்குப் பிறகுதான் நான் இந்த முடிவை எடுத்தேன் (குறுக்கீடு) எட்டே முக்கால் மணிக்கு என்னுடைய பார்வைக்கு வந்தது, நான் பார்த்தேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரை மணிக்கு முன்னாலும் தரலாம். எப்போது வேண்டுமானாலும் தரலாம் என்பது தான் முறை. தன்னிலை விளக்கத்தைப் பொறுத்தவரை விதி 105-ன்படி பேரவைத் தலைவர் அனுமதியின் பேரில் உறுப்பினர் ஒருவர் தன்னிலை விளக்கம் ஒன்றை பேரவை முன் பிரச்சினை எதுவும் இல்லை என்றாலும் அளிக்கலாம். ஆனால் அப்போது சர்ச்சைக்குரிய பொருள்கள் எதையும் கொண்டுவரக்கூடாது, எதையும் விவாதம் வைத்துக்கொள்ளக் கூடாது என்பதுதான் தன்னிலை விளக்கத்திற்கு இருக்கிற விதி என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை நானே படிக்கலாம் என்று இருந்தேன். இந்த அரசுக்கு பொறுப்பு இருந்தால் அதை நான் படிக்கலாம். இந்த அரசுக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை. ஒரு பிரச்சினை எழுப்பப்பட்ட காரணத்தால் இந்த விளக்கத்தைக் கொடுத்தேன்.

[1985 மார்ச் 27

**திரு. க. அன்பழகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு செய்தி உண்மையா தவறா என்பது வேறு. ஒரு செய்தியின் மூலமாக ஒரு அரசுக்கு தொடர்பு இருக்கிறதா இல்லையா என்பது வேறு. அரசு நேரடியாக அதில் நடவடிக்கை எடுத்தால்தான் அரசாங்கத்திற்கு தொடர்பு என்று சொன்னால் மத்திய அரசு மாநில அரசிலுள்ள எந்த அமைச்சர் மீது எப்போது நடவடிக்கை எடுத்தாலும் அது இந்த அரசுக்குச் சம்பந்தம் இல்லை என்ற ஒரு கருத்தை உருவாக்கும். எனவே அமைச்சர் மீது உண்மையிலேயே நடவடிக்கை எடுக்கப்பட்டதா அல்லவா என்பது கூட எனக்குத் தெரியாது. அதைக் கூறுவது அல்ல என்னுடைய நோக்கம். ஆனால் அமைச்சர் சம்பந்தப்பட்ட ஒரு கருத்து இங்கு வந்த பிறகு அது இந்த அரசைச் சாராது, அமைச்சரைச் சாராது, எங்களைச் சாராது என்று சொன்னால், அது அவ்வளவு முறை அல்ல, அது உள்ளபடியே அரசாங்கத்தினுடைய தகுதியைக் குறைக்கின்ற ஒரு கருத்து என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன். மற்றும் ஒன்று, இந்த விவாதத்தில், ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மூலமாகவே அதே விளக்கத்தை அரசு தர முடியும் ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மூலமாக அந்த விளக்கத்தைத் தர முடியாதா? ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்து அதற்குப் பின்னால் இந்த அவையில் ஏற்கவில்லை என்று பின்னாலே மறுக்கக் கூடாதா? மேலும் ஏற்றுக்கொள்ளவும் வாய்ப்பு இருக்கிறது. இரண்டாவதாக முன்னவர் அவர்கள் இங்கே சொல்கிறபோது எந்த வாதத்திற்கும் உரியதல்ல என்ற நிலைமையில்தான் தன்னிலை விளக்கம் தரலாம் என்று சொன்னார்கள். இது விவாதத்திற்குரிய ஒரு பிரச்சினையாகத்தான் இன்றைக்கும் இருக்கிறது என்பதை அவைத் தலைவருக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது இந்த அவையில் விவாதிக்கக் கூடிய பிரச்சினை அல்ல. இந்த அரசுக்கு பொறுப்பு இருக்கக்கூடிய பிரச்சினையைத்தான் இங்கே விவாதிக்க முடியும். இந்த அரசுக்கு பொறுப்பு இல்லாத பிரச்சினையை இங்கே விவாதிக்க முடியாது. இந்த நூலைப் பார்த்துக் காண்பிக்கிறேன் (குறுக்கீடு) நான் படித்துவிடுகிறேன். விதி 110,



1985 மார்ச் 27] [பேரவைத் தலைவர்]

. . . . " A member may, with the permission of the Speaker make a personal explanation although there is no question before the House, but in this case no debatable matter may be brought forward and no debate shall arise.".

எனவே, இதிலே டிபேட்டே வராது. It is not concerned with the House. We are not concerned.

**திரு. கி. மனோகரன்:** தலைவரவர்களே, மிகச் சுலபமாகப் பிரச்னையை நீங்கள் முடிப்பதற்கும், அவை உறுப்பினர்கள் திருப்தி அடைவதற்குமாக ஒரு யோசனை. தரப்பட்ட ஒத்திவைப்புத் தீர்மானத்தைத் தயவு செய்து படியுங்கள். அதை இந்த அவை தெரிந்துகொள்ளட்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒத்தி வைப்புத் தீர்மானத்தையே நான் மறுத்துவிட்டேன்.

**திரு. அ. ரகுமான்கான்:** தலைவரவர்களே, அது என்ன தீர்மானம் என்று தெரிய வேண்டும். யாருடைய தீர்மானம் என்று தெரிய வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தபாலிலே அனுப்புவதற்குப் பதிலாக இதிலே நான் குறிப்பிட்டேன். (குறுக்கீடு) ஒத்தி வைப்புத் தீர்மானத்தினுடைய வாசகத்தைப்பற்றி இதிலே சேர்க்கவில்லை என்ற அந்தப் பிரச்னையே இப்போழுது வராது. எல்லா உரிமைகளையும் காக்க வேண்டுமென்று நினைத்து, ரொம்ப நியாயம் செய்ய வேண்டுமென்று நினைத்து இவ்வாறு செய்தேன். எனவே, அது பிரச்னையாக வந்துவிடக் கூடாது. கொஹரண்டாகப் போட்டு முடித்து விட வேண்டுமென்று நினைத்தேன்.

**திரு. கி. மனோகரன்:** தலைவரவர்களே, இவ்வளவு பெருந்தன்மையோடு காரியங்களை மேற்கொண்ட உங்களை மெத்தப் பணிவன்போடு நான் கேட்டுக்கொள்வது, ஒத்திவைப்புத் தீர்மானம் என்ற வார்த்தைகளை நீங்கள் அதிலே சேர்த்திருப்பதால் உங்களைப் பணிவன்போடு கேட்டுக் கொள்வது, ஒத்தி

வைப்புத் தீர்மானத்தைக் கொடுத்தது யார், அந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் வாசகங்கள் என்ன, அவர்கள் எதைத் தெரிவித்திருக்கிறார்கள், இது சபைக்குத் தெரிய வேண்டாமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: அதையும் விளக்கிச் சொல்லிவிடுகிறேன். இப்பொழுது நான்தான் தன்னிலை விளக்கம் கொடுக்க வேண்டிய நிலையில் இருக்கிறேன். ஒத்திவைப்புத் தீர்மானங்கள் தாராளமாக இங்கே எடுக்கப்படும், பெயர்கள் குறிப்பிடப்படும், கடைசியாக மறுக்கப்படும். ஆனால் இப்பொழுது ஒன்றுமே இல்லாததால் எதுவும் சொல்லவில்லை.

**திரு. அ. ரகுமான்கான்**: தலைவரவர்களே, மறுக்கப்பட்டால் அதற்கான காரணங்களைச் சொல்லி. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: ஒத்திவைப்புத் தீர்மானம் எடுக்கப்படுகிறபொழுது, இறுதியில், "பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லையென்பதால் இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது." என்று சொல்லலாம். ஆனால் இதைப்பற்றி இப்பொழுது எடுத்துக்கொண்டு விவாதிக்கவே இல்லை. நான் இப்படிப்பட்ட ஒரு வாசகத்தை இதில் சேர்த்தேன், அது தவறு என்றால் என்ன செய்வது? வேறு வழி இல்லையே. It cannot be brought under Call Attention Notice or Adjournment Motion. இதிலே முடியவே முடியாது. நேற்று அந்த பாயின்ட் ஆப் ஆர்டரிலே "நாட் அலவ்ட்" என்று சொன்ன பிறகும் இரண்டாவதாக இந்தப் பிரச்சினை எழுந்ததால் இந்த நிலைமை வந்தது. அதிலே அமைச்சரின் உரிமையும், ரெபுடேஷனும் பாதிப்பதால் அந்த உரிமையையும் பாதுகாக்க வேண்டுமென்றுதான் இப்படிச் செய்ய நினைத்தேன். இந்த நிலைமை எல்லோருக்கும் உண்டு.

**திரு. அ. ரகுமான்கான்**: பேரவைத் தலைவரவர்களே, நான் மீண்டும் மீண்டும் வாதம் செய்வதாக தயவு செய்து கருதாதீர்கள். ஆனால் முக்கியமான பாயின்டை மட்டும் சொல்ல விரும்புகிறேன். அதில் தெளிவுபெற வேண்டுமென்று விரும்புகிறேன். இந்தச் சபையில் உறுப்பினர்களைப் பொறுத்த வரையில், கொடுக்கப்படுகின்ற ஒத்திவைப்புத் தீர்மானங்களைப்





பொறுத்தவரையில், அதை யார் கொடுத்தது என்று சொல்லவில்லை, அதில் என்ன சொல்லப்பட்டுள்ளது என்று சொல்லவில்லை, ஆனால் மறுக்கப்படுகிறது என்று சொல்கிறீர்கள். அப்படி மறுக்கப்படுகிறது என்று சொல்லுகின்றபோது, விவாதத்தைத் துவக்கி, பிறகுதான் இந்தக் காரணத்தினால் இசைவு மறுக்கப்படுகிறது என்று சொல்ல வேண்டும். எனவே, கொடுத்தவர்களின் பெயரைச் சொல்லி, ஒத்திவைப்புத் தீர்மானத்தை யார் எழுப்பியது என்று சொல்லி, பிறகு என்ன விஷயம் அதில் இருக்கிறது என்று தன்னிலை விளக்கம் சொல்ல வாய்ப்பளித்து, பிறகு இந்தக் காரணத்தினால் ஒத்திவைப்புத் தீர்மானம் மறுக்கப்படுகிறது என்று சொல்லப்படும் என்பது சபையில் இருப்பவர்களுக்குத் தெரியும். தொடர்ந்து நீங்கள் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது, அட்மிட் செய்து, இந்த அவைக்குக் கொண்டு வந்து, விவாதித்த பிறகு, உறுப்பினர்கள் பேசிய பிறகு, கடைசியிலே எடுக்கப்படுகின்ற முடிவு அது. ஆனால் இப்பொழுது இது அவைக்கே வரவில்லை. அறையிலேயே முடிந்துவிட்டது. என் இசைவை என் அறையிலேயே மறுத்து உள்ளேன். இப்படி நடந்ததை அப்படியே சொல்வதால் இதில் பிரச்சினையை எழுப்ப வேண்டாம். இப்பொழுது எனக்கு ஒத்துழைப்பு தாருங்கள்.

**திரு. வி. பி. சிந்தன்**: பேரவைத் தலைவரவர்களே, இந்தப் பிரச்சினையை இந்த மன்றத்தில் கொண்டு வந்தவன் நான். எனவே, நான் சொல்வதைச் சற்றுப் பொறுமையுடன் ஒரு நிமிஷம் கேட்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 'Don't take shelter under the law'.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: 'லா' வேண்டும்; 'லா' இல்லையென்றால் யாருக்குமே shelter கிடையாது.

(முற்பகல் 10.00)

**திரு. வி. பி. சிந்தன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொண்டதற்குப் பிறகு அமைச்சர் அவர்கள் தன்னிலை விளக்கம் கொடுப்பதுதான் முறையாக அமையும், அதுதான் சட்டபூர்வமானது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கடைசியில் நீங்களும் சட்டபூர்வம் என்றுதான் செல்கிறீர்கள். நீங்களும் சட்டத்திற்குத் தான் வருகிறீர்கள். சட்டம் இல்லாமல் யாரும் எதையும் செய்ய முடியாது. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது தன்னிலை விளக்கம் அளிப்பதுதான் முறை நான் ஏற்கெனவே செய்த முடிவின்படி.

**திரு. க. அன்பழகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் இந்த முடிவிற்கு வருவதற்கான காரணங்களைச் சொல்கிறபோது, ஒத்திவைப்புத் தீர்மானத்தை என் அறையில் மறுத்துவிட்டேன் என்று சொன்னீர்கள். அறையிலே மறுத்ததுபற்றி எனக்குத் தெரிய வாய்ப்பு இல்லை. அறையிலே நீங்கள் உங்களுடைய செயலாளரிடத்திலே மறுத்திருக்கலாம். அப்படி மறுத்தது பற்றி எனக்கு வருத்தம் இல்லை. அது கூட மறுக்காமல் சபாநாயகராக எப்படி நாம் இருப்பது? எனவே அந்த உரிமை தங்களுக்கு உண்டு. ஆனால் அப்படி மறுத்தது பற்றி எனக்குத் தெரியாது. இது ஒன்று. இரண்டாவதாக அவைக்குத் தொடர்பு இல்லை என்ற கருத்தைத் தாங்கள் திரும்பத் திரும்பச் சொல்லி இந்த அரசுக்குச் சம்பந்தம் இல்லாதது என்றும் சொல்கிறீர்கள். இந்த அரசு எடுத்த நடவடிக்கைதான் இந்த அரசுக்குச் சம்பந்தம் உள்ளது, இந்த அரசிலே உள்ளவர்கள் மீது மற்றவர்கள் எடுத்த நடவடிக்கை இந்த அரசுக்குச் சம்பந்தம் இல்லாதது என்ற கருத்தை உருவாக்குகிறீர்கள். இந்த அரசிலே உள்ளவர்கள் மீது யாரோ நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். அமைச்சர் மீது ஒரு தனிப்பட்டவர் வழக்குப் போட்டிருந்தாலும்கூட அல்லது அவரே சம்பந்தப்படுகிற ஒரு வழக்கு இருந்தால்கூட அது இந்த அமைச்சரவையைச் சாராது. அரசாங்கத்தைச் சாராது என்று சொல்கிற விளக்கம் பொருந்தி வரவில்லை. எனவே நான் தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்ள விரும்புவது இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைத் தாங்கள் நிராகரித்தால் கூட நான் அதற்காக வருந்தப்பட மாட்டேன் ஏனென்றால் நான் வருத்தப்படுவதற்கு இனி எதுவும் இல்லை. ஆனால் இந்தப் பிரச்சினை மூலமாக ஒரு அமைச்சர் சம்பந்தப் படுகிறார் என்று பத்திரிகைகளில் வந்திருக்கின்ற செய்தி இன்னொரு அரசாங்கத்தாலே அதாவது மத்திய அரசாங்கத்





தாலே எடுக்கப்பட்ட நடவடிக்கையாலே உருவாகியிருக்கிற போது, அமைச்சரவை சம்பந்தப்படுகிற நிகழ்ச்சியாக ஆகிவிடுகிறபோது கலெக்டிவ் ரெஸ்பான்சிபிலிட்டி என்று சொல்கிறபோது இது அரசாங்கத்தைக் கட்டுப்படுத்துவதல்ல, தொடர்புடையதல்ல என்ற வாதம் இந்தச் சபைக்கு ஒரு தவறான உதாரணம் ஆகிவிடுகின்றது. எனவே அதை நீக்கிவிட்டு நீங்கள் பார்த்தால் ஒத்திவைப்புத் தீர்மானம் நியாயமானது என்ற உண்மை விளங்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி மறுத்தது நான். அதுபற்றிப் படித்துப் பார்த்துவிட்டு . . . . (குறுக்கீடுகள்) அதைத் திரும்பவும் நான் படிக்கிறேன். அதைக் கொஞ்சம் அழுத்தமாகப் படிக்கிறேன்.

**திரு. கி. மனோகரன்:** தலைவர் அவர்களே, இறுதித் தீர்ப்பு வழங்குகின்ற பொறுப்பு, உரிமை உங்களுடையது. அதை மறுக்கவில்லை. ஆனால் இடையில் நான் உங்களுக்கு தருகின்ற யோசனை—இத்தனையும் கேட்டுக் கொண்டிருக்கின்ற அமைச்சர் விவாதம் நடக்கட்டும், அதற்குப் பிறகு நான் தன்னிலை விளக்கம் தருகிறேன் என்று. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் மீண்டும் ஒரு தடவை அவைக்குப் படித்துக் காட்ட விரும்புகிறேன். நான் என்ன செய்தேன் என்பது தெரியவேண்டும் அல்லவா, அதற்காக. நேற்று பேரவையில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களது மகன் இல்லத்தில் நடைபெற்ற மத்திய அரசு அதிகாரிகளின் சோதனை குறித்து ஒரு பிரச்சினை எழுப்ப முயலப்பட்டது. அது ஒழுங்குப் பிரச்சினையின் கீழ் வராது என்று நான் தீர்ப்பளித்தேன். அதன் பிறகு அதே பிரச்சினை குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடமிருந்து முன்னறிவிப்பு வந்துள்ளது. இப்பிரச்சினையில் தமிழக அரசின் நேரடி பொறுப்பு எதுவும் இல்லை என்ற காரணத்தால் இந்தப் பிரச்சினையைப் பேரவையில் எழுப்ப என் இசைவை என் அறையிலேயே மறுத்துள்ளேன். ஆகவே மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் குறித்த பிரச்சினை உள்ளதால் அவர்கள் தன்னிலை விளக்கம் அளிக்க அனுமதி கொடுக்கின்ற பேரவை விதி 110-ன் கீழ் அவ்விதம் ஒரு தன்னிலை

விளக்கம் அளிக்க மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சருக்கு அனுமதி அளிக்கிறேன். மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் . . . . . (குறுக்கீடு)

**திரு. க. அன்பழகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய சட்டமும், விதிகளும் நான் கருதுகின்ற அடிப்படை உரிமைகளைப் பறிப்பதாக இருக்கின்ற காரணத்தால் நானும் என்னுடைய கட்சியும் வெளியேறுகிறோம் என்பதைத் தங்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

((திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விதிக்கு உட்பட்டுத்தான் நான் தீர்மானித்த அந்த முடிவு எடுக்கப்பட்டது என்பதை அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கு. ரமணி:** தலைவர் அவர்களே, நேற்றைக்கு இந்தப் பிரச்சினையில் எங்களுடைய கட்சி உறுப்பினர் தோழர் திரு. வி. பி. சிந்தன் அவர்கள் கேள்விக்கு ஒரு ஒழுங்குப் பிரச்னை என்ற முறையில் கேள்வி எழுப்பினார்கள். அதைக் கூட தாங்கள் அப்போது மறுத்தீர்கள் . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மீண்டும் மீண்டும் அந்த விவாதம் வேண்டாம். ஏற்கெனவே விவாதித்தாகிவிட்டது. போதும். சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்லாதீர்கள். நீங்கள் சொல்வது மாதிரி சட்டத்திலும் விதியிலும் இல்லை. எனவே இப்போதும் சொல்கிறேன். இவ்வளவு நேரம் இந்த விவாதத்திற்கு அனுமதிக்கக் காரணமே நீங்கள் எல்லோரும் அவை நடவடிக்கையில் கலந்து கொள்வீர்கள் என்பதற்காகத்தான் . . . (குறுக்கீடுகள்).

**திரு. கு. ரமணி:** நீங்கள் சொல்கிறீர்கள், அதை நான் மறுக்கவில்லை, உங்களுக்கு அந்த உரிமை இருக்கிறது. (குறுக்கீடுகள்).

தாங்கள் வெளிநடப்பு செய்கிறோம்.

(இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்ஸிஸ்ட்) உறுப்பினர்கள் வெளி நடப்புச் செய்தனர்.)





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெளியே போவதைப் பற்றி எனக்கு ஒன்றும் இல்லை. ஆனால் ஒரு உறுப்பினருடைய உரிமை இன்னொரு உறுப்பினரை பாதிக்கக்கூடாது; அதற்குத் தீர்ப்பளிக்கிறேன். இனிமேல் இந்த மாதிரி கிளாஷ் வரும் போது, இந்த மாதிரி நடவடிக்கையில் ஈடுபடாதீர்கள். (குறுக்கீடு). இந்த அவையினுடைய ஒரு உறுப்பினருடைய மரியாதையும் பாதிக்கப்படுகிறது.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்:** இந்தப் பிரச்னையின்மீது பேரவைத் தலைவர் ஒத்திவைப்புத் தீர்மானத்தை அனுமதிக்காத காரணத்தாலே ஜனதா கட்சி வெளிநடப்பு செய்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஜனதா கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

**திரு. பொ. உத்திராபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்ட ரீதியில் எப்படியிருந்தாலும் இந்தச் சட்ட சபையினுடைய மரபையே இங்கே கையாளாததால் நாங்கள் அதைக் கண்டித்து வெளிநடப்பு செய்கிறோம்.

(இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்படி மரபு கிடையாது.

## 4. தன்னிலை விளக்கம்.

### தன் வீடு சோதனையிடப்பெற்றதாக வெளியான செய்தி குறித்து உள்ளாட்சித்துறை அமைச்சரின் அறிக்கை.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, எனது பெயரை இணைத்து 26—3—1985 தேதிய 'இந்தியன் எக்ஸ்பிரஸ்', 'தினமணி' ஆகிய நாளிதழ்களில் அன்னியச் செலாவணி ஏய்ப்பு — 'சோதனை' என்ற தலைப்பில் செய்தி போட்டுள்ளார்கள். அதுபற்றி எனது தன்னிலை விளக்கத்தைப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த 15, 16 ஆகிய இரு நாட்கள் எனது வீட்டில் மத்திய அரசு

(திரு. ப. உ. சண்முகம்) [1985 மார்ச் 27

அன்னியச் செலாவணி மோசடித் தடுப்பு அமுல் பிரிவு அதிகாரிகள் திடீர் சோதனையிட்டு அன்னியச் செலாவணி பேரம் சம்பந்தமாகச் சில தஸ்தாவேஜுகள் பிடிபட்டன என்று செய்தி வெளியிடப்பட்டுள்ளது. எனது வீட்டில் எந்தச் சோதனையும் செய்யப்படவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி). எந்த விதமான தஸ்தாவேஜுகளும் கைப்பற்றப்படவில்லை (மேசையைத் தட்டும் ஒலி). இதுபோன்ற அவதூறான செய்தியை தினமணி, இந்தியன் எக்ஸ்பிரஸ் போன்ற நாளிதழ்கள் வெளியிட்டிருப்பது வேதனைக்குரிய ஒன்றாகும் (மேசையைத் தட்டும் ஒலி).

எனது மகன் செல்வம் மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்குச் சென்றிருந்தார். அங்கு அவனுக்கு உறவினர்களும், நண்பர்களும், அவனது சித்தியும் உபசரித்து பரிசாக விடியோ காமிரா வாங்கி கொடுத்துள்ளனர். அதற்குரிய சுங்கத் தீர்வையும் கட்டப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி). மார்ச் 11 ஆம் தேதி அன்னியச் செலாவணிப் பிரிவைச் சேர்ந்த ஒரு அதிகாரி என் வீட்டிற்கு வந்து, மேற்சொன்ன விடியோ காமிராபற்றி என் மகனிடம் விசாரித்தார். மேற்படி விடியோ காமிரா வாங்கிய பில்லையும் சுங்க வரி கட்டிய ரசீதையும் என் மகன் செல்வம் கொடுத்தார். மேற்படி காமிரா பரிசாகக் கொடுக்கப்பட்டதன் விவரத்தையும் கூறியுள்ளார். இதற்கு மாறாக வீடு சோதனை போடப்பட்டது என்றும் அன்னியச் செலாவணி பேரம் சம்பந்தமாகச் சில தஸ்தாவேஜுகள் கைப்பற்றப்பட்டன என்றும் கூறுவது முற்றிலும் உண்மைக்குப் புறம்பான, அவதூறான செய்தியாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனது மகன் வருமான வரி கணக்குகளை முறையாகக் காண்பித்து வருகிறவன். இதுபற்றி தி.மு.க. ஏடுகளான எதிரொலி, முரசொலி, தினகரன் போன்ற செய்தித்தாள்கள் என்மீது காழ்ப்புணர்ச்சியைக் கக்கும் எண்ணம் மேலும் சில அவதூறு செய்தி பிரசுரித்துள்ளன. இவை முற்றிலும் உண்மையற்ற செய்தி என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கு மேலும் நான் விளக்கம் தர விரும்பவில்லை. எந்தவித ஒரு சோதனையுமே நடக்காத ஒரு நிலையில் சோதனை நடந்ததாகவும் கரன்சி எடுத்ததாகவும் தங்கக் கட்டிகள் எடுத்ததாகவும்



1985 மார்ச் 27] (திரு. ப. உ. சண்முகம்)

அன்னியச் செலாவணிகள் எடுத்ததாகவும் எவ்வளவு உண்மைக்குப்புறம்பான செய்திகளை ஒரு பொறுப்புள்ள பத்திரிகைகள் எவ்வளவு துணிச்சலாக வெளியிடுகிறார்கள் என்பதைத்தான் நான் இந்த அவைக்குத் தகவலுக்குக் கொண்டு வருகிறேன். இது கண்டிக்கத்தக்கது என்பதை நான் தெரிவித்து என்னுடைய உரையை முடிக்கிறேன்.

## 5. கவன ஈர்ப்பு.

### இலங்கைத் தமிழின மக்களுக்கும் தமிழக மீனவர்களுக்கும் ஏற்பட்டுவரும் இன்னல்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருவாளர்கள் கு. ரமணி, பொ. உத்திராபதி, கு. சுப்பராயன், குமரி அனந்தன், எஸ். என். இராமசாமி, இரா. தாமரைக்கனி, மா. மீனாட்சிசுந்தரம், எஸ். ரெத்தினராஜ், டாக்டர் தே. குமாரதாஸ், திருவாளர்கள் அ. ரகுமான்கான், எஸ். வேணுகோபால், மா. மணிமாறன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு மறுவாழ்வு மற்றும் வேலை வாய்ப்புத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

**திரு. கு. ரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்படும் கொடுமைகளைத் தாங்க முடியாமல் தமிழகத்திற்கு வந்துகொண்டிருக்கும் அகதிகள் மற்றும் இராமேஸ்வரம் பகுதியில் மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்களுக்கு இலங்கை கடற் படையினர் இழைக்கும் இன்னல்கள் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மறுவாழ்வு மற்றும் வேலை வாய்ப்புத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. த. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

[திரு. த. இராமசாமி] [1985 மார்ச் 27

## அறிக்கை.

இலங்கையிலிருந்து அகதிகள் கடந்த 5—2—1985 முதற் கொண்டு பெருமளவில் படகுகள் மற்றும் இயந்திரப் படகுகள் மூலம் இராமேஸ்வரம் வந்தவண்ணம் உள்ளனர். 5—2—1985 முதல் 14—3—1985 வரை, 15,530 நபர்களைக் கொண்ட 3,584 குடும்பங்கள் தமிழகம் வந்துள்ளனர். இவர்களில் பெரும்பான்மையினர் மீனவர்கள். மண்டபம் முகாம் நிறைந்துவிட்டபடியால், இவர்களை பல்வேறு மாவட்டங்களுக்கு, இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அனுப்பி வைக்கிறார். 14—3—1985 முடிய 9,604 நபர்களைக் கொண்ட 2,251 குடும்பங்கள் இதர 12 மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் அந்தந்த மாவட்டங்களிலுள்ள புயல் பாதுகாப்பு நிலையங்கள், கல்யாண மண்டபங்கள், சத்திரங்கள் இவைகளில் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களுக்கு, உடனடி நிவாரண உதவிகளாக தினசரி செலவிற்காக ரொக்கத் தொகை, மலிவு விலையில் அரிசி, சமையல் பாத்திரங்கள், உடைகள், பாய்கள், போர்வைகள் மத்திய அரசு நிர்ணயித்துள்ளவாறு வழங்கப்பட்டு வருகின்றன.

2. தற்போதுள்ள மண்டபம் மற்றும் கொட்டப்பட்டு முகாம்களில் அகதிகளைத் தங்க வைக்க போதிய இடவசதி இல்லை. எனவே, மண்டபம் முகாமில் கூடுதல் வீடுகள் ரூபாய் 7 இலட்சம் செலவில் கட்டப்படுகின்றன. இவற்றில் சுமார் 500 நபர்கள் கொண்ட 100 குடும்பங்கள் தங்க இயலும். பாழடைந்துள்ள 18 கட்டிடங்கள் சுமார் ரூபாய் 8 லட்சம் செலவில் மராமத்து செய்யப்படுகின்றன. இவற்றில் சுமார் 700 நபர்களைக் கொண்ட 141 குடும்பங்கள் தங்க இயலும். இது தவிர, அங்கு இருக்கும் காலியிடத்தில் சுமார் ரூபாய் 2 கோடி செலவில் 5,000 நபர்களைக் கொண்ட 1,000 குடும்பங்கள் தங்குவதற்காக புதிய கட்டிடங்கள் கட்டுவது பற்றி பரிசீலிக்கப்படுகிறது. திருச்சி அருகேயுள்ள கொட்டப்பட்டு முகாமில் உள்ள காலியிடத்தில், ரூ. 6.23 இலட்ச செலவில் 500 நபர்கள் கொண்ட 100 குடும்பங்கள் தங்க, புதிய வீடுகள் கட்டும் பணியைத் துவக்கும்படி மாவட்ட ஆட்சித் தலைவர் கோரப்பட்டுள்ளார். தூத்துக்குடி அருகே சுமார் 5,000 நபர்களைக் கொண்ட 1,000 குடும்பங்கள் தங்க, புதி முகாம் ஒன்று



1985 மார்ச் 27] [திரு. த. இராமசாமி]

ஏற்படுத்த மத்திய அரசு கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டுள்ளது. முதற்கட்டமாக, ரூ. 10 இலட்சம் செலவில் 100 வீடுகள் கட்ட மாநில அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மேலும் 120 வீடுகள் கட்ட பணிகளைத் துவக்குமாறு, மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். இந்தப் புதிய கட்டிடங்கள் முடிந்ததும், இதர மாவட்டங்களில் தற்காலிகமாகத் தங்கியுள்ள குடும்பங்கள் மண்டபம், கொட்டப்பட்டு, தூத்துக்குடி நிரந்தர முகாம்களில் குடியமர்த்தப்படுவார்கள்.

3. இராமேஸ்வரம் கடலோரப் பகுதியில், நமது இந்திய எல்லைக்குள் தமிழக மீனவர்கள் இலங்கை இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்படுவது பற்றியும், அவர்களிடமிருந்து அவர்கள் பிடித்துள்ள மீன்கள் மற்றும் வலைகள் ஆகியவைகளை திருடிச் செல்வது பற்றியும் கவலை தெரிவித்து நமது மீனவர்களுக்கு தக்க பாதுகாப்பு அளிக்க வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கும்படி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 15—2—1985 அன்று பாரதப் பிரதமர் அவர்களை தந்திச் செய்தி மூலம் கேட்டுக் கொண்டார்கள். பாரத பிரதமர் அவர்கள் 16—2—1985 நாளிட்ட கடிதத்தில், தமிழக மீனவர்கள் இலங்கை இராணுவத்தால் தாக்கப்படுவது பற்றி, டெல்லியில் உள்ள இலங்கை ஹைகமிஷனர், இலங்கை அரசு இவர்களுடன் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். நமது கடலோரப் பகுதியில் கப்பல் படை காவலைப் பலப்படுத்தி, மீனவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கும்படி, அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன என்றும் பாரதப் பிரதமர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். பாதிக்கப்பட்ட அகதிகளுக்கு நிவாரண உதவிகள் அளிக்க தேவையான நிதி உதவியை மத்திய அரசு தரும் என்றும் அவர் கூறியுள்ளார்.

4. நமது மீனவர்களை இலங்கை இராணுவத்தினர் தாக்கியதைக் குறிப்பிட்டும், பெருமளவில் இலங்கையில் இருந்து அகதிகள் தமிழ்நாட்டிற்கு வருவதைக் கட்டுப்படுத்த, மீண்டும் இலங்கையில் உள்ள எதிர்க்கட்சிகளுடன் பேச்சு வார்த்தை தொடங்கி இனக் கலவரத்திற்கு ஒரு முடிவு காணவும் கோரி பாரதப் பிரதமர் அவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 19—2—1985 அன்று கடிதம் எழுதியுள்ளார்கள். இது குறித்து சனவரி மாதம் புதுடில்லி வந்திருந்த இலங்கை பாதுகாப்பு அமைச்சருடன் தான் விவாதித்ததாகவும், புதுடில்லியிலும்,

கொழும்பிலும் தொடர்ந்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், பாரதப் பிரதமர் தனது 22—2—1985-ம் நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார். நமது கடலோரப் பகுதி காவலைப் பலப்படுத்த ஏற்கனவே கடற்கரைப் பாதுகாப்புப் படையின ருக்குத் தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறி யுள்ளார்.

5. எனவே, இலங்கை அகதிகளின் துயர் தணிக்கவும், இராமேஸ்வரம் பகுதியில் தமிழக மீனவர்களுக்குப் பாதுகாப் பளிக்கவும் மத்திய அரசும் நமது அரசும் எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றன.

(முற்பகல் 10.10)

**திரு. கு. ரமணி:** தலைவர் அவர்களே, இலங்கையிலிருந்து வந்திருக்கக்கூடிய அகதிகளை வேறு பல மாவட்டங்களுக்கு அனுப்பி சத்திரங்களிலும், காலியாக இருக்கிற பாழ்பட்ட கட்டி டங்களிலும் இன்றையதினம் குடியமர்த்தி இருக்கிறார்கள். அவர்கள் அந்த இடங்களில் வாழ்க்கை நடத்த முடியாத நிலைமை இருப்பதை நானே பெரியார் மாவட்டத்தில் பார்த்தேன். அவர்கள் மரத்தடியில் சமைத்து சாப்பிடுகிற நிலைமை இருந்து வருகிறது. குறைந்தபட்சம கீற்றுக் கொட்டகைகளை அமைத்துக்கொண்டு அதில் குடும்பத்தை நடத்துவதற்கு வழி செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். அவர்களுக்கு ரேஷனுக்காக கொடுக்கிற பணம் போதுமானதாக இல்லை. அந்தப் பணத்தைக் கொண்டு அவர்களால் முழு அளவில் ரேஷன் பொருள்களை வாங்க முடியவில்லை. ஆகவே அவர்களுக்கு கொடுக்கப்படுகிற தொகையை உயர்த்துவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராமசாமி:** தலைவர் அவர்களே, கடந்த 5—2—1985-ம் தேதியிலிருந்து இலங்கையில் நடைபெறுகிற இனக்கலவரத்தின் காரணமாக நம்முடைய சகோதரர்கள், இலங்கைத் தமிழர்கள், இலங்கையில் குடியுரிமை பெற்றவர்கள் உயிருக்கு அஞ்சி தமிழகத்திற்கு அதிகமாக வந்து சேருகிற நிலைமை ஏற்பட்டது. கடந்த 14—3—1985 ஆம் தேதி வரையில் சுமார் 15,530 இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக இராமேஸ்வரம்





பகுதியில் அடைக்கலம் புகுகிற நிலைமை ஏற்பட்டது. இந்தத் துறையைச் சேர்ந்தவர்களும், வருவாய்த் துறையைச் சேர்ந்தவர் களும் அவர்களை மிகுந்த அக்கறையோடு உபசரித்து அவர் களுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டிய பணிகளை மேற்கொண் டார்கள். அகதிகளை பாதுகாப்பாக தங்க வைப்பதற்காக இராமேஸ்வரம் பகுதியில் மண்டபத்திலும், திருச்சி மாவட்டத்தில் கொட்டப்பட்டியிலும் நிரந்தர முகாம்கள் இருக்கின்றன. இந்த இரண்டு முகாம்களிலும் கூட ஏறத்தாழ 5,000 பேர்களைத்தான் குடியமர்த்த முடியும் என்ற நிலை இருக்கிறது. அகதிகளாக அடைக்கலம் தேடி வந்த அந்த சகோதரர்களை குடியமர்த்த வேண்டிய கடமை அரசாங்கத்திற்கு இருக்கிறது. ஆகவே கொட்டப்பட்டியிலும், மண்டபத்திலும் குடியமர்த்தப்பட்டவர்கள் போக மீதியிருந்த சுமார் 12,000 பேர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களின் நேரடிப் பார்வையில் 12 மாவட்டங்களில் குடி யமர்த்தப்பட்டிருக்கிறார்கள்.

புதுக்கோட்டை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கட லோரப் பகுதிகளில் இருக்கிற புயல் பாதுகாப்பு மண்டபங்களில் காவல் துறையினர் பாதுகாப்போடும், பல்வேறு வசதிகளோடும் அவர்கள் குடியமர்த்தப்பட்டு இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள் குறிப்பிட்டதைப்போல இடம் இல்லாத காரணத்தினால் சில இடங்களில் பள்ளிகளிலும், சத்தி ரங்களிலும் அவர்களை குடியமர்த்துகிற நிலைமை அரசுக்கு ஏற் பட்டிருக்கலாம். இருந்தாலும் கூட இன்றையதினம் பரவலாக இருக்கிற அவர்கள் அத்தனை பேர்களையும் இரண்டு, மூன்று இடங்களில் குடியமர்த்த வேண்டுமென்று அரசாங்கம் விரும்பு கிறது. அந்த அடிப்படையில்தான் மண்டபம் முகாமில் இன்றைய தினம் 15 லட்சம் ரூபாய் செலவில் குடியிருப்புகள் கட்டுவதற்கு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதேபோல மத்திய அரசாங்கம் தூத்துக்குடியில் 1,000 வீடுகளையும் கட்டு வதற்கான அனுமதியை டெக்ஸ் மூலமாக தந்திருக்கிறார்கள். முதல்கட்டமாக அந்த வகையில் 100 வீடுகளைக் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. எல்லா வசதி வாய்ப்புகளையும் நம்முடைய சகோதரர்களுக்கு தந்து பாதுகாப் பாக குடியமர்த்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

அடுத்தபடியாக ரேஷன் வழங்கப்படுவதுபற்றிச் சொன்னார்கள். இன்றையதினம் 5 பேர் கொண்ட ஒரு குடும்பத்திற்கு ரூ. 357.50 மாதம் ஒன்றுக்கு வழங்கப்படுகிறது. அவர்களுக்கு நல்ல அரிசியாக 57 பைசாவுக்கு ஒரு கிலோ அரிசி என்ற அடிப்படையில் வழங்கப்படுகிறது. அவர்களிடமிருந்து ரேஷன் போதவில்லை என்று இதுவரையில் அரசுக்கு கோரிக்கை எதுவும் வரவில்லை. அவர்கள் திருப்திகரமாக இருந்துகொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**திரு. கு. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்திய கடல் ஆதிக்க எல்லையில் இலங்கை சேர்ந்தப் படையினரால் சுட்டுக் கொல்லப்படுகிற கொடுமை இந்திய மீனவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. இதுகுறித்து தமிழக முதலமைச்சர் மத்திய அரசுக்குத் தெரிவித்து உரிய பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக இந்த விவர அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அங்கே உண்மையாகவே இந்த ஏற்பாட்டிற்குப் பின்னாலும் இந்திய மீனவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அது மட்டுமல்ல. பிரச்சனையின் முக்கியத்துவத்தைக் கருதி மீண்டும் சொல்கிறேன். இலங்கை அகதிகளுக்கு சில தனியார் கம்பெனிகளில் மிகக் குறைந்த கூலியில் வேலை கொடுக்கப்படுகிறது என்பதை நான் ஆதாரத்தோடு சில புள்ளிவிவரங்களைக் கொடுக்க விரும்புகிறேன். அப்படிச் சுட்டிக்காட்டுகிறபோது அதுபற்றி தகுந்த நடவடிக்கை எடுக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. த. இராமசாமி:** துணைத் தலைவரவர்களே, இராமேஸ்வரம் கடல் பகுதியில் நமது இந்திய எல்லைக்குள் தமிழக மீனவர்கள் இலங்கை இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டது பற்றியும் அவர்களுடைய வலைகள், அவர்கள் பிடித்த மீன்கள் மற்றவற்றைத் திருடிச் செல்வது பற்றியும் கவலை தெரிவித்து, நம்முடைய மீனவர்களுக்கு தக்க பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கும்படி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் 15—2—1985 அன்று பாரத பிரதமருக்கு அனுப்பிய தந்தி செய்தி மூலம் கேட்டுள்ளார்கள். பாரதப் பிரதமர்



16—2—1985 நாளிட்ட கடிதத்தில் தமிழக மீனவர்கள் இலங்கை இராணுவத்தினரால் தாக்கப்பட்டது பற்றி டில்லியிலுள்ள இலங்கை ஹைகமிஷனர் மற்றும் இலங்கை அரசோடு தொடர்பு கொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். நமது கடலோரப் பகுதி கப்பல் படையை வலுப்படுத்தி மீனவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கவும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது என்றும் பாரதப் பிரதமர் தெரிவித்துள்ளார். அதுமட்டுமல்லாமல் பாதிக்கப்பட்டவர்களுக்கு அகதிகளாக வந்திருக்கிறவர்களுக்குத் தேவையான நிவாரண நடவடிக்கைகளுக்கான நிதி உதவியை மத்திய அரசு தரும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போல முகாம்களில் இருக்கக்கூடியவர்கள் அரசாங்க அதிகாரிகளுடைய கண்காணிப்பில் இருந்து கொண்டிருக்கிறார்கள். அகதிகளாக இருக்கிறவர்கள் தனியார் நிறுவனங்களில் அல்லது வேறு இடங்களில் வேலை செய்து கூலி பெறுகிறார்கள் என்று அதிகாரிகள் தெரிவித்தால் அவர்களுக்கு மத்திய அரசு கொடுக்கிற உதவி நிதி நிறுத்தப்பட்டுவிடும். ஆகவே, அப்படிப்பட்ட நிலைமை எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி முகாம்களில் இருக்கிறவர்கள் அதிகாரிகளுக்குத் தெரியாமல் பக்கத்தில் இருக்கின்ற சில இடங்களுக்குச் செல்கிற சூழ்நிலை இருக்குமானால் அது சம்பந்தமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் அதுபற்றி அரசு பரிசீலிக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த பதிலில் தமிழ்நாட்டில் 12 மாவட்டங்களுக்கு இலங்கைத் தமிழ் அகதிகளை அனுப்பி வைப்பதாகச் சொன்னார்கள். நாங்கள் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் அந்தமான் நிக்கோபார் தீவுகளுக்குப் போயிருந்தோம். அது இந்திய எல்லைக்குள்தான் இருக்கிறது. அங்கே இருக்கிற பொதுமக்களும் தமிழர்களும் இலங்கைத் தமிழர்களை அந்தமான் நிக்கோபார் தீவுகளில் குடியமர்த்த ஏற்பாடு செய்யுங்கள்; நாங்கள் வசதி செய்து கொடுக்கிறோம், வீடு கட்டிக் கொடுக்கிறோம் என்று சட்டமன்ற உறுப்பினர்களிடம் சொன்னார்கள். அந்தக் கோரிக்கையை ஏற்று, தமிழக அரசு மத்திய

(திரு. இரா. தாமரைக்கனி) [1985 மார்ச் 27

அரசிடம் வற்புறுத்தி அந்தமான் நிக்கோபார் தீவுகளில் இலங்கைத் தமிழர்களை குடியமர்த்த ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. த. இராமசாமி:** துணைத் தலைவரவர்களே, அதுசம்பந்தமாக அரசு பரிசீலனை செய்யும்.

(முற்பகல் 10.20)

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இலங்கைப் பிரச்சனை பற்றி விவாதிப்பதற்காக தென் மாநில முதல்வர்கள் மாநாட்டைக் கூட்டவேண்டும் என்று கர்நாடக மாநில முதலமைச்சர் மாண்புமிகு ராமகிருஷ்ண ஹெக்டே அவர்கள் கூறிய யோசனையை அரசு ஏற்று, அப்படி ஒரு மாநாட்டை நடத்துவதற்கான நடவடிக்கையில் அரசு ஈடுபட்டு இருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. த. இராமசாமி:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, அரசு பரிசீலனை செய்யும்.

**திரு. மா. மீனாட்சிசுந்தரம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய பதிலில், இலங்கையிலிருந்து வருகின்ற அகதிகள் எல்லோரையும் ஒரே இடத்தில் குடியமர்த்துவதாக இருக்கிறோம் என்று சொன்னார்கள். தஞ்சை மாவட்டத்தில் வேதாரண்யம் வட்டத்தில் கிட்டத்தட்ட 4 இடங்களில் புயல் பாதுகாப்பு இல்லங்களில் ஆயிரத்திற்கும் அதிகமான அகதிகளை வைத்து இருக்கிறார்கள். அந்தப் புயல் பாதுகாப்பு இல்லங்கள் எல்லாம் கரை ஓரங்களில் இருக்கிற மக்களுக்காக கட்டப்பட்டிருக்கிற இடங்கள். இதிலே, இப்போது வைத்திருக்கிற அகதிகளை நீடித்து வைப்பதற்கு முடியாது. வேதாரண்யம் வட்டத்திற்கு அருகாமையில் கல்வி இலாக்காவிற்குச் சொந்தமான இடம் பரந்த அளவில் இருக்கின்றது. அங்கே அவர்கள் தங்க ஏற்பாடுகள் செய்தால், அவர்களுக்கு வேண்டிய வசதிகளும், குளிப்பதற்கும், கடைகளுக்குச் சென்று சாமான்கள் வாங்குவதற்கும், இன்னும் மற்ற வசதிகளுக்கும் வசதியாக இருக்கும். எனவே அந்த இடத்திலே அவர்களை தங்க வைத்து, அவர்களை நல்ல முறையில் கவனிக்க ஒரு தனி அதிகாரியை நியமிக்க இந்த அரசுக்கு உத்தேசம் உண்டா? என்பதை அறிய விரும்புகிறேன்.



1985 மார்ச் 27]

**மாண்புமிகு திரு. த. இராமசாமி:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, இலங்கை அகதிகளுக்காக எதையும் செய்யத் தயார், எதையும் செய்ய வேண்டும் என்று வற்புறுத்திக்கொண்டு இருக்கிற ஒரு கட்சியைச் சேர்ந்த நமது சட்டமன்ற உறுப்பினர், இன்றைய தினம் கரையோரங்களில் கட்டப்பட்டு இருக்கின்ற பாதுகாப்பு இல்லங்களில் இருக்கக்கூடிய அகதிகள் வேறு பகுதிக்கு மாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். பல்வேறு சிக்கல்களில், சங்கடங்களில் இருந்து வந்திருக்கின்ற அகதிகளை ஒரே சீரான இடத்தில் குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதற்கு சட்டமன்ற உறுப்பினர்களும், அவர்களுடைய தொகுதிகளிலே குடியமர்த்தப்பட்டிருக்கிற அகதிகளுக்கு அவர்கள் உதவியாக இருக்க வேண்டும். அதேநேரத்தில் அவர்கள் சொன்ன கருத்தும் பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (திரு. எஸ். என். இராமசாமி எழுந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு 12 பேர்கள் பெயர்களைக் கொடுத்திருக்கிறார்கள். அதிகமான உறுப்பினர்கள் கொடுத்து இருந்தால், விதிகளின்படி, முதல் 5 பேர்களை மட்டும் அனுமதிப்பது என்று நாம் வைத்திருக்கிறோம். அதன்படி 5 பேர்கள் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

**திரு. எஸ். என். இராமசாமி:** எங்கள் கட்சி உறுப்பினர்களுக்கு அனுமதி கொடுக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் கொடுந்திருப்பதை இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் அறிவிப்பைச் சற்று காலதாமதமாகக் கொடுத்திருக்கலாம். (குறுக்கீடு). விதிகளின்படி அதிகமான உறுப்பினர்கள் கொடுத்திருந்தால், முதல் 5 பேர்களை அனுமதிப்பது என்ற பேரவைத் தலைவரின் டிஸ்கிரிசன்படி அனுமதித்திருக்கிறோம்.

**திரு. உ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விதிமுறையை மீறி நீங்கள் தீர்ப்பு அளிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளவில்லை. ஆனால் ஐந்து

பேர்களுக்கு அதிகமாக கொடுத்திருக்கும்போது, கட்சி அடிப்படையிலே ஒவ்வொருவருக்கும் வாய்ப்புக் கொடுக்கும்படியான நிலைமையை தாங்கள் தயவுசெய்து, இனி வரும் சமயங்களில் கடைப்பிடிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** இப்போது இருக்கிற விதி, கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மீது 5 பேர்களுக்கு மேல் கொடுத்திருப்பார்களேயானால், அந்த வரிசைப்படி முதல் 5 பேர்களை கூப்பிடுவது என்று இருக்கிறது. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிடுவது போன்று அதிகமான அளவிலே 10, 15 பேர்கள் என்று கொடுத்திருப்பார்களேயானால், ஒரு கட்சிக்கு ஒருவர் என்று முதல் 5 கட்சிகள் யாருக்கு வருகிறதோ, அந்த வகையில் அனுமதிக்கலாம். ஆகையினாலே, முதலிலே 5 பேர்கள் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தால், அவர்களில் ஒருவரை அனுமதிப்பது, அடுத்து, 3 பேர்கள் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தால், அவர்களில் ஒருவரை அனுமதிப்பது என்ற முறையில், முதலில் கொடுத்து இருக்கிற 5 கட்சிகளைச் சேர்ந்த 5 உறுப்பினர்களை அனுமதிப்பது என்று வைத்துக்கொள்ளலாம். இதுபற்றி அலுவல் ஆய்வுக் குழுவிலே முடிவு செய்யலாம்.

## 3. அறிவிப்புகள் (தொடர்ச்சி).

### (இ) முன்பண மானியக் கோரிக்கைகள்—மொழிதல் (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1985-86 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளை பேரவையில் முன்மொழிவது குறித்து, மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப் பெற்றுள்ளது.

"In pursuance of Article 206, clause 2, read with Article 203, Clause 3, of the Constitution of India, I, Sundarlal Khurana, Governor of Tamil Nadu, hereby give my recommendations to the moving in the Tamil Nadu Legislative Assembly, of the Demands for Advance Grants during the year 1985-86."





## 6. முன்பண மானியக் கோரிக்கைகள், 1985-86.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1985-86 ஆம் ஆண்டிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் அடங்கிய 26—3—1985 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் இரண்டாம் பத்தியில் குறிப்பிடப்பெற்றுள்ள மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகையை 1985-86 ஆம் ஆண்டிற்கான உடனடிச் செலவிற்காக மொத்தமாக ரூபாய் 924 கோடியே 44 லட்சத்து 56 ஆயிரத்துக்கு மேற்படாத தொகையை அரசுக்கு முன் பணமாக வழங்கப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

### நிறைவேற்றப்பெற்ற 1985-86 ஆம் ஆண்டிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள்.

#### A. வருவாய்க் கணக்கில் செலவு

| | | (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|---|
| கோரிக்கை | 1— நில வரித் துறை .. .. | 4,75,57 |
| டி | 2— மாநில ஆயத் தீர்வைத் துறை | 1,45,09 |
| டி | 3— மோட்டார் வண்டிகள்—சட்டங்கள்—நிர்வாகம். .. .. | 93,94 |
| டி | 4— பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம். .. .. .. | 4,28,85 |
| டி | 5— முத்திரைத் தாள்கள்—நிர்வாகம் | 37,65 |
| டி | 6— பத்திரப் பதிவு .. .. | 1,91,94 |
| டி | 7— மாநிலச் சட்ட மன்றம் .. | 54,45 |
| டி | 8— தேர்தல்கள் .. .. .. | 16,96 |
| டி | 9— மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள். .. .. .. | 9,36,80 |

[1985 மார்ச் 27

A. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி.

| | | (ரூபாய் ஆயிரத்தில்.) |
|---|---|---|
| கோரிக்கை | 10—பால் வழங்கு திட்டங்கள் .. | 46,65 |
| ஷ்டி | 11—மாவட்ட நிர்வாகம் .. .. | 11,23,34 |
| ஷ்டி | 12—தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய-அறக் கட்டளைகள் சட்ட நிர்வாகம். | 1,04,34 |
| ஷ்டி | 13—நீதி நிர்வாகம் .. .. | 4,26,91 |
| ஷ்டி | 14—சிறைச்சாலைகள் .. .. | 2,65,55 |
| ஷ்டி | 15—காவல் துறை .. .. | 30,63,38 |
| ஷ்டி | 16—தீயணைப்புப் பணிகள் .. .. | 2,45,16 |
| ஷ்டி | 17—கல்வி .. .. .. | 1,55.99,84 |
| ஷ்டி | 18—மருத்துவம் .. .. .. | 36,15,39 |
| ஷ்டி | 19—பொதுச் சுகாதாரம் .. .. | 20,24,76 |
| ஷ்டி | 20—வேளாண்மை .. .. | 34,41,47 |
| ஷ்டி | 21—மீனளம் .. .. .. | 1,74.88 |
| ஷ்டி | 22—கால்நடை வளர்ப்பு .. .. | 8,89,88 |
| ஷ்டி | 23—கூட்டுறவு .. .. .. | 3,92,66 |
| ஷ்டி | 24—தொழில்கள் .. .. .. | 2,21,15 |
| ஷ்டி | 25—சின்கோனா .. .. | 1,11,86 |
| ஷ்டி | 26—கைத்தறியும் நெசவுத் தொழிலும் | 6,42,36 |
| ஷ்டி | 27—கதர்த் தொழில் .. .. | 75,74 |
| ஷ்டி | 28—சமூதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும். | 77,56,84 |
| ஷ்டி | 29—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும். | 4,09,20 |
| ஷ்டி | 30—சமூக நலன் .. .. | 26,01,78 |
| ஷ்டி | 31—பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன். | 14,69,87 |
| ஷ்டி | 32—பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன். | 3,84,71 |
| ஷ்டி | 33—வீட்டு வசதி .. .. | 4,38,82 |
| ஷ்டி | 34—நகர்ப்பகுதி வளர்ச்சி .. | 10,02,14 |
| ஷ்டி | 35—நுகர் பொருள் வழங்கல் .. | 32,76,73 |
| ஷ்டி | 36—பாசனம் .. .. | 18,83,85 |



1985 மார்ச் 27]

வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி

| | | (ரூபாய் ஆயிரத்தில்.) |
|---|---|---|
| கோரிக்கை | 37—பொதுப் பணிகள்—கட்டிடங்கள் | 1,83,09 |
| ஷ்டி | 38—பொதுப் பணிகள்—பணியாளரமைப்பும், கருவிகளும் தளவாடமும். | 5,94,75 |
| ஷ்டி | 39—சாலைகளும் பாலங்களும் .. | 24,33,97 |
| ஷ்டி | 40—சாலைப் போக்குவரத்தும் கப்பல் போக்குவரத்தும். | 1,51,87 |
| ஷ்டி | 41—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு. | 13,46 |
| ஷ்டி | 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வு கால நன்மைகளும். | 18,81,67 |
| ஷ்டி | 43—பல்வகை .. .. | 74,13,02 |
| ஷ்டி | 44—எழுது பொருள் அச்சுத் துறை | 5,6640 |
| ஷ்டி | 45—காட்டுவளத் துறை .. .. | 4,11,48 |
| ஷ்டி | 46—இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் | 9,10,41 |
| ஷ்டி | 47—செய்தி, சுற்றுலா, திரைப் படத் தொழில் நுட்பவியல். | 83,22 |
| ஷ்டி | 48—ஊரகத் தொழில்கள் .. | 3,43,42 |
| ஷ்டி | 49—குடிநீர் வழங்கல் .. .. | 42,83,93 |
| | மொத்தம்—A. வருவாய்க் கணக்கு .. | 7,33,41,60 |

B. வருவாய்க் கணக்கின் கீழ் வராத மூலதனச் செலவு.

| | | (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|---|
| கோரிக்கை | 50—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு. | 74,52 |
| ஷ்டி | 51—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு. | 4,45,14 |
| ஷ்டி | 52—பாசனம் குறித்த மூலதனச் செலவு. | 20,81,74 |
| ஷ்டி | 53—பொதுப் பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு. | 11,59,37 |
| ஷ்டி | 54—சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு. | 7,24,73 |
| ஷ்டி | 55—சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு. | 57,26 |
| ஷ்டி | 56—காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு. | 5,77,25 |

B வருவாய்க் கணக்கின் கீழ் வராத மூலதனச் செலவு —தொடர்ச்சி.

| | | (ரூபாய் ஆயிரத்தில்.) |
|---|---|---|
| கோரிக்கை | 57— ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு. | 45,84 |
| ஷை | 58— பல்வகை மூலதனச் செலவு .. | 2,63,39 |
| | மொத்தம்— B. மூலதனக் கணக்கு .. | 54,29,24 |

C. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும், கடனைத் திருப்பிக் கொடுத்தலும்.

| | | (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|---|
| கோரிக்கை | 59— மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும். | 1,36,73,72 |
| | பெரு மொத்தம் .. | 9,24,44,56 |

2. அறிவிப்புகள் (தொடர்ச்சி).

(ஈ) நிதி ஒதுக்க (உடனடிச் செலவிற்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு, 1985 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (உடனடிச் செலவிற்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளவும் ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

7. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) நிதி ஒதுக்க (உடனடிச் செலவிற்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு, 1985.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (உடனடிச் செலவிற்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."



தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஆ) நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு, 1985.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/1985) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

**திரு. அ. ரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1985 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்டம் எதிர்பாராத விதத்தில் இங்கே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதற்காக நான் முதலில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

1984 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 ஆம் நாளில் தொடங்கிய நிதி ஆண்டுக்கு மாநில தொகுதியில் இருந்து, அதாவது கன்சாலிடேட்டட் பண்டிலிருந்து 924 கோடியே 44 லட்சத்து 56 ஆயிரம் ரூபாயைப் பல்வேறு துறைகளுக்கு மாநில அரசு ஒதுக்கீடு செய்திருக்கிறது. அதற்காக இந்தச் சட்ட முன்வடிவு கொண்டுவரப்பட்டு இப்போது ஆய்வுக்காக எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது.

பற்றாக்குறை பட்ஜெட்டினுடைய அளவு அதிகமாகத் தெரியக்கூடாது என்பதற்காக இந்த கன்சாலிடேட்டட் பண்டிலேயிருந்து அதிகமாகத் தொகை எடுக்கப்படுவது என்பது சரியானது அல்ல. கொடுக்கப்பட்டிருக்கிற பணி விவரங்களைப் பார்த்தால் கன்சாலிடேட்டட் பண்ட் என்பது, எல்லோருக்கும் தெரிந்த உண்மை, எதிர்பாராத செலவிற்கும் புதிய திட்டப் பணிகளுக்காகவும், எடுத்துக் கொள்ளப்படுகிற பணமாகும். ஆனால் இங்கே எதிர்பாராத செலவு என்று எதையும் சொல்வதற்கில்லை, எதிர்பார்த்த

செலவுகளே இருக்கின்றன. அதேபோல புதிய திட்டப் பணிகள் என்று எதுவும் இல்லை. பழைய திட்டங்களே இருக்கின்றன. ஆனாலும் அவைகளுக்கெல்லாம் கூட கன்சாலிடேட்டட் பண்டிலேயிருந்து பணம் எடுக்கப்பட்டு, அது அதிகத் தொகையில் பற்றாக்குறை—டெபிசிட்—என்று வந்து விடக்கூடாது என்பதற்காக, இதுபோன்ற காரியங்கள் செய்யப்பட்டதாகத் தெரிகிறது. அது சரியல்ல என்பதை நான் முதலிலே இங்கே வன்மையான கண்டனத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-30)

இங்கே பல்வேறு துறைகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அவைகள் முறையாகப் பயன்படுத்தப்பட வேண்டும். ஏனென்றால் இது அப்ராபிரியேஷன். அப்ராபிரியேஷன் என்பதற்கு பதிலாக மிஸ்-அப்ராபிரியேஷனாகிவிடக் கூடாது. ஒதுக்கீடு செய்வது என்பது ஒதுக்கிக்கொண்டே போவதாக ஆகிவிடக் கூடாது என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பல்வேறு துறைகளுக்கு இங்கே ஒதுக்கீடுகள் செய்யப்படுகின்றன. உதாரணமாக சமூகநலத் திட்டம் என்பதிலே சத்துணவுத் திட்டம் வருகிறது. அதற்கு இந்த அரசாங்கம் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது. சப்ளிமெண்டரி பட்ஜெட்டிலே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இது பழைய பிரச்சனைதான் என்றாலும்கூட இன்னும் அந்தப் பிரச்சனை பட்ஜெட்டிலேயே சொல்லப்பட்டு இருக்கிற காரணத்தினாலும், சப்ளிமெண்டரி பட்ஜெட்டிலேயும் சொல்லப்பட்டு இருக்கிற காரணத்தினாலும், அப்ராபிரியேஷனில் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிற காரணத்தினாலும், இதுபற்றி கடந்த ஏழு வருடமாக இந்தச் சட்டமன்றம் விவாதித்தாலும் இந்தப் பிரச்சனையில் உள்ள சில அம்சங்களை இங்கே தெரிவிப்பது என்னுடைய கடமையாகும்.

இந்த சத்துணவுத் திட்டத்தை நாங்கள் எதிர்ப்பதாக சொல்லப்படுகின்ற கருத்தை முதலிலே நான் எதிர்க்கிறேன். நாங்கள் சத்துணவு திட்டத்தை ஆதரிக்கிறோம். எங்கள் தேர்தல் அறிக்கையிலேகூட இதைப்பற்றி குறிப்பிட்டிருக்கிறோம். மார்கோனி ரேடியோவை கண்டுபிடித்ததைபோல, சத்துணவு திட்டத்தை உருவாக்கியவர்களே நாங்கள்தான் என்ற உணர்வு இன்றைக்கு பரப்பப்பட்டு வருகிறது. ஆனால் நான் ஏற்கனவே





சொல்லிய கருத்தை நினைவூட்டுகிறேன். பெரியவர், காமராஜ் அவர்கள் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது இந்த மதிய உணவு போடப்பட்டது. மானியமாக 15 காசு வழங்கப்பட்டது. 220 நாட்களுக்கு அவர்கள் காலத்திலே தரப்பட்டது. இப்போது 365 நாட்களுக்குத் தரப்படுகிறது. அரசாங்க மானியம் 45 பைசா தரப்படுகிறது. ஆக காமராஜ் அவர்கள் கொண்டுவந்த திட்டத்தினுடைய விரிவாக்கம்தான் இது என்பதை ஒத்துக்கொள்ள வேண்டும். அதனுடைய எக்ஸ்டென்ஷன் தானே தவிர வேறு அல்ல. ஆரம்பகால கட்டத்திலே பெரியவர் காமராஜ் அவர்கள் கொண்டுவந்த திட்டம். இந்தத் திட்டத்தைப்பற்றி இதே சபையிலே பல கருத்துக்கள் விவாதிக்கப்பட்டு இருக்கின்றன. பட்ஜெட்டிலே கூட சொல்லப்பட்டிருக்கின்றன. எடை கூடுகிறது, உயரம் கூட கூடுகிறது இந்த சத்துணவு சாப்பிடுவதினால் என்று சொல்லுகின்ற வாதத்தை நான் ஒப்புக்கொள்ளத் தயாராக இல்லை. சத்துணவு போடப்பட வேண்டும் என்பதிலே கருத்து வேறுபாடு இல்லை. ஆனால் சத்துணவு, சத்துணவாக இருக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய வாதம் . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சத்துணவு கொடுப்பதினால் குழந்தைகளுடைய எடை கூடுகிறது என்று மருத்துவ விஞ்ஞானிகள் ஆய்வு செய்து எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

**திரு. அ. ரகுமான்கான் :** துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு லட்சக்கணக்கான குழந்தைகள் சத்துணவு சாப்பிடுவதாக அரசாங்கத் தரப்பிலே கணக்கு தரப்பட்டிருக்கிறது. அவர்களுடைய எடை சாப்பிடுவதற்கு முன்பு எவ்வளவு இருந்தது? சாப்பிட்டதற்கு பிறகு எவ்வளவு இருந்தது என்று அந்த இயந்திரத்தை வைத்து அன்றாடம் எடை பார்க்கப்படுகிறதா என்பதையும் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** துணைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு பள்ளியிலும் எடை பார்ப்பதற்கான கருவிகள் வைக்கப்பட்டு இருக்கின்றன. குழந்தைகளுக்கு மூன்று மாதத்திற்கு ஒரு முறை எடை எடுக்கப்படுகிறது. ஹெல்த் கார்டு எனப்படும் அந்த நல்வாழ்வு அட்டையிலே அவைகள் குறிப்பிடப் படுகின்றன.

**திரு. அ. ரகுமான்கான் :** துணைத் தலைவர் அவர்களே, சத்துணவிற்காக அரசாங்கம் தருகின்ற தொகை ஒருவருக்கு எவ்வளவு என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தால் நலமாக இருக்கும். இங்கே சத்துணவுத் துறை அமைச்சர் இருக்கின்ற காரணத்தினால், சத்துணவு போடுவதற்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்படுகிறது என்பதை அறிவிப்பார்கள் என்று நினைக்கிறேன். இந்த அரசாங்கத்தால் ஒதுக்கப்படுகின்ற தொகையிலே என்னென்ன பொருள்கள் போடப்படுகின்றன என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** துணைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வியாக கொடுப்பார்களானால், கேள்வி நேரத்தில் பதில் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ரகுமான்கான், நீங்கள் உங்களுடைய கருத்துக்களை சொல்லுங்கள். நீங்கள் கேள்வி கேட்டு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வாரா என்றால், விவாதம் நீண்டுகொண்டே போகும். துணை மானியக் கோரிக்கையில் நிறைய, தெளிவாகப் பேசியிருக்கிறீர்கள். விரைவாக முடித்துக்கொள்ளுங்கள்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** துணைத் தலைவர் அவர்களே, இந்த சத்துணவு மையங்களில் குழந்தைகளுடைய எடையை எடுக்கிறார்களா என்று உறுப்பினர் கேட்டிருக்கிறார். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அதற்கு பதில் சொன்னார்கள். இதுகுறித்து நான் ஒரு செய்தியை மாண்புமிகு உறுப்பினருக்கு சௌகரியமாக இருக்கும் என்பதால் தெரிவித்துக்கொள்கிறேன். ஐ.சி.எம்.ஆர். (இந்தியன் கௌன்சில் ஆப் மெடிக்கல் ரிசர்ச்) என்ற நிறுவனம் இருக்கிறது. அந்த நிறுவனத்தின் ஒரு பகுதியாக மாணவிகள் எல்லாம் சேர்ந்து பைலட் ப்ராஜக்ட் மாதிரி பல இடங்களில் எடையை எடுத்து, அது மட்டுமல்லாமல், அவர்களுடைய ஆரோக்கியத் தரம் எப்படி இருக்கிறது என்றும் பார்த்திருக்கிறார்கள். சத்துணவு கொடுப்பதன் மூலமாக குழந்தைகளுடைய உடல்நலம் மிக நல்ல முறையில் முன்னேற்றம் அடைகிறது.

"the health status of the child has had considerable improvement as a result of the mid-day meals scheme."

என்கின்ற ஒரு கருத்தை சொல்லியிருக்கிறார்கள். எடையும் நல்ல



வகையிலே ஏறியிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இதனை தகவலுக்காக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** துணைத் தலைவர் அவர்களே, தகவலுக்காக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்னொரு அமைச்சர் தனிக் கேள்வி போடும்படி சொன்னார். காய்கறிகளையும், எண்ணெய், மற்றும் பருப்பு எவ்வளவு ரூபாய்க்கு வாங்க வேண்டும் என்ற புள்ளிவிவரத்தை நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள் என்று கேட்டால் ஒரு ரூபாய் அளவிற்குத்தான். நான் கேட்க விரும்புவது, இதற்குள் காய்கறி போட்டு, இதற்குள் எண்ணெய் வாங்கி, இதற்குள் சமையல் தயாரித்துப் போடுகிற சத்துணவால் எடை கூடுகிறது என்ற வாதத்தை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. வேண்டுமானால் அது உங்கள் கருத்தாக இருக்கலாம்.

THE HON. DR. H. V. HANDE: I would like to categorically state that the project has been completed. Even the medical aspects have been examined.

அந்த ரிப்போர்ட் பத்திரிகையிலே வந்திருக்கிறது என்ற அந்த பாயின்டிற்காகச் சொல்கிறேன். ஐ.சி.எம்.ஆரினுடைய ஒரு பகுதி இது நல்லவிதமாக முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள் என்பதால் நான் இதைச் சொல்லி தவறான எண்ணம் வெளியே வரவேண்டாம் என்பதற்காக இதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** இந்த சத்துணவால் இளம்பிள்ளை வாதம் தீருகிறது என்ற ஒரு கருத்து வெளியேயும் உள்ளேயும் பேசப்பட்டு அந்தக் கேள்வியைக் கூட முதலமைச்சர் அவர்களிடம் நான் இதே சபையிலே எழுப்பியிருக்கிறேன். குருடர்கள் பார்க்கிறார்கள், செவிடர்கள் கேட்கிறார்கள், நொண்டிகள் நடக்கிறார்கள் என்றுகூட வெளியே பேசப்பட்டு அப்படி இங்கேயும் பேசப்பட்டது. இளம்பிள்ளை வாதம் இதனால் தீருகிறது என்றெல்லாம் சொன்னார்களே, அதனால் முடியுமா என்றெல்லாம் நான் கேட்டபோதே நான் அப்படிப் பேசவில்லை,

வெளியே பேசியவர்களுடைய பேச்சுக்கு நான் பொறுப்பில்லை என்று இதே சபையிலே சொல்லி அது சபைக்குறிப்பிலே இடம் பெற்றிருக்கிறது.

சத்துணவுத் திட்டத்தைப் பொறுத்தவரையில் ஆந்திர மாநிலத்திலே அது பிளானிங்கிலே சேர்க்கப்படுகிறது. ஆனால் தமிழக அரசில் அது நான்-பிளானிங்கில் இருப்பதாக அறிகிறேன். அதைப் பிளானிங்கிற்குள்ளே கொண்டுவந்து மத்திய அரசினுடைய நிதியுதவியைப் பெறுவதற்கு அரசாங்கம் என்ன முயற்சி செய்திருக்கிறது என்பதைத் தெரிவிக்க வேண்டும். சத்துணவுக்காக இன்றைக்கு அரசாங்கம் நிதி ஒதுக்கீடு செய்வது மட்டுமல்லாமல்—இது மிக முக்கியமான பிரச்சினை, நீண்ட காலமாகவே கேட்டுக் கொண்டு வருகிறோம்—நட்சத்திர இரவுகள் நடிகர்கள் மூலம் நடத்தி பணம் வசூலிக்கப்பட்டிருக்கிறது. பல நடிகர்கள் நன்கொடைகள் கொடுத்திருக்கிறார்கள், சத்துணவுக்காக. தாசில்தார்கள்மூலம் பல இடங்களிலே அதிகாரிகள்மூலம் சத்துணவிற்காக வசூல் செய்யப்பட்டிருக்கிறது. இவையெல்லாம் அரசாங்கத்தின் நிதி ஒதுக்கீடுகளுக்கு அப்பால் வசூல் செய்யப்பட்ட தொகைகள். அவை லட்சக்கணக்கிலே கோடிக்கணக்கிலே இருக்கலாம், அப்படி எவ்வளவு வசூலிக்கப்பட்டது, அதன் வரவு செலவு என்ன என்பதை எல்லாம் இந்தச் சட்டசபையிலே வைக்க வேண்டும். காரணம் ஊழல்களுக்கு வழி இருந்தாலும் இருந்து விடக் கூடும். இதை நாங்கள் நீண்டகாலமாக வலியுறுத்திக் கொண்டு வருகிறோம். ஆனால் அந்தக் கணக்கு விவரங்கள்கூட சட்டசபையிலே வைக்கப்படாத காரணத்தினாலே சந்தேகங்களுக்கு இடம் தருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து ஆயாக்கள், பாலசேவிகாக்கள், அமைப்பாளர்கள் ஆகியவர்கள் வேலை பார்க்கிறார்கள். நம்முடைய அமைச்சர் திரு. சௌந்திரராஜன் அவர்கள் அன்றைக்கும், இன்றைக்கும் சத்துணவு அமைச்சராக இருக்கிறார், ஆயாக்கள் சரியாக வேலை செய்யவில்லையென்றால் அவர்களை சோதனை செய்து சஸ்பெண்ட் செய்கிற காரியங்களைச் செய்து வந்தார்கள். இப்போது ஆயாக்களுக்கு 100 ரூபாய்தான் சம்பளம் தந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இன்னும் பெர்மனன்ட ஆக்கப்படவில்லை. அவர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்றும் அவர்களுடைய சம்பளத்தை உயர்த்த வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். பாலசேவிகாக்களுக்கும் அதுமாதிரி தரப்பட வேண்டும்.





(முற்பகல் 10.40)

இலவச சீருடை, இலவச புத்தகம், இலவச சத்துணவு என்று சிறுவர்களுக்கு கொடுக்கிற நேரத்தில் ஆயிரக்கணக்கான சிறுவர்கள் இன்றைக்கு சிவகாசியில் கொத்தடிமைகளாக தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் வேலை பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள். இன்றைக்கு அவர்களுக்கு கல்வி அறிவு இல்லை. 14, 15 மணி நேரம் அவர்கள் வேலை பார்க்கிறார்கள். அந்த கொத்தடிமைகளிலிருந்து அந்தச் சிறுவர்களை மீட்பதற்கு ஏதாவது சட்டம் இங்கே கொண்டு வருகிறீர்களா என்றால் கிடையாது. அர்பன்சிங் கமிட்டி ரிப்போர்ட்டில் கூட சொல்லப்பட்டு இருக்கிறது. ஆனால் இந்த அரசு சத்துணவு போடுகிறோம், இலவச சீருடை வழங்குகிறோம், இலவச புத்தகம் தருகிறோம் என்று சொல்லுகிற நேரத்தில் இந்த சின்னஞ்சிறுகுழந்தைகள் கல்வி கற்க முடியாமல் தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் வேலை செய்கிறார்கள். வட ஆற்காடு மாவட்டத்தில் தோல் தொழிற்சாலையில் சிறுவர்கள். இன்றைக்கு கொத்தடிமைகளாக இருக்கிறார்கள். இந்தக் கொடுமைக்கு முற்றுப்புள்ளி வைத்து ஒரு சட்டத்தை இந்த அரசு நீண்டகாலமாக கொண்டு வருகிறோம் என்று சொல்லுகிறதே தவிர கொண்டுவருகிற முயற்சியில் ஏன் ஈடுபடவில்லை என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

அதைப்போலவே மாநில ஆயத்தீர்வைக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறது. பட்ஜெட்டில்கூட நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் சாராயத்தின் மூலம் வரி 40 கோடி ரூபாய் வரும் என்று எதிர்பார்த்து விதித்து இருக்கிறார்கள். ஆனால் இதன்மூலம் தெரிய வருவது என்னவென்றால், சாராயத்திற்கு நீங்கள் வரி போடுகிறீர்கள், ஆனால் அதே நேரத்தில் இதிலிருந்து என்ன தெளிவாகத் தெரிகிறது என்று கேட்டால் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தேர்தல் நேரத்தில் சொன்னார்கள், 1985 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15 ஆம் தேதி மதுவிலக்கு அமல் செய்யப்படும் என்று சொன்னார்கள். தேர்தல் வாக்குறுதியாக

இதைச் சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு என்ன நிலைமை என்று கேட்டால் சாராயத்திற்கு வரி போடப்படும் என்று சொன்னால் மேலும் அதன்மூலம் 40 கோடி ரூபாய் நீங்கள் நம்பி இருப்பதன் மூலம் இன்றைக்கு அந்த மதுவிலக்கு கொள்கை இருக்கிறதா என்றால் கிடையாது.

நான் இன்னும் ஒன்றை தெளிவுபடுத்த விரும்புகிறேன், இந்து பத்திரிகையில் திருச்சியைச் சேர்ந்த ஒருவர் நம்முடைய அமைச்சர் சௌந்திரராஜன் அவர்களைப் பற்றி ஒரு கருத்தைத் தெரிவித்து இருக்கிறார், புரபசனல் டாக்ஸ், என்.ஜி.ஓ.க்களுக்கு ரத்து செய்யப்படும் என்ற நம்பிக்கையில் வோட்டு போட்டு விட்டேன். இப்போது என்னை ஏமாற்றி விட்டார்கள். அந்த வோட்டை திரும்ப எனக்கு தந்து விடுவதுதான் முறை. காரணம் தேர்தல் காலத்து வாக்குறுதியை நிறைவேற்றாதவர்கள். புரபசனல் டாக்ஸ் நீக்கப்படும் என்று திருச்சியில் பேசினார், தேர்தல் வாக்குறுதியாக சொல்லப்பட்டிருக்கிறது. அதை செய்யவில்லை. எனவே அமைச்சர் சௌந்திரராஜன் அவர்களுக்கு வோட்டு போட்டு நாங்கள் ஏமாந்து போனோம் என்று இந்து பத்திரிகையில் "Letters to the Editor" எழுதப்பட்டு இருக்கிறது. எனவே மதுவிலக்கு அமல்படுத்தப்படும் என்று தேர்தல் நேரத்தில் சொல்லியது மட்டும் அல்ல, அதை ஒட்டி இதே சபையில் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள், "We are committed to the policy of prohibition"
திரு. பட்வாரி அவர்கள் ஆளுநராக இருந்தபோது ஆற்றிய உரையின் மீது அந்த விவாதத்திற்கு பதில் அளிக்கும்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த மதுவிலக்கினால் அவதிப்படும் தாய்மார்களின் கண்ணீரைத் துடைப்பேன் என்ற வாக்குறுதியைக் கொடுத்து இருக்கிறார்கள். குடி குடியைக் கெடுக்கும் என்று பிரச்சாரம் செய்கிறீர்கள். 15 லட்சம் ரூபாய் பட்ஜெட்டிலே மதுவிலக்குப் பிரச்சாரத்திற்காக ஒதுக்கீடு செய்திருக்கிறீர்கள்.

அது மட்டும் அல்லாமல் ஒரு மணப்பெண் திருமணக் கோலத்தில் உட்கார்ந்து இருக்கும்போது மாப்பிள்ளை குடித்துவிட்டு உட்கார்ந்து இருந்தார் என்பதை கேள்விப்பட்ட உடனேயே அந்த மணப்பெண் இந்த மணமகன் வேண்டாம் என்று ஓடி



விட்டாள். அப்படிப்பட்ட ஒரு புரட்சிகரமான பெண்ணாக இருக்கவேண்டும், புதுமைப் பெண்ணாக இருக்க வேண்டும் என்று அந்த மதுவை அகற்ற வேண்டியதன் பெருமை குறித்து நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பேசினார்கள். மது அருந்தினால் பப்ளிக் சர்வெண்டுக்கு ஒரு தண்டனை, அதைப்போலவே கவர்ன்மெண்டு சர்வெண்டுக்கு ஒரு தண்டனை என்று ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டது. மது அருந்தி 3 முறை குற்றங்கள் செய்தால் ஊரை விட்டு கடத்துகின்ற ஒரு சட்டம் எல்லாம் கொண்டுவரப்பட்டது. இன்றைக்கு அவைகள் எல்லாம் கல்லறைகளில் கண் துஞ்சுகின்றன என்று நான் கருதுகிறேன். இன்றைக்கு மதுவிலக்கு கொள்கை, தேர்தல் காலத்து வாக்குறுதி மதுவிலக்கை ஒழிப்பேன், மது அரக்கனை ஒழிப்பேன் என்பது வாக்குகளை பெறுவதற்கு காரணமாக இருந்ததே தவிர இன்றைக்கு சாராயத்திற்கு பட்ஜெட்டில் வரி போடுகின்ற நிலைமைதான் இருந்து கொண்டிருக்கிறது. ஆக அரசாங்கம் இந்த அப்ரோபிரியேஷனில் ஆயத்தீர்வையில் நீங்கள் ஒதுக்கியிருக்கிற காரணத்தால் இதையும் இங்கே நான் குறிப்பிட வேண்டியதாக இருக்கிறது.

அதைப்போலவே தொழிற்சாலைகளுக்கு என்று நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. தொழிலாளர்கள் நலனுக்காக நிதி ஒதுக்கீடு செய்து இருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் தயவுசெய்து உங்களை கேட்கிறேன். இன்றைக்கு புதிய தொழிற்சாலைகள் உருவாகுவதற்கு இந்த அரசின் பட்ஜெட்டைக் கூட பார்த்தேன். அதில்கூட அறிவிப்பு இருக்கிறதா என்று கேட்டால் எதுவும் இல்லை. பத்து சர்க்கரை ஆலைகள் தொடங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அப்படி என்றால் என்ன அர்த்தம் ] 10-ம் துவக்கப்படவில்லை, எதிர்பார்க்கப்படுகிறது என்றுதான் இருக்கிறதே தவிர வேறு எதுவும் இல்லை. திரும்பத் திரும்ப ஒரே ஒரு கூட்டுறவு முறையில் துவக்கப்பட்டு இருக்கக் கூடிய ஒரு ஆலையைப்பற்றிதான் ஒரே பாடல், ஒரே ராகம் என்று சொல்லப்பட்டு வருகிறதே தவிர மற்ற புதிய தொழிற்சாலைக்கான அறிவிப்புகள் இல்லை. இன்று இந்து பத்திரிகையில் கூட எடிட்டோரியல் எழுதியிருக்கிறது.

"The State Government needs to pay greater attention to Industrial development"
பட்ஜெட் பற்றி விமர்சனம் எழுதுகிறபோது இண்டஸ்ட்ரியல்

டெவலப்மென்டில் இந்த அரசு அதிக கவனம் செலுத்தவேண்டும். அது இல்லை என்ற குறையை இன்றைக்கு காலையில் வந்து இருக்கக்கூடிய இந்து பத்திரிகை எடிட்டோரியலில் குறிப்பிட்டு இருக்கிறார்கள். ஆக புதிய தொழிற்சாலைகள் இருக்கிறதா என்று கேட்டால் இல்லை. ஆனால் பெரிய சாதனை என்று நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் பட்ஜெட்டில் சொல்லியிருக்கிறார், கொத்தவால்சாவடியில் இருக்கக்கூடிய கடைகள் கோயம்பேட்டுக்கு மாற்றப்படும்; இரும்பு, உருக்கு இரும்பு சாமான்கள் கடைகள் சாத்தங்காட்டுக்கு கொண்டு செல்லப்படும். புதிய கழிப்பிடங்கள் கட்டப்படும் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. நான் கேட்கிறேன், கொத்தவால்சாவடியை கோயம்பேட்டுக்கு மாற்றுவதுதான் புரட்சிகரமான திட்டமா? காயிலாங் கடைகளை எல்லாம் நான் கேட்க விரும்புகிறேன், சாத்தங்காட்டுக்கு கொண்டு செல்வது மிகப் பெரிய புரட்சிகரமான திட்டமா? கழிப்பிடங்கள் கட்டித் தருகிறோம் என்று சொல்கிறீர்கள், நான் கேட்க விரும்புகிறேன், காங்கிரஸ் ஆண்டபோது கழிப்பிடங்கள் கிடையாதா? திராவிட முன்னேற்றக் கழகம் ஆண்டபோது கழிப்பிடங்கள் கிடையாதா? ஆக கழிப்பிடங்கள் கட்டிக் கொடுக்கிறோம் என்று சாதனையைச் சொல்கிறீர்களே தவிர இந்த இந்தத் தொழிற்சாலைகளை துவங்கியிருக்கிறோம் என்ற பட்டியலை நீங்கள் அதிலே சொல்லியிருந்தால் இந்த நிதி ஒதுக்கீட்டில் நன்கு இருக்கும். (மணியடிக்கப்பெற்றது). எங்கள் கட்சியில் நான் ஒரே ஒரு ஆள்தான் பேசுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரே ஒரு ஆள் தான் பேசினாலும், இது துணை மானியக் கோரிக்கை. நீங்களே இவ்வளவு நேரம் பேசியிருக்கிறீர்கள். நிறைய பிசினெஸ் இருக்கிறது. ஆகவே 2 நிமிடங்களில் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. அ. ரகுமான்கான்:** Appropriation is connected with Budget. Supplementary Budget is connected with Budget'. ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும் நிலையிலே, அதிகமான உறுப்பினர்கள் பேசாத நிலையிலே எனக்கு கொஞ்சம் நேரம் கொடுங்கள், முடித்து விடுகிறேன்.





அடுத்து, ஏற்கனவே போட்டோ பிலிம் தொழிற்சாலை நம்மிடத்திலிருந்து போய்விட்டது. கோச் பேக்டரி இல்லை; அசோக் லேலண்ட் எக்ஸ்டென்ஷன் இல்லை, நேவல் அகாடமி போய் விட்டது, எனவே இப்படிப் புதிய தொழிற்சாலை என்ற பார்வை இல்லை.

இன்னொன்றையும் நான் தெளிவாகத் தெரிவிக்க விரும்புகிறேன். மோட்டார் வண்டிகள் மீது வரி விகிதத்தை உயர்த்த உத்தேசித்திருக்கிறீர்கள். இந்த பட்ஜெட்டிலே அதுபற்றி அதிகமாகப் பேசப்படுகிறது. இன்றைக்கு பத்து கோடி ரூபாய் அதன் மூலம் எதிர்பார்க்கிறீர்கள் என்று சொல்கிறீர்கள். இதன் காரணமாகப் பஸ் கட்டணம்தான் உயரும். இதனால் பாதிக்கப்படப் போவது ஏழை எளிய மக்கள்தான்.

மாவட்டங்களைப் பிரிப்பதற்கான அடையாளம் எதுவும் இதில் காணப்படவில்லை. நாவலர் அவர்கள் சொல்லக்கூடும், மெள்ள மெள்ள ஆனால் உறுதியாக அந்தத் திட்டம் நிறைவேற்றப் படும் என்று சொல்வார்கள். அதற்கான அடையாளம் எதுவும் இல்லை. அதில் நிர்வாகப் பிரச்னைகள் இருக்கக்கூடும். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலேயும் திருச்சி மாவட்டம், திருச்சிமாவட்டம் புதுக்கோட்டை மாவட்டம் என்று பிரிக்கப்பட்டது: அதைப்போலவே சேலம் மாவட்டம், சேலம், தர்மபுரி என்று பக்தவத்சலம் அவர்கள் முதல்வராக இருந்த காலத்தில் பிரிக்கப் பட்டது. ஆனால் இப்பொழுது மாவட்டங்களைப் பிரிப்பது பற்றிய அடையாளம் இதில் தெரியவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். விவசாயிகளுக்கான கடன்களை ரத்து செய்ய வேண்டுமென்பது உங்களது தேர்தல் கால வாக்குறுதியாகும். ஆனால் அதை ரத்து செய்வதை விட்டுவிட்டு, தண்ட வட்டியைத் தள்ளுபடி செய்கிறோம் என்று ஏதோ அற்புத சாதனையைப் போல் செய்வது சரியல்ல. ஜப்தி நடவடிக்கைகள் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கின்றன. அவைகள் தடுத்து நிறுத்தப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நான் மிக முக்கியமான ஒன்றை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். காரணம், நிதி ஒதுக்கீடு செய்யும்பொழுது தவறான இனங்களுக்குச் செல்வதற்கு அவை இடம் கொடுத்து விடக்கூடாது: ஊழலுக்கு வழி வகுத்துவிடக் கூடாது: அதிகார துஷ்பிரயோகத்திற்கு இடம் கொடுத்துவிடக் கூடாது என்பதால் இவற்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஹவுசிங் போர்டால் நில ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. பெசன்ட் நகரில் 3 கிரவுண்டுகளும் 200 ஸ்கொயர் ஃபீட்டுகளும் கொண்ட ஒரு பகுதி—ஒரு சைட்—அலாட் செய்யப்பட்டிருக்கிறது. தெய்வீகன் என்ற எக்ஸ் எம்.பி.க்கு. நான் இதைக் குற்றச்சாட்டாகச் சொல்ல வேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை. அது ஹவுசிங் போர்ட் ஆடிட் ரிப்போர்ட்டிலேயே குறிப்பிடப்பட்டிருக்கிறது. நம்முடைய டேபிளிலும் பிளேஸ் செய்யப்பட்டிருக்கிறது. பெட்ரோல் பங்க் கன்ஸ்ட்ரக்ஷனுக்காகக் கொடுக்கப்பட்டது. ஆனால் கமர்ஷியல் பர்ப்பசுக்காக—வியாபார நோக்கத்திற்காக ஒரு சைட்டை ஹவுசிங் போர்ட் அலாட் செய்யும்பொழுது பப்ளிக் டெண்டர் விடப்பட வேண்டும். ஆனால் இ விஷயத்தில் பப்ளிக் டெண்டர் விடப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை. அந்த ரிப்போர்ட் சொல்கிறது, கவர்ன்மெண்டைப் பற்றிச் சொல்கிறது. "Deviation from the usual practice." ஏன் அந்த பப்ளிக் டெண்டர் விடப்படவில்லை. அதற்கு என்ன காரணம்? அரசாங்கம் இதிலே சலுகை காட்டியிருக்கிறார்களே, அதற்கு அர்த்தம் என்ன? அவர் ஆளுங்கட்சியைச் சார்ந்தவர் என்பதாலா என்று தெரிய விரும்புகிறேன்.

அதைப்போல இன்னொன்றையும் தெரிவிக்க விரும்புகிறேன். சைதை துரைசாமி என்று குறிப்பிடப்படுகிறது. அது நம்முடைய சபையில் உள்ள உறுப்பினராக இருக்கக்கூடும் என்று கருதுகிறேன்.

House site—62, I Main Road, C.I.T. Nagar, Nandanam.

ரென்டல் பேசிசில் அந்த வீட்டை ஹவுசிங் போர்டு கொடுத்திருக்கிறது. அங்குள்ள ரெக்கார்டுகளில் ரென்டல் பேசிஸ் என்றுதான் இருக்கிறது. ஆனால் அது ஹையர் பர்சேஸாக மாற்றப்படு





கிறது. அரசாங்கம் இந்த கன்வர்ஷனுக்கு அங்கீகாரம் வழங்குகிறது. நான் கேட்க விரும்புகிறேன். இன்றைக்குச் சென்னை மாநகரத்தில் ரென்டல் பேசிசில் உள்ள வீடுகளில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்களே, அவர்களுடைய வீடுகளையெல்லாம் ஹையர் பர்சேஸ் சிஸ்டத்தில் மாற்றித் தருவீர்களா? இன்னும் சொல்லப்போனால், அந்த வீடு முக்கியமான இடத்தில் இருக்கிறது. இன்றைக்கு அந்த இடத்தில் அம்மாதிரி செய்திருப்பது ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினருக்காக என்று சொன்னால் அப்படி ஒதுக்கீடு செய்வதில் என்ன நியாயம் என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல, இன்றைக்கு ஹவுசிங் போர்டில் உள்ள அதிகாரிகள் செய்யக்கூடிய தவறுகளைக் களைய வேண்டும், நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்காக துணைத் தலைவரவர்களே, நான் இதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். 1982 ஆம் ஆண்டிலிருந்து 1983 ஆம் ஆண்டு வரைக்கும் பார்த்தால், பிப்ரவரியில் 16 தொழிலாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள். இதில் என்ன வேடிக்கை என்றால், எக்சிகியூட்டிவ் என்ஜினியர்—அட்மினிஸ்ட்ரேட்டிவ் ஆபீசர் தற்காலிக ஊழியர்கள்—என்.எம்.ஆர். அடிப்படையில் 16 பேர்களை வேலூர் யூனிட் ஹவுசிங் போர்டில் நியமிக்கிறார்கள். இதில் உள்ள வேடிக்கை என்னவென்றால், ஜி.ஓ. 1157, 19—7—1979-லே போடப்பட்ட ஜீ.ஓ. இருக்கிறது. எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்சைக் கலந்துகொண்டுதான் வேலை கொடுக்க வேண்டுமென்று போடப்பட்டிருக்கிறது. ஆனால் எக்சிகியூட்டிவ் என்ஜினியரே—அட்மினிஸ்ட்ரேட்டிவ் ஆபீசரே, அவருடைய ஹவுசிங் போர்டு ஆபீசுக்கு முன்னால் எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்ச் ஆபீஸ் இருக்கிறதே, அதையும் கன்சல்ட் செய்யாமல், அங்கீகாரம் பெறாமல் 16 பேர்கள் அதிகாரிகளால் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இது மிகப் பெரிய ஊழல் அல்லவா என்று கேட்க விரும்புகிறேன். அந்த அதிகாரியின்மீது இதுவரையில் நடவடிக்கை எடுக்காததற்கு என்ன காரணம் என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 10.50)

இன்னொரு வேடிக்கை என்னவென்றால் அதிகாரிகள் எந்த அளவுக்குத் தவறுகள் செய்கிறார்கள் என்பதற்கு ஒரு உதாரணம். அது அந்த ரிப்போர்ட்டிலேயே சொல்லப்பட்டிருக்கின்றது. கார்

நம்பர் டி.எம்.இல்.ஸட் 6699. அங்கே இருக்கக்கூடிய சீஃப் இன்ஜினியர் ஒரு ஸ்டேட்மெண்ட் கொடுக்கிறார் இந்தக் கார் ரொம்பப் பழமையான கார், இது ரிப்பேர் செய்யப்பட வேண்டிய கார் என்று சொல்லி. ஆனால் அதே நேரத்திலே அங்கே இருக்கக் கூடிய அதிகாரி, அந்தக் காரைப் பயன்படுத்துகின்றவர்கள் எப்படிச் செய்திருக்கிறார்கள் என்று கேட்டால் இம்போர்ட் என்ற வகையில் வெளிநாடுகளிலிருந்து அந்தக் காருக்கு எக்ஸ்ட்ரா ஃபிட்டிங்ஸ் கொண்டு வந்திருக்கிறார்கள். டேப் ரிக்கார்டர் கொண்டு வந்திருக்கிறார்கள்; ஸ்பீக்கர் அதற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். லக்ஸுரியஸ் எக்ஸ்ட்ரா ஃபிட்டிங்ஸ் என்று அதிலே போடப்பட்டிருக்கின்றது. ரிப்பேர் செய்யப்பட வேண்டிய பழைய காருக்கு வெளிநாட்டிலே இருந்து 38,151 ரூபாய் அளவுக்கு எக்ஸ்ட்ரா ஃபிட்டிங்ஸ் வரவழைக்கிறார்கள் என்று சொன்னால் நான் கேட்கிறேன், அது ஹவுசிங் போர்டா அல்லது கள்வர் குகையா? அது ஹவுசிங் போர்டா அல்லது ஊழலின் உறைவிடமா? இப்படி ஒதுக்கீடு செய்வதில் ஏதாவது அர்த்தம் இருக்கின்றதா? முறையாக பயன்படுத்தப்படுகின்றதா என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போலவே அந்த ஹவுசிங் போர்டிலே இருக்கக்கூடிய மொத்த எக்விப்மென்ட்ஸ் அதாவது அங்கே இருக்கக்கூடிய சரக்குகள் எவ்வளவு இருக்கின்றன என்பதைத் தெரிந்துகொள்ள ஃபிஸிக்கல் வெரிஃபிக்கேஷன் என்ற வகையிலே நேரடியாகச் சென்று சோதனையிடுகிறார்கள். அப்படி ஸ்டோரிலே இருக்கக் கூடிய உபகரணங்கள், மெட்டீரியல்ஸ் ஆகியவை எல்லாம் எப்படி இருக்கின்றன என்று பார்த்தால் பல இலட்சம் ரூபாய் மதிப்புள்ள மெட்டீரியல்ஸ் அங்கே இல்லை. ஏறத்தாழ நான்கே முக்கால் இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் ஒரே யூனிட்டில், ஒரே டிவிஷனில் இல்லை. இப்படி ஒரே டிவிஷனில் மட்டும் நான்கே முக்கால் இலட்சம் ரூபாய் பெறுமானம் உள்ள மெட்டீரியல்ஸ் இல்லை, ஷார்டேஜாக இருக்கின்றது என்று சொல்லப் படுகின்றது என்று சொன்னால் எவ்வளவு பெரிய தவறு நடைபெற்றிருக்கிறது என்பதை எண்ணிப்பார்க்கவேண்டும் என்று இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

டெலிஃபோன் பில்லைப் பற்றியெல்லாம் கூட எங்கள் மீது குற்றச்சாட்டாகச் சொல்லி கிரிமினல் வழக்கு கூட போடப் பட்டது. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்





கழகத்தைச் சார்ந்த சகோதரி மிகப்பெரிய ஊழலாகக் குற்றச் சாட்டாகச் சொன்னார்கள். ஹவுசிங் போர்ட் சேர்மேன் அவர்கள் எக்ஸஸாகப் பேசியதற்காக டெலிஃபோன் எக்சேஞ்சுக்கு பணம் கொடுக்கவேண்டும். ஃபோன் நம்பர் 43211. அது வசூலிக்கப்பட்டிருக்கின்றதா என்றால் இல்லை. அதுபோலவே இன்னொருவர். அவர் ஃபார்மர் சீஃப் இன்ஜினியர். ஹவுசிங் போர்டிலே இருந்தவர். அவருடைய ஃபோன் நம்பர் 426586. அவர் எவ்வளவு பணம் கொடுக்கவேண்டும்? 1065 ரூபாய். குறைந்த பணம்தான். மூன்று வருடங்கள் ஆகின்றது. வசூலிப்பதற்கு ஏதாவது ஏற்பாடு நடைபெற்றிருக்கிறதா? ஆகவே பட்டியல் போட்டுக்கொண்டே போகலாம், அந்த அளவுக்கு ஊழல் பெருகி இருக்கின்றது என்று சொல்லி என் உரையை முடிக்கிறேன்.

***டாக்டர் கே. சமரசம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற நிதி ஒதுக்க சட்ட முன் வடிவு குறித்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நான் சில கருத்துக்களை இங்கே சொல்ல முன்வருகிறேன். அவசரம், அவசியம், தேவை குறித்து அவ்வப் போது ஆண்டுகொண்டிருக்கிறபோது ஏற்படுகின்ற சிக்கல்களை முன் வைத்து மக்களின் தேவைகளைக் கருத்தில் கொண்டு என்னென்ன திட்டங்களை நாம் தீட்டுகிறோமோ அந்தத் திட்டங் களுக்கு முறையாக மக்களின் விருப்பத்திற்கேற்ப ஒதுக்கீடு களை உருவாக்குவது ஆளுகின்ற ஆட்சியிலே இயல்பாக இருந்து கொண்டிருக்கின்ற ஒரு நடவடிக்கை. ஆனால் இப்படி எத்தனையோ திட்டங்களில், இதுவரையில் ஏற்கெனவே ஆண்டு கொண்டிருந்தவர்கள் கூட இப்படி ஒதுக்கீடுகளைக் கொண்டு வந்து அதுபற்றிய விவரம் என்ற நிலையிலே கூட வைக்காமல் அப்படியே வைத்தால் அதை விவாதித்திற்குக் கொண்டுவராமல் எவ்வளவோ பணத்தை. . . .

**திரு. அ. ரகுமான்கான்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஒரு அலிகேஷன் சொல் கிறார்.

[1985 மார்ச் 27

**டாக்டர் கே. சமரசம்**: அலிகேஷன் அல்ல. சாதாரண நடைமுறையைச் சொல்கிறேன். . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: பதில் சொல்ல வேண்டும் என்றால் அவர் பேசி முடித்ததற்குப் பிறகு சொல்ல லாம். இடையிடையே பேசிக்கொண்டிருந்தால் காலம் அதிகம் ஆகிவிடும்.

**டாக்டர் கே. சமரசம்**: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒதுக்கீடு பற்றி சட்டமன்றத்திலே கொண்டு வந்து வைத்து அனுமதி பெறுவது வாடிக்கையாக ஜனநாயகத்தில் நடைபெற்றுக்கொண்டு வரக்கூடிய ஒரு நிகழ்ச்சியாகும். ஆனால் இப்படிப்பட்ட ஒரு பிரிவு வருகின்றபோது ஒதுக்கீடு என்ற பெயரிலேயே ஒதுக்கிக்கொண்டு போய்விடக்கூடாது என்று இங்கே ஒருவர் குறிப்பிட்டார். நான் ஒன்றைச் சொல்ல வேண்டும். அவரவர்கள் குணம் அவரவர்களுக்கு. 'தான் திருடி, அடுத்தவரை நம்ப மாட்டான்' இதுதான் தமிழகம் எப்போதா சிலருக்காகவே சொல்லி வைத்த பழமொழியாக இருக் கின்றது என்பதை மட்டும் நான் சுருக்கமாகச் சொல்ல விரும்பு கிறேன்.

அடுத்து இன்னும் ஒரு கருத்தைச் சொன்னார். சத்துணவுத் திட்டத்தைப் பொறுத்தது. சத்துணவுத் திட்டம் ஏதோ இந்த அரசாங்கமே கொண்டு வந்ததைப் போல, இங்கே இருக்கிற தமிழக முதலமைச்சர் அவர்களே கொண்டு வந்ததைப் போல பேசுகிறார்கள், அது அல்ல, அது காமராஜர் போட்ட திட்டம் என்றெல்லாம் சொன்னார்கள். காமராஜர் ஒரு திட்டத்தைப் போட்டார் என்பது உண்மை. ஆனால் அது சத்துணவுத் திட்டமா என்றால் இல்லை. காமராஜர். * *
ஒரு தொகையை, ஒரு பொருளை, இங்கே எப்படி, எப்படிப் பகிர்ந்து கொண்டு அந்தந்த வகையிலே, தேவையான அளவிற்கு (குறுக்கீடுகள்)

---

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.



1985 மார்ச் 27]

**திரு. அ. ரகுமான்கான்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெரியவர் காமராஜர் அவர்கள் கொண்டு வந்த அந்த மதிய உணவுத் திட்டத்தை அண்ணா அவர்கள் எதிர்க்கவில்லை, அதற்குப் பிறகு டாக்டர் கலைஞர் அவர்களும் எதிர்க்கவில்லை, நம்முடைய முதல்வர் அவர்களும் கூட எதிர்க்க மாட்டார்கள் என்று நான் நம்புகிறேன். ஆனால் நம்முடைய மதிப்பிற்குரிய சமரசம் அவர்கள் * *

**டாக்டர் கே. சமரசம்**: நான் என்ன சொல்கிறேன் என்பதைக் கேளுங்கள், பல்வேறு வகையிலே கிடைத்த உதவியோடு, தமிழக அரசின் முதலமைச்சராக இருந்த காமராஜர் அவர்கள் (குறுக் கீடுகள்)

**திரு. அ. ரகுமான்கான்**: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெரியவர் காமராஜர் அவர்கள் மதிய உணவுத் திட்டத்திற்கு அரசாங்கம், பஞ்சாயத்து யூனியன் என்று பல்வேறு பிரிவினரிடமிருந்து உதவி பெற்றிருக்கலாம். இப்பொழுது சத்துணவுத் திட்டத்திற்குக் கூட நீங்கள் உதவி பல இடங்களில் பெறுகிறீர்கள். அவர் கேர் மூலமாக வாங்கியிருக்கலாம், பொருள்களைப் பெற்றிருக்கலாம். ஆனால், முறைப்படி அரசாங்கத்தின் சார்பாக 11 காசு கொடுக்கப்பட்டது, நீங்கள் 45 காசு கொடுக்கிறீர்கள்.

**டாக்டர் கே. சமரசம்**: சொல்வதை முழுமையாக வாங்கிக் கொள்ளவேண்டும். அந்த அளவிற்குப் பொறுமை தேவை. நீங்கள் பேசுகின்றபொழுது பல கருத்துக்களை நாங்கள் அனு மதித்துக்கொண்டிருந்தோம். அதை நீங்கள் உணர்வீர்கள். காமராஜர் அருமையான திட்டத்தைக் கொண்டு வந்தார்; அதை யாரும் மறுக்கவில்லை. இலவச உணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார். அந்த அரசாங்கம் இருந்தபொழுது சென்னையிலேயே ஆயிரம் விளக்குத் தொகுதியிலே முதன் முதலாகச் சத்துணவுப் போடப்பட்டது எல்லாம் எங்களுக்குத் தெரியும், அது வேறு விஷயம். அதற்குள் நான் செல்லவில்லை. காமராஜர் திட்டத்தைக் கொண்டு வந்தார். அவரும் அரசாங் கத்திலே பணம் ஒதுக்கினார். பல்வேறு வகையிலே கிடைத்த பொருளையும் பகிர்ந்து கொடுக்கக்கூடிய நிலையை உருவாக்

---

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.

கினார். அது வேறு விஷயம். நாங்கள் கொண்டு வந்திருக்கக் கூடிய இந்தத் திட்டம் சத்துணவுத் திட்டம் என்று சொல்கின்ற பொழுது. . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, காமராஜர் கொண்டு வந்த திட்டத்தின்மீது எந்தத் தவறான கருத்தும் இந்த அரசு கொள்ளவில்லை என்பதை நான் முதலிலேயே தெரிவித்துக் கொள்கிறேன். காமராஜர் அவர்கள் கொண்டு வந்த திட்டம் மதிய உணவுத் திட்டம். அது ஏழைக் குழந்தைகளுக்காக ஒரு சில பகுதிகளிலே நடத்தப்பட்டது. ஆனால் இன்றைக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற திட்டம் சத்துணவுத் திட்டம். இது அனைத்துக் குழந்தைகளுக்கும் வழங்கப்படுகிற திட்டமாகும். ஆகவே, அந்தத் திட்டத்தைக் குறைத்துப் பேசியதாக யாரும் எடுத்துக்கொள்ள வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**டாக்டர் கே. சமரசம்** காமராஜர் அவர்கள் மீது இருமான்கான் அவர்களுக்கு இருக்கிற பக்தியை விட. எங்களுக்கு அதிக பக்தி இருக்கிறது. ஏழை பங்காளராக இருந்து அந்தத் திட்டத்தினை எப்படி அமுல்படுத்தினார் என்பதை எல்லா இடத்திலும் எல்லா வகையிலும் எடுத்துக் காட்டியவர்கள் நாங்கள். அது வேறு விஷயம். சொல்ல வந்ததைச் சொல்ல விடாமல் தடுக்கக்கூடிய வகையில். . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** காமராஜர் திட்டத்தை நான் எதிர்க்கவில்லை என்று உறுப்பினரே விளக்கமாகச் சொல்லிவிட்டார்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதிலே விவகாரமே தேவையில்லை. பல தடவை இந்த அவையிலேயே தெளிவாகவே விளக்கப்பட்டிருக்கிறது. பள்ளியிலே பயில்கின்ற ஏழை மாணவர்களுக்கு மதிய உணவு தர வேண்டுமென்கிற திட்டத்தை மாண்புமிகு காமராஜர் முதலமைச்சராக இருந்தபொழுது, அரசின் சார்பாகக் கொண்டு வந்தார். ஆகவே, மதிய உணவு தருவது என்கிற ஒரு திட்டம் முதன் முறையாக உலகத்திலேயே அப்பொழுதுதான் என்பது அல்ல. 1924-வது ஆண்டு சென்னை மாநகராட்சி மன்றத்திலேயே மதிய உணவு போடப் பட்டிருக்கிறது. அப்படி அரசின் சார்பாக ஏழைக் குழந்தைகள் பயன் பெற வேண்டுமென்பதற்காக மாண்புமிகு காமராஜர்



அவர்கள் முதல்வராக இருக்கும்போது கொண்டு வரப்பட்டது. கொண்டு வரப்பட்டபொழுது முன்றில் ஒரு பங்கு மாணவர்கள், ஏழைகளாக இருப்பவர்களுக்கு இந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டது. அரசின் சார்பாக 5 காசும், ஊராட்சி ஒன்றியங்களின் சார்பாக 5 காசும் நன்கொடைகளின் மூலமாக 5 காசும் வசூல்செய்துப் போட வேண்டுமென்று இந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டது. ஆனால் அந்தத் திட்டத்திலே யாரும் குறை சொல்லவில்லை. மதிய சத்துணவுத் திட்டத்தை அரசின்

(முற்பகல் 11.00)

சார்பாக கொண்டு வருகிற போதும் கூட அதனை காமராஜர் போட்டதினுடைய தொடர்பாக இது விரிவுபடுத்தப்பட்டது என்ற தன்மையிலே தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நானும் எடுத்துச் சொல்லி இருக்கிறேன். அது தவிர இங்கே அரசு சார்பாக செலவழிப்பது மட்டுமல்லாமல் அமெரிக்க கேர் நிறுவனம் ஆறு கோடி ரூபாய்க்கு சத்துணவு தந்தார்கள். அதையும் மதிய உணவிற்கு பயன்படுத்திக் கொண்டு வந்தோம். 1980-81-ல் சத்துணவுத் திட்டத்தைப் பொறுத்த வரையிலும் அரசு செலவழிக்கிற வகையில் ஏற்கனவே இருந்த திட்டத்தை நீடித்துக் கொண்டிருந்த வகையில் 4½ கோடி ரூபாய் செலவழிக்கிற அவசியம் அரசுக்கு இருந்தது. இப்படி விரிவாக்கப்பட்டதன் காரணமாகவும், 220 நாட்கள் என்பதை 365 என்று ஆக்கிய காரணத்தினாலும், துவக்கப் பள்ளிகள் என்று இருந்ததை உயர்நிலைப் பள்ளிகள் என்று கொண்டு வந்த காரணத்தினாலும், அதைச் சத்துணவாக ஆக்குகிற அளவிற்கு முழுப் பொறுப்பையும் அரசே எடுத்துக் கொண்டிருப்பதன் காரணமாகவும், ஊராட்சி மன்றம் அல்லது நன்கொடைகள் மூலமாக சத்துணவு போடுகிற திட்டத்தை நிறைவேற்றாமல் 180 கோடி ரூபாய்க்கு விரிவாக்கம் செய்யப்பட்டிருக்கிறதே தவிர, உறுப்பினர் அவர்கள் எங்கெங்கோ என்று சொன்ன அந்த ஒரு வார்த்தை தவிர, அதைப் பல்வேறு வகையிலே என்று சொல்லி இருக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** * *

என்ற வார்த்தைகளை மட்டும் அவைக் குறிப்பிலிருந்து நீக்க உத்தரவிடுகிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

**டாக்டர் கே. சமரசம்:** துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் பற்றி நான் சொல்ல வந்தது, காமராஜர் அவர்கள் கதர் சட்டை கொடுத்தார்கள் என்றால், அடுத்து வந்தவர்கள் கைத்தறி சட்டை கொடுத்தார்கள் என்றால், நாம் காக்கி சட்டையாக, பின்னி சட்டையாக, உறுதியானதாக, தேவைக்கு ஏற்றதாக இந்தச் சத்துணவுத் திட்டத்தை கொடுத்திருக்கிறோம் என்று சொலல வந்தேனே தவிர வேறல்ல. என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து ஒன்றைச் சொன்னார்கள். எங்கிருந்தெல்லாமோ வரவு வருகிறது, நட்சத்திர இரவு என்றெல்லாம் சொன்னார்கள். வரவு எவ்விதம் என்பதை விட செலவு இவ்விதம் தான் இருக்க வேண்டுமென்று வகுத்துக் கொண்டிருக்கிறது இந்த அரசு. இந்த அரசைப் பொறுத்தவரையில் எந்தத் திட்டமாக இருந்தாலும் அதனை மனிதாபிமானத்துடன் நாம் செய்யக்கூடிய சேவையின் அடிப்படையில் தான் நம்முடைய ஆட்சி நிலைக்கும், அரசு நிலைக்கும் என்கிற வகையில் மிகச் சரியாக கணக்கு போட்டு செய்து வருகிறது. இலவசச் சீருடை, இலவசப் புத்தகம், கல்வி வளர்ச்சிக்காக முதியோர் கல்வி, முறைசாரா கல்வி என்று இப்படியெல்லாம் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்த காரணத்தினால் தான் இந்திய துணைக் கண்டத்திலேயே மிகப் பெரிய பரிசைத் தமிழகம் பெற்றிருக்கிறது. ஆகவே வரவு எவ்விதம் என்பதை விட செலவு இவ்விதம் தான் இருக்க வேண்டும், இப்படித் தான் செலவு செய்ய வேண்டுமென்று ஒரு வகையை நாங்கள் வகுத்துக் கொண்ட காரணத்தினால் தான் நாங்கள் நிலைத்து நிற்கிறோம், என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து ஒரு பிரச்னையைப் பற்றி பேசினார்கள். மதுவிலக்கு என்ற பிரச்னை. மதுவிலக்கு அமலாக்க வேண்டுமா, வேண்டாமா என்கிற பிரச்னை வந்தபோது அதனைக் கடுமையாக்கக்கூடிய வகையில் சட்டத்தை கொண்டு வந்தோம். அதற்கு ஆதரவு கொடுத்தது யார்? அதற்கு ஒத்துழைப்பு கொடுத்தது யார்? அப்படி ஒரு கடுமையான சட்டத்தைப் போட்டாவது பிரச்னைக்கு முடிவு கட்ட வேண்டுமென்று வந்தபோது எதிர்க் கட்சிகள், ஆதரவு கொடுத்ததா என்று சொன்னால் இல்லை. அவர்கள் சொன்னார்கள். குடிப்பது என்ன குற்றமா? இதற்கு





ஒரு சட்டம் தேவையா? இதற்கு நாடு கடத்தப்பட வேண்டுமா? இப்படிப்பட்ட கடுமையான சட்டத்தைக் கொண்டு வரலாமா என்று எல்லாம் ஆராய்ச்சி செய்தார்களே தவிர, அதற்கு ஆவன செய்தவர்கள் யார்? மதுவிலக்கைப் பற்றி பேசுகிறபோது அதன் நன்மை தீமைகளை அனுசரித்து இப்படித்தான் நிறைவேற்றியாக வேண்டுமென்ற ஆலோசனையைக்கூட சொல்ல எந்தக் கட்சியும் முன்வரவில்லை. நான் இதன் மீது விவாதங்கள் வந்தபோது பல்வேறு நேரங்களில் விவாதம் செய்திருக்கிறேன்.

**திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்:** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பெயர் சமரசமாக இருந்தாலும் அவர்கள் பேசுவதெல்லாம் சண்டைக்கு இழுப்பதாகத்தான் இருக்கிறது. மதுவிலக்குத் திட்டத்தை அமல் நடத்த வேண்டுமென்று சொன்னபோது ஆதரவு கொடுத்தவர்கள் யார் என்று அறைகூவல் விடுவதைப் போலக் கேட்டார்கள். நாங்கள், இருக்கிறோம் என்பதை மரியாதையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் கே. சமரசம்:** துணைத் தலைவர் அவர்களே,

“செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான் அல்லிடத்துக்
காக்கின்என் காவாக்கால் என்”

என்று வள்ளுவப் பெருந்தகை சொல்லி இருக்கிறார்கள். ஆட்சிப் பீடத்திலே இருக்கிறபோது வருகிற சோதனைகளை எண்ணிப் பார்த்து ஆட்சி செய்தவர்கள், ஆட்சி செய்திருக்கக்கூடியவர்கள் ஆலோசனை கூறுவார்களானால் அதை பரிசீலனை கூட செய்ய முடியும். அவர்களுடைய உணர்வை மதிக்கிறோம். ஆனால் நடைமுறையில் இருக்கிற சங்கடங்களை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அதேநேரத்தில் இங்கே சத்துணவுத் திட்டத்தைப் பற்றிச் சொல்லும்போது திராவிட முன்னேற்றக் கழகம் கூட சத்துணவுத் திட்டத்தை ஆதரிக்கிறது என்று சொன்னார்கள். அப்போது துக்ளக்கிலே கூட ஒரு கேள்வி கேட்டார்கள். ‘தலைவாழை இலைப் போட்டு சாப்பாடு போடப்படுமா தி.மு.க. ஆட்சிக்கு வந்தால்’ என்று கேட்டார்கள். அப்போது அதற்கு ஒரு பதில் சொன்னார்கள், ‘அப்படியானால் வாங்கிய தட்டுகள் எல்லாம்

அபேசா’ என்று. சத்துணவுத் திட்டத்தை நாம் நிறைவேற்றுகிறோம் என்கிறபோது அதில் இருக்கிற சங்கடங்களை எண்ணிப் பார்க்க வேண்டும். என்னைப் பொறுத்தவரை, என்னுடைய தொகுதியிலும் சத்துணவுத் திட்ட பொறுப்பாளர்களை நியமிக்கும்போது கூட, காங்கிரசாக இருந்தாலும் சரி, கம்யூனிஸ்டாக இருந்தாலும் சரி, திராவிட முன்னேற்றக் கழகமாக இருந்தாலும் சரி, அவர்கள் எந்தக் கட்சியாக இருந்தாலும் சரி, தகுதிக்கு ஏற்ற முறையில் அனைவருக்கும் வேலைவாய்ப்பு கொடுத்திருக்கிறோம். அங்கே கட்சி மாச்சரியம் இல்லாத ஒரு திட்டமாக இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துகிறோம். நிர்வாகத்தில் இருக்கக்கூடியவர்கள் கூட, எந்த எந்த வகையில் வாய்ப்பு கொடுக்க முடியுமோ அந்த அந்த வகையில் வாய்ப்பு கொடுத்து நிறைவேற்றி வரக்கூடிய வகையில் இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேநேரத்தில் இங்கே ஒரு சில விவகாரங்களைச் சொன்னார்கள். வீடு ஒதுக்கீடு, இட ஒதுக்கீடு என்றெல்லாம் சொன்னார்கள். பல பல சட்ட வரம்புகளை நாம் உள்ளடக்கி இருக்கிறோம். அந்தச் சட்ட வரம்புக்கு உள்ளடக்கித்தான் நிலமாக இருந்தாலும் சரி, வீடாக இருந்தாலும் சரி, வேறு எதுவாக இருந்தாலும் சரி, செய்கிறோம். அந்தச் சட்ட வரம்பை மீறி ஏதாவது ஒரு துறையில் தவறு நடைபெற்றிருந்தால் நிச்சயமாக அரசு நடவடிக்கை எடுக்கத்தான் செய்யும். ஆனால் பிரச்சனை என்னவென்றால், விளம்பரம் அல்லது ஒரு அறிக்கை என்று வரும்போது ஒரு தரப்பு அல்லது ஒருமுனையாக சில அறிக்கைகள் வரலாம். அந்த அறிக்கைகள் எல்லாம் நியாயமானவையா, ஏற்றுக்கொள்ளக்கூடியவையா என்பதை அரசு பரிசீலனை செய்யும். காரணம் விவாதங்கள் எல்லாம் நியாயங்கள் அல்ல. ஆனால் எப்படிப்பட்ட நியாயத்தையும் விவாதத்திற்கு உட்படுத்திவிடலாம். இதுதான் ஒரு ஜனநாயக நாட்டிலே இருக்கிற நிகழ்ச்சியாகும்.

அடுத்து, வேலைவாய்ப்பு பற்றி எல்லாம் சொன்னார்கள். மஸ்டர் ரோல் ஊழல் புகழ்பெற்ற ஒரு ஊழல். இப்படி எல்லாம் ஒரு நிர்வாகத்தை நடத்தி, முடிந்து போனவர்கள். அது மட்டுமல்ல. தன் மகனே இல்லை என்று அறிக்கை விடக்கூடிய அளவுக்கு நிலைமை உருவானது ஒரு பிரச்சனையில். யாரோ ஒருவர் எழுதிய கையெழுத்தை அமைச்சர் கையெழுத்து என்று





வாதாடி, அது இல்லை என்ற நிலைமை எல்லாம் வந்தது. அங்கே அதிகாரிகள் இல்லாமல், நிர்வாகம் இல்லாமல், பொறுப்பிலே இருந்து ஆண்டவர்களே இப்படிப்பட்ட பல்வேறு பிரச்சனைகளில் ஈடுபட்டு தன்னை காயப்படுத்திக் கொண்டவர்கள் “ஈயத்தைப் பார்த்து இளித்ததாம் பித்தளை” என்று சொல்லக்கூடிய வகையிலே கருத்துக்களை எடுத்துச் சொல்வது மிக மிக தர்மசங்கடமானது என்பதை மட்டும் நான் இந்த சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

மக்களுக்கு அவசரமாக, அவசியமாகத் தேவை என்று கருதக்கூடிய மக்கள் நலத் திட்டங்களுக்கு இந்த பண ஒதுக்கீடு செய்வதை வரவேற்க வேண்டுமே தவிர எதைப் பார்த்தாலும் குற்றம் சொல்வது என்று சொன்னால் “கற்பூரப் பாத்தி கட்டி, அத்தர் புனுகு ஜவ்வாது உரமிட்டு, பன்னீரைத் தண்ணீராய்ப் பாய்ச்சினாலும் வேம்பு வெம்பாகவே விளங்கும், கசக்கும்” என்பதைப் போல எப்படிப்பட்ட நல்லத் திட்டங்களைச் சொன்னாலும் குறை சொல்வதை தன்னுடைய கடமையாகக் கொண்டவர்களைப் பற்றி கவலைப்படாமல், நல்ல திட்டங்களை நிறைவேற்றக் கொண்டு வந்திருக்கிற சட்ட முன்வடிவு, நல்ல திட்டங்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான பண ஒதுக்கீடு செய்வதற்கான சட்ட முன்வடிவு என்பதால் இதை ஆதரித்து, அமர்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 20/1985) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கிறது. இது நிதி ஒதுக்க மசோதாதான். இதுபற்றி தெளிவாகக் கூறுவதென்றால்,

‘A Bill to provide for the appropriation of certain further moneys out of the Consolidated Fund of the State for the service of the financial year, which commenced on the 1st April 1984’.

என்று சென்ற ஆட்சியிலே ‘கன்சாலிடேட் ஃபண்டிலிருந்து செலவழிக்கப் பட்டதற்காக இந்த அவையிலே துணை மானியக்

கோரிக்கை வைக்கப்பட்டது. அந்தத் தொகை சம்பந்தப்பட்ட கோரிக்கையை இந்த அவை அன்றே நிறைவேற்றித் தந்து விட்டது. இப்போது நிதி ஒதுக்கீடு தான். பொதுவாக இதிலே அதிகமாகப் பேசுவதில்லை. ஏனென்றால் அன்றே கோரிக்கைகள் முழு மதிப்பும் ஆதரவும் பெற்றுவிட்டன; மாண்புமிகு உறுப்பினர்கள் ஆதரவு தந்துவிட்டார்கள்.

இந்தச் சட்ட முன்வடிவின்மீது கருத்துத் தெரிவித்த திரு. ரகுமான்கான் அவர்கள் நாளை முதல் நடக்க வேண்டிய விவாதத்தை இன்றே தொடங்கி விட்டார்கள் என்று நான் கருதுகிறேன். புதிய வரவு-செலவுத் திட்டத்தை நேற்றுதான் அளித்திருக்கிறோம். அதுபற்றிய விவாதம் தனியாக வர இருக்கிறது. அதற்குப் பின்னாலே தனித்தனியாக மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வரவிருக்கின்றன. அதிலே வருகிற பல்வேறு கொள்கைகள், திட்டங்கள் பற்றி இன்றைக்கு இங்கே பேசினார்கள். அதிலிருந்து பொது விவாதத்தில் நண்பர் திரு. ரகுமான்கான் பேசமாட்டாரோ என்ற எண்ணம் ஏற்படுகிறது. இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு கருத்துக்கள் சொல்வதும், சொல்லாததும் அவருடைய விருப்பத்தைப் பொறுத்தது. ஏனென்றால் தன்னுடைய கருத்தை எடுத்துச் சொல்ல அவருக்கு உரிமை உண்டு. எங்களுக்கும் அவருடைய கருத்து என்ன, என்ன எண்ணம் கொண்டிருக்கிறார் என்பதைப் புரிந்துகொள்ள நல்ல வாய்ப்பு ஏற்படும்

(முற்பகல் 11.10)

அவர்கள், வல்லுநர் குழு எடுத்துச்சொல்கிற கருத்தையும் நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை என்று சொல்வது, அதை ஏற்றுக் கொள்வதும், ஏற்றுக் கொள்ளாததும் அவரவர்களுடைய உரிமை. மக்கள் ஏற்றுக்கொள்கிறார்களா, மற்றவர்கள் ஏற்றுக் கொள்கிறார்களா, இல்லையா என்பதுதான் நம்முடைய பிரச்னை. அப்படி பல்வேறு பிரச்சனைகளைப்பற்றி நாம் இங்கே ஒதுக்கீடு செய்கிறோம் என்றால், அதற்கான காரண காரிய விளக்கங்கள் எல்லாம் இங்கே சொல்லப்பட்டு இருக்கின்றன. சட்டமன்றத்தை மீறி செய்யப்படுகிற நடவடிக்கைகள் சிலபலவற்றைப் பற்றி யெல்லாம் எடுத்துச்சொன்னார்கள். அவைபற்றி எல்லாம் ஆராய்ந்து அறிந்து, அவைகள் நியாயமாக செய்யப்பட்டனவா, உண்மையாக செலவழிக்கப்பட்டனவா, அதிலே கேடுபாடுகள்





உண்டா, குறைகள் உண்டா, குற்றங்கள் மலிந்து இருக்கின்றனவா என்பதைப பற்றி அறிவதற்காகத்தான் பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியிலே எல்லாக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும் அடங்கிய வகையில், அந்தந்தத் துறைக்கு உண்டான அதிகாரிகளை வைத்துக்கொண்டு, வினாக்களுக்கு மேல் வினாக்களாகக் கேட்டு, அவர்களுடைய பதில்களைப பெற்று, அறிக்கையாகத் தருகிறார்கள்; அந்த அறிக்கை இந்த அவைமுன் வைக்கப் படுகிறது. அதிலே ஏதாவது சந்தேகம் வருமானால், அதற்குப் பிறகு கூட விவாதம் செய்வதற்கு அவையிலே வாய்ப்புகள் உண்டு. ஏன் நான் இதையெல்லாம் சொல்லுகிறேன் என்றால், பொதுவாக நிதி ஒதுக்கீடு மசோதாவில் அதிகம் பேசவேண்டாம் என்று தான் அலுவல் ஆய்வுக் குழுவிலே நாம் முடிவு எடுத்து இருந்தாலும் கூட பேசவேண்டும் என்று ஒரு உறுப்பினர் கேட்டுவிடுவாரேயானால் அந்த உரிமையை மறுப்பதற்கு இல்லை. அந்த வகையிலேதான் இங்கே எடுத்துச் சொல்லப் பட்டது. என்றாலும், நாளை முதல் 6 நாட்கள் இங்கே பொது விவாதம் விரிவாகவும் விளக்கமாகவும் நடைபெற இருக்கிறது, அதற்குப் பிறகு பல்வேறு பிரச்சனைகளைப்பற்றி பதில் சொல்ல வேண்டிய கடப்பாடு எனக்கும் இருக்கிறது. அதற்குப் பிறகு, தனியாக ஒவ்வொரு மானியக் கோரிக்கையிலேயும் மாண்புமிகு உறுப்பினர்கள் விளக்கமாகவும், விரிவாகவும் கருத்துக்களை எடுத்துச் சொல்லவும், அதுபற்றி விளக்கம் அளிக்கக்கூடிய முழுத் தகுதியும், திறமையும் வாய்ந்த முழுத் தன்மைகளை அறிந்து இருக்கிற அமைச்சர்கள் அதற்கு விளக்கமாகவும் தெளிவாகவும் பதில் சொல்லுகின்ற சூழ்நிலைகள் இருக்கின்ற காரணத்தாலும், அடுத்து வருகிற கூட்டங்களில் அதற்கான பல்வேறு விளக்கங்கள் வரக் கூடும். மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி பல்வேறு பிரச்சனைகளை அடுக்காகப் பேசினாலு கூட, அந்த அடுக்கடுக்காக சொன்னவற்றுக்கு, நான் அவசர அவசரமாக இப்போது பதில் சொல்வதற்கு இயலாது. ஆனால் அவற்றை எல்லாம் கூட குறித்துக் கொண்டு, அந்தந்தத் துறையைச் சேர்ந்த மாண்புமிகு அமைச்சர்கள், அதற்காக உள்ள நிலைமைகளை எடுத்துத் தெரிவிப்பதன் மூலம் இந்த நாட்டுக்குத் தெளிவுபடுத்தவும், இந்த அவைக்குத் தெளிவுபடுத்துவதற்குமான வாய்ப்புகள் ஏற்படு

கின்றன. ஆகவே அந்தந்தத் துறையைச் சேர்ந்த அமைச்சர்கள் அதுபற்றி விரிவாக எடுத்துச் சொல்வார்கள் என்று கூறி, இந்த நிதி ஒதுக்க மசோதாவை நிறைவேற்றித் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி:

"தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 20/1985) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 மற்றும் அட்டவணை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** துணைத் தலைவா அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன்:

"தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/1985) நிறைவேற்றப்பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

### (இ) கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவு 1985

* **மாண்புமிகு திரு. நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 17/1985) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

@ 1985 ம் ஆண்டு மார்ச் 21 ம் தேதி தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டத்தின் தமிழ்நாடு சட்டம் 10/1939 16-ஏ பிரிவின் 1 ஆம் உட்பிரிவின்படி, மேற்சொன்ன சட்டத்தின் 1 ஆம் மற்றும் 2 ஆம் அட்டவணைகளைத் திருத்தி, தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள அறிக்கைகள் பின்வருமாறு:

(1) சேலம் மாவட்டத்தில் மோகனூர், போத்தனூர், அயோத்தியாபட்டினம், மேச்சேரி, டி. என். பட்டி, படவேடு மற்றும் மல்லசமுத்திரம் ஆகிய பேரூராட்சிகள் 2—7—1984 முதல் தேர்வு நிலை நகராட்சிப் பஞ்சாயத்துக்களாக உயர்த்தி ஒரு அறிவிக்கை வெளியிடப்பட்டது.

(2) திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள, தூத்துக்குடி, தேர்வு நிலை நகராட்சி நிலையிலிருந்து, சிறப்பு நிலை நகராட்சி யாகவும், தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள மயிலாடுதுறை முதல் நிலை நகராட்சி நிலையிலிருந்து தேர்வு நிலை நகராட்சி யாகவும், வட ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள அரக்கோணம், செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள செங்கற்பட்டு, தர்மபுரி மாவட்டத்தில் உள்ள கிருஷ்ணகிரி, இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள இராமநாதபுரம், மற்றும் ஸ்ரீவில்லிபுத்தூர், சேலம் மாவட்டத்தில் உள்ள திருச்செங்கோடு, தஞ்சை மாவட்டத்தில் உள்ள பட்டுக்கோட்டை ஆகிய இரண்டாம் நிலை நகராட்சிகள் முதல் நிலை நகராட்சிகளாகவும், மற்றும் மதுரை மாவட்டத்தில் சின்னமனூர், மற்றும் திருமங்கலம், இராமநாத புரம் மாவட்டத்தில் உள்ள சிவகங்கை, சேலம் மாவட்டத்தில் உள்ள குமாரபாளையம், மற்றும் ராசிபுரம் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள கடையநல்லூர் ஆகிய மூன்றாம் நிலை நகராட்சிகள் இரண்டாம் நிலை நகராட்சிகளாக 3—9—1984 முதல் ஒரு அறிவிக்கை மூலம் உயர்த்தப்பட்டன.

(3) வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள ஆலங்காயம், திமிரி, பள்ளிகொண்டா, கழிஞ்சியூர், சேணப்பாக்கம் மற்றும், களம்பூர்; தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள கிட்டக்குடி மற்றும் வளவனூர், கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள சரவணம்பட்டி, 49-கவுண்டன்பாளையம், கூடலூர், கள்ளப்பட்டி, 15-வேலன் பாளையம், கருமத்தான்பட்டி, மடத்துக்குளம், ஆனைமலை, வடவள்ளி மற்றும் வெள்ளலூர், தர்மபுரி மாவட்டத்தில் உள்ள தென்கனிக் கோட்டை, பாலக்காடு, ஊத்தங்கரை, கன்னியாகுமரி

மாவட்டத்தில் உள்ள குணசேகரம் மற்றும் சுசீந்திரம்; மதுரை மாவட்டத்தில் உள்ள வேடசந்தூர், நீலகிரி மாவட்டத்தில் உள்ள சேரன்கோடு, பெரியார் மாவட்டத்தில் உள்ள பெரிய சேமூர் குளத்தூர் பாளையம் மற்றும் சிவகிரி, இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள கமுதி, திருப்புவனம் மற்றும் சேலம் மாவட்டத்தில் உள்ள நாமகிரிப்பேட்டை, ஜாதிகொண்டலம் பட்டி, வளப்பாடி, பரமத்தி மற்றும் கொளத்தூர் ஆகிய பேரூராட்சிகள் தேர்வு பெற்ற ஊராட்சிகளாக 29—9—1984 அன்று ஒரு அறிவிக்கை மூலம் உயர்த்தப்பட்டன.

மேற்கூறிய மூன்று அறிவிக்கைகள் அளிக்கப்பட்ட நாளி லிருந்து, அவ்வறிக்கைகளில் சம்பந்தப்பட்ட ஊர்களில், உயர்த்தப் பட்ட விகிதத்தில் கேளிக்கை வரி வசூலிக்கப்படும். மேற்சொன்ன சட்டத்தின் 16-எ பிரிவில் இரண்டாம் உட்பிரிவின்படி, சட்ட மன்றத்தின் நடப்பு அமர்வில் மேற்சொன்ன அறிவிக்கைகளுக்குப் பதிலாக அமையும் வகையில் ஒரு சட்டமுன்வடிவு அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. இச்சட்டமுன்வடிவை பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளும்படி கோருகிறேன்.

**திரு. அ. ரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே கொண்டு வந்திருக்கிற இந்தச் சட்டத் திருத்தம் பற்றி கருத்து வேறுபாடு இல்லை. வரவேற் கிறோம். இந்தச் சட்டத் திருத்தத்தைப் பயன்படுத்திக் கொண்டு திரைப்படத் துறை சம்பந்தமான கருத்துக்களைக் கூடச் சொல்லலாம் என்றாலும், அதை இப்பொழுது நான் பயன்படுத்த விரும்பவில்லை. அதே நேரத்தில் இன்றையதினம் வேறு ஒன்றை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

இங்கே இருக்கக்கூடிய அத்தனை சட்டமன்ற உறுப்பினர்களும் வழக்கறிஞர்கள் அல்ல. நம்முடைய அமைச்சர் அவர்களும் வழக்கறிஞர் அல்ல. இந்தத் திருத்தம் எதற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்றால் மூலச் சட்டத்திலே இருக்கக்கூடிய செக்ஷன் 16-எ பிரிவிற்குச் சற்று விளக்கமாகக் கொண்டு வரப் பட்டிருக்கிறது. இந்த அவையிலே இருக்கிற உறுப்பினர்களை நான் நன்கு அறிவேன். எல்லோரும் விவரம் தெரிந்தவர்கள் தான். ஆனால் சட்டத்தைப் பொறுத்த மட்டில், சில தெரிந்து இருக்கலாம். சில தெரியாமல் இருக்கலாம். ஆகவே 16-எ என்றால் என்ன என்பதை உறுப்பினர்களுக்கு விளக்கிச் சொன்னால்தான் இங்கே விவாதிப்பதற்கு வசதியாக இருக்கும். புதியதாக



வந்திருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களெல்லாம் இருக்கிறார்கள். அவர்களுக்கு அது மிக வசதியாக இருக்கும். ஆகவே, இப்பொழுது நான் அமைச்சரையே திருப்பிக் கேட்கிறேன், 16 ஏ. பற்றி அமைச்சர் விளக்கினால் எங்களைப் போன்றவர்கள் புரிந்து கொள்ள முடியும். நானும் மற்றவர்களும் புரிந்து கொள்ள முடியும். நான் அமைச்சரையே கேட்கிறேன், 16-ஏ என்ன என்று அவர் சொன்னால்தான் விவாதத்தையே துவக்க முடியும் அல்லது எங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற புத்தகத்திலே அந்த மூலச் சட்டத்தினுடைய பிரிவு என்ன என்று அச்சிட்டுக் கொடுத்திருந்தால் கூட இதைக் கேட்க வேண்டிய அவசியம் இல்லை.

அப்படிக் கொடுக்காத காரணத்தினாலேயும், சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேரும் வழக்கறிஞர்களாக இல்லாத காரணத்தினாலேயும், அமைச்சர் அவர்கள் 16-ஏ விற்கு ஏன், எதற்காக திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதைக் கொண்டு வரப்பட்டதை அப்படியே வாசிக்காமல், சொல்வார் களேயானால், மற்ற உறுப்பினர்களுக்கும் விவாதத்திலே கலந்து கொள்வதற்கு உதவியாக இருக்கும். இல்லை என்று சொன்னால், இந்தச் சட்ட முன்வடிவை அவசரப்படாமல் இன்னொரு நாளைக்குக் கொண்டு வந்து ஆய்வு செய்யலாம்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஒரு சட்டமுன்வடிவு கொண்டு வருகிற போது, அந்தச் சட்டத்தைப் பற்றி ஒவ்வொரு சிட்டிஸனும் தெரிந்திருக்க வேண்டும். ஒரு சிட்டிசனுக்கு சட்டம் தெரியாது என்பதனாலே, நாம் சட்டத்தைக் கொண்டு வரக்கூடாது என்பதல்ல. ஆகவே மாண்புமிகு உறுப்பினர்கள் அதைப் படித்துக் கொண்டு வந்துதான் பேசவேண்டுமே தவிர, அமைச்சர் அவர்கள் விளக்கம் அளித்ததற்குப் பிறகுதான் பேசவேண்டும் என்ற விதியில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சட்டம் கொண்டு வரப்படுவதன் காரண-நோக்க விளக்கத்தை அமைச்சர் அவர்கள் விளக்கி விட்டார்கள். மூலச்சட்டத்திலே இருக்கிற செக்ஷன் களைப் பற்றி உறுப்பினர்கள் தான் பார்த்து தெரிந்து கொள்ள கொள்ள வேண்டும்.

**திரு. அ. ரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே நம்முடைய அமைச்சர் வழக்கறிஞர் திரு. கே. ஏ. கே. போன்றவர்கள் இருக்கிறார்கள். நீங்கள் இருக்கிறீர்கள். அமைச்சர் திரு. திருநாவுக்கரசு போன்றவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் தெரியும். Ignorance of law is no excuse என்ற வகையில் எல்லா குடிமகனும் சட்டம் தெரிந்திருக்க வேண்டும் என்பது ஒரு விதி. அது வேறு விவகாரம். ஆனால் நடைமுறையில் அப்படி இல்லை என்று நமக்குத் தெரியும்.

நான் கேட்கவிரும்புவது, ஒரு முக்கியமானப் பிரச்சினை குறித்து சட்டம் கொண்டு வரப்படுகிறபோது, சபையிலே இருக்கிற உறுப்பினர்களுக்குத் தெரியவேண்டும் என்பதற்காக, எக்ஸிஸ்டிங் லா என்றே கூட அந்தப் பிரிவிலேயே போட்டு விடுவார்கள். அப்படி எக்ஸிஸ்டிங் செக்ஷன் இன்னின்னது, அதற்கு இன்னின்ன மாதிரி அமெண்ட்மெண்ட் கொண்டு வருகிறோம் என்று, அமைச்சர் அவர்கள் அதை விளக்கிச் சொன்னால்தான் கொஞ்சம் தெளிவாக இருக்கும் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

(முற்பகல் 11.20)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சட்டமுன்வடிவு வந்த நோக்கத்தைப் பற்றி அமைச்சர் அவர்கள் விளக்கினார்கள். நீங்கள் மூலச் சட்டத்தினுடைய 16வது செக்ஷனைப்பற்றி சொல்ல வேண்டும் என்று சொல்கிறீர்கள். உங்களுக்கு முதலிலேயே பில் காப்பி கொடுத்து விடுகிறார்கள். மூலச் சட்டத்தை பார்க்க வேண்டியது ஒரு உறுப்பினருடைய கடமை. பேரண்டல் ஆக்ட்டில் கொண்டுவரப்படுகின்ற ஒவ்வொரு அமெண்ட்மெண்டிற்கும், அந்த ஆக்ட்டைப்பற்றி விமரிசித்துப் பேச முடியாது.

**திரு. அ. ரகுமான்கான்:** துணைத் தலைவர் அவர்களே, பேரண்டல் ஆக்ட் அத்தனையும் உறுப்பினர்களுக்குத் தரமுடியாது. ஆகவே அது அரசாங்கத்தின் கடமையாக இருக்க முடியாது. அதை நான் ஒத்துக் கொள்கிறேன். எந்த 16-ஏ விற்கு நீங்கள் திருத்தம் கொண்டு வருகிறீர்களோ அந்த 16-ஏ என்பது என்ன என்பதைச் சட்டத்தைப் படிக்க முடியாதவர்களுக்குப்





பொதுவாக இதில் கலந்து கொண்டு பேசுகின்றவர்களுக்கு உதவி செய்கின்ற விதத்தில் அந்த செக்ஷனை மட்டும் கோட் பண்ணலாம் அல்லது அமைச்சர் அவர்கள் விளக்கலாம்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** துணைத் தலைவர் அவர்களே, ஒரு சட்ட முன்வடிவு கொண்டு வருகின்றபோது, அந்தச் சட்டமுன்வடிவின் நோக்கத்தைப்பற்றி மட்டும்தான் அமைச்சர் அவர்கள் விளக்க முடியும். அதனுடைய மூலச் சட்டம், கொண்டுவரப்படக்கூடிய சட்டத்தினுடைய அமைப்பு, இவைகளைப்பற்றியெல்லாம் விளக்க ஆரம்பித்தால் அது சட்டமன்றமாக இருக்க முடியாது, வகுப்பறையாக மாறிவிடும்.

**திரு. அ. ரகுமான்கான்:** 16-ஏ என்றால் என்ன? முடிந்தால் அமைச்சர் அவர்கள் சொல்லட்டுமே.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திடீரென்று நீங்கள் கேட்டால், மூலச் சட்டத்தின் புத்தகத்தைக் கொண்டுவர முடியுமா?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. ரகுமான்கான் அவர்கள் வழக்கறிஞர். எனவே, 16-ஏ என்ன என்பது அவருக்குத் தெரியும். தெரியவில்லையென்றால், தெரிந்த வழக்கறிஞரிடம் வெளியிலே கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டுமே தவிர, அதை அமைச்சர் பேசியதற்குப் பின்னால பேசவேண்டுமென்று கேட்க முடியாது.

**திரு. அ. ரகுமான்கான்:** துணைத் தலைவர் அவர்களே, நாங்கள் 10 மணிக்கு மேலே வெளியிலே கூட்டங்களுக்குப் போய் விட்டு வருகின்றபோது எக்ஸிஸ்டிங் செக்ஷன் என்னவென்று பார்க்க முடியவில்லை. அமைச்சரிடம் கேட்கிறோம். இது ஒன்றும் கஷ்டம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு உறுப்பினர் பேசிக்கொண்டு இருக்கிறார். அவர் பேசுகின்றபோது, அவர் பாதிக்கக்கூடாது.

Thiru T. VENKATA REDDI: Hon. Deputy Speaker Sir, the Hon. Minister while speaking said, that ignorance of law is no excuse. But to amend the law without knowing the law is not an excusable one. We are amending Section 16A. Therefore we must know what the original Section 16-A is. The existing Section must be made known to all the members of the House and then only the members can take part in the discussion.

[1985 மார்ச் 27

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** துணைத் தலைவர் அவர்களே, அமெண்ட்மெண்ட் எதற்காகக் கொண்டு வரப் போகிறார்கள் என்பதை முதலிலேயே எல்லா உறுப்பினர் களுக்கும் சர்க்குலேட் பண்ணிவிடுகிறார்கள். தெரியவில்லை என்றால் வெளியிலேயிருந்து தெரிந்துகொள்ள வேண்டுமே தவிர, அமைச்சரிடமிருந்து அல்ல. அமைச்சர் சொல்ல வேண்டியதில்லை. கொண்டுவருவது அமைச்சருக்குத் தெரியாது என்பது அல்ல. இதைச் சொல்லிக்கொண்டிருக்க முடியாது. சர்க்குலேட் பண்ணிவிடுகிறார்கள், உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். (கூச்சல்—குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஷெட்டியூலிலே இருக்கிறது. சமீபத்தில் திருத்தப்பட்ட விதிகளின்படி, பில்லை மூவ் பண்ணும்போது அதனுடைய காரண நோக்கத்தைப்பற்றி மட்டும்தான் அமைச்சர் சொல்ல வேண்டும். இதிலே கூட எக்ஸிஸ்ட்டிங் புரோவிஷன் கொடுத்து இருக்கிறது. பில்லிலே, அமெண்ட்மெண்ட் பிரிவு கொடுத்து இருக்கிறது. பில்லைப் பாருங்கள். ஒவ்வொன்றிற்கும் விளக்கம் கேட்டால் அமைச்சர் சொல்லிக்கொண்டிருக்க முடியாது. நீங்கள் ஒரு வழக்கறிஞர். இதை என் சொல்ல முடியாது என்பதற்குக் காரணத்தையும் சொல்கிறேன். 16-ஏ பற்றி சொன்னால், அதன் தொடர்புடைய பல்வேறு பிரிவுகள் இருக்கும், அதிலே கேள்வி கேட்பீர்கள், விளக்கம் கேட்பீர்கள். அதை நான் அனுமதிக்க முடியாது. மாண்புமிகு திரு. ரகுமான்கான், இந்தச் சட்டமுன்வடிவிலே பேசுவதாக இருந்தால் பேசுங்கள்.

**திரு. அ. ரகுமான்கான்:** துணைத் தலைவர் அவர்களே, நான் ஏதோ சபையினுடைய நேரத்தை வீணாக திசை திருப்புவதாக தயவு செய்து கருதக்கூடாது. அருள்கூர்ந்து அமைதியாக எண்ணிப் பார்ப்பீர்களானால், அமைச்சருக்குத் தெரியாது என்ற நோக்கத்தோடு அவரைப் புண்படுத்துவதற்காகவோ, அல்லது சபையினுடைய நேரத்தை வீணாக்கவோ சொல்லவில்லை. இங்கே இருக்கக்கூடிய பல உறுப்பினர்கள் எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் கூட புதியதாக வந்து இருப்பவர்கள் பேச வேண்டும் என்று விருப்பம் தெரிவித்தார்கள். எங்களிடத்திலே போரன்ட் ஆக்ட் இருக்கலாம், இல்லாமல் இருக்கலாம், அது எங்களுடைய குறையாக இருக்கலாம். எல்லாப் பிரிவுகளையும்



1985 மார்ச் 27] [திரு. அ. ரகுமான்கான்]

நான் கேட்கவில்லை, அமைச்சர் சபையிலே திருத்தம் கொண்டு வருகிற பிரிவு இருக்கிறதே, அது என்ன செக்ஷன் என்பதைக் கொடுக்க வேண்டும், காரணகாரிய விளக்கத்திலே அந்த செக்ஷன் பற்றிச் சொல்லவில்லை.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் திரு. ரகுமான்கான் இந்த அவையில் இல்லாத புதிய மரபுகளை அரங்கேற்ற நினைக்கிறார். அத்தகைய நிலைமைகள் வருமானால் ஆண்டு முழுவதும் சட்டமன்றம் நடந்தாலும் சட்டமுன்வடிவுகளை நாம் நிறைவேற்ற முடியாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எது எதற்கு அமெண்ட்மென்ட் வருகிறதோ அதைக் கொடுத்திருக்கிறார்கள்.

THIRU T. VENKATA REDDY: We request the Government to place before the House, the original section also. There are so mony cases wrere the copies of original sections were also placed along with the proposed amending bills.

**திரு. அ. ரகுமான்கான்;** இதிலே கொடுக்கவில்லை, எங்களுக்கு சர்க்குலேட் பண்ணவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எல்லா உறுப் பினர்களுக்கும் சர்க்குலேட் பண்ணப்பட்டிருக்கிறது.

* **திரு. டி. ஆர். வேங்கடரமணன்:** துணை தலைவர் அவர்களே, உங்களுடைய அனுமதியோடு நான் சில கருத்துக்களை இந்த மன்றத்தில் வைக்கலாம் என்று நினைக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்களுடைய கருத்துக்களோடு எனக்கு முழு உடன்பாடு இருக்கிறது என்று சொல்லமாட்டேன். இந்த அவையில் ஒரு சட்டத்தைக் கொண்டுவருகிற அமைச்சரைப் பரிசோதனை செய்கிற நிலைமை இல்லை. என்றாலும்கூட அமைச்சர்கள் தாங்கள் கொண்டுவருகிற சீர்திருத்தங்கள் தொடர்பானவற்றை உறுப்பினர்கள் தெரிந்துகொள்வதற்காக. மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் கூறுவது போன்று விளக்கங்கள் கொடுத்தால் சட்டம் படிக்காத உறுப்பினர்களுக்கும் அது உதவியாக இருக்கும் என்பதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. இந்தச் சட்டத்திலே ஒரு பிழை இருக்கிறது. அதை

[திரு. டி. ஆர். வேங்கடராமன்] [1985 மார்ச் 27

நான் சொல்லும்போது இந்த விவாதத்தைவிட்டுச் செல்லுகிறேன் என்பதல்ல; தமிழகத்திலே இராமநாதபுரம் மாவட்டத்தைப் பிரித்து முத்துராமலிங்கம் மாவட்டம் என்றும் காமராஜ் மாவட்டம் என்றும் பெயர் வைக்கப்படும் என்று சென்ற ஆண்டு செப்டம்பர் மாதம் 15 ஆம் தேதி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதன்படி இந்த மார்ச் 15 ஆம் தேதி யிலிருந்து அந்த மாவட்டங்கள் செயல்படத் தொடங்கியுள்ளன. இப்போது கொண்டுவரப்படுகிற இந்தத் திருத்தச் சட்டத்திலே அந்த மாற்றத்தைக் கொண்டுவராமல் இருப்பதால் ஏதோ அந்த மாவட்டம் பிரிக்கப்படாமல் முழுமையாக இராமநாதபுரம் மாவட்டமாகவே இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

இங்கே செக்ஷன் 16 ஏ பற்றி சில விளக்கங்களைக் கேட் டார்கள். அந்த ஷெட்யூல்டிலே திருத்தம் கொண்டுவருவதற்காக அது கொண்டுவரப்பட்டிருக்கிறது.

"The Court can always take note of the subsequent event".

என்றுகூட கோர்ட்டிலே சொல்வார்கள். நீங்கள் இந்தச் சட்டத்திலே அந்த மாற்றத்தைக் கொண்டுவராமல் இருப்பதால் எதிர்காலத்திலே இந்தச் சட்டத்தைப் படிக்கிறபோது ஏதோ இராமநாதபுரம் மாவட்டம் பிரிக்கப்படவில்லை என்ற உணர்வு வரும். அந்த மாற்றத்தையும் இந்த நேரத்திலேயே கொண்டு வந்து நிறைவேற்றிவிடலாம். ஏற்கெனவே பெரியார் மாவட்டம் பிரிக்கப்பட்டபோது அந்த ஷெட்யூல்டிலே அமெண்ட்மெண்ட் செய்யப்பட்டு திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆனால் இராமநாதபுரம் மாவட்டம் பிரிக்கப்பட்டது இந்தச் சட்டத்திலே கொண்டு வரப்படாமல் இருப்பது மீண்டும் அதற்காக இந்த அவை யிலே ஒரு திருத்தத்தைக் கொண்டு வரவேண்டிய நிலை ஏற்பட்டு இந்த அவையின் பொன்னான நேரம் யாருக்கும் பயன்படாமல் போய்விடும். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முக்கியமான இந்தக் கருத்துக்களை ஆராய்ந்து பின்விளைவு களைத் தெரிந்து இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்தால் இந்தச் சபைக்கும் பயன்படும் தமிழ்நாட்டிற்கே பயன்படும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.



1985 மார்ச் 27]

(முற்பகல் 11.30)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினருக்கு விளக்கம் தருகிறேன். Section 16-A gives power to the Government to issue notification. அந்த நோட்டிபிகேஷனில் எக்ஸ்டெண்டிங் பவர், அமெண்டிங் பவர் கொடுக்கப்பட்டு இருக்கிறது.

***மாண்புமிகு திரு. தா. வீராசாமி:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று தமிழ்நாடு கேளிக்கை வரி சட்ட முன்வடிவு எண். 17/1985 என்ற சட்ட முன்வடிவைக் கொண்டு வந்து அதனை நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்கின்ற இந்த நேரத்தில் இங்கு மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் சட்டம் படித்த ஒரு வழக்கறிஞர் என்பது எனக்கு நன்கு தெரியும். அந்த வகையில் அவர் சட்டம் நன்கறிந்தவர். சட்டம் படிக்காத என்னை சட்டத்திற்குள் இழுத்து அதில் நுழைக்கப் பார்க்கிறார் என்று நான் நினைக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் கூற்றின்படி பார்த்தால் சட்டம் படித்தவர் தான் இந்த நாட்டின் அமைச்சராக வர வேண்டும் என்று எண்ணுகிறாரோ என்று நான் நினைக்கிறேன்.

இங்கே தமிழகத்திலே இருக்கின்ற நகராட்சிகள், ஊராட்சிகள் அதனுடைய மக்கள் தொகை உயர்வுக்கு ஏற்ப தரம் உயர்த்தப்படுகின்றன. பஸ்ட் கிரேடு முனிசிபாலிட்டி என்று சொல்லக்கூடிய முனிசிபாலிட்டிகள் ஜனத்தொகைக்கு ஏற்ப, வருமானத்திற்கு ஏற்ப செலக்ஷன் கிரேடாக தரம் உயர்த்தப்படுகின்றன. அதேமாதிரி செலக்ஷன் கிரேடு முனிசி பாலிட்டி அதனுடைய வருமானம், மக்கள் தொகைக்கு ஏற்ப தேர்வு நிலை சிறப்பு நிலை நகராட்சியாக உயர்த்தப்படுகிறது. அதுபோலவேதான் இங்கே கிராமத்தில் இருக்கின்ற டவுன் பஞ்சாயத்து, பேரூராட்சிகள், நகர பஞ்சாயத்துகள் போன்ற வைகள் அதனுடைய வருமானம், மக்கள் தொகைக்கு ஏற்ப தரம் உயர்க்கப்பட்டு நெம்பர் 1 ஷெடியூல், நெம்பர் 2 ஷெடியூல் என்ற தரத்திற்கு மாற்றி அமைக்கப்படும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படி தரத்தை மாற்றி

[திரு. தா. வீராசாமி] [1985 மார்ச் 27

ஷெடியூல்டை மாற்றி அமைக்கும்போது ஆங்காங்கே இருக்கின்ற சினிமா கொட்டகைகளில் வசூலிக்கின்ற வரி உயர்த்தப்படும் என்பதை நான் இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன்.

வரி உயர்த்தப்படுகின்ற காரணத்தால் இங்கே இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அரசின் நோக்கங்கள் எல்லாம் மக்களிடம் வரியை வாங்குவது தானா என்று கேட்கக் கூடும். வரியை வசூலிக்கின்ற நேரத்திலேயே சினிமா கொட்டகைகளிலே மக்களுக்கு வசதிகளையும் பெருக்குகிறோம் என்று சொல்லி, அந்த அடிப்படையில் தான் இப்போது சட்டமுன்வடிவு கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று கூற விரும்புகிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது இராமநாதபுரம் மாவட்டத்தைப் பிரிக்கின்ற நேரத்தில் மாவட்டம் முன்பாகவே பிரிக்கப்பட்டது. அது நடைமுறையில் இருக்கின்ற காரணத்தால் அது சேர்க்கப்பட்டு இருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டம் இந்த 15—3—1985-ல் இருந்துதான் அதைச் சேர்க்கவில்லை என்று சொன்னார்கள். பெரியார் அறிவிக்கப்பட்டு இருக்கிற காரணத்தால் இதில் சேர்க்கவில்லை. மீண்டும் அதற்கு ஒரு சட்டமுன்வடிவு கொண்டுவரப்படும் என்பதைக் கூறி மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் இதை நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு பேரவை உதவித் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் 15-ஆம் தேதி தான் இந்தப் புதிய மாவட்டங்கள் உருப்பெற்றன என்று சொல்லு கின்ற நிலையில் நாம் இன்றைக்கு 27-ஆம் தேதி இதைப்பற்றி விவாதித்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே, இராமநாதபுரம் மாவட்டம் பிரிக்கப்பட்ட பிறகு இந்தச் சட்டம் இந்த அவையிலே விவாதிக்கப்படுகிறது. இந்தச் சட்டத்தை நீங்கள் பார்த்தால்,

"(v) under the heading Ramanathapuram district",—

(a) item 3 Ramanathapuram and item 5, Srivilliputhur shall be omitted;

(b) after item 7, the following item shall be added, namely :—

"8, Sivaganga"



1985 மார்ச் 27] [திரு. டி. ஆர். வேங்கடரமணன்]

என்று கருதுகிறார்கள். இந்தச் சிவகங்கை என்பது இப்பொழுது பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தின் தலைநகரமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. 15-ஆம் தேதி மாவட்டம் பிரிக்கப்பட்டு, தலைநகரமும் வந்த பிறகு இன்றைக்கு 27-ஆம் தேதியன்று, இல்லாத ஒரு இடத்தை, அதாவது வேறொரு மாவட்டத்தின் தலைநகரத்தை இராமநாதபுரம் மாவட்டத்தில் சேர்த்து இங்கே சட்டம் கொண்டு வரப்படுகிறது. எனவே, சிவகங்கையில் தற்போதுள்ள உரிமையாளர்கள் நாங்கள் வரி செலுத்த மாட்டோம் என்று சொல்லி நீதிமன்றத்திற்குச் சென்றால், வழக்கம்போல, இந்தச் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்படுகின்ற பல சட்டங்கள் நீதிமன்றத்தில் அடிப்பட்டுப் போவதைப் போன்ற அவல நிலை இதிலும் வரும் என்பதால் மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்தச் சட்டத்தைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, மிகச் சிறப்பான முறையில் சரியான முறையில் மீண்டும் இந்த மன்றத்தில் வைப்பதுதான் சாலப்பொருத்தமாக இருக்கும். எனவே, இதில் பிரிஸ்டிஜ் பார்க்காமல் அல்லது வேறு எதையும் பார்க்காமல் செயல்பட வேண்டும் என்று சொல்லி, இந்தச் சட்டம் கோர்ட்டில் ஒரு நிமிஷம்கூட நிற்காது என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே,

The provisions of the bill are given retrospective effect from 3rd September 1984 as far as this clause is concerned.

ஆனால் இராமநாதபுரம் மாவட்டம் 15—3—1985 முதல் தான் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்த அறிவிக்கை வந்தது 3—9—1984 இல் எனவே, ரெட்ராஸ்பெக்டிவ் எஃபக்ட் கொடுத்து இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றுகிறோம். ஆகவே மாண்புமிகு உறுப்பினரவர்களின் கோரிக்கை ஏற்கப்பட்டு, வருங்காலத்தில் அதற்கான சட்டத் திருத்தங்கள் கொண்டு வரப்படும் என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொண்டு, இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித்தரக் கோருகிறேன்.

திரு. உ. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருத்தம் கொண்டு வருவதைப்பற்றி எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் டெக்னிக்கல் ப்ளா என்ற

[திரு. உ. சுப்பிரமணியன்] [1985 மார்ச் 27

முறையில் பார்க்கின்றபொழுது, 15—3—1985-இல் புதிய மாவட்டங்களாக மூன்று மாவட்டங்கள் பிரிக்கப்பட்ட பிறகு, ஓரிஜினல் பெயரையுடைய இராமநாதபுரம் மாவட்டம் என்றும் ஒரு மாவட்டம் இருக்கிறது, அதற்குள்ளே ஸ்ரீவில்லிப்புத்தூர் வரவில்லை, சிவகங்கை வரவில்லை. ஆகவே, இங்கே இந்தச் சட்டம் பாஸ் செய்யப்படுகின்றபொழுது இன்றைய தினத்திலிருந்து இந்தச் சட்டம் அமலுக்கு வருவதாக எடுக்கப்படும். ஆனவேதான், அந்தத் திருத்தத்தை அரசு ஏற்றுக்கொள்வதில் எந்தவிதமான சிரமமும் இருக்காது என்று கருதுகிறேன்.

DR. K. SOURIRAJAN : The problem can be settled by just adding one small word " in the undivided Ramanathapuram district " in the respective clause.

*மாண்புமிகு திரு. சி. இராமச்சந்திரன்: துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிட்டதைப்போல இந்தச் சட்ட முன்வடிவினை முதலிலே,

" Section 2 shall be deemed to have come into force on the 3rd September 1984 ".

Short-title and commencement
பார்த்தால், ரெட்ராஸ்பெக்டிவ் எஃபக்ட் கிடைக்கிறது.

Section 2 shall be deemed to hafe come into force on the 3rd September 1984 ".

ஆகவே, அன்றிலிருந்து இந்த வரி அமுலுக்கு வருவதால் இப்பொழுது இதில் மாற்றுவது என்பது இயலாத காரியம். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த கருத்திற்கேற்ப, 15—3—1985-க்குப் பிறகு என்று அந்தத் திருத்தத்தைக் கொண்டு வரலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி :

"1985-ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1985) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்".



1985 மார்ச் 27] [பேரவைத் துணைத் தலைவர்]

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2, 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1985) நிறைவேற்றப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(முற்பகல் 11-40)

**(ஈ) பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1985.**

*மாண்புமிகு திரு. நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 18/1985)* ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 59 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி,

* 1985-ம் ஆண்டு மார்ச் 25-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

[திரு. தா. வீராசாமி] [1985 மார்ச் 27

மேற்சொன்ன சட்டத்தின் முதலாம் இணைப்புப் பட்டியலைத் திருத்தி 1984 ஆம் ஆண்டு அக்டோபர் முதல் தேதியிலிருந்து நடைமுறைக்கு வரும வகையில், தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள அறிவிக்கைகள பின்வருமாறு :—

(1) பதிவு 13-க்கு பணப்பெட்டகங்கள், பணப்பெட்டிகள், சுவர்ப் பணப் பெட்டிகள், பாதுகாப்புப் பெட்டகங்கள் (சேஃப் டெப்பாசிட் லாக்கர்ஸ்), லாக்கர் கேபினெட்டுகள், பாதுகாப்பான அறை அல்லது நிலவறைக் கதவுகள், காலதர்கள் (வென்டிலேட்டர்ஸ்) ஆகிய மேற்சொன்ன பதிவின் கீழ் வரும் மேலே உள்ளவற்றின் பாகங்கள் பார்ட்ஸ் அன்ட் அக்ஸஸ்ஸரீஸ் மற்றும் துணைக் கருவிகள் உள்ளடங்கலானவற்றின் மீது வரி விதிக்க, பதிலாக அமைப்பதற்கு.

(2) பதிவு 41-க்கு, இந்தப் பதிவின் கீழ் வரும் பாகங்கள் மற்றும் துணைக் கருவிகளை உள்ளடக்கும் வகையில், பதிலாக அமைப்பதற்கு.

(3) பதிவு 41-டீக்கு, மேற்சொன்ன பதிவின் கீழ் ஓல்டேஜ் ஸ்டெபிலைசர்கள் மீது வரி விதிக்கப் பதிலாக அமைப்பதற்கு.

(4) பதிவு 90-க்கு முதலாம் இணைப்புப் பட்டியலில் வேறெங்கேனும் குறித்துரைக்கப்பட்டது அல்லாத வேறு, ஓடுகளின் வகைகள் அனைத்தின்மீது வரி விதிக்கப் பதிலாக அமைப்பதற்கு.

(5) பதிவு 99 இல இதன் கீழ் வரும் மின் உந்து பம்புகளின் பாகங்களையும், துணைக்கருவிகளையும் சேர்த்துக் கொள்ளுவதற்கு.

(6) (41-பி இனத்தின் கீழ் வராத வேறு) பிரஷர் குக்கர்களின் மீது வரி விதிக்க இனம் 123-க்கு பதிலாக அமைப்பதற்கு மற்றும்.

(7) இனம் 137-க்கு இறால்கள், கடல் நண்டுகள், நண்டு முதலியவற்றின் மீது வரி விதிக்க கடல் சார்ந்த தயாரிப்புகள், அவைகளின் மூலப் பொருள் நிலைக்கும், டப்பாவில் அடைக்கப்பட்ட அல்லது டின்களில் அடைக்கப்பட்ட அல்லது வேறெந்த வகையிலேனும் பதனப்படுத்தப்பட்ட நிலைக்குமிடையே வேறுபாடு செய்வதன் மூலம் பதிலாக அமைப்பதற்கு.



1985 மார்ச் 27] [திரு. தா. வீராசாமி]

மேற்சொன்ன சட்டத்தின் 59-ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் வேண்டுறுத்தங்களை நிறைவுபடுத்த, சட்டமன்றத்தின் நடப்பு அமர்விலேயே, மேற்சொன்ன அறிவிக்கைகளுக்குப் பதிலாக அமையும் வகையில் ஒரு சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இச் சட்ட முன்வடிவை பேரவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும்படி கோருகிறேன்.

**திரு. ப. பொன்னுரங்கம்**: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தை நான் ஆரம்ப நிலையிலேயே எதிர்த்தேன். அதற்கான காரணத்தையும் சொன்னேன். இந்த சட்டத்திலே எக்ஸம்ஷன், ரிடக்ஷன் என்று தெளிவாக இருக்கின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எனக்குப் பதில் சொல்வார் என்று எனக்குத் தெரியும்.

இந்தச் சட்டத்தின் 59 (2)-வது பிரிவு சொல்கிறது, எக்ஸம்ஷன், ரிடக்ஷன் என்பதுமட்டுமல்லாமல் நோட்டிஃபிகேஷன் கொடுக்கின்ற பவரை ஆட் பண்ணுவது என்றும் ஒரு வார்த்தை இருப்பதன் காரணத்தால் ஷெட்யூலிலே டாக்ஸை ஆட் பண்ணுவது குறித்து நோட்டிஃபிகேஷன் மூலமாகவே தரலாம் என்றாகின்றது. நோட்டிஃபிகேஷனை யார் இஷ்யூ பண்ணுவது? ஒரு அதிகாரி. அதாவது ஒரு எக்ஸிக்யூட்டிவ் அதாரிட்டி. எனவே ஒரு எக்ஸிக்யூடிவ் அதாரிட்டியின் கையிலே கொண்டு போய் இப்படி ஒரு சட்டத்தைக் கொடுப்பது என்றால் சட்டசபை எதற்கு? எல்லாமே நோட்டிஃபிகேஷனிலேயே வந்து விடலாமே. ஆக இப்படி ஒரு பிரிவை 59-வது செக்ஷனில் 2-வது உட்பிரிவில் உருவாக்கி இருப்பது இந்த சட்டசபையை அவமதிப்பதாக இருக்கின்றது. மக்களுக்கு வரி போடுகிறோம். இந்த எக்ஸம்ஷன், ரிடக்ஷன் என்பதை வைத்து ஒரு வரியையே எடுத்துவிடலாம் அல்லது குறைத்துவிடலாம். அதை என் இப்படி வைத்திருக்கிறீர்கள். for the benefit of public என்ற வகையில் வரியை எடுத்தால் மக்களுக்கு நன்மை, வரியைக் குறைத்தால் மக்களுக்கு நன்மை, வரியைப் போட்டால் மக்களுக்கு தீமை. ஆக, தீமையான ஒரு காரியத்தை செய்யக் கூடாது. அதற்காகத்தான் சட்டசபை. நன்மையா, தீமையா, போடலாமா, போடக்கூடாதா என்ற வாதத்தை வைத்து, வரி போன்ற சட்டங்களை இயற்றவேண்டும். நியாயத்தை கவர்னரிடம்

எடுத்துக்கூறி ஆர்டினன்ஸ் போட வேண்டுமென்று அரசியல் சட்டத்திலே தெளிவாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

tax."

"By notification itself, you can make a tax; you can fix a

அதுதான் இப்பொழுது என்டர்டெய்ன்மென்ட் டாக்சிலே பேசப்பட்ட பேச்சும்கூட.

செக்ஷன் 16(ஏ) என்ன என்டர்டெயின்ட்மென்ட் டாக்சிலே? அதையே நோட்டிபிகேஷனிலே எக்சிக்யூட்டிவ் அத்தாரிட்டியிடம் கொடுத்து விட்டீர்களே. டாக்ஸ்லை என்ஹான்ஸ் பண்ணுவது என்றால் என்ன ஆகும். டிக்கட் விலை அதிகமாகும். டிக்கட் விலை அதிகமானால் பாதிக்கப்படுபவர் யார்? சினிமா பார்ப்பவர்கள் பாதிக்கப்படுவார்கள். என்டர்டெயின்மென்டுக்குப் போகிறவர்கள் பாதிக்கப்படுவார்கள். எக்சிக்யூட்டிவ் அத்தாரிட்டியே அதைச் செய்துவிடலாம் என்றால் சட்டமன்றம் எதற்கு, கவர்னர் எதற்கு? ஆகவே, அந்தப் பிரிவு இருப்பதே தவறு என்பது எனது தாழ்மையான கருத்தாகும்.

இன்னொன்று இது ஒரு விநோதம். பட்ஜெட்டிலே நேற்று தான் டாக்டர் நாவலர் அவர்கள் சில வரிகளையெல்லாம் அறிவித்தார்கள். நாங்கள் எல்லாம் இவ்வளவுதான் வரி என்று நினைத்திருந்தோம். அப்புறம் பார்த்தால் புது வரி கூடுகிறது, ஏறுகிறது. பட்ஜெட் நேற்று வந்தது, இன்றைக்கு ஒரு டாக்ஸ் பில் கொண்டு வந்து நிறைவேற்றுகிறார்கள். " prawns, frogs and frog legs " ஆகியவற்றிற்கான அந்த டாக்சை அதிலே அறிவிக்கக்கூடாதா? ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் கொடுக்க வேண்டுமாம். ஏன் ஆர்டினன்ஸ் போட்டிருக்கக் கூடாதா? எக்சிக்யூட்டிவ் அத்தாரிட்டியிடம் நம்முடைய பவரைக் கொடுக்கலாமா? இதுதான் என்னுடைய கேள்வி. இந்தச் சட்டமன்ற உறுப்பினர்கள் பார்த்து செய்ய வேண்டியதை, எடுக்க வேண்டிய முடிவை, தனிப்பட்ட அதிகாரியிடம் விட்டால் அவர் விருப்பு வெறுப்போடு செய்யலாம். பல பேர்கள் பிடிக்காதவர்களாக இருக்கலாம். அதை வைத்துக்கூட அவர் போடலாம். அப்படிப் போகின்ற நோட்டிபிகேஷன் முறைப்படியானது அல்ல என்பது என்னுடைய தாழ்மையான கருத்தாகும். "Already taxation fixed is 5 per cent" இப்பொழுது





freezing, canned tinned and processed என்று அதற்கு 5 சதவீதம் போடுகிறார்கள். இப்பொழுது புதுச் சட்டம் போடுவது அதற்காகத்தான். இப்பொழுது அந்த ஷெடியூலில் ஆட் செய்கிறீர்கள். ரா மெட்டீரியல்ஸ் கொண்டு வந்து ஐஸ் போட்டாலே இந்த வரி. கட்டு மரத்திலே போய் இறா பிடித்து வருகிறான், குளத்திலேயிருந்து பச்சைத் தவளை பிடித்து வருகிறான், குளத்திலேயிருந்து நத்தை எடுத்து வருகிறான். கெட்டுப் போய்விடும் என்று ஐஸ் போடலாம் என்றால், that is a kind of process ஆக இந்த டாக்ஸ் சாதாரண மீனவனைப் பாதிக்கக்கூடிய ஒரு டாக்ஸ் என்பது என்னுடைய தாழ்மையான கருத்தாகும்.

அங்கங்கே கிராமங்களில் இருக்கக்கூடிய குளங்களிலே நத்தைகள், தவளைகள் பிடித்து வந்து, அவசர வேலை காரணமாக மனைவியிடம் கொடுத்துவிட்டுப் போய் விட்டானென்றால், அவன் மனைவி பையராகிவிடுவார்கள். அவள் கெட்டுவிடப் போகிறதே என்று கொஞ்சம் ஐஸ் போட்டால் பிராசஸிங். ஆக, இப்படிச் சாதாரண மீனவனைப் பாதிக்கின்ற வரி இந்த வரி என்பதை நான் மீண்டும் சுட்டிக் காட்ட இரும்புகிறேன். நான் அந்தத் தொழிலிலேயே ஈடுபட்டவன் மட்டுமல்ல, அந்தத் தொழிலை முற்றும் தெரிந்தவன். இறா பிடிக்கும் தொழிலைத் தெரிந்தவன். ஆகவே, அந்தத் தொழிலைச் செய்கின்ற ஒரு கட்டுமரத் தொழிலாளியோ அல்லது படகுத் தொழிலாளியோ இறாவைக் கொண்டு வந்து விடும்போது பல்வேறு காலகட்டங்கள் ஏற்படும், நிர்ப்பந்தம் ஏற்படும். கரையிலே வலை அறுந்துவிடும், படகுகள் சில காலங்களிலே ரிப்பேராகிவிடும். ஆக, வலையைச் சரி செய்ய படகைச் சரி செய்ய நாளைக்குத் தொழிலுக்குச் செல்ல வேண்டுமென்பதற்காகத் தன் மனைவியிடம் பிடித்ததைக் கொடுத்துவிட்டுச் செல்வான். அப்படி கொடுத்துவிட்டு இரண்டாவது கைக்கு மாறிவிடும்போது பையராகிவிடுகிறது. தன் கணவன் கொண்டு வந்து கொடுத்த மீன் பொருள் கெட்டுவிடும் என்று மனைவி ஐஸ் போட்டால், "It is a kind of process". ஆகவே, இந்த 5 சத வீதம் வரி, நிச்சயமாக அடிமட்டத்திலே வாழ்கின்ற மீனவர்களைப் பாதிக்கும். குளத்தை நம்பி வாழ்கின்ற குளத்திலே தவளை எடுக்கின்ற, கடலிலே இறா பிடிக்கின்ற

[திரு. ப. பொன்னுரங்கம்] [1985 மார்ச் 27

அடிமட்டத் தொழிலாளிகளைப் பாதிக்கின்ற சட்டம் இது என்பதை என்னாலே சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. ஆக, சட்டமன்றத்திலே பட்ஜெட் நாளை வருகிறது என்றால், இன்று அறிமுகப்படுத்தி, அடுத்த நாள் நிறைவேற்றத்திற்கு வருகிறது. ஏன் பட்ஜெட்டிலே அறிவித்தால் என்ன? நாளை பட்ஜெட் வருகிறது என்றால், இன்று என்டர்டெய்ன்மென்ட் டாக்ஸ் வருகிறது. இரண்டு நாளைக்கு முன்னால்தான் வருகிறது. ஆகவே, வெளியே சொல்வது நாங்கள் ரூ. 54 கோடிக்குத்தான் வரி போட்டிருக்கிறோம், என்பது. அதிலே எக்சம்ஷன் தந்திருக்கிறோம் என்பது. ஆனால், இந்தப் புது வரிகள் எல்லாம் பொதுமக்களுக்குத் தெரியக்கூடாது என்பதற்காக மறைமுகமாகப் போடப்படுகிறதா என்ற சந்தேகம் எனக்கு ஏற்படுகிறது. ஆகவே, இவ்வளவு பெரிய வரிகளை கூடுதலாகப் போட்டுவிட்டு, பட்ஜெட்டுக்கு முன்னாலும், பின்னாலும் இது போன்ற மசோதாக்களை கொண்டு வந்து வரிவிதிப்பது என்பது, இதைவிட கொடுமையான செயல் ஒன்றும் இருக்க முடியாது என்பது என்னுடைய தாழ்மையான கருத்தாகும்.

(முற்பகல் 11.50)

நான் ஏற்கனவே சொன்னேன். அண்ணா அவர்களின் எண்ணமே வரியை குறைப்பதுதான். அதைக் கடைபிடித்து தான் என்னுடைய தலைவர் கலைஞர் அவர்கள் செய்து வந்தார்கள். அவருடைய ஆட்சி காலத்தில் விறகுக்கு இருந்த வரியை நீக்கினார்கள். நமது அமைச்சர் மாண்புமிகு காளிமுத்து அவர்களுக்கு தெரியும். நானும் அவரும் ஒரு வியாபாரிகள் சங்கக் கூட்டத்தில் கலந்து கொண்டோம். அந்தக் கூட்டத்தில் நான் அவர்களிடத்தில் ஒரு வேண்டுகோள் விடுத்தேன். என்னவென்றால், ஆக்ட்ராய், என்ட்ரி டாக்ஸ் இன்னும் தொற்றிக் கொண்டிருக்கிறது, உங்களுடைய வாதத் திறமையை பயன்படுத்தி உங்களுடைய தலைவரை ஒப்புக் கொள்ள வைத்து, ஆக்ட்ராய்க்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்; அதன் மூலம் பாராட்டைப் பெறுங்கள் என்று சொன்னேன். அதை ஏன் சொன்னேன் என்றால், என்னுடைய நினைவு சரியாக இருக்குமானால், 1974 ஆம் ஆண்டு நான் அசோகா ஓட்டலில் ஒரு விருந்துக்கு அழைக்கப்பட்டேன். அப் போது நான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சர்க்கிள்



1985 மார்ச் 27] (திரு. ப. பொன்னுரங்கம்)

செகரட்டரியாக இருந்தேன். வியாபாரிகள் எங்களுக்கெல்லாம் விருந்து தருகிறார்கள். எதற்காக என்று கேட்டேன். பாராட்டு விழா என்று சொன்னார்கள். யாருக்கு என்று கேட்டேன். வருவாய்த் துறை அமைச்சருக்கு என்று சொன்னார்கள். எதற்காக என்று கேட்டேன். விறகுக்கு வரி நீக்கியதற்காக பாராட்டு விழா என்று சொன்னார்கள். அதே போல மாண்புமிகு அமைச்சர் திரு. காளிமுத்து அவர்களை, உங்களுக்கு எப்போது பாராட்டு, அதிலே நான் கலந்து கொள்ள வேண்டும் என்று கூட வட சென்னை வியாபாரிகள் சங்கத்திலே கேட்டேன். அந்த நேரத்தில் அமைச்சர் அவர்கள் என்னை மரியாதையாகச் சொல்லி, அண்ணன் பொன்னுரங்கம் அவர்கள் இன்று நாசூக்காக பேசி உங்கள் மத்தியிலே பல இடங்களில் என்னை தட்டிக் கொடுக்கிறார் என்று கூட பேசினார்கள். அது வேறு விவகாரம்.

ஆகவே நீங்கள் இதுபோன்ற வரிகளை நீக்கவேண்டும். இருக்கிற வரிகளை நீக்கி வசதிகளைப் பெருக்குங்கள் என்று அண்ணா அவர்களே சொன்னார்கள். அதைப் பெருக்கலாம். அதற்கு வழி இருக்கிறது. ஆனால் அதிலே கைவைக்க மாட்டேன் என்கிறீர்கள். பஸ் தேசியமயத் திட்டம், நேஷனலைஸ் பண்ணவேண்டுமென்று அண்ணா அவர்கள் சொன்னார்கள். ஆயிரம் பேர், லட்சம் பேர் பயன்பெறுவதற்காக ஒரு பத்து பேர்கள் சங்கடப்படுவார்களென்றால் அதை பார்க்கக் கூடாது. லட்சக்கணக்கான, கோடிக்கணக்கான பொதுமக்களுக்கு சில நன்மைகளை செய்யும், சில பாதிப்பிற்கு ஆளாகிற வகையில், பலர் பயன்பெறுகிற வகையில் இந்தத் திட்டத்தைக் கொண்டு வரும் நிர்ப்பந்தத்திற்கு ஆளாகி இருக்கிறோம் என்று பஸ் தேசியமயத் திட்டத்தைப்பற்றி அண்ணா அவர்கள் இதே மன்றத்தில் குறிப்பிட்டு இருக்கிறார்கள். வருவாயைப் பெருக்குவதற்கு வரியால் மட்டும் பெருக்குவதென்றால் அது நல்ல சிஸ்டம் அல்ல. பல்வேறு வழிமுறைகளைக் கையாண்டு வருவாயை அதிலே கொண்டு வரவேண்டுமே தவிர, ஏழைமக்கள் பாதிக்கிற அளவிற்கு செய்யக் கூடாது. அதுவும் இப்படி ஒரு சட்டத்தை, அதுவும் 'பை நோட்டிபிகேஷன்' என்பது கூடாது. என்ன அவசரம்? என்ன அவசியம்; ரெட்ராஸ்பெக்டிவ்

எப்க்ட் வேறு இதிலே. இப்படி வருவது சரியல்ல. வியாபாரிகளைத்தான் பாதிக்கும் என்று நீங்கள் நினைப்பது சரியல்ல. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். பெட்ரோல் வரியை உயர்த்தினார்கள். பெட்ரோல் வரியை உயர்த்தினால் பெட்ரோல் வியாபாரியா பாதிக்கப்படுகிறான்? ஆட்டோவிலே போகிறவர்கள், டாக்சியிலே போகிறவர்கள்தான் அடிஷனல் கட்டணம் கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆகவே பொது மக்களைத்தான் அது பாதிக்கிறது. ஆகவே வியாபாரிகளை மட்டும் பாதிக்கும் என்று நினைத்து செய்யக் கூடாது. இப்போதே கேட்க ஆரம்பித்து விட்டார்கள். டீசல் விலை ஏறிவிட்டதால் பஸ் கட்டணத்தை உயர்த்த அனுமதி வேண்டுமென்று பஸ் அதிபர்கள் கேட்கிறார்கள். ஆகவே பாதிக்கப்படுவது யார், பப்ளிக். அதிலும் குறிப்பாக தலை காய்ந்த மீனவர்கள், தலை காய்ந்த ஏழைகள், கட்டுமரத்திலே சென்று இறாலை பிடிக்கிற ஏழைகள், படகிலே சென்று இறாலை பிடிக்கிற ஏழைகள், அவர்கள் வெகுவாக பாதிக்கப்படுகிறார்கள். குளத்திலேயிருந்து நத்தைகளையும், பச்சை தவளைகளையும் கொண்டு வருகிற பாமரர்கள், தலைக்கு எண்ணெய் தேய்த்துக்கொள்ள கூட வகையற்று இருப்பவர்கள், அவர்களை பாதிக்கிற ஒரு சட்டமாக, ஒரு வரியாக இது இருக்கிற காரணத்தால் என் எதிர்ப்பைத் தெரிவித்து முடிக்கிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நோட்டிபிகேஷன் வழியாக வரிகளைப் போடுவது ஒரு நல்ல மரபு அல்ல. அது ஒரு சர்வாதிகார அரசாங்கத்தின் அஸ்திவாரத்தினுடைய அறிக்கை என்று இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இப்படிப்பட்ட நோட்டிபிகேஷன் வழியாக வரிகளை விதிப்பது என்பது ஒரு ஜனநாயக விரோத நடவடிக்கை என்பதையும் இது ஒரு நல்ல நடவடிக்கை அல்ல என்பதையும் சுட்டிக்காட்ட இந்த நேரத்தை நான் பயன்படுத்திக்கொள்ள விரும்புகிறேன்.

அதிலும் குறிப்பாக, இன்றைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிற சட்டம் மக்களை கடுமையாகப் பாதிக்கும். சாதாரண மக்கள், ஏழை, எளிய மக்கள், நடுத்தர மக்கள் வாங்கிப் பயன்படுத்தக்





கூடிய பொருள்களின் மேல் விற்பனை வரி விதிக்கக்கூடிய சட்டம் என்பதால் இது ஒரு ஜனநாயக விரோத நடவடிக்கை, இது மக்களைப் பாதிக்கிறது என்பதால் எங்களுடைய ஆட்சேபனையைத் தெரிவித்துக்கொள்ள இந்த நேரத்தைப் பயன்படுத்திக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த அரசைப் பொறுத்தவரையில், சென்ற இரண்டு, மூன்று ஆண்டுகளாகப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். சாதாரண மக்கள் வாங்கிப் பயன்படுத்தக்கூடிய பல பொருள்களுக்கு, அதுவும் நடுத்தர, ஏழை எளிய மக்கள் பயன்படுத்தக்கூடிய பொருள்களுக்கு விற்பனை வரி கொண்டுவருவது என்பதும், விற்பனை வரியினுடைய குவான்டத்தை உயர்த்திக் கொண்டு போவதும் வழக்கமான ஒரு நடவடிக்கையாக இருக்கிறது. இது சரியல்ல என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இப்போது கொண்டுவரப்பட்டிருக்கக்கூடிய இந்தச் சட்டத்திலே கூட பல பொருள்களுக்கு இருந்த விற்பனை வரி உயர்த்தப்பட்டிருக்கிறது. அந்தப் பொருள்களைப் பற்றிய பட்டியலைப் பார்த்தால் செங்கற்கள், ஓடுகள், தரையில் பரப்பப்படும் சிமின்ட் கற்கள், ஜெனரேட்டர்ஸ், ட்ரான்ஸ்பார்மர்ஸ் போன்ற நடுத்தர மக்கள், ஏழை எளிய மக்கள் பயன்படுத்தும் பொருள்கள் எல்லாம் அடங்கியிருக்கின்றன.

அதற்கு மேலே, இன்று பிரான்ஸ், ஃபிராக்ஸ் இந்த மாதிரியான பொருள்களுக்கு சேல்ஸ் டாக்ஸ் கொண்டு வந்திருப்பது சரியல்ல என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்றைக்கு அதனுடைய ரேட்சும் உயர்த்தப்பட்டிருக்கிறது. இந்த நேரத்தில் தமிழ்நாட்டில் வரிப் போடக்கூடிய முறை எப்படி, எந்த அளவுக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதைப் பற்றி சமீபத்தில் வந்திருக்கக்கூடிய புள்ளிவிவரங்களை அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். சாதாரணமாக மற்ற மாநிலங்களில் சேல்ஸ் டாக்ஸ் சுமை 8.9 சதவீதமாக இருக்கிற நேரத்தில் தமிழ் நாட்டில் அது 16.16 சதவீதமாக உயர்ந்திருக்கிறது. மற்ற பல மாநிலங்களை ஒப்பிடும்போது அந்த மாநிலங்களிலே 8.9 சதவீதமாக இருப்பது இங்கே 16.16 சதவீதமாக உயர்ந்திருக்கிறது என்பதைப் பார்க்கும்போது கிட்டத்தட்ட இரண்டு மடங்குகளுக்கு மேல் இந்த சேல்ஸ் டாக்ஸ்

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1985 மார்ச் 27

உயர்வாக இருக்கிறது; இந்த நடைமுறை சரியல்ல; இது இந்த நாட்டு ஏழை எளிய மக்களை, நடுத்தர மக்களைப் பாதிக்கும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதைப்போன்று பெர் காபிட்டா பர்டனைப் பொறுத்த வரையில் மற்ற மாநிலங்களில் 5.17 சதவீதமாக இருக்கிறது; தமிழ் நாட்டில் அது 10.67 சதவீதமாக உயர்ந்திருக்கிறது. அதைப் போன்று பெர் காபிட்டா இன்கம்டாக்ஸ் இந்தியாவில் பொதுவாக 1,758 ரூபாயாக இருக்கும்போது தமிழ் நாட்டில் அது 1,375 ரூபாயாக இருக்கிறது. அதேமாதிரி பெர் காபிட்டா வரி மற்ற மாநிலங்களிலே 158 ரூபாய், தமிழ் நாட்டில் அது 222 ரூபாயாக உயர்ந்திருக்கிறது. இப்படி இன்று தமிழ் நாட்டில் ஏழை எளிய மக்கள், நடுத்தர மக்கள் பயன்படுத்தக்கூடிய பொருள்களுக்கு வரியைப் போட்டு, அதிகமான சுமையை இந்த சாதாரண மக்கள் தலையில் திணிக்கக்கூடிய அளவுக்கு வந்திருக்கிறது.

அது மட்டுமல்ல. இன்றைக்கு பட்ஜெட் இந்த அவையில் தாக்கல் செய்யப்படுவதற்கு ஒரு சில நாட்களுக்கு முன்னால் இப்படிப்பட்ட ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருப்பது என்பது எதைக் காட்டுகிறது என்றால் பட்ஜெட் வழியாக பல வரிகளைப் போடும்போது பட்ஜெட்டில் அதிக வரி போட்டு விட்டார்கள் என்ற எண்ணம் மக்களுக்கு ஏற்படும்; அந்த எண்ணத்தைத் தவிர்க்க இப்படிப்பட்ட முறையில், இப்படிப் பட்ட ஒரு நடவடிக்கையாக அரசாங்கம் இதை எடுத்துக் கொண்டிருக்கிறது என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(நண்பகல் 12.00)

ஆகவே இன்று, இப்படிப்பட்ட நடுத்தர மக்கள், ஏழை எளிய மக்கள் வாங்கிப் பயன்படுத்துகின்ற பொருள்களை இந்த விற்பனை வரியினுடைய வரம்பிற்குள்ளே கொண்டு வந்து மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை மேலும் பாதிக்கக்கூடிய அளவிலே நடவடிக்கை எடுப்பது சரியல்ல. எனவே இந்தச் சட்டத்திலிருந்து, ஏழை எளிய மக்கள் பயன்படுத்தக்கூடிய அந்தப் பொருள்களுக்கு விடுதலை கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அந்த வகையிலே, இந்த விற்பனை வரி குவான்டத்தைக் குறைக்க வேண்டும் என்று வற்புறுத்தி, இந்தச் சட்டத்தை நான் எதிர்க்கிறேன்.



136376

1985 மார்ச் 27]

*திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்ட இந்த பொது விற்பனை வரிச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கான சட்ட முன்வடிவை வரவேற்று என்னுடைய கருத்துக்களை நான் இங்கே எடுத்து வைக்க விரும்புகிறேன். இந்தச் சட்ட முனவடிவை எதிர்த்து மாண்புமிகு உறுப்பினர்கள் பொன்னுரங்கம் அவர்களும், ஹேமச்சந்திரன் அவர்களும் இங்கே கருத்துக்களை வெளியிட்டார்கள். அவர்கள் பேசுகிறபோது, ஏதோ இந்த அரசாங்கம் செங்கற்கள், ஓடுகள் போன்றவற்றிற்கும், இரால், நண்டு போன்றவற்றிற்கும் வரி விதித்து இருப்பதாகவும் அவர்கள் மேலெழுந்தவாரியாக சொல்லியிருக்கிறார்கள். இந்தச் சட்ட முன்வடிவிலே வந்திருக்கிற மாற்றம், இருக்கிற செட்யூலில் சில மாற்றங்கள் செய்யப்பட்டிருக்கிறது. எற்கனவே பழைய மூலச் சட்டத்திலே அவர்கள் சொன்ன அந்த 5 பர்சென்ட் வரி இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் தெரிவிக்க கடமைப்பட்டு இருக்கிறேன். ஏதோ புதிதாக வரி விதிக்கப்பட்ட அந்தச் சூழ்நிலை போல் பேசுவது இந்தச் சபையில் இருக்கிற உறுப்பினர்களுக்கு. . . . .

திரு. ப. பொன்னுரங்கம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் பேசும்போது தெளிவாகவே சொன்னேன். For raw-materials 5 per cent is already existing. எனக்குத் தெரிந்துதான் பேசினேன். 5 per cent those cannad, tinned or otherwise processed என்று சொன்னேன். நான் ஓடுகளைப் பற்றிப் பேசவில்லை.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த சட்ட முன்வடிவின் வாயிலாக சில மாற்றங்களை அமைச்சர் அவர்கள் செய்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் பொன்னுரங்கம் அவர்கள் சொல்லுகிற வாதத்தின்படி பார்த்தால் கூட, வரி ஏய்ப்பு செய்பவர்களுக்குத் தான் இது பாதகமாக இருக்கிறதே தவிர, மக்களுக்கு எந்த விதத்திலும் இல்லை என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

[திரு. செ. செம்மலை] [1985 மார்ச் 27

முதலிலே மூலச் சட்டத்திலே பிரான்ஸ், அதாவது இரால் போன்ற ரா-மெட்டிரியலுக்கு வரி போடப்பட்டு இருந்தது. ஆனால் வியாபாரிகள் என்ன செய்தார்கள் என்றால், அந்த ரா-மெட்டிரியலை பேக்கிங் செய்து, டின்களிலோ, அல்லது கேன்களிலோ, அடைத்துப் போடுகிறபோது, இது ரா-மெட்டிரியல்ஸ் அல்ல, எனவே இந்த வரி விதிப்புக்கு நாங்கள் உட்படமாட்டோம் என்று அவர்கள் சொன்ன காரணத்தாலே ஏற்கனவே மூலச் சட்டத்தில் வரியைப் போட்டு, 'ரா' என்ற அந்த வார்த்தையைப் பயன்படுத்தி, வியாபாரிகள் தப்பிக்கிற முயற்சியில் ஈடுபட்ட காரணத்தால், இந்த அரசாங்கம் அதைக் கண்காணித்து, உன்னிப்பாக கவனித்து, அதை அவர்கள் அந்த டின்னிலே அடைத்தாலும் கூட, இந்த வரிக்கு உட்படும் என்று சொல்லியிருக்கிறார்களே, தவிர, ஏதோ மீனவர்கள் மீது இந்த வரியை சுமத்துவதாக தயவுசெய்து உறுப்பினர் அவர்கள், சபையிலே தவறான தகவலைச் சொல்லி, திசை திருப்ப வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு). இது பாயின்ட் ஆப் ஆர்டரிலே வராது. ஐ ஆம் நாட் ஈல்டிங். அரசாங்கம் எப்போது நோட்டிபிகேஷனைப் போடுகிறது என்பதை உறுப்பினர்கள் தயவுசெய்து புரிந்துகொள்ள வேண்டும். மூலச் சட்டத்தில், உள்ளதைக் கொண்டு வியாபாரிகள் வரி ஏய்ப்புச் செய்கிறபோது, இப்படிப்பட்ட சட்டங்கள் கொண்டு வரப்படுகின்றன. எனவே அதைக் கட்டுப்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் கடமை. ஏதோ முறை தவறி, அல்லது முறைக்கு, சட்டத்திற்கு முரணாக இந்த நோட்டிபிகேஷனை அறிவிக்கவில்லை என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் பொன்னுரங்கம் அவர்கள் பேசுகிறபோது இந்தச் சட்டத்திலே 14-வது விதியைச் சுட்டிக் காட்டினார்கள். இந்த 14-வது விதியின் படி செட்யூலை ரெட்யூஸ் செய்வதற்கோ, அல்லது கேன்சல் செய்வதற்கோ நோட்டிபிகேஷன் தேவை என்று சொன்னால் — செக்ஷன் 59-ஐ ஏன் உறுப்பினர் அவர்கள் மறந்துவிட்டார்கள் என்று நான் கேட்க விரும்புகிறேன். 59-வது செக்ஷன்படி, ஷெட்யூலை மாற்றுவதற்கும் அதில் சேர்ப்பதற்கும், அல்லது ரத்து செய்வதற்கும் அதிகாரம் கொடுக்கப்பட்டு இருக்கிறது. எனவே



1985 மார்ச் 27] (திரு. செ. செம்மலை)

அந்த விதிகளுக்கு உட்படுத்தான் மாற்றம் கொண்டுவரப்பட்டு இருக்கிறதே தவிர, வேறு அல்ல என்பதை நான் மாண்புமிகு பொன்னுரங்கம் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்றையும் அவர்கள் சொன்னார்கள். இந்த நோட்டிபிகேஷன் மூலம் எக்சிக்யூடிவ் அத்தாரிட்டிக்கு அதிகமான அதிகாரத்தை கொடுத்து இருப்பதாக அவர்கள் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அனுபவ மிக்கவர். அவருக்கு நன்றாகத் தெரியும். இதுபோன்ற அந்தச் சட்டப் பிரிவுகள், அதன் விவரங்கள் எல்லாம் நம்முடைய டி. எல். கமிட்டிக்கு வருகிறது. டி. எல். கமிட்டியிலே நாம் தான் உட்கார்ந்துக் கொண்டு, இவைகளை ஆராய்ந்து பார்த்து, இந்தப் பிரிவை சேர்க்க வேண்டும், இந்தப் பிரிவை நீக்க வேண்டும் என்ற அதிகாரங்களை கொடுக்கிறோமே தவிர, எக்ஸிகியூட்டிவ் அத்தாரிட்டிகள் எந்த அதிகாரத்தையும் அவர்களாகவே கையிலே எடுத்துக் கொள்வதில்லை என்று சொல்லிக் கொண்டு, திடீர் என்று ஒரு பிரச்னை சட்டமன்றம் கூடாத நேரத்திலே அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்படுகிறது என்று சொன்னால், அதைத் தடுக்க எப்படி நடவடிக்கை எடுப்பது? அதனால்தான் நோட்டிபிகேஷன் கொடுத்து, அதற்குப் பிறகு 6 மாத காலத்திற்குள் அது சட்டமன்றத்தில் அறிமுகப்படுத்தப் படுகிறது.

எனவே இதில் எந்தவிதமான முரண்பாடுகளோ அல்லது சட்டத்திற்கு புறம்பாகவோ எதுவும் செய்யப்படவில்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். செங்கல்களுக்கும், ஓடுகளுக்கும் வரி போட்டிருக்கிறீர்களே, அது ஏழை எளிய மக்களை பாதிக்கும், ஆகவே அதை நீக்க வேண்டும் என்ற கருத்தைச் சொன்னார்கள். ஆனால் ஏற்கெனவே உள்ள சட்டத்திலே அதன் ஷெட்யூலிலேயே வரி போடப்பட்டிருக்கிறது. புதியதாக இந்த 5 சதவீதத்தை புரட்சித் தலைவர் அரசாங்கம் வந்து போடவில்லை என்பதை முதலிலே தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. செ. செம்மலை] [1985 மார்ச் 27

ஆனால் அதற்கும் வியாபாரிகள் தவறான உள்நோக்கம் கற்பித்துக் கொண்டு, ரூஃப் டைய்ல்ஸ்—என்று மட்டும் மூலச் சட்டத்தில் கொடுத்திருப்பதால், அவர்களுடைய ஓடுகளை இது ரூஃப் டைய்ல்ஸ் அல்ல, சாதாரணமாக தரையிலே போடப்படுகிற ஓடுகள் தான் என்று பல்வேறு வேறுபாடுகளை காட்டி வரி ஏய்ப்புச் செய்கிறார்கள். ஆகவே தான் அனைத்து ஓடுகளும் அடங்கும் என்ற வகையில் இந்த திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதிலே என்ன தவற்றை மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள் கண்டுவிட்டார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. இதிலே சட்டத்திற்கு முரணான செயல் எதுவுமே இல்லை என்பதையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். வரி ஏய்ப்புச் செய்பவர்களை கட்டுப்படுத்துவதற்காகத்தான் இந்தச் சட்ட முன்வடிவுக் கொண்டு வரப்பட்டிருக்கிறதே தவிர, மற்றபடி தொழிலாளர் களுக்கோ அல்லது மீன் பிடிப்பவர்களுக்கோ இது எந்த விதத்திலும் பாதிப்பை ஏற்படுத்தாது என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, டி. எல். கமிட்டியிலே இதை ஆய்ந்து பார்த்து நோட்டிபிகேஷன் ஏற்றுக்கொள்ளப்பட்டதாலே தான் 59-வது செக்ஷனிலே இது கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆகையினாலே இதிலே எதுவும் எக்ஸிகியூட்டிவ் அதிகாரிகளுக்கு அன்டியூ பவர்ஸ் என்ற வகையில் எதுவும் கொடுக்கப்படவில்லை என்பதையும் இந்த நேரத்தில் எடுத்து வைத்து, இந்தச் சட்ட முன்வடிவு மிக நல்ல நோக்கத்தோடு கொண்டு வரப்பட்டிருக் கிறது; வரி ஏய்ப்பவர்களை கட்டுப்படுத்துவதற்காக கொண்டு வரப்பட்ட நல்ல சட்ட முன்வடிவு என்ற வகையில் இதை பாராட்டி வரவேற்று அமர்கிறேன். நன்றி. வணக்கம்.

**திரு. ப. பொன்னுரங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு செம்மலை அவர்கள் பேசுகிற போது, நோட்டிபிகேஷனிலே புரொவிஷன் இல்லை என்று சொன்னார்கள். சட்டமன்றம் இல்லாதபோது எப்படிக் கொண்டு வருவது என்று கேட்டார்கள். கவர்னர் எதற்கு இருக்கிறார்? ஆர்டினன்ஸ் போடுவதற்குத்தானே. ஆர்டினன்ஸ் ஏன் போடக் கூடாது?



1985 மார்ச் 27]

**திரு. செ. செம்மலை:** ஏற்கெனவே புரொவிஷன் இருக்கிறது என்றுதான் சொன்னேன். . . .

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பொன்னு ரங்கம் அவர்கள் ஆர்டினன்ஸ் ஏன் போடக் கூடாது என்று கேட்கிறார்கள். இதுவரையில் போட்ட ஆர்டினன்ஸ் பூராவையும் அவர்கள் தான் எதிர்த்திருக்கிறார்கள்.

* **திரு. எஸ். வேணுகோபால்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே ஏழை எளிய மீனவர்களை பாதிக்கின்ற வகையிலே இரால் மீன்களுக்கும், நண்டுகளுக்கும், தவக்களைகளுக்கும் வரியைப் போட்டு ஒரு சட்டமுன் வடிவைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று எண்ணுகிறபோது, ஏழை எளியவர்களுடைய அரசாங்கம், வறுமை கோட்டிற்குக் கீழே இருக்கும் மக்களை பாதுகாக்கின்ற அரசாங்கம் என்று சொல்லிக் கொள்ளும் இந்த அரசாங்கம், மூன்றாவது முறையாக அரசு ஏற்றிருக்கிற புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் ஆட்சியிலே, இப்படி வரிகளைப் போடுவது சரியா என்று முதலிலே கேட்கவிரும்புகிறேன்.

இந்த வரிகள் பணக்காரர்களுக்கும் வசதி படைத்தவர் களுக்கும் தான் போடப்பட்டிருக்கிறதே தவிர, சாதாரண ஏழை எளிய மக்களுக்கு போடப்படவில்லை என்று எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர்கள் சிலர் எடுத்துச் சொன் னார்கள். நான் அவர்களைக் கேட்டுக் கொள்வது எல்லாம், இத்தகைய வரிகளைப் போடுவதினால், இன்றைக்கு ஒரு கிலோ இரால் மீன் விலை 90 ரூபாய் என்று சொன்னால், இந்த வரியை போட்ட பிறகு, அந்த வரியை கட்டுவதற்கு அஞ்சி, 80 ரூபாயாக அதன் விலையை வியாபாரி குறைத்துவிட்டால், அத்தகைய மீன்களை பிடித்து வரும் மிகச் சாதாரண ஏழை மீனவன், அன்றாடம் வரும் வருமானத்தை வைத்து வாழ்க்கையை கழித்துக் கொண்டு போகும் ஏழை மீனவன் பாதிக்கப்பட மாட் டானா என்று கேட்க விரும்புகிறேன். ஆகவே நாங்கள் மேலே உள்ளவர்களுக்குத்தான் போடுகிறோம். கீழே இருப்பவர்களுக்கு அல்ல என்றும், வாங்குகிற நேரத்தில் இத்தகைய வரிகள் போடப் படுவதில்லை, பதனிட்ட பிறகுதான் மீன்களுக்கு போடுகிறோம்,

பக்குவமானபிறகுதான் போடுகிறோம் என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருப்பது சரியாக இருக்காது என்று நான் கருதுகிறேன். இத்தகைய வரிகள் மூலம் தமிழகத்தில் இருக்கிற சாதாரண ஏழை எளிய மீனவ சமுதாயத்தினர் அத்தனை பேர்களும் பாதிக்கப்படுவார்கள் என்பதால், இதை நீக்க வேண்டும் என்று இந்த அவைக்கு எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 12-10)

அடுத்தாற்போல் நண்டு. எப்பவோ ஒரு சமயம் தான் இது கிடைக்குமே தவிர எல்லா நேரமும் கிடைக்காது. நண்டு பிடிக்கிறவர்கள் மீனவனைக் காட்டிலும் மிகவும் கஷ்டப்பட்டு சீரழிந்துக் கொண்டிருக்கிறார்கள். அவனுக்கு கிடைக்கும் ரூ. 5, ரூ. 10 தினசரி செலவிற்கே சரியாக இருக்குமே தவிர வேறு எதற்கும் போதாது. இந்த வரி விதிப்பினால் ரூ. 5-க்கு விற்கப் படுகிற நண்டானது, ரூ. 4 அல்லது ரூ. 3 என்ற அளவிற்கு விலை குறைந்து போய்விட்டால் கீழே இருப்பவன் தான் பாதிக்கப் படுகிறான். அதுமட்டுமல்ல, தவக்களைக்கு வரி விதிக்கப் படுகிறது. இதை கிராமத்தில உள்ளவன்தான் பிடிக்கிறான். எனவே அவன்தான் பாதிக்கப்படுகிறான். வரி போடுங்கள். போடவேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் யார் யார், எங்கெங்கு தாங்குவார்களோ அவர்களுக்கு போடவேண்டுமே தவிர மிகச் சாதாரண மீனவருக்கும், குடும்பத்திலே அன்றாடம் கஷ்டப்பட்டு கொண்டிருக்கும் கூலி வேலை செய்பவர்கள் மீதும் இத்தகைய வரிகளை போட்டால், அது இந்த அரசின் மீது இருக்கும் நல்லெண்ணத்திற்கு மாசு கற்பிப்பதாக இருக்கும் என்ற காரணத்தினாலேயும், இந்த அரசு நன்றாகச் செயல்பட வேண்டும் என்ற காரணத்தினாலேயும், ஏழை எளியவர்கள் மீது விதித்த வரியை திரும்பப் பெறவேண்டும் என்று கோரி விடைபெறு கிறேன். நன்றி.

**திரு. மா. சுந்தரதாஸ்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தை நாங்கள் எதிர்க்கிறோம். ஏனென்றால் இப்போதே வணிக வரி அதிகாரிகளுக்கு அதிகமான அதிகாரங்கள் இருக்கின்றன. அதற்கு மேலும் இத்தகைய அதிகாரங்களை கொடுத்தால அவற்றை சட்டத்தில் சேர்ப்பதற்கும், அவர்களுடைய ஸ்டேட்டஸை அதிகப் படுத்துவதற்கும், வாய்ப்பாக இருக்கும், இது நல்லது





அல்ல. ஏனென்றால் இப்போது கூட வணிகவரி அதிகாரிகள் முன்னால், வியாபாரிகள் கைதிகள் போல நின்றுக் கொண்டிருக் கிறார்கள். இத்தகைய அதிகாரங்களை கொடுத்தால் இன்னும் மோசமான முறையில் நடந்துகொள்வார்கள். சந்தேகமே இல்லை. இத்தகைய வரியினால், ஏழை எளிய மக்கள், நடுத்தர வாசி மக்கள் மிகவும் கஷ்டப்படுவார்கள். எனக்கு முன்னால் பேசியவர் கூறியது போல் மீனவ சமுதாய மக்களுக்கு இந்த வரியை போட்டால், மீன்கள் விலை குறைவதனால், சாதாரண மீனவ மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். மிடில் கிளாஸ் — நடுத்தர வாசிகள் உபயோகிக்கின்ற பல பொருள்களுக்கும் இத்தகைய வரி போடுவதால் ஒரு அரசுக்கு அதிக லாபம் வருகிறது என்றாலும் கூட மக்களுக்கு மிகச் சிரமங்களை உண்டாக்குகிறது.

குறிப்பாக வணிக வரி அதிகாரிகள் எப்படி நடந்துகொள் கிறார்கள் என்றால், நாங்கள் பஸ்ஸிலே வரும்போது பார்க் கிறோம். அவர்கள் 10, 20 லாரிகளை வழியிலே கொண்டு வந்து நிறுத்தி வைத்து, எங்களுடைய பேருந்துகள் கூட போக முடியாத அளவிற்கு தடுத்து நிறுத்திவிடுகிறார்கள். கேட்டால் தணிக்கை செய்கிறோம் என்று சொல்கிறார்கள். தணிக்கையில் என்ன செய்கிறார்கள் என்பது அந்த வணிகர்களுக்கும் தெரியாது. லாரியில் உள்ளவர்களுக்கும் தெரியாது. எனவே வணிக வரி அதிகாரிகளுடைய அதிகாரங்களை கூட்டுவது நிச்சயமாக நல்லதல்ல. ஆகவே எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் கூறியதுபோல், நாம்தான் அதிக அதிகாரங்களை அவர்களுக்கு கொடுக்கிறோம என்று சொன்னார்கள். எனவே தான் அத்தகைய அதிகாரங்களை கொடுக்கக்கூடாது என்று சொல்கிறோம். பல இடங்களில் சேல்ஸ் டாக்ஸ் அதிகாரிகளை பார்த்தால் எப்படி நடந்துக்கொள்கிறார்கள் என்றால், பணக் காரர்களைக்கூட மிகக் கேவலமாக ட்ரீட் செய்கிறார்கள். எனவே இதுபோன்று அதிகாரிகளுக்கு அதிகாரங்கள் கொடுப்பது நல்லது அல்ல. இத்தகைய வரிகளை நீக்குவது நல்லது. நடுத்தர மக்களும், ஏழை மக்களும் கஷ்டப்படுகிறார்கள் என்று சொல்லி இந்தச் சட்டத்தை நாங்கள் எதிர்க்கிறோம்.

***மாண்புமிகு திரு. நா. வீராசாமி:** சட்டப்பேரவை துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத் திருத்த முன்வடிவினை அறிமுகம் செய்கின்ற நோக்கில், மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுரங்கம் அவர்கள் இந்தச் சட்டத்தில் 17-வது

(திரு. நா. வீராசாமி) [1985 மார்ச் 27

விதியில் குறைக்கவோ அல்லது தள்ளுபடி செய்யவோ அதிகாரம் உண்டென்றும், இந்த அறிவிக்கை 59 (1)-ன் கீழ் கொண்டுவரப் பட்டதை அவர்கள் மறைத்து அன்று அவர்கள் விளக்கத்தினை கேட்டார்கள். அரசுக்கு எல்லா அதிகாரமும் இருக்கிறது. தமிழ்நாடு பொது விற்பனை வரி 59 சட்டத்தின் பிரகாரம் 59 (1)ல் இப்படி நோட்டிபிகேஷன் அறிவிக்கைகளைச் செய்த பிறகு, அந்த அறிவிக்கையை சட்டமன்றத்தில் சட்டமுன்வடிவாக கொண்டு வந்த சட்டம் இயற்றுகின்ற மரபு இந்த நாட்டில் பன்னெடுங்காலமாக இருந்து வருகிறது என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட கடமைப்பட்டிருக்கிறேன். நான் அவைகளை சொல்கின்ற நேரத்தில், மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னு ரங்கம் அவர்கள் ஏற்றுக்கொள்வார்களோ, ஏற்றுக்கொள்ளமாட் டார்களோ என்று ஐயப்படுகிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் மீது அவருக்கு நல்ல நம்பிக்கை இருக்கும் என்ற கருதுகிறேன். அவரும் அண்ணா அவர்களைத் தலைவராகக் கொண்டு இருந்தவர். நானும் அண்ணா அவர்களை இதய தெய்வமாகக் கொண்டிருந்தவன். அண்ணா அவர்கள் 1967 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 17-ஆம் தேதி இதே அவையில் வரவு செலவுத் திட்டம் கொண்டு வந்த நேரத்தில் இப்படிப்பட்ட அறிவிக்கைகளைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறார். அதை நான் படிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

"உயர்த்தப்பட்ட வரி விதிதங்களில் ஆடம்பரப் பொருள்கள், ஒருமுனை வரி பொருள்கள், அறிவிக்கையிடப்பட்ட சரக்குகள் மீதான உயர்வினை முறையென சட்டம் இயற்றும் முன்பாக தமிழக பொது விற்பனை வரி சட்டத்தில் 59 ஆம் பிரிவின் கீழ் அறிவிப்பு செய்வதன் மூலம் செயல்படுத்த முடியும். சமூக நலனுக்கு ஊறுவிளைவிப்போர்கள் இவ்வுயர்வினை அறிந்து அரசின் வருமானத்திற்குக் கேடுவிளைவிக்கும் வகையில் செயல் படுகிற முயற்சிகளைத் தடுக்கும் வண்ணம் ஒரு அறிவிப்பின் மூலம் ஒரு முனை வரிப் பொருட்கள், ஆடம்பரப் பொருட்கள் அறிக்கையிடப்பெற்ற சரக்குகள் இவற்றிற்கான திருத்திய விகிதங்களை ஜூன் 18 ஆம் நாள் முதல் செயல்முறைக்குக் கொண்டுவர அரசு முடிவு செய்திருக்கிறது," என்று அறிஞர் அண்ணா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இதுவே அறிஞர்



1985 மார்ச் 27] [திரு. நா. வீராசாமி]

அண்ணா அவர்களுடைய பேச்சு, இதுவே மாண்புமிகு உறுப் பினர் திரு. பொன்னுரங்கம் அவர்களுக்கு பதிலாக அமையும் என்று கருதுகிறேன். அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். சட்டசபை கூடுகிற நேரத்திலே இங்கே நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்படுகிற நேரத்திலே அரசு இந்த வரிகளை அறிவிப்பதால் மக்களுடைய அதிருப்திக்கு இந்த அரசு களை அறிவிப்பதால் மக்களுடைய அதிருப்திக்கு இந்த அரசு ஆளாகும் என்ற காரணத்தினால் முன்கூட்டியே இப்படிச் செய்கிறார்கள் என்று குற்றஞ்சாட்டினார்கள். அவர்கள் இன் னொன்றையும் சொன்னார்கள். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசு, இப்படி சட்டமன்றக்கூட்டம் இருக்கிற நேரத்திலே அதிகாரிகளுக்கு அதிகாரத்தைக் கொடுக்கிற ஒரு முறை விரும்பத்தகாத முறை என்றும் சொன்னார்கள்.

நான் அவர்களுக்கு பதிலாகச் சொல்லிக் கொள்கிறேன். சில அத்தியாவசிய நிலைமைகள் வரியை உயர்த்துவதற்கான அவசியத்தை ஏற்படுத்தலாம். எனவே சட்டசபை அரசுக்கு இந்த உரிமையை பிரிவு 51 (1) இன்கீழ் அளித்திருக்கிறது. ஆனால் பிரிவு 51 (2)இன் கீழ் இந்த உரிமை கட்டுப்பாட்டிற்குள் வைக்கப்பட்டுள்ளது. இதுபோன்ற கூறுகள் ஏனைய சட்டங் களிலேயும் உள்ளன. எனவே இது புதிதல்ல, ஆட்சேபத்திற்கு இதிலே ஒன்றும் இல்லை என்பதை நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுரங்கம் ஏதோ இன்றைக்கு இருக்கிற அரசு ஏழை பாமர மக்கள் தாங்கமுடியாத அளவுக்கு வரிகளை உயர்த்தியதைப்போலவும் அதனால் பாமர மக்கள் அவதிநிலைக்கு உள்ளாகியிருக்கிறார்கள் என்பதைப் போன்றும் ஒரு கருத்து தொனிக்கும்படி சொன்னார்கள். ஆனால் நிலைமை அப்படியல்ல. நாட்டின் வளர்ச்சிக்கேற்ப விஞ்ஞான வளர்ச்சிக்கேற்ப பல புதிய கண்டுபிடிப்புகள் கண்டுபிடிக்கப் படுகிற நேரத்திலே இந்தச் சட்டத்திலே அவைகள் எல்லாம் இடம்பெறாத நிலையில் இந்தச் சட்டத்திற்குள் அவைகளைக் கொண்டுவர முடியவில்லை. எனவே இந்தச் சட்டத் திருத்தத் திற்குள் அவைகளைக் கொண்டுவந்து வரிகளை விதிக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

(திரு. தா. வீராசாமி) [1985 மார்ச் 27

தரையிலே பதிக்கப்படுகிற ஓடுகளுக்கு என்ற அந்த வார்த்தைகளை வைத்துக்கொண்டு வியாபாரிகள் வரி ஏய்ப்பினைச் செய்கிற காரணத்தினால் இப்போது சட்டத் திருத்தம் கொண்டு வந்து எல்லா வகையான ஓடுகளுக்கும் என்ற முறையில் தரையிலே பதிக்கிற ஓடுகளுக்கும் சேர்த்து வரி விதிக்கப்படுகிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுரங்கம் பேசியபோது மீனவர்களுக்கு வரி விதிக்கிறோம் என்று சொன்னார்கள். அவருக்கு ஞாபகம் இருக்கிறதோ இல்லையோ தெரியவில்லை. நான் அவருக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். 3—3—1975 இல் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேதான் மீனவர்களுக்கு வரி விதிக்கப்பட்டது. அதற்குப் பிறகு மத்திய அரசு ஒரு குறிப்பிட்ட விற்பனைவரி சட்டத்தைக் கொண்டு வருகிற நேரத்திலே அதாவது முன்பு இருந்த ஏற்றுமதி அல்லது இறக்குமதி செய்யப்படுகிற பொருட்களுக்கு வரி கூடாது என்ற நிலையில் அதற்கு ப்ரிசேல் அல்லது ப்ரீ பர்ச்சேஸிற்கு ஏற்றுமதிக்கு முன்பு இருக்கிற விற்பனை அல்லது கொள்முதல் என்ற அந்த நிலைக்கு வரி கூடாது என்று சொன்னதன் காரணமாக அந்தச் சட்டம் செயலற்றுப் போயிற்று என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். அந்த அடிப்படையில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான் மீனவர்களுக்கு இறால்கள், நண்டுகள் இவைகளுக்கு வரி விதிக்கின்ற முறையைக் கொண்டுவந்தார்கள் என்பதை நான் அவருக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். ஆகவே இந்த அரசைப் பொறுத்த வரையில் மீனவர்களுக்கு வரிவிதிக்கிறோம் என்று சொல்வது முறையல்ல.

(பிற்பகல் 12.20)

"at the Point of last purchase"

அதாவது மீனவர்கள் கொண்டு வருகின்ற, மீனவர்களால் பிடிக்கப்படுகின்ற அந்த நண்டு, நத்தை, மீன், இவைகளை எல்லாம் இடையில் இருக்கின்றவர்கள் வாங்கி, இடைத்தரகர்கள் அதனை குறைந்த விலைக்கு வாங்கி பிறகு அதனை அதிகமான விலைக்கு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதும், அதே நேரத்தில் உள்நாடுகளில் அதிகமான விலைக்கு விற்பதும் என்ற முறை நம்முடைய நாட்டில் இருந்து வருகிறது. இன்று தமிழகத்தின் கடலோரப் பகுதியான திருநெல்வேலி, மதுரை, இராமநாதபுரம், தஞ்சாவூர்



1985 மார்ச் 27] [திரு. தா. வீராசாமி]

போன்ற பகுதிகளில் கிட்டத்தட்ட 200-லிருந்து 300 கோடி ரூபாய்க்கு மதிப்புள்ள இப்படிப்பட்ட நண்டு, நத்தை, மீன் இவைகள் எல்லாம் பிடிக்கப்படுகின்றது என்பது உங்களுக்கு நன்குதெரியும். இப்படி பிடிக்கப்படுகின்ற பெருமதிப்புள்ள பொருளகளுக்கு, உண்மையிலேயே அந்த லாபம் மீனவர்களுக்கு சென்று சேருகிறது என்று சொன்னால் இந்த அரசு இப்படி வரியை கொண்டு வராது என்பதை இந்த நேரத்தில் நான் கூறவிரும்புகிறேன். ஆனால் அப்பாவி, ஏழை மீனவர்களிடமிருந்து வசதி படைத்த பெரும்பணக்காரர்கள் வியாபாரிகள் அந்த பொருட்களை வாங்கி குறைந்த விலைக்கு வாங்கி, பிறகு சேர்த்து அதை பதப்படுத்தி அதனை அதிக விலைக்கு வெளிமாநிலங்களுக்கு, அல்லது வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் காரணமாக அவர்கள் கொள்ளை லாபம் அடிக்கிறார்கள் என்ற அடிப்படைக் காரணமாகத்தான் இன்று அப்படிப்பட்ட அந்த முறையை தடுத்து அரசுக்கு உரிய வருவாய் பெருக்குவதற்கு இந்த வழிவகை இங்கே செய்யப்பட்டு இருக்கிறதே ஒழிய, இந்த வரி மீனவர்களுக்கு அல்ல என்பதை முதற்கண் நான் தெளிவுபடுத்த கடமைப்பட்டு இருக்கிறேன். அப்படி வரி விதிக்கின்ற நேரத்தில் இங்கே இந்த மூலச் சட்டத்தில் சொல்லி இருக்கிற முறைக்கு மாறாக அந்த மீன், நண்டு, இறால் போன்றவைகளை அதை அப்படியே பிறந்த மேனியாக அனுப்பினால் அதை பயன்படுத்துவதற்கு கொடுத்தால் அதற்கு வரி இல்லை. ஆனால் அதில் மாற்றம் செய்கின்ற வகையில் பதப்படுத்துகிற நேரத்திலே

Physical or Chemical changes

அதை டின்னிலோ அல்லது வேறு எதிலோ அடைத்து பதப்படுத்தி அனுப்பும் நேரத்தில் அதற்கு வரி விதிக்கப்படுகிறது என்பதையும் அது வியாபாரிகள் மீது

Physical or Chemical changes

என்ற முறையில் விதிக்கப்படுகிறது என்று சொல்லி, இங்கே கொண்டு வரப்பட்டு இருக்கிற சட்டம் ஏழை எளிய மக்கள் மீது வரி விதிக்கின்ற சட்டம் அல்ல, வரியை உயர்த்துகின்ற சட்டம் அல்ல என்று கூற விரும்புகிறேன்.

ஒன்றைச் சொன்னார்கள். இன்று இப்படிச் சட்டம் கொண்டு வரப்பட்டு இதனுடைய அதிகாரத்தினை அதிகாரிகள் பெருமக்கள் கையில் கொடுக்கின்ற நேரத்தில் அவர்கள் வியாபார

[திரு. தா. வீராசாமி] [1985 மார்ச் 27

பெருங்குடி மக்களை துன்புறுத்தி சொல்லொண்ணா துன்புறுத்தலுக்கு ஆட்படுத்துவார்கள் என்று சொன்னார்கள். அப்படி செய்வார்களானால் அது கவனிக்கப்படும் என்றும் அதற்கு தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் நான் கூறவிரும்புகிறேன். ஆனால் இன்று எந்த ஜனநாயக மக்கள் அரசும், சட்டத்தை இயற்றி அந்த சட்டத்தை அந்த அரசோ அல்லது அமைச்சரோ நேரடியாக நிறைவேற்றமுடியாது என்பதும், அப்படிப்பட்ட அதிகாரத்தை அதிகாரிகள் கையில் தான் ஒப்படைத்து அதை நிறைவேற்றச் செய்ய வேண்டும் என்பதும், அப்படி நிறைவேற்றுகின்ற நேரத்தில் அதை கண்காணிக்கின்ற பொறுப்பு அரசுக்கு உண்டு என்பதும் நன்றாகத் தெரியும். ஆகவே, அந்த அடிப்படையில் தான் சொல்லியிருக்கிறார்கள். நீங்கள் சொல்வது மாதிரி விரும்பத்தகாத முறைகேடுகள் நாட்டில் நடைபெறாமல் இருக்கும்படி நிச்சயமாக இந்த அரசு கவனிக்கும் என்பதை இந்தநேரத்தில் கூறி துணைத்தலைவர் அவர்களே, இந்த சட்ட முன்வடிவை சட்டமாக நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி:

"1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 18/1985) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.



1985 மார்ச் 27]

**மாண்புமிகு திரு. தா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 18/1985) நிறைவேற்றப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

8. அறிக்கை அளித்தல் (விதி-111).

**மின் அணுவியல் சாதனங்களின் உற்பத்தியை விரைவாக்கிடும் பாரதப் பிரதமரின் திட்டம்.**

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த ஒரு நாட்டின் தொழில் வளத்திலும் மின் அணுவியல் ஆற்றிடும் தலையாய பங்கினைக் கருத்தில் கொண்டு நமது பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட வரைவில் மின் அணுவியல் சாதனங்களின் உற்பத்தியை விரைவாக்கிட ஆண்டொன்றிற்கு ரூபாய் இரண்டாயிரம் கோடி என்ற நிலையிலிருந்து 1989—90 ஆண்டுவாக்கில் ஆண்டொன்றிற்கு ரூபாய் பத்தாயிரம் கோடி என்று உயர்த்த திட்டமிட்டுள்ளார். இந்நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் வேகத்தைத் துரிதப்படுத்த, வேளாண்மை, கல்வி அல்லது தொழில் உற்பத்தியைப் பெருக்குவது போன்ற எந்தத் துறையாய் இருப்பினும் மின் அணுவியல் தொழில்நுட்ப அறிவினை மிகவும் பெருமளவில் உபயோகிக்க அரசு முடிவெடுத்துள்ளது. வளர்ச்சியை விரைவாகவும் அர்த்தமுள்ளதாகவும் நிலையிலுள்ள இந்த மின் அணுவியல் தொழிலை ஊக்குவிக்கும் பொருட்டு மிகவும் முக்கியமான துறைகளில் உதிரி உறுப்புக்களை உற்பத்தி செய்ய உரிமம் பெறவேண்டுமென்ற நிலையை அகற்றவும் மற்றும் அத்தகைய உறுப்புக்களை மட்டுமின்றி அவைகளைச் சார்ந்த ஒட்டுமொத்தமான இதர பாகங்களையும் ஒன்றுபடுத்தி உற்பத்தியாகும் பொருளுக்கு உரிமம் பெறக்கூடிய வகையில் எளிதாக்கும் திட்டத்தை அரசு அறிமுகப் படுத்தியுள்ளது. உதாரணமாக நுகர்வோர் மின் அணுவியல் துறையில் ஒரு

உற்பத்தியாளர் மேற்கண்ட பொதுவான உரிமம் பெறுவதன் மூலம் பொது மக்கள் அன்றாடம் உபயோகப்படுத்தும் இரண்டு அலை வரிசை வானொலிப் பெட்டிகள், டிரான்ஸிஸ்டர் வானொலிப்பெட்டிகள், இருசாதனம் கொண்ட ஒரு அமைப்பு, ஒலிப் பதிவுக் கருவிகள், விடியோ கேசட் ஒலிப்பதிவு சாதனங்கள் உட்பட்ட எல்லா மின்னணு சாதனங்களையும் உற்பத்தி செய்ய இயலும். இத்தகைய எளிமையான முறையால் ஒரு உற்பத்தியாளர், வேகமாக வளர்ந்துவரும் தொழில்நுட்ப முன்னேற்றத்திற்கு ஏற்ப அதே வேகத்தில் தன்னை ஈடுபடுத்திக்கொள்ள முடியும்.

மேற்கண்ட தேசிய தொழில்நுட்பவியல் கொள்கைக்கு ஏற்ப நம் முதல்வர் அவர்கள் மின்னணுவியல் தொழிலுக்கு புதிய ஆக்கமும் ஊக்கமும் கொடுக்க உத்தேசித்துள்ளார்கள். முக்கியமானதும் வளர்ந்து வரும் தொழில் முன்னேற்றத்தில் அரிய பங்கு வைப்பதுமான இத்துறையில் ரூ. 300 கோடி முதலீடு செய்வதன் மூலம் ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் மின் அணுவியல் தொழில் துறையில் மாத்திரம் நமது மாநிலத்தில் ஆண்டு ஒன்றிற்கு ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு உற்பத்தி செய்யும் திறனை அடைவதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்கள் திட்டமிட்டுள்ளார்கள். இம் மாநிலத்தின் தொழில் அமைச்சர் என்ற முறையில் தமிழ்நாடு மற்றும் இந்தியாவின் மற்ற பகுதிகளிலிருந்து எல்லா தொழில் துவக்குவோரையும், தொழில் அதிபர்களையும் வரவேற்று சிறந்த குறிக்கோளை அடைவதற்காக முழு மனதுடன் பங்கு கொள்ளும்படி வேண்டுகிறேன். மேலும் தாய் நாட்டிற்கு வெளியே வசிக்கும் தமிழர் மற்றும் இந்திய உடன் பிறப்புகளையும் இந்தியாவில் பண முதலீடு செய்யும்படியும் கேட்டுக்கொள்கிறேன் இம் மாநில அரசு, தனது மின் அணுவியல் நிறுவனம் வாயிலாகத் தீட்டப்படும் கூட்டு முயற்சிகளுக்கு ஊக்கமும் உதவியும் அளிக்கத் தயாராக உள்ளது. எல்லாவற்றிற்கும் மேலாக, குறிப்பாக பல்திறன் பொறி சார்புத் தயாரிப்பு (கம்ப்யூட்டர் சாஃப்ட்வேர்) திட்டங்களுக்கு சிறப்பான முக்கியத்துவம் அளிக்கப்படும். 23—3—1985 அன்று சென்னை வந்திருந்த இந்திய அரசின் மின் அணுவியல் ஆணைக் குழுவின் தலைவர் டாக்டர் சஞ்சீவி ராவ் அவர்களுடன் தமிழகத்தில் தொழில்களை மின் அணுவியல் மயமாக்கும் வேகத்தைத் துரிதப்படுத்துவது பற்றி விளக்கமாக விவாதித்தேன்.





மின் அணுத் தொழிலுக்கு குறைவாகவே மின்சாரம் மற்றும் நீர் தேவைப்படுவதாலும் மனிதனுடைய திறமையை அடிப்படையாகக் கொண்டுள்ளதாலும் இத்தொழில் தமிழகத்திற்கும் மிகவும் பொருத்தமான தொழிலாகும். மின் அணுவியல் தொடர்பான பாடங்களை அதிக அளவில் பாடத்திட்டத்தில் சேர்க்கவும், தமிழகத்தில் கல்வி நிலையங்களில் மின் அணுவியல் தனி வகுப்புகளை (கோர்ஸ்) ஆரம்பிப்பது தொடர்பாகவும் கல்வி அமைச்சருடன் விவாதித்துள்ளேன்.

இந்த குறிக்கோள்களை அடைவதற்கு தகுதி வாய்ந்த தொழில் நுட்பத்தில் தேர்ச்சி பெற்ற மற்றும் உயர்ந்த லட்சியத்தை உடையவர்களைத் தமிழகம் பெற்றுள்ளது. இந்தத் தொழிலில் பயன்படும் முறையில் வேலைவாய்ப்பு அளிப்பதற்குத்தக்க, மிகுந்த அளவில் பி.எஸ்சி. மற்றும் எம்.எஸ்சி பெண் பட்டதாரிகளை நாம் பெற்றிருப்பது நம் அதிர்ஷ்டமாகும். மின் அணுவியல் தொழில் வளர்ச்சிக்குத் தேவையான குளிர்ந்த தட்பவெப்ப நிலை உடைய உதகை, ஏற்காடு, கொடைக்கானல் மற்றும் ஏலகிரி போன்ற மலை வாசஸ்தலங்களைத் தமிழகம் பெற்றிருப்பது பெருமைப்பட வேண்டிய ஒன்றாகும்.

நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் மக்கள் நலனைச் சார்ந்த பணிகளை எப்போதும் ஊக்குவிக்க பெரிதும் விழைவதால் மின் அணுவியலை அடிப்படையாகக் கொண்ட மருத்துவச் சாதனங்களை உற்பத்தி செய்வதற்கும் தனி முயற்சி எடுத்துக் கொள்ளப்படும்.

(பிற்பகல் 12.30)

7. அரசினர் சட்ட முன்வடிவுகள் — தொடர்ச்சி).

(உ) பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்ட முன்வடிவு 1985.

* மாண்புமிகு திரு. நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1985)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

@ 1985 ஆம் ஆண்டு மார்ச் 25 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[திரு. தா. வீராசாமி] [1985 மார்ச் 27

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1959 ஆம் ஆண்டு தமிழ் நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 1/1959), 59 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி மேற்சொன்ன சட்டத்தின் முதலாம் இணைப்புப் பட்டியலைத் திருத்தி தமிழ் நாடு அரசு வெளியிட்டுள்ள அறிவிக்கைகள் பின்வருமாறு:

( ) 1985 ஆம் ஆண்டு சனவரி 1 ஆம் தேதியிலிருந்து இனம் (இனம் 69) தேங்காயைப் பொறுத்து வரி விதிக்கும் முறையை வதற்கு.

(ii) 1985 ஆம் ஆண்டு சனவரி 5 ஆம் தேதியிலிருந்து (இனம் 69) தேங்காயைப் பொறுத்து வரி விதிக்கும் முறையை முதல் கொள்முதல் முனையிலிருந்து கடைசி கொள்முதல் முனைக்கு மாற்றுவதற்கு

(i i) 1985 ஆம் ஆண்டு சனவரி 1 ஆம் தேதியிலிருந்து வளையும், வளையா பைப்புகள், ஓஸ் பைப்புகள், டியூப்கள் அவை ஒளிபுகும், பாதி அளவில் ஒளி புகும் அல்லது ஒளி புகாத தன்மையுடையதாயினும் அவை உள்ளடங்கலாக. பி.வி.சி. பைப்புகள் டியூப்கள் மற்றும் பொருத்திகளின் எல்லா வகைகளையும் சேர்க்கும் வகையில், இனம் 136 க்குப் பதிலாக அமைப்பதற்கு.

2. மேற்சொன்ன சட்டத்தின் 59 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்படி சட்டமன்றத்தின் நடப்பு அமர்விலேயே மேற்சொன்ன அறிவிக்கைகளுக்குப் பதிலாக அமையும் வகையில் ஒரு சட்டமுன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இச்சட்ட முன்வடிவை பேரவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளும்படி கோருகிறேன்.

* திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் அவர்கள் 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்ட முன்வடிவினை இங்கே சமர்ப்பித்திருக்கிறார்கள். ஏற்கனவே வரியிலிருந்து தப்பித்துக்கொள்கிற சில வியாபாரிகளை வரி விதிப்பிற்கு உள்ளாக்குவதற்காக ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்துள்ளார். அந்தத் திருத்தத்தைப்



1985 மார்ச் 27] [திரு. ஆ. நடராசன்]

போல இந்தத் திருத்தமும் பி.வி.சி. பைப்புகளும் அதைப்போல ட்யூப்கள் என்ற வாக்கியத்தின் காரணமாக சில பொருட்களுக்கு வரி விதிக்கப்படாமல் ஏமாற்றக்கூடிய வாய்ப்பு ஏற்படும் என்பதற்காக இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்திருப்பதில் எங்களுக்கு எந்த ஆட்சேபனையும் இல்லையென்று சொன்னாலும் 9 சதவீதமாக இருந்த இந்த வரி விதிப்பை 10 சதவீதமாக உயர்த்தியிருக்கிறார்கள். 1 சதவிகிதம் வரியை உயர்த்தியிருக்கிறார்கள். பி.வி.சி. யைப் பொறுத்தவரையில் ஏற்கனவே விதிக்கப்பட்ட வரியாக இருந்தாலும் இந்த பி.வி.சி. பைப்பைத்தான் பல உள்ளாட்சி மன்றங்களிலும் சாதாரண ஏழை எளிய நடுத்தர மக்களாலும் பயன்படுத்தக்கூடிய நிலைமை இன்றையதினம் இருந்து வருகிறது. ஒரு காலத்திலே ஜி.ஐ. பைப்பை குடிநீர் குழாய்களுக்கு உபயோகப்படுத்தக்கூடிய நிலைமை இருந்து வந்தது.

ஆனால் இன்றையதினம் எல்லா உள்ளாட்சி மன்றங்களிலும் அதைப்போல, மின்சார இணைப்புகளுக்கு வேண்டிய ஒயரிங் போன்ற காரியங்களுக்கு பி.வி.சி. பைப்கள் உபயோகப்படுத்துகிற நிலைமைகள் இருப்பதால் அதிலே மேலும் வரி விதிப்பைக் கொண்டு வருவது சரியான, ஒரு நியாயமான முறையாக இருக்காது என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். அதைப் போல வணிக வரித் துறையைப் பொறுத்தவரையில் வியாபாரிகள் தாங்கள் செலுத்த வேண்டிய வரியிலேயிருந்து தப்பிப்பதை நிச்சயமாக நாம் கண்டுபிடித்து அவர்களுக்கு வரி போடவேண்டும். ஆனால் அதே நேரத்தில் வியாபாரிகள் அட்வான்ஸ் டாக்ஸ், முன்பணமாகக் கட்ட வேண்டுமென்று ஆண்டு முதலிலேயே ஆயிரக்கணக்கான ரூபாயை, இலட்சக் கணக்கான ரூபாயை, அவர்களுக்கு ஒரு அபராதம் போல, அவர்களிடத்திலிருந்து வசூல் செய்கின்ற கொடுமை இன்றைய தினம் நடந்து வருகிறது; தவிர்க்க வேண்டுகிறேன்.

அது மட்டுமல்ல, ஒரு வியாபாரி என்றால் உரிமம் பெற வேண்டும், லைசன்ஸ் பெற வேண்டுமென்று சொன்னால், அதற்கு அவர்கள் ஏராளமான செலவு செய்யவேண்டிய நிலைமை இருந்து வருகிறது. அதிலே, குறிப்பாக, 6, 7 மாதகாலத்திற்கு முன்னாலே கோவையிலே இருக்கிற எண்ணெய் வியாபாரிகளை திடீரென்று நூற்றுக்கணக்கான அதிகாரிகள் போய் இரவு பகலாக சோதனை

[திரு. ஆ. நடராசன்] [1985 மார்ச் 27

செய்து — அவர்களிடத்திலேயிருந்து வசூல் செய்வதிலே, எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால், அதே நேரத்திலே, அவர்களிடத்திலே போய் சோதனை நடத்திவிட்டு — ஆயிரக் கணக்கான ரூபாய் இலஞ்சமாகப் பெற்றார்கள். அப்படி இலஞ்ச மாகப் பெற்றதை விசாரித்தபொழுது, அதிலே எங்களுக்கு மாத்திரமல்ல, பெரிய அதிகாரிகளுக்கும் பங்கு இருக்கிறது என்ற வகையில் செயல்பட்டு வருவதை மாண்புமிகு வணிக வரித்துறை அமைச்சர் அவர்கள் கவனிக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்த அளவில் இப்பொழுது 1 சதவிகிதம் அதிகப்படுத்துகின்ற வரி விதிப்பைக் கைவிட வேண்டுமென்று கேட்டு என்னுடைய உரையை முடிக்கிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: தலைவர் அவர்களே, விற்பனை வரி சம்பந்தமாக கொண்டு வந்திருக்கக்கூடிய சட்டம் சம்பந்த மாக சில கருத்துக்களை எடுத்துச் சொன்னதோடு, இன்னும் ஒரு சில கருத்துக்களை இந்தச் சட்டத்திலே சொல்ல விரும்பு கிறேன். ஏற்கெனவே நாங்கள் என்ன எடுத்துச்சொன்னோம் என்றால் விற்பனை வரி சம்பந்தமாக இயற்றப்பட்டிருக்கிற சட்டங்களாக இருந்தாலும் கூட மக்கள் பயன்படுத்துகிற பொருள்களுக்கு வரி விதிப்பது சரியல்ல என்றுதான் எடுத்துச் சொன்னோம். குறிப்பாக சென்ற சட்டத்திலே பேசுகிறபோது ஓடுகளுக்கு வரி போட்டிருப்பதை தவிர்க்க வேண்டுமென்று சொன்னேன். ஏனென்றால் வியாபாரிகள் அதிலிருந்து தப்பித் துக்கொள்கிறார்கள். முறையாக அவர்கள் கொடுக்கவேண்டிய வரிகளை செலுத்துவதில்லை. அதற்காக என்னென்ன நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமோ அவற்றை எடுக்க வேண்டும்.

பி.வி.சி. பைப்புகளை பொறுத்தவரையில் 10 சதவீதமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. அதைப்போலதான் மற்ற சட்டத்திலே 5 சதவீதமாக இருந்தது 8 சதவீதமாக உயர்த்தப்பட்டிருக்கிறது ஆகவே நாங்கள் என்ன சொல்கிறோம் என்றால் மக்கள் வாழ்க்கையோடு சம்பந்தப்பட்டிருக்கிற பொருள்களுக்கு வரி விதிப்பதை தவிர்த்து, நல்ல வசதியுள்ளவர்களிடம் வரிகளை வாங்குகிற வகையில் சட்டங்களை நீங்கள் கொண்டு வரவேண்டும்.



1985 மார்ச் 27] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

வரிகளை கொடுக்கவேண்டிய பெரிய வியாபாரிகள் சரியான முறையில் செலுத்தாமல் சில வியாக்கியானங்களைச் சொல்கி றார்கள். அந்த வியாபாரிகள் வரிகளைச் செலுத்தாமல் தப்பித் துக்கொள்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நாம் நடைமுறையில் என்ன பார்க்கிறோம் என்றால் சின்ன சின்ன வியாபாரிகளிடமிருந்து இலாக்கா முறைதவறி வரிகளை வசூலிக்கிறது. அந்த சிறிய வியாபாரிகளை ஹராஸ் செய்து வரிகளை வசூல் செய்கிறார்கள். பெரிய வியாபாரிகள் இந்த வரிகளை முறையாக செலுத்துகின்ற வகையில் இந்தச் சட்டத்தில் வழிவகைச் செய்யப்பட வேண்டும். சில வியாபாரிகள் சொல்கி றார்கள், சிலர் லஞ்சம் என்று அந்தமாதிரி வாங்கி அவர்களோடு சில அட்ஜட்ஸ்மெண்ட்ஸ் செய்து இவர்கள் கண்ணை அடைத்து விடுகிறார்கள்.

இதன் காரணமாக இப்போது என்ன பார்க்கிறோம் என்றால் வரி ஏய்ப்பு செய்பவர்கள் பெரிய வியாபாரிகள் தான். அவர்களை இந்தச் சட்டத்திற்குள் கொண்டு வருகிற வகையில் ஏற்பாடு களை அரசு செய்ய வேண்டும்.

அடுத்து இன்றைக்கு பி.வி.சி. பைப்புகளுக்கு வரி விதிக்கப்பட் டிருக்கிறது. இதன் காரணமாக எடுக்கப்பட்டிருக்கிற குடிநீர் திட்டங்களுக்கு அதிகமாக செலவு செய்கிற நிலைமை ஏற்படும். ஆகவே தான் மக்களின் வாழ்க்கையோடு சம்பந்தப்பட்டிருக்கிற பொருள்களுக்கு ஏற்கனவே விற்பனை வரி சட்டத்திலே இருக்கிறது என்ற ஒரே காரணத்தினால் மட்டும் இப்போது வரி விதித்திருப்பது நியாயமாக இருக்காது. ஆகவே மக்களின் வாழ்க்கையோடு சம்பந்தப்பட்டிருக்கிற பொருள் களுக்கு வரிவிதிக்கக் கூடாது. அவைகளுக்கு வரி விலக்கு அளிக்க வேண்டுமென்று வலியுறுத்த விரும்புகிறேன். அதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும். பெரிய வியாபாரி களிடத்தில் வரிகளை வசூலிப்பதில் இலாக்காவில் இருக்கிற அதிகாரிகளின் தயக்கத்தை மாற்றி, அவர்களிடத்தில் கறாராக வரிகளை வசூலிக்கச் செய்யவேண்டும். சிறிய வியாபாரிகளை ஹராஸ் செய்து வரிகளை வசூலிக்கும் நிலைமையை மாற்ற வேண்டும். அதுதான் இன்றைக்கு இருக்கிற பிரச்னைக்கு ஒரு தீர்வு ஏற்படுத்தும். அந்த முறையில் உரிய நடவடிக்கைகளை

எடுக்கவேண்டுமென்று சுட்டிக்காட்டி, வரிகளை உயர்த்தக்கூடிய முறையில் உள்ள இந்த ஏற்பாடுகளை எதிர்க்கிறோம் என்று கூறி முடிக்கிறேன்.

(பிற்பகல் 12.40)

* **மாண்புமிகு திரு. தா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இங்கே 1, 69, 136 ஆகிய மூன்று இனங்களில் இரண்டு இனங்களிலுள்ள வரியை அப்படியே வைத்தும் அதில் சில இனங்களைச் சேர்க்கின்ற வகையிலும் இந்தச் சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

'All varieties of P.V.C. pipes, tubes and fifttings . .'

என்பதில்

'including flexible and rigid pipes, hoses and tubes, whether transparent, semi-transparent or non-transparent'.

என்ற வார்த்தைகளை அதிலே கொண்டுவந்து இதற்கும், வரி விதிப்பிலிருந்து தப்பித்துக்கொள்ளாமல், வரி வசூல் செய்கின்ற வகையில் சட்டப்பிரிவு கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் சொல்லும்போது இங்கே போடப்படுகின்ற வரி ஏழை எளிய மக்களுக்குப் போய்ச் சேராமல் பெரிய தொழில் அதிபர்களிடம் வரி வசூல் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் தாங்குபவர்களிடத்தில் வரி வசூலித்து ஏழைகளுக்கு அதை செலவு செய்ய வேண்டுமென்ற முறையில் ' "Tapping the rich and patting the poor" என்று சொன்னார்கள். பேரறிஞர் அண்ணா அவர்களுடைய வழியில் செயல்பட்டு வருகின்ற மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சி இன்று சமுதாயத்தில் இருக்கக்கூடிய பெரிய வியாபாரிகள், பெரிய தொழில் அதிபர்கள் போன்றவர்கள் வரியிலிருந்து தப்பித்துக்கொள்ளக் கூடாது என்ற அடிப்படையில்தான் இச் சட்ட முன்வடிவுகளைக் கொண்டு வருகிறோம் என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று தேங்காய் விலையைப் பார்த்தால் கொப்பறைத் தேங்காய் என்று சொல்லி, பெரிய பெரிய வியாபாரிகள், தொழில் அதிபர்கள் முற்றிய தேங்காயை வாங்கி, அவற்றை கொப்பறையாக்கி, எண்ணெய் பிழியும் ஆலை அதிபர்கள் இருக்கிறார்கள்.





அவர்கள் எல்லாம் வரியிலிருந்து தப்பித்துக் கொள்கின்ற நிலைமை, முற்றிய தேங்காய் வாங்குபவர்கள் என்ற முறையிலே வரி ஏய்ப்பு செய்கின்ற நிலைமை இருப்பதை இப்போது கூட நீங்கள் பார்க்கிறீர்கள். ஆகையால் ' "At the point of first purchase in the State" ' என்பதைமாற்றி "At the pointly last purchase in the State"

என்ற முறையிலே கொண்டுவந்து, எண்ணெய் பிழியும் ஆலை அதிபர்கள் வரி செலுத்தும் நிலையை உருவாக்கியிருக்கிறோம். இப்படிப்பட்ட நேரத்தில் உற்பத்தி செய்கின்ற விவசாயிகளிடம் இந்த வரியை விதிக்கவில்லை. ஆனால் அதை வாங்கி எண்ணெய் பிழியும் பெரிய ஆலை அதிபர்கள் பல கோடிக்கணக்கான ரூபாய் சம்பாதிக்கும்போது, அரசுக்கு வருமானத்தைக் குறைத்துக் காட்டி, வரி ஏய்ப்பு செய்யும்போதுதான் இப்படிப்பட்ட சட்டத் திருத்தங்கள் கொண்டுவரப்படுகின்றன என்பதை திரு. ஹேமச்சந்திரன் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்தவகையிலே இந்த சட்ட முன்வடிவு கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆகையால் மாண்புமிகு உறுப்பினர்கள் இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 19/1985) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

[திரு. தா. வீராசாமி] [1985 மார்ச் 27

**மாண்புமிகு திரு. தா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 19/1985) நிறைவேற்றப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (28—3—1985) காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 12.44 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 9. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

128. சோழன் பொறியியற் கழகத்தின் 1983-84-ஆம் ஆண்டிற்கான பத்தாம் ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

129. அண்ணா பொறியியற் கழகத்தின் 1983-84-ஆம் ஆண்டிற்கான பத்தாம் ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

130. அண்ணா போக்குவரத்துக் கழகத்தின் 1983-84-ஆம் ஆண்டிற்கான பன்னிரண்டாம் ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]



1985 மார்ச் 27]

### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

34. 1985-86-ஆம் ஆண்டிற்கான 1, 2, 7, 8, 9, 11, 41 மற்றும் 47 ஆகிய கோரிக்கைகளின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

35. 1985-86-ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 3 மற்றும் 13 முதல் 16 வரையிலான விரிவான மானியக் கோரிக்கைகள்.

36. 1985-86-ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 4, 5, 6, மற்றும் 12 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

37. 1985-86-ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 10 மற்றும் 22 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

38. 1985-86-ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 20 மற்றும் 50 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

39. 1985-86-ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண் 17-ன் விரிவான மானியக் கோரிக்கைகள்.

40. 1985-86-ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 18, 19 மற்றும் 49 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

41. 1985-86-ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 21, 25, 45 மற்றும் 56 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

42. 1985-86-ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 23, 28 மற்றும் 35 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

43. 1985-86 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 24, 26, 27, 48, 51 மற்றும் 57 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

44. 1985-86-ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 30 முதல் 32 வரையிலான கோரிக்கைகளின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

45. 1985-86-ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 29, 33, மற்றும் 34 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

46. 1985-86-ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 36 மற்றும் 52 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

[1985 மார்ச் 27

47. 1985-86-ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 37, 38 மற்றும் 53 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

48. 1985-86-ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 37 — பொதுப்பணிகள் — கட்டிடங்கள் மற்றும் 53-பொதுப்பணிகள்— கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு ஆகியவற்றின் பணி குறித்த விவரங்கள்.

49. 1985-86-ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 39 மற்றும் 54 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

50. 1985-86-ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 39— சாலைகளும் பாலங்களும், 54-சாலைகள் பாலங்கள் குறித்த மூலதனச் செலவு ஆகியவற்றின் பணிகுறித்த விவரங்கள்.

51. 1985-86-ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 40, 44 மற்றும் 55 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

52. 1985-86-ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 42, 46 மற்றும் 59 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

53. 1985-86-ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 43 மற்றும் 58 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

54. பதவிகள் சம்பளவிதங்கள் பற்றிய விவர அறிக்கை (1985-86) (ஆங்கிலம்).

55. 1985-86-ஆம் ஆண்டில் வருவாய் குறித்த விரிவான வரவு-செலவுத்திட்ட மதிப்பீடுகள்.

56. 1985-86-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசின் ஆண்டு நிதிநிலை அறிக்கை. (வரவு-செலவுத் திட்டம்.)

57. 1985-86-ஆம் ஆண்டிற்கான நிதி நிலை குறிப்பு (தமிழ், ஆங்கிலம்).

58. 1985-86-ஆம் ஆண்டிற்கான நிதி நிலை குறிப்பின் இணைப்புகள். (தமிழ், ஆங்கிலம்).

59. 1985-86-ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்களின் பட்டியல் (பகுதி-2 திட்டங்கள்) (தமிழ், ஆங்கிலம்).



[1985 மார்ச் 27

60. 1985-86-ஆம் ஆண்டு திட்டம் (நிதிநிலைக் குறிப்பு — திட்ட இணைப்பு) (தமிழ், ஆங்கிலம்).

61. 1985-86-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட உரையின் இணைப்புகள் (தமிழ், ஆங்கிலம்).

62. வரவு-செலவுத் திட்ட விளக்க நூல், 1985-86 (தமிழ், ஆங்கிலம்).

63. 1985-86-ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு (தமிழ், ஆங்கிலம்).

64. 1985-86-ஆம் ஆண்டில் உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி கோரிக்கைகள் (தமிழ், ஆங்கிலம்).

65. 1985-86-ஆம் ஆண்டில் உடனடிச் செலவுக்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு (தமிழ், ஆங்கிலம்).

66. 1985-86-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை குறித்து, நிதி அமைச்சர் மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ஆற்றிய உரை (தமிழ், ஆங்கிலம்).

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFUSSIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot District)
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 45D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-10.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madras-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 Inter National Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagohi & Company, 286, R.B. Gandhi Street, Calcutta-11.

© Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.

299/86
2831
24 ஏப் 1986
சென்னை-600 009

# தமிழ்நாடு
## சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு

# TAMILNADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

வியாழக்கிழமை, 1985 மார்ச் 28, தொகுதி IV-எண். 2.
Thursday the 28th March 1985—Volume IV-No. 2.

சட்டமன்றப் பேரவை செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Department, Fort St. George,
Madras-600 009

விலை-ரூ. 3.50 காசுகள்]  Price Rs. 3-50 paise

## உள்ளடக்கம்

28-3-1985


| | | பக்கங்கள் |
|---|---|---|
| 1. வினாக்கள்–விடைகள்— | | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | .. | 127—148 |
| 2. அறிவிப்புகள்— | | |
| (அ) அண்ணாமலை பல்கலைக் கழக ஆட்சிப் பேரவை—உறுப்பினர் தேர்தல் | .. | 149 |
| (ஆ) பேரவை அளவில் மாற்றம் | .. | 264 |
| கவன ஈர்ப்புகள்— | | |
| 3. (அ) தேர்வாணைக் குழுவின் தேர்வுக்கான வயது வரம்பை பின்தங்கிய மற்றும் ஆதி திராவிட வகுப்பினர்களுக்கு தளர்த்தல் | | 150—153 |
| (ஆ) சென்னை சேப்பாக்கம் தொகுதியில் குடிசைகள் அகற்றப்பெற்றுள்ளது குறித்து.. | | 154—156 |
| 4. அரசினர் சட்ட முன்வடிவு— | | |
| நிதி ஒதுக்க (உடனடிச் செலவிற்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு 1985 | .. | 157 |
| 5. வரவு–செலவுத் திட்டம் 1985-86 பொதுவிவாதம் | | 158—264 |
| | | 265—274 |
| திருமதி டி. யசோதா | .. | 158—178 |
| திரு. எப். எம். இராசரத்தினம் | .. | 178—186 |
| திரு. மு. இராமநாதன் | .. | 186—201 |
| திரு. துரை கோவிந்தராசன் | .. | 201—217 |
| டாக்டர்..க. நல்லமுத்து | .. | 220—224 |
| திரு. த. பழனி | .. | 224—232 |
| தி . ஜே. ஹேமச்சந்திரன் | .. | 232—246 |
| திரு. மு. பாண்டுரங்கன் | .. | 246—254 |
| திரு. மா. சுந்தரதாஸ் | .. | 254—263 |
| திரு. க. பாலசுப்பிரமணியன் | .. | 265—274 |
| 6. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் | .. | 274—275 |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

*1985, மார்ச் 28, வியாழக்கிழமை*

*பங்குனி 15, ரக்தாட்சி—திருவள்ளுவர் ஆண்டு 2016.*

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

“எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு”

எப்பொருளை யார்யாரிடம் கேட்டாலும், கேட்டவாறே கொள்ளாமல், அப்பொருளின் மெய்யான பொருளைக் காண்பதே அறிவாகும்.

## 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

**நெல்லை மாவட்டத்தில் கூடுதல் அனல்மின் நிலையம்.**

24—(* வினா எண் 747) திரு. சா. துரைசாமி: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டத்தில் கூடுதல் அனல் மின் நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** (அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள தூத்துக்குடி அனல் மின் நிலைய விரிவாக்கத் திட்டம் (2 × 210 மெ. வா.) ஒப்புதலுக்காக மைய அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளது. ஒப்புதல் கிடைத்தவுடன் செயல்படுத்தப்படும்.

**திரு. சா. துரைசாமி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் எப்போது அனுப்பப்பட்டது? நடப்பு நிதியாண்டில் பணிகள் துவங்கப்படுமா? மின் பற்றாக் குறையைப் போக்க, இந்தப் பணியை விரைவாகத் துவக்க அரசு நடவடிக்கை எடுக்குமா? இந்த மின் நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் மின் சக்தித் திறன் அளவு எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்**: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் 1981 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் சுமார் 710 மெ. வாட் அதாவது ஒரு 500 மெகாவாட், அடுத்து இன்னொரு 210 மெகாவாட், ஆக 710 மெகாவாட்டுக்கு போட்டு அனுப்பப்பட்டது. ஆனால் நிலக்கரி கிடைப்பதைப் பொறுத்து, இரண்டு 210 மெ. வா. பிரிவுகளுக்கே அவர்கள் தொழில் நுட்ப ஒப்புதல் அளித்துள்ளார்கள். இந்தத் திட்டம் மத்திய திட்டக் குழுவின் ஒப்புதலை எதிர்நோக்கியுள்ளது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இது செயல்படுத்தப்படும். இதன் மூலம் 224.7 கோடி யூனிட்டு மின்சாரம் கிடைக்கும்.

**திரு. சா. துரைசாமி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது சென்னை மாநகரத்தில் உள்ள பேசின் பிரிட்ஜ் அனல் நிலையத்தில் ஒரு ஷட்டர் வேலை செய்யாமல் பழுதடைந்து இருக்கிறது. அது வேலை செய்ய அரசு என்ன துரித நடவடிக்கை எடுத்து இருக்கிறது? இந்த மின் பற்றாக் குறையைப் போக்க துரிதமாக நடவடிக்கை அரசு எடுக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்**: பேரவைத் தலைவர் அவர்களே, பேசின் பிரிட்ஜ் மின் நிலையத்தைப் பொறுத்த வரையில், அதிலிருந்து நமக்கு கிடைப்பது 12 மெகா வாட். அதையும் நாம் சரி செய்து கொண்டு இருப்பதை விட அதை அறவே அகற்றிவிட்டு, காஸ் டர்பைன்களை, அதாவது இரண்டு 50 மெகாவாட் உற்பத்தி செய்யக்கூடிய காஸ் டர்பைன்களை நிறுவலாம் என்ற யோசனையை மத்திய அரசுக்கு அனுப்பி யிருக்கிறோம். அந்தத் திட்டத்தை அவர்கள் பரிவோடு பரிசீலித்து வருகிறார்கள். இந்தத் திட்டம் வந்தநம், ஒரேடியாக இந்த மின் நிலையத்தை அகற்றிவிட்டு, இதையே நாம் மேற் கொள்ளலாம்.



2831

**திரு. டி. ஆர். வேங்கடரமணன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில் குலசேகரப் பட்டினத்தில் உள்ள கடல் நீரினுடைய தட்ப வெப்ப நிலையைப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிப்பதற்கும், அதேபோன்று திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அதிக காற்றழுத்தம் உள்ள பகுதிகளிலிருந்து, வின்ட் மில் மூலமாக மின்சாரத்தைத் தயாரிப்பதற்கும் ஒரு திட்டம் வெளியிடப்பட்டது. அது எந்த நிலையில் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்**: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் சோதனை அடிப்படையில் மேற் கொள்ளப்பட்டிருக்கிறது. விவரங்கள் வேண்டுமானால் தனிக் கேள்வி போடவும்.

**திரு. உ. சுப்பிரமணியன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேசின் பிரிட்ஜிலே இருக்கின்ற தெர்மல் ஸ்டேசனை எடுத்துவிட்டு, அங்கே காஸ் டர்பைன் வைக்கப்போவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த நிலக்கரியை உபயோகப்படுத்தி பவர் ஜெனரேட் பண்ணுவதற்கும், காஸ் டர்பைன் உபயோகப்படுத்தி பவர் ஜெனரேட் பண்ணுவதற்கும் செலவு வித்தியாசம், எக்கானாமிகலாக எது உள்ளது? இந்த காஸ் டர்பைனை உபயோகிப்பது சௌகரியமாக இருந்தால், மாநிலத்தில் வேறு பல இடங்களிலும் அதைத் துவக்குவதற்கு அரசாங்கத்தினிடம் குறிப்பு ஏதாவது இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்**: பேரவைத் தலைவர் அவர்களே, பேசின் பிரிட்ஜ் அனல் நிலையத்தைப் பொறுத்த வரைக்கும் அது சரியாக இருக்கும். ஏன் என்றால், அங்கே பழைய இயந்திரங்கள் உள்ளன. அதனால் உற்பத்திச் செலவும் அதிகம் ஆகிறது. மேலும் சென்னை மாநகரத்தில் ஏகப்பட்ட பொல்யூஷன் பிராப்ளம்ஸ், நிறைய தூசி விழுகின்ற ஒரு குறை உள்ளது. ஆகவே இதையெல்லாம் போக்குகின்ற வகையிலே வேறு மாற்றுத் திட்டத்தை யோசனை செய்ய வேண்டி யிருக்கிறது. பீக்கிங் ஸ்டேஷன் என்கிற வகையில், அதாவது லோட் ஷெட்டிங் வராமல் இருப்பதற்கு, இந்த காஸ் டர்பைனைப் போட்டால் அந்த கிரிட்டிலே வருகின்ற அந்த பிளக்சுவேசன், ஏற்றத்தாழ்வுகள் இருக்கிறதே, அதைச் சரி செய்வதற்கு அது

பயன்படும். அந்த வகையிலே காஸ் டர்பைனை நமக்குப் பயன்படுத்தலாமே தவிர, அதை நிரந்தரமான அடிப்படையிலே பயன்படுத்துவதால், எல்லா இடங்களிலும், ஏராளமான செலவு ஆகும்.

திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டம் கூடங்குளத்தில் ஒரு அனல் மின் நிலையம் ஆரம்பிக்கப்போவதாகச் சொல்லப்படுகிறதே, அது எந்த நிலையில் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இந்திய அரசை நாம் வற்புறுத்தி வருகிறோம். அது எந்த நிலையில் இருக்கிறது என்று இன்னும் தெரியவில்லை.

திரு. எல்ல. இராசமாணிக்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் அமைப்பது போன்று மற்ற மாவட்டங்களிலும் அமைக்கும் உத்தேசம் அரசின் பரிசீலனையில் உள்ளதா? ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் தூத்துக்குடி துறைமுகம் இருப்பதைப் போல மற்ற மாவட்டங்களிலும் துறைமுகம் இருக்குமேயானால் நிச்சயமாக அரசு திட்டங்களை மேற்கொள்ளும்.

திரு. கு. சுப்பாராயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்டநாட்களாக கோவையில் ஒரு அனல் மின் நிலையம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறதே, அது பற்றி அரசு என்ன முடிவெடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, தற்போது அத்தகைய திட்டம் எதுவும் இல்லை.

திரு. அ. பாலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் அனல் மின் நிலையம் அமைக்கப்படுவதைப் போன்று மதுரை மாவட்டத்தில் சமயநல்லூரில் ஒரு மின் நிலையம் அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அத்தகைய திட்டம் எதுவும் இல்லை.

திரு. செ. தங்கராசு: பேரவைத் தலைவர் அவர்களே, பேசின் பிரிட்ஜ் மின் நிலையத்தில் குளிர் வைப்பதற்காக 3 பெரிய சிமெண்ட் தொட்டிகள் இருக்கின்றன. அந்தத் தொட்டிகளிலே ஒன்று உடைந்து பாதியாக நிற்கிறது. மற்ற இரண்டு தொட்டிகளும் இடிகின்ற நிலையில் இருப்பதாக மக்கள் புகார் சொல்கிறார்கள். அந்தத் தொட்டிகளைச் சரி செய்வதற்கும் அந்தத் தொட்டிகளைப் பாதுகாப்பதற்கும் எதாவது முயற்சிகள் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, மின் உற்பத்தி திட்டத்தையே வேறு வகையில் மேற்கொள்ளலாம் என்ற கருத்து நிலவும் இந்நிலையில் இதற்குப் போய் மீண்டும் முதலீடு செய்வது என்பது சரியாக இருக்காது.

திரு. ஜி. ஆனந்தகிருஷ்ணா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு மாவட்டத்தில் ஸ்ரீபெரும்புதூர் தாலுக்காவின் பக்கத்திலே ஒரு அனல் மின் நிலையத் திட்டம் வரப்போவதாகக் கூறுகிறார்களே, அது உண்மையா? அது பற்றிய விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அப்படி ஒன்றும் திட்டம் இல்லை.

திரு. கே. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்காலத்தில் எற்படவிருக்கும் மின்சாரப் பற்றாக்குறையை கவனத்தில் கொண்டு தமிழகத்தில் நிறைய அனல் மின் திட்டங்களை உருவாக்கி செயல்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்ண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, நமது அரசைப் பொறுத்த வரையில் நிறைய அனல் மின் திட்டங்களை உருவாக்க வேண்டும் என்ற அடிப்படையில்தான் திட்டங்களைப் போட்டு அனுப்புகிறோம். ஆனால் வட மாநிலங்களில் எந்த அளவுக்கு நிலக்கரி அவர்களால் வெட்டி தர

முடிகிறதோ, அதைப் பொறுத்துத்தான் மின் நிலையத்திற்கு அனுமதி தருகிறார்கள். ஆகையினால் நிலக்கரியின் அளவைப் பொறுத்துத்தான் நம்முடைய திட்டங்கள் அனுமதிக்கப் படுகின்றன.

**திரு. மா. சின்னராசு:** தலைவர் அவர்களே, அனல் மின் நிலையம் அமைப்பது என்பது நிலக்கரி கிடைக்கின்ற அளவைப் பொறுத்து இருக்கிறது என்று அமைச்சர் அவர்களின் பதிலிலிருந்து அறிகிறோம். ஆகவே நிலக்கரி நிரந்தரமாகக் கிடைக்கும் இடங்களிலேயே அனல் மின் நிலையங்களை அமைத்து விட்டு அங்கேயிருந்து கம்பிகள் மூலம் மின்சாரம் கொண்டுவர முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறதா? இல்லை என்றால், அதற்கான முயற்சிகளை தமிழக அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்ண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, இந்த ராட்சச அனல் மின் நிலையங்கள் எனப்படும் சூப்பர் தெர்மல் ஸ்டேஷன் என்பவை இந்திய அரசினால் நிலக்கரி கிடைக்கின்ற இடங்களில் அமைக்கப்படுகின்றன. அதிலிருந்து ஒவ்வொரு வட்டாரத்திற்கும் தென்னிந்தியா, வட இந்தியா என்ற வகையில் ஒவ்வொரு வட்டாரத்திற்கும் மின் உற்பத்தியை வழங்க வேண்டும் என்பதற்காகத்தான் அந்த திட்டம் அமைக்கப் பட்டிருக்கிறது. ஆனால் அந்த மின்சாரத்தை வழங்குவதற்குரிய டிரான்ஸ்மிஷன் லைன்ஸ் எனப்படும் கம்பித் தொடர்கள் நிர்மாணிக்கப்படவில்லை. ஆகையினால்தான் வழங்குவதிலே சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. அந்த வகையில் இந்திய அரசுதான் ஒரு திட்டம் மேற்கொண்டிருக்கிறதே தவிர நாம் எதையும் மேற்கொள்ளவில்லை.

**திரு. சு. பாலன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, பேசின் பிரிட்ஜ் அனல் மின் நிலையத்திற்குப் பதிலாக வட சென்னையிலே நகரத்தை அடுத்த புற நகரிலே அதிகத் திறன் உற்பத்தி செய்யக் கூடிய ஒரு மின் நிலையத்தை ஏற்படுத்த அரசு பரிசீலனை செய்து வருகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** ஆம்.



## சைதையில் உர உற்பத்தி

25—(* வினா எண் 299) **திரு. சா. துரைசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சைதை 146-வது வட்டம் கொத்தவால்சாவடி தெருவில் மாநகராட்சி மூலம் குப்பைகளிலிருந்து உரம் தயாரிப்பதற்கான தொழிற்சாலை துவக்க திட்டமுள்ளதா?

(ஆ) ஆம் எனில், பணி எப்பொழுது துவங்கப்படும்?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) நாளொன்றுக்கு 150 டன் எடையுள்ள குப்பையை பதப்படுத்தி உரமாக்குவதற்கான கம்போஸ்ட் உர ஆலை ஒன்றை சைதை கொத்தவால்சாவடி வீதியில் உள்ள மாநகராட்சிக்குச் சொந்தமான தற்போதைய கம்போஸ்ட் தயாரிக்கும் மனையில் நிறுவுவதற்கான திட்டத்தை அரசு ஆய்வு செய்தது. பூனாவில் நிறுவியுள்ள ஆலையைப் போன்ற ஒரு ஆலையினை வேளச்சேரியில் முதற்கண் நிறுவலாம் என்று அரசு கருதியது. இதற்கு அடுத்த கட்டமாக கொத்தவால்சாவடி வீதியில் அமைக்கலாமா என்பது பற்றி முடிவெடுக்க அரசு உத்தேசித்துள்ளது.

(ஆ) வேளச்சேரியில் கம்போஸ்ட் ஆலையை நிறுவிய பின்னர் தான், கொத்தவால்சாவடி சாலையில் தொழிற்சாலையை அமைப்பது குறித்து ஆராயப்படும்.

(முற்பகல் 9-10)

**திரு. சா. துரைசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உர உற்பத்தி திட்டம் 4 ஆண்டுகளுக்கு முன்பாக துவக்கப்பட்டு திறப்பு விழாவும் நடைபெற்று அந்தப் பகுதியில் இருக்கின்ற 50 கிரவுண்ட் நிலத்திலே ஆரம்பிக்கலாம் என்று சொல்லி அந்தத் திட்டம் கொண்டுவரப்பட்டதாகவும் பிறகு மாற்றப்பட்டதாகவும் சொன்னார்கள். துரிதமாக நடவடிக்கை எடுத்தால், இன்றைக்கு சென்னை மாநகராட்சியின் வருமானம் குறைவாக இருப்பதால் அதிகமான குப்பைகளை பயன்படுத்தி உரமாக தயாரித்து, மாநகராட்சியின் வருவாயை பெருக்குவதோடு அந்தப் பணியை விரைவாகத் துவங்க அரசு நடவடிக்கை எடுக்குமா? நடப்பு நிதியாண்டிலேயே அப்பணி துவங்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: உடல் ஊன முற்றோருக்கு தள்ளுவண்டிகளில் மண்ணெண்ணெய் விற்பனை செய்ய உரிமம் வழங்குவதற்கான செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. எல்ல. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் பெருக்கத் திட்டத்தை இந்த ஊனமுற்றோருக்கு கொடுத்து அவர்களை ஆதரிக்கும் முகத்தான் ஏதேனும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரணமாக கைவண்டிகளை வைத்து மண்ணெண்ணெய் வியாபாரம் செய்பவர்களுக்கு ஒரு நாளைக்கு சென்னையில் 100 லிட்டரும், வேறு மாவட்டங்களில் 50 லிட்டரும் வழங்கப்படுகிறது. அதிலே அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய பணம் ஒரு நாளைக்கு சுமார் 8 ரூபாய்தான். இதை ஊனமுற்றோர்களுக்குக் கொடுக்கிறபோது அவர்கள் வேறு ஆட்களை வைத்து இதைப் பார்க்கிற நிலை ஏற்பட்டால் அதனாலே அவர்களுக்கு வேறு எந்தவிதமான வருமானமும் கிடைக்காது. அதனாலே எந்தவிதமான நன்மையும் வரப் போவதில்லை. எனவே அப்படிப்பட்ட எந்தத் திட்டமும் அரசிடம் இல்லை.

திரு. இரா. சண்முகம்: தலைவர் அவர்களே, மண்ணெண்ணெய் விற்பனைக்கு தனியார்களுக்கு உரிமம் வழங்குவதை நிறுத்தி விட்டு உடல் ஊனமுற்றோருக்கு முன்னுரிமை கொடுத்து வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, முதலில் அதைத்தான் பதிலில் சொன்னேன்.

திரு. க. பாலசுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, உடல் ஊனமுற்றோர்களுக்கு தள்ளுவண்டிகளில் மண்ணெண்ணெய் விற்பனைசெய்ய அனுமதிக்கும் குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால்



தொழுநோயினால் பாதிக்கப்பட்டு அதிலே சிகிச்சை பெற்று ஓரளவுக்கு உடல் நலம் பெற்று திடகாத்திரமாக உள்ளவர்களுக்கு அந்தச் சலுகைகளைக் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, முதலில் 1979 இல் மண்ணெண்ணெய் தட்டுப்பாடு வந்தபோது மண்ணெண்ணெய்யை டீசலில் கலந்து லாரிகளில் பயன்படுத்துகிற நிலை இருந்தபோது மண்ணெண்ணெய்யைக் கட்டுப்படுத்து கின்ற முறையிலே சில்லரை வியாபாரத்தை ஒழுங்குபடுத்துவதற்காக வகைமுறைகள் வகுக்கப்பட்டன. அப்போது அதற்கு முன்னாலே வியாபாரம் செய்து வந்தவர்களை அங்கீகரித்து ஏற்கெனவே சிவில் சப்ளைஸ் நியாய விலைக்கடைகளில் சேர்த்து ஏற்கெனவே லைசென்ஸ் பெற்று இருந்த தனி வியாபாரிகளையும் அடுத்து கைவண்டிகள் மூலமாக விநியோகம் செய்வதையும் ஏற்படுத்தி இப்படி 3 வகையான முறைகளிலே பிரித்து நடைமுறைப்படுத்தப்பட்டது. ஏற்கெனவே லைசென்ஸ் பெற்றிருந்தவர்களுக்குத்தான் கொடுக்கப்பட்டதே தவிர புதிதாகக் கொடுக்கப்படவில்லை. சென்னைக்கு 100 லிட்டரும் வெளி மாவட்டங்களுக்கு 50 லிட்டரும் அளிக்கப்படுகிறது என்று ஏற்கெனவே நான் சொன்னேன். அதனால் தள்ளுவண்டிக்காரர் களுக்கு 8 ரூபாய்தான் ஒரு நாளைக்கு வருமானம் கிடைக்கும். உடல் ஊனமுற்றோருக்கு இதைக் கொடுத்தால் நேரடியாக அவர்கள் போய் செய்ய முடியாது. ஆகவே இதனால் அவர்களுக்கு எந்தவிதமான வருமானமும் வருவதற்கு வாய்ப்பு இல்லை. இதுதான் இப்போது இருக்கிற நிலைமை.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, சென்னை நகரத்தில் 100 லிட்டர் தள்ளுவண்டியிலே விநியோகம் செய்வதற்கு கொடுக்கப்படுகிறது. அதேமாதிரியான மாநகராட்சிதான் கோவை. அங்கே 7.5 லட்சம் மக்கள் இருக்கிறார்கள், அங்கேயும் 50 லிட்டர்தான் கொடுக்கப்படுகிறது. வெளி மாவட்டங்கள் என்று சொல்கிற நிலைமை பற்றிச் சொல்லவில்லை. ஆனால் மாநகரங்களாக இருக்கிற இடங்களில் எல்லாம் 100 லிட்டர் என்று உயர்த்திக் கொடுக்க அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா? இப்போது அவர்களுடைய கோரிக்கை அதைப்பற்றி வந்திருக்கிறது. எனவே அமைச்சர் அவர்கள் அதை அறிவிப்பார்களா?

[1985 மார்ச் 28

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** தலைவர் அவர்களே, ஒரு மாதத்திற்கு நம்முடைய மாநிலத்திற்கு சுமார் 66,000 கிலோலிட்டர் தேவைப்படுகிறது. ஆனால் மத்திய அரசு சுமார் 47,000 கிலோ லிட்டர்தான் தருகிறது. அதை அதிகரித்துத் தரவேண்டும் என்று மாநில அரசு அப்போதைக்கப்போது மத்திய அரசைக் கேட்டு வருகிறது. சாதாரண காலங்களிலே அது போதுமானதாக இருக்கிறது. ஆனால் மழைக் காலங்களிலே அது போதுமானதாக இல்லை. ஆகவே உடனடியாக 50 லிட்டரை 100 லிட்டராக உயர்த்த — கோவை மட்டுமல்ல, அங்கே உயர்த்தினால் எல்லா கார்ப்பரேஷன்களிலும் உயர்த்த வேண்டும் — அரசு அதைப்பற்றிப் பரிசீலிக்கும்.

**திரு. க. சோலைராசு:** தலைவர் அவர்களே, மண்ணெண்ணெய் விற்பனையில் இப்போது கொடுக்கப்பட்டிருக்கிற உரிமங்களை ரத்து செய்து கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக விநியோகிக்க ஏதாவது பரிசீலனையில் இருக்கிறதா? தனியார்களுக்கு உரிமங்கள் இருக்கின்ற காரணத்தினாலே பல பகுதிகளிலே சரியான நடைமுறை இல்லாமல் பல பகுதிகளிலே மொத்தமாக விற்கிற நிலைமை இருக்கிறது. எனவே தனியார்களுக்கு இருக்கிற உரிமத்தை ரத்து செய்து கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக விற்பனை செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** தலைவர் அவர்களே, சிவில் சப்ளைஸ் கூட்டுறவு கடைகளில், 20 ஆயிரம் நியாய விலைக் கடைகளில் மண்ணெண்ணெய் விற்கப்படுகிறது. இது தவிர மக்களுக்கு வசதியாக அவர்கள் பெறவேண்டுமென்ற முறையிலே நியாய விலைக் கடைகள் இல்லாத பகுதிகளிலே தனியார்களுக்கும் அனுமதித்து இருக்கிறார்கள். சென்னையைப் போன்ற பெரிய நகரங்களிலே தாய்மார்கள் க்யூவிலே நிற்க வேண்டாம் என்ற முறையிலே ஆங்காங்கே தள்ளுவண்டிகளிலே கொண்டுபோய் வீடுகளிலே அவர்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய அளவுக்கு அந்த வசதிகளைச் செய்து தருகிறது. ஆகவே அதிலே இப்போதைக்கு மாறுதல் தேவையில்லை.

**திரு. கு. சுப்பராயன்:** தலைவர் அவர்களே, உடல் ஊனமுற்றோருக்கு நகரப் பகுதிகளிலே இலவசமாக இட ஒதுக்கீடோ நிதி உதவியோ செய்ய அரசு ஆவன செய்யுமா?



1985 மார்ச் 28]

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** தலைவர் அவர்களே, சமூக நலத் துறை அமைச்சரிடத்திலே அந்தக் கேள்வியைக் கேட்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 9-20.)

**திரு. மு. ஜான் வின்சென்ட்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலையிலோ, மாலையிலோ 2 கிலோ மீட்டர் தூரம் நடந்து சென்று மண்ணெண்ணெய் வாங்க முடியாமல் சம்பந்தப்பட்ட கடைகளை அடைந்து விடுகிறார்கள். ஆகவே, உடனடியாக தற்காலிக நடவடிக்கையாக மண்ணெண்ணெயை கொண்டு சென்று பாதிக்கப்பட்டவர்களுக்கு கொடுப்பதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நியாயவிலைக் கடைகள், தனியார் சில்லரை வியாபாரம் செய்கிற சில்லரை கடைகள், மற்றும் தள்ளுவண்டிகள் இப்படி மூன்று பிரிவுகளாக பிரித்து சிஸ்டமெட்டிக்காக மண்ணெண்ணெய் சப்ளை பொதுவாக செய்யப்படுகிறது. எளிதான முறையில் தாய்மார்களுக்கு வீடுகளில் மண்ணெண்ணெய் கிடைப்பதற்காகத்தான் இந்த சிஸ்டம், நடைமுறை பயன்படுத்தப்படுகிறது. தனியாக வீடுகளைப் பார்த்து அங்கு போய் உடனடியாக சப்ளை செய்வதற்கு திட்டம் எதுவும் இல்லை. அது நடைமுறையில் கடினமான ஒன்றாகும்.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்ணெண்ணெய் மூன்று விதமாக விநியோகிக்கப்படுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதிலே சென்னை மற்றும் மாவட்ட தலைநகரங்களில் மட்டும்தான் தள்ளுவண்டியில் இப்போது மண்ணெண்ணெய் விநியோகம் செய்து கொண்டிருக்கிறார்கள். அதை தென்காசி போன்ற முனிசிபாலிட்டிகளுக்கும் விரிவுபடுத்த வேண்டும். அந்த மாதிரி முனிசிபாலிட்டிகளில் உள்ளவர்கள் வேலைக்கு சென்று வந்து பிறகு கடைகளுக்குச் சென்றால் அங்கே மண்ணெண்ணெய் இல்லை என்கிறார்கள். இதுபற்றி ஒரு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூட இப்போது

குறிப்பிட்டார்கள். மண்ணெண்ணெய் பெறுவதில் குறிப்பாக தாய்மார்கள் அதிகமாக கஷ்டம் அடைகிறார்கள். அதை கருத்தில் கொண்டு நகரப் பகுதிகளில் கைவண்டிகளில் மண்ணெண்ணெய் கொடுப்பது போல் முனிசிபாலிட்டி பகுதிகளுக்கும் அந்த திட்டத்தை விரிவாக்க இந்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி பரிசீலிக்கலாம்.

**திரு. துரை அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில்லரை வியாபாரிகள் மண்ணெண்ணெயை லாரிகளுக்கு அளித்து வருமானத்தை பெருக்கிக் கொண்டு ஏழை மக்களுக்கு மண்ணெண்ணெயை தராத ஒரு குறையை அரசு கவனித்து ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறு நடக்கிற இடங்களில் அது கண்டுபிடித்து அதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**திரு. க. நரசிம்மபல்லவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்பகுதியில் ஆயில் இன்ஜின் உள்ள இடங்களில் சில்லரை வியாபாரிகள் இந்த மண்ணெண்ணெயை ஆயில் இன்ஜின்களுக்கு உபயோகப்படுத்திக் கொள்வதற்காக அதை தவறான முறையில் விற்று விடுகிறார்கள். அதனால் பொது மக்களுக்கு விலை ஏற்றம் கொடுக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இதை மாதம் தோறும் அவர்களுக்கு சரியான முறையில் அட்டைக்கு உரிய மண்ணெண்ணெயை கொடுக்கிறார்களா என்பது அவ்வப்போது கண்காணிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதே கண்காணிக்கப்பட்டுதான் வருகிறது.



## விவசாய கூட்டுறவுக் கடன்கள்.

28—(*வினா எண். 854) **திரு. கோ. வீரய்யன்:** மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விவசாயிகளின் கூட்டுறவுக் கடன்களுக்குத் தீர்வு காண வேளாண்மை உயர்மட்டக்குழு 26—12—1984 அன்று ஏகமனதாக முடிவு செய்து அனுப்பிய பரிந்துரையின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. கோ. வீரய்யன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையில் மாண்புமிகு திரு. முனுஆதி அவர்கள் தலைமையில் ஒரு கமிட்டி அமைத்து அதில் அனைத்துத் தரப்பினரும் அதிகாரிகளையும் கொண்டு இருக்கக் கூடிய அந்த கமிட்டி எல்லா நிலைமைகளையும் பரிசீலித்து 10 ஆண்டு காலமாக கூட்டுறவுத் துறையில் இருந்த தேக்க நிலையை, ஏற்பட்டு இருந்த ஸ்தம்பித்த நிலையை புனரமைத்து சீர்படுத்தி ஏகமனதான ஒரு சிபாரிசை அரசுக்கு அனுப்பியது. அரசின் பரிசீலனையில் இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். எப்போது அந்த பரிசீலனை முடிக்கப்படும்? எப்போது அதுபற்றிய முடிவுக்கு அரசு வரும்? அப்படி இதுபற்றி ஒரு முடிவுக்கு அரசு வரும்வரையில் கிராமப் புறங்களில் ஏற்பட்டு இருக்கக்கூடிய பதட்ட நிலையை தணிக்கக் கூடிய முறையில் ஜப்தி கெடுபிடி போன்ற நடவடிக்கைகளை அதாவது இது பற்றி அரசு ஒரு முடிவுக்கு வரும்போது ஜப்தி கெடுபிடி வசூல் நடவடிக்கைகளை ஒத்தி வைக்குமா? அரசு கைவிடுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, மிகப்பெருவாரியாக அரசாங்கத்திற்கு பொருள் இழப்பு அளிக்கக்கூடிய அளவிற்கு அந்தப் பரிந்துரை இருக்கிற காரணத்தினால் அரசாங்கம் அதைத் தீவிரமாகப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. எவ்வளவு வேகமாக

பரிசிலனை செய்து முடிக்கமுடியுமோ அந்தளவிற்கு வேகமாக நடத்தப்படும். அதேபோன்று அவர்கள் ஜப்தி நடவடிக்கைகள் பற்றிச் சொன்னார்கள். தற்போது ஜப்தி நடவடிக்கைகள் எதுவும் இல்லை.

**திரு. கோ. வீரய்யன் :** தலைவர் அவர்களே, குறிப்பாக எனக்குத் தெரிந்தவரையில் தஞ்சை மாவட்டத்தில் ஒரு கூட்டுறவுச் சங்கத்தில் கே. திவான் என்பவர் ரூ. 2,972 கடன் பெற்று ஆயிரம் ரூபாயைத் திருப்பிச் செலுத்தி, பாக்கி ரூ. 1,972 கட்டவேண்டி இருப்பவருக்கு ரூ. 10,990.40 காசு கட்டவேண்டு மென்று அவர்களுக்கு நோட்டீஸ் அளிக்கப்பட்டிருக்கிறது. இதே போல் ஆயிரக்கணக்கான விவசாயிகளுக்கு நோட்டீஸ் சென்றி ருக்கிறது. கிராமப் புறங்களில் தண்டோரா போட்டு அறிவிக்கி றார்கள். காரில் மைக் வைத்து பிரசாரம் செய்கிறார்கள். ஆக, ஒரு பத்ட்டமான நிலை ஏற்பட்டு நாளையதினம் தஞ்சை மாவட்டம் முழுவதும் விவசாயிகள் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வியைக் கேளுங்கள், வெளியே நடப்பதைப் பற்றிச் சொல்ல வேண்டாம்.

**திரு. கோ. வீரய்யன் :** ஆகவே இந்தப் பதட்ட நிலையைத் தணித்து, இதுபற்றி ஒரு முடிவிற்கு வரும் வரையில் இப்படிப் பட்ட நடவடிக்கைகளை அரசு ஒத்திவைக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, தற்போது ஜப்தி நடவடிக்கைகள் எதுவும் இல்லை. ஆகவே அதை ஒத்திவைக்க வேண்டுமா வேண்டாமா என்ற பிரச்னை எழவில்லை.

**திரு. உ. சுப்பிரமணியன் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லும்போது மிக அதிக மான அளவில் தொகை இருக்கிற காரணத்தினால் அதைத் தீவிரமாக அரசாங்கம் பரிசீலித்துக் கொண்டிருப்பதாகச் சொல்கி றார்கள். தொடர்ந்தாற்போல் இந்த மாநிலம் முழுவதும் வறட்சி, வெள்ளம், புயல் போன்ற இயற்கைச் சீற்றத்தினால் பாதிக்கப்பட்ட காரணத்தினால் விவசாயிகளால் அவர்கள்



வாங்கிய கடன்களைக் கட்டமுடியவில்லை. அதுவும் அல்லாமல் மாண்புமிகு உறுப்பினர் திரு. வீரய்யன் அவர்கள் சொல்லியது போல் அசலை அப்படியே வைத்துக்கொண்டு வருகிற வட்டியை சேர்த்துச்சேர்த்து அசலைப் பாக்கியாகவே கணக்கிட்டு பலயிடங் களில் ஜப்தி நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள், நடவடிக்கை களில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று மாநிலம் முழுவதிலுமிருந்து தகவல் வந்திருக்கிறது. ஆகவே நீண்ட நெடுங்காலமாக இருக்கிற இந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு உடனடியாக அரசாங்கம் தீவிரமான நடவடிக்கைகளை எடுக்குமா என அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதுபோல் உடனடியாக அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொன்னால், உடனடியாக அரசாங்கத் திற்கு ஏறக்குறைய ரூ. 415 கோடி அளவிற்கு பொருள் இழப்பு ஏற்படுகிற அளவிற்கு இந்தப் பரிந்துரை உள்ளது என்ற காரணத் தினால் இதில் எவ்வளவு முடியும் என்பதைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்பு கிறேன்.

**திருமதி பா. வளர்மதி :** தலைவர் அவர்களே, விவசாய உயர் மட்டக் குழு தற்போது பரிந்துரை செய்துள்ளபடி அரசாங்கத் திற்கு எவ்வளவு பொருள் சேதம் ஏற்படுகிறது என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, விவசாய உயர்மட்டக் குழுவினுடைய பரிந்துரைப்படி கணக்கிட்டுப் பார்த்தால் ஏறக்குறைய அரசாங் கத்திற்கு உடனடியாக ரூ. 415 கோடி அளவிற்கு பொருள் இழப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பொ. உத்திராபதி :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விடையளிக்கும்போது—உயர்மட்டக் குழு சிபாரிசு செய்தது எந்தெந்த அடிப்படையில், எப்படி சிபாரிசு

செய்தது என்பது பற்றிய விவரங்களை அறிவிப்பதோடு அந்தச் சலுகைகளை அரசாங்கம் பரிசிலனை செய்து அறிவிக்கிறவரை இந்த வசூலை நிறுத்திவைக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, விவசாய உயர்மட்டக்குழு பரிந்துரைப்படி இப்போதிருக்கிற கடனுக்கு உள்ள வட்டியையும், கூடுதல் வட்டியையும், அபராத வட்டியையும் அனைத்தையும் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொல்லியும் அதேபோன்று இருக்கிற அந்தப் பணத்தை, அசலை ஐந்தாண்டுக் காலத்தில் அதைத் திருப்பிச் செலுத்த வேண்டும் என்று சொல்லியும் பரிந்துரை செய்திருக்கிறார்கள். இன்று அந்தப் பரிந்துரையை அப்படியே எடுத்துக் கொள்வோம் என்று சொன்னால் 'நபார்ட்' என்ற நிறுவனத்திற்கு, ரிசர்வ் வங்கிக்கு பூராப்பணத்தைக் கட்டினால்தான் அடுத்த தடவை நாம் கடன் கொடுக்க முடியும். இந்தக் கடனைக் கொடுத்தால்தான் நாம் திருப்பிச் செலுத்த முடியும் என்பதை உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதேபோன்று நபார்ட்-யிலிருந்தும் ரிசர்வ் வங்கியிடமிருந்தும் இப்படி நீங்கள் தள்ளுபடி செய்யக்கூடாது, அப்படிச் செய்வது என்றால் எங்களோடு கலக்காமல் செய்யக் கூடாது என்பதைக் கண்டிப்பான முறையில் சொல்லியிருக்கிறார்கள் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

திரு. குமரி அனந்தன்: சபாநாயகர் அவர்களே, இங்கே நமது அமைச்சர் பெருமகனார் சொன்னபோது ஜப்தி நடவடிக்கைகள் எதுவும் இல்லை என்று சொன்னார்கள். ஜப்தி நடவடிக்கை இருக்கிறது என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உட்பட பல உறுப்பினர்கள் சொன்னார்கள். இதில் எது உண்மை என்று அறிந்து தவறு செய்கிற அதிகாரிகள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்ற தகவலை நான் அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-30)

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜப்தி நடவடிக்கை என்பது வருஷத்தில் இந்த மாதத்தில் கடன் பணத்தை வசூலிப்ப





தற்காக, கொடுக்கப்பட வேண்டிய பணத்தை வசூலிப்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கையே தவிர, வேறுவிதமான ஜப்தி நடவடிக்கை எடுக்கும் அந்தச் சூழ்நிலை இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமாகிய தஞ்சை மாவட்டத்தில் தகுதியின் அடிப்படையில் ஏழைகளின் இன்னல்களைக் களைய கடன் முழுமையும் வசூலிப்பதை ரத்து செய்யப்படுமா? அந்தத் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களில் வாங்குகின்ற கடன் காலப் போக்கிலே கட்டத் தேவை இல்லாத கடன் என்ற பரவலான எண்ணம் இப்போது விவசாயிகள் மத்தியில் இருந்து வருகிறது. காரணம், இப்படி சலுகை சலுகை என்று அரசு அறிவிப்பதால், கட்ட முன்வருகிறவர்கள்கூட கட்டுவதற்கு இப்போது தயக்கம் காட்டுகிறார்கள். எனவே, கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் கடன் வழங்குகின்ற நோக்கமே தோல்வி அடைகின்ற நிலைமை ஏற்படுகிறது. எனவே, அமைச்சர் அவர்கள் இந்த உயர்மட்டக் குழுவினுடைய பரிந்துரைகளை பரிசீலிக்கின்ற அதே நோக்கிலே, வேறு வகையான உதவியை விவசாயிகளுக்கு பணமாகக் கொடுக்காமல், வேறு வகையில் உதவி செய்கின்ற திட்டத்தை நேரடியாக உதவுகின்ற திட்டத்தை எதையாவது பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளுவார்களா என்று அறிய ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட திட்டம் ஒன்றும் இல்லை. அப்படிப்பட்ட திட்டத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னால், அதை அரசு பரிசீலிக்கும்.

[1985 மார்ச் 28

**திரு. கூடலூர் இ. வி. வேலு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அபராத தள்ளுபடி நில அடமான வங்கிகளுக்கு மட்டும் பொருந்தும் என்று சொல்லுகிறார்கள். பெரும்பான்மையான ஏழை விவசாய பெருமக்கள் எல்லாம் கூட்டுறவுச் சங்கங்களிலே கடன் பெற்றிருக்கிறார்கள். அந்த தள்ளுபடியானது அந்த வங்கிகளுக்கும் பொருந்துமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது கொடுத்திருக்கிற தள்ளுபடி எல்.டி. பாங்குகளுக்கு மட்டும்தான் கொடுத்திருக்கிறோம். இதற்கு முன்னால் 1978-லிருந்து 1982 வரையில் அனைத்து சிறு விவசாயிகளுக்கும் நிறைய கடன் சலுகை கொடுத்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. துரை அன்பரசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. விவசாய பொருள்களுக்கு வெளி மார்க்கெட்டில் ஒரு விலையும், கூட்டுறவுத் துறையில் விற்கக்கூடிய பொருள்களின் விலை அதிகமாகவும் இருக்கிறது. இதைக் குறைத்து, வெளி மார்க்கெட்டிலும், கூட்டுறவுத் துறையிலும் ஒரே சீரான விலையில் உரத்தை விற்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை மேற்கொள்ளுவார்களா என்று அறிய ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ் எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி விலை வித்தியாசம் இருப்பதாகத் தெரியவில்லை.. நாங்கள் இன்றைக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசால் அங்கீகாரம் செய்யப்பட்ட உர நிறுவனங்களிடமிருந்து வாங்கிக் கொண்டிருக்கிறோம். அதில் தவறில்லை. ஆனால், உறுப்பினர் அவர்கள் கருத்து பரிசீலிக்கப்படும்.



1985 மார்ச் 28]

**திரு. தி. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நில வள வங்கி மூலமாக கொடுக்கப்பட்ட கடனை வசூலிக்க 31—3—1985 வரை கால நீடிப்பு சலுகை கொடுக்கப்பட்டுள்ளது. விவசாயிகளின் நலனைக் கருதி, அந்தக் கால அளவு மேலும் நீட்டிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. கி. கிருஷ்ணமூர்த்தி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் தற்போது ஜீப்பில் மைக்கைப் போட்டுக் கொண்டு ஊர் ஊராக, கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக வாங்கப்பட்ட கடனை வசூலிக்க ஜப்தி நடவடிக்கை நடந்து கொண்டிருக்கிறது. அந்த விவசாயிகள் இதுபற்றி ரெப்ரசன்ட் பண்ணுவதற்கு சென்னைக்கு வந்து கொண்டிருக்கிறார்கள். அந்தக் கடனை ஒத்திவைக்கவாவது தற்போது அரசிடம் உத்தேசம் உள்ளதா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடனைத் தள்ளி வைக்கும் உத்தேசம் தற்போது அரசுக்கு இல்லை.

**திரு. க. இரா. சின்னராசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாய உயர்மட்டக் குழு பரிந்துரை அனுப்பியிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதிலே பெரிய விவசாயிகள், சிறிய விவசாயிகள் என்று பிரித்துக் காட்டி, தகுதியுள்ள விவசாயிகளுக்கு சலுகை தேவையில்லை என்றும், கட்ட முடியாத விவசாயிகளுக்கு சலுகை அளிக்கலாம் என்றும் பரிந்துரை செய்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அவர்கள் குறிப்பிட்டதில் எல்லா விவசாயிகளுக்கும் சேர்த்துத்தான் சலுகைகளைக் கேட்டிருக்கிறார்கள். அதில் சிறு விவசாயிகளுக்கு அனைத்து வட்டிகளையும் தள்ளுபடி செய்யச் சொல்லி

யிருக்கிறார்கள்; பெரிய விவசாயிகளுக்கு 'நபார்ட்'-லிருந்து வாங்குகின்ற அளவிற்கு வட்டியை வாங்க வேண்டுமென்றும் பரிந்துரை செய்திருக்கிறார்கள்.

**திரு. மு. ஜான் வின்சென்ட்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இங்கே பேசுகின்ற எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள், ஜப்தி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு ஜப்தி செய்வதாக அதிகாரிகள் சொன்னதாகவும், நேரடியாகப் பார்த்ததாகவும் சொன்னார்கள். ஆனால் அமைச்சரவர்கள் ஜப்தி நடவடிக்கை இல்லை என்று சொல்கிறார்கள். எனவே, இதில் அதிகாரிகள் சொல்வது சரியா, தவறா என்று ஆராய்வதற்காகக் குழு நியமிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அப்படிப்பட்ட எந்த எண்ணமும் அரசுக்கு இல்லை.

**திரு. வி. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவரவர்களின் அரசு பொறுப்பேற்றவுடன் ஒட்டுமொத்தமாக விவசாயிகளுக்குக் கூட்டுறவுத் துறையின் மூலம் வழங்கப்பட்ட சலுகைகள் என்னென்ன என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பதோடு, அதற்கு முன்பிருந்த அரசு அறிவித்த சலுகைகள் என்னென்ன என்பதையும் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த அரசாங்கம் வந்தபிறகு விவசாயிகளுக்கு ஏறத்தாழ 200 கோடி ரூபாய் அளவிற்கு சலுகைகளை வழங்கியிருக்கிறது. இதற்கு முன்பிருந்த எந்த அரசாங்கமும் இப்படிச் சலுகைகள் வழங்கியதாகத் தெரியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]



## 2. அறிவிப்புகள்.

### (அ) அண்ணாமலை பல்கலைக் கழக ஆட்சிப் பேரவை—உறுப்பினர் தேர்தல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் ஆட்சிப் பேரவையில் (Senate) இச்சட்டமன்றப் பேரவையின் சார்பில் உறுப்பினராயிருந்த திரு. ஏ. இராமலிங்கம், எட்டாவது தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்படாததால் அவ்வாட்சிப் பேரவைக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் தங்களிலிருந்து ஒருவரை திரு. ஏ. இராமலிங்கத்தின் பதவிக் காலமான 5—12—1986 வரை பணியாற்ற தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு அண்ணாமலைப் பல்கலைக் கழகம் கோரியுள்ளது. பல்கலைக் கழகத்தின் சட்டப்படி ஒற்றைமாற்று வாக்கு மூலம் இத்தேர்வு நடைபெறும்.

எனவே வேட்பாளர்கள் நியமனதாட்களை 2—4—1985 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத் தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத்தாள்கள் 4—4—1985 வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 8—4—1985 திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை ஒன்றுக்கு மேற்படுமாயின் 10—4—1985 புதன்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே சென்னை கோட்டையில் இருக்கும் குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

### 3. கவன ஈர்ப்புகள்

(அ) தேர்வாணைக் குழுவின் தேர்வுக்கான வயது வரம்பை பின்தங்கிய மற்றும் ஆதி திராவிட வகுப்பினர்களுக்குத் தளர்த்தல்.

திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு தேர்வாணைக் குழுவினால் மார்ச் 1985-ல் தொகுதி I பணிக்கென விளம்பரப்படுத்தப்பட்ட அறிக்கையில் தேர்வு நடத்தப்படாத 1983 மற்றும் 1984 ஆம் ஆண்டுக்கான காலியிடங்களும் சேர்ந்திருந்தும் பின்தங்கிய மற்றும் ஆதி திராவிடர் வகுப்பினர்களுக்கான வயது வரம்பு 1—7—1985-ல் 33 என்று இருப்பதால் மேற்படி வகுப்பைச் சேர்ந்த வேலையில்லாத பட்டதாரிகள் மத்தியில் எழுந்துள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

துணை ஆட்சியாளர், வணிக வரி அலுவலர், துணைக் காவல் கண்காணிப்பாளர், கோட்ட வளர்ச்சி அலுவலர், கோட்டத் தீயணைப்பு அலுவலர், மாவட்டப் பதிவாளர் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களின் துணைப் பதிவாளர் ஆகிய பதவிகளுக்கு நேரடித் தேர்வு மூலம் தேர்ந்தெடுக்க தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு தொகுதி I தேர்வு நடத்துகிறது. இப்பதவிகளில் துணை ஆட்சியாளர், வணிக வரி அலுவலர், துணைக் காவல் கண்காணிப்பாளர், கோட்ட வளர்ச்சி அலுவலர், கோட்டத் தீயணைப்பு அலுவலர் ஆகிய பதவிகளுக்கு நேரடி தேர்வுக்கு பின்தங்கிய வகுப்பினர், ஆதி திராவிடர் மற்றும் மலைவாழ் வகுப்பினருக்கு உச்ச வயது வரம்பு 33, மற்றவருக்கு 28-ம் ஆகும். கூட்டுறவுச் சங்கங்களின் துணை பதிவாளர் மற்றும் மாவட்டப் பதிவாளர் பதவிகளுக்கு பின்தங்கிய வகுப்பு,



ஆதி திராவிடர் மற்றும் மலைவாழ் வகுப்பினருக்கு உச்ச வயது இல்லை. இதர வகுப்பினருக்கு 28 வயது என்று நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

2. 1981-ம் ஆண்டு நடந்த தொகுதி I பணிகளுக்கான தேர்வு எழுதிய திரு. ஆர். நாகராஜன் என்பவர் சென்னை உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்த நீதிப் பேராணை மனுவின் காரணமாக 1982-ம் ஆண்டு தேர்வுகள் நடத்துவதற்குக் கால தாமதம் ஆகியது. இறுதியாக உயர் நீதிமன்றம் 7—2—1985 அன்று நீதிப் பேராணை மனுவின் மீது இறுதி ஆணை பிறப்பித்த பின்னர்தான் 1982-ம் ஆண்டு நடந்த தேர்வுகளின் முடிவுகள் வெளியிடப்பட்டன. இதன் காரணமாக தொகுதி I பணிகளில் 1983-84-ம் ஆண்டுகளில் ஏற்பட்ட காலியிடங்களுக்கு தேர்வுகள் நடத்த இயலவில்லை.

3. இவ்வாறு 1983-84-ம் ஆண்டுகளில் தொகுதி I பணிகளுக்கான தேர்வுகள் நடத்தாததால், 1985-ம் ஆண்டில் நடைபெறவிருக்கும் தேர்வில் பங்கு பெறுவதற்கு பலர் வயது வரம்பைக் கடந்துவிட்டனர் என்றும், அவர்கள் பொருட்டு வயது வரம்பைத் தளர்த்தி ஆணை வெளியிட வேண்டும் என்றும் தமிழ்நாடு செயலகப் பணியாளர்கள் சங்கமும், வேறு சிலரும் அரசுக்கு விண்ணப்பித்துள்ளனர். தேர்வாணைக் குழுவைக் கலந்து ஆலோசித்ததில் அக்குழு இந்தக் கோரிக்கை ஏற்றுக் கொள்ளத் தக்கதல்ல என்று கருத்துத் தெரிவித்துள்ளது. எனினும், இக்கோரிக்கை பற்றி விரிவாக ஆய்வு செய்து முடிவெடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அறிக்கையில், இக்கோரிக்கை பற்றி விரிவாக ஆய்வு செய்து முடிவெடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. 1981-ம் ஆண்டு நடந்த தொகுதி-1 பணிகளுக்கான தேர்வு எழுதிய திரு. ஆர். நாகராஜன் என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த நீதிப் பேராணை மனுவின் காரணமாக 1982-ம் ஆண்டு தேர்வுகள் நடத்துவதற்குக் காலதாமதம் ஆகியது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இறுதியாக உயர் நீதிமன்றம் 7—2—1985 அன்று நீதிப் பேராணை மனுவின் மீது இறுதி ஆணை பிறப்பித்த பின்னர்தான் 1982-ம்

ஆண்டு நடந்த தேர்வுகளின் முடிவுகள் வெளியிடப்பட்டன. இந்த நிலைமையிலே, 1983-84-ம் ஆண்டுகளில் நடக்க வேண்டிய தேர்வுகள் நடக்காமல் இருக்கின்றன. 1981-ம் ஆண்டு நடந்த தேர்வு சம்பந்தமாக ரிட் மனு இருந்ததால்தான் 1982-ம் ஆண்டிலே அந்தத் தேர்வு முடிவுகள் வெளியிடப் பெற்றிருக்கின்றன. அந்த ரிட் மனுவின் மீது தீர்ப்பு வரவேண்டியிருந்ததன் காரணமாகத் தான் 1982-ம் ஆண்டு நடந்த தேர்வுகளின் முடிவுகள் பெண்டிங்காக வைக்கப்பட்டு, 7—2—1985 வரையில் அறிவிக்கப் படாமல் இருந்திருக்கிறதே தவிர. . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியாகக் கேட்க வேண்டும்.

**திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்:** ஆகவே, இந்தக் கால தாமதத்திற்குக் காரணம் நம்முடைய அரசுதானே தவிர சம்பந்தப்பட்ட அந்த இளைஞர்கள் அல்ல என்பதை உங்களிடத்தில் சொல்லி, ஐக்கிய நாடுகள் சபைகூட இந்த ஆண்டை இளைஞர்கள் ஆண்டு என்று அறிவித்திருக்கிறது. அப்படிப்பட்ட இந்த நேரத்தில், பாதிக்கப்பட்டிருப்பவர்களின் வயது வரம்பை 33-லிருந்து 35 என்று உயர்த்திக் கொடுக்க வேண்டும். . . . .

(நண்பகல் 9.40)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கவன ஈர்ப்பில் கேள்வி கேட்கும்போது சுருக்கமாகக் கேட்க வேண்டும்.

**திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்:** பேரவைத் தலைவர் அவர்களே, தகுதி வாய்ந்த இளைஞர்களுக்கு அநீதி இழைக்கப் பட்டு விடக்கூடாது என்பதற்காகவும் லாஸ்ட் டேட் 30—3—1985 ஆக இருப்பதாலும் உடனடியாக இதுபற்றி ஆய்வு செய்து பாதிக்கப்பட்ட இளைஞர்களுக்கு வயது வரம்பைத் தளர்த்தி மறு உத்தரவிட தேர்வாணைக் குழு பணிக்கப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, காலத் தாழ்வுக்குக் காரணமே தேர்வு எழுதியவர் நீதிப் பேராணை மனு போட்டு தடை ஆணை பெற்றதுதான். அதன் காரணமாக காலத்தாழ்வு ஏற்பட்டது.



அவர்கள் தீர்ப்பு வழங்கியது 7—2—1985-ல். அதன் காரணமாக சிலருக்கு வயது உயர்ந்திருக்கக் கூடும். அந்த வயதைத் தளர்த்துவதும, ஏற்றுக்கொள்வதும், மறுப்பதும் தேர்வாணைக் குழுவைச் சார்ந்தது. அதிலே அரசு தலையிட இயலாது. அரசு தலையிட்டு வயதைத் தளர்த்தும்படி கேட்டுக்கொள்ள முடியாது. வயதைத் தளர்த்தும்படியாக அதாவது தளர்த்தி ஆணையிட வேண்டும் என்று தமிழ்நாடு செயலகப் பணியாளர்கள் சங்கமும், வேறு பலரும் கூட அரசுக்கு விண்ணப்பித்தார்கள். அதைத் தேர்வாணைக் குழுவுக்கு நாம் அனுப்பி வைத்தோம். ஆனால் தேர்வாணைக்குழு அது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்று கருத்து தெரிவித்திருக்கின்றது. எனவே முடிவு தரவேண்டியது தேர்வாணைக் குழுவாக இருக்கின்றது.

சட்டத் துறையைக் கலந்து அதில் ஏதாவது விதிமுறைகள் இருக்கின்றனவா என்று பார்த்து மீண்டும் வேண்டுமானால் தேர்வாணைக் குழுவுக்கு அரசு இதுபற்றி எடுத்துரைக்கலாம்.

**திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொன்னதுபோல் சட்ட ரீதியாக அதை மீண்டும் பரிசீலனை செய்து மீண்டும் அந்த 1983-84-ம் ஆண்டிலே தேர்வு எழுதயிருந்த தகுதி வாய்ந்த இளைஞர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும். அதற்காக நம்முடைய அமைச்சர் அவர்கள் தேர்வாணைக் குழுவிற்குப் பரிந்துரை நிச்சயமாகச் செய்ய வேண்டும் என்ற வகையில் அவ்வாறு பரிந்துரைப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே சொன்னபடி சட்டத் துறையைக் கலந்து ஆராய்ந்து தேர்வாணைக் குழு நமக்கு அளித்திருக்கின்ற பதிலை ஒட்டி. சட்டத்தினுடைய அடிப்படையில் தளர்த்தும்படியாகக் கேட்டுக்கொள்ள இயலுமா என்பதைப் பற்றி ஆராய்ந்து அதனை மீண்டும் தேர்வாணைக் குழுவிற்கு எழுதுகின்ற முயற்சியில் அரசு ஈடுபடும்.

(ஆ) சென்னை, சேப்பாக்கம் தொகுதியில் குடிசைகள் அகற்றப் பெற்றுள்ளது குறித்து.

**திரு. அ. ரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னை, சேப்பாக்கம் தொகுதி, லாக்நகர், கல்லறை மைதானம், நதிக்கரையோரம் ஆகிய பகுதிகளில் வாழும் ஏழை எளிய மக்களின் குடிசைகளை அரசாங்கம் மற்றும் குடிசை மாற்று வாரியம் பிரித்து இருப்பதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

லாக்நகர் பகுதியில் 1974-ம் ஆண்டு குடிசை மாற்று வாரியம் 304 குடியிருப்புகளை கட்டியுள்ளது. இக்குடியிருப்புகளை குடிசைவாழ் மக்கள் ஒதுக்கீடு பெற்று குடியிருந்து வருகின்றனர். இப்பகுதியில் திறந்த வெளி இடம் எதும் இல்லை. இப்பகுதிக்குச் செல்லும் சாலையின் ஓரங்களில் சற்றேறக்குறைய 6 மாதங்களுக்கு முன்பு புதியதாக ஆக்ரமனம் ஏற்பட்டுள்ளது என்று தெரிய வந்தது. புலத் தணிக்கை செய்தபோது, 102 புதிய குடிசைகள் போடப்பட்டிருந்தன. இப்புதிய குடிசைகளால் இப்பகுதியில் சுகாதாரக் கேடுகள் விளையும் என்பதாலும், தீ விபத்தால் பாதிக்கப்படக் கூடிய சூழ்நிலைகள் உருவாகும் என்பதாலும், இதுபற்றி தகுந்த நடவடிக்கை எடுக்காவிட்டால் மேலும் பல புதிய குடிசைகள் உருவாவதற்கு எதுவாகும் என்பதாலும், குடிசை மாற்று வாரியம் அங்குள்ள ஆக்ரமனதாரர்களை வெளியேறும்படி கேட்டுக் கொண்டது. ஆனால், ஆக்ரமனதாரர்கள் வெளியேறவில்லை. மேலும், அங்குள்ள பொதுமக்களிடமிருந்து புதிய குடிசைகள் உருவானதற்கு எதிர்ப்புகள் கிளம்பின. இதன் காரணமாக, குடிசை மாற்று வாரியம் 25—2—1985 அன்று ஆக்ரமனதாரர்களை அப்புறப்படுத்தியது. இதன் பின்பும் 35 புதிய குடிசைகள் அப்பகுதியில் தோன்றின. மேற்





கண்டவைகளை குடிசை மாற்று வாரியம் 5—3—1985 அன்று அப்புறப்படுத்தியது. இதுபோன்ற நடவடிக்கைகளை கல்லறை மைதானம் மற்றும் நதிக்கரையோரம் ஆகிய பகுதிகளில் குடிசை மாற்று வாரியம் எடுக்கவில்லை.

**திரு. அ. ரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில் சில விவரங்கள் இல்லை. நான் குறிப்பிட்டிருக்கக்கூடிய லாக் நகர் அதைப்போலவே பரியல் கிரவுண்ட் அதைப்போலவே கூவம் நதிக்கரையோரம் ஆகிய பகுதிகளில் குடிசைகளில் வாழ்கின்ற ஆதி திராவிட மக்கள் நீண்டகாலமாக வாழ்கிறார்கள். வாக்காளர்களுடைய பட்டியலில் அவர்களுடைய பெயர்கள் இடம்பெற்றிருக்கின்றன அவர்களுக்கு ரேஷன் கார்டுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. வெள்ள நிவாரண நிதி வழங்கப்பட்டிருக்கின்றது. அதே பகுதியில் வாழ்பவர்கள் என்று குடிசை மாற்று வாரியத்தின் மூலம் நிழற்படம் எடுக்கப்பட்டிருக்கின்றது. இன்னும் சொல்லப்போனால் 1976-க்கு மேலே குடிசைகள் போட்டிருந்தால் ஒழிய அதாவது அதற்கு முன்பாகப் போடப்பட்ட குடிசைகள் அகற்றப்படக்கூடாது என்று அரசாங்கத்தின் உத்தரவு இருக்கின்றது. இந்த நிலையில் முன் அறிவிப்பு இல்லாமல், தங்குவதற்கு மாற்று இடம் தராமல் குடிசை மாற்று வாரிய வீடு ஒதுக்கீடு செய்யாமல் திடீரென்று போலீஸ் உதவியோடு அவர்கள் அகற்றப்பட்டு கொடுமைப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு மாற்று இடம் தரப்படுமா? வீடு ஒதுக்கீடு செய்கிற வரைக்கும் தற்காலிகமாகக் குடிசை போடுவதற்கு அனுமதிக்கப்படுமா என்று மாண்புமிகு அமைச்சர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:** தலைவர் அவர்களே, லாக் நகர் பகுதியைப் பொறுத்தவரையில் அங்கே அவர்கள் அதிகாரபூர்வமாகப் போடாத காரணத்தால் குடிசைமாற்று வாரியம் அகற்றிவிட்டது. மீதி இருக்கின்ற கல்லறைப் பகுதி மற்றும் இரண்ட பகுதிகளைப் பொறுத்தவரையில் குடிசை மாற்று வாரியம் அந்த நடவடிக்கையில் ஈடுபடவில்லை. அது வேறு துறையைச் சார்ந்தது.

**திரு. அ. ரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் மாற்றிடம் தரப்படுமா, அந்த ஏழை மக்கள் குடிசை போட்டுக்கொள்வதற்கு அல்லது தற்காலிகமாகவாவது அந்தக் குடிசைகளைப் போட்டுக் கொள்ள அனுமதிக்கப்படுவார்களா என்று கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லவில்லை. ஆனால், அதே நேரத்தில் என்னுடைய சேப்பாக்கம் தொகுதியில் ஜோதி மாநகரில் அன்னை ஜானகி புரட்சித் தலைவர் மன்றத்தின் சார்பாக உள்ள உறுப்பினர்கள் 30 பேர்கள் 20 நாட்களுக்கு முன்பு புதிதாக குடிசைகள் போட்டு நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. யூசுப் அவர்கள் சென்று அந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு இன்றைக்கும் அவர்கள் இருந்து கொண்டு இருக்கிறார்கள். அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த அவர்கள் இருக்கக்கூடாது என்பது அல்ல என்னுடைய வாதம். அது அங்கீகரிக்கப்படுகின்றபோது லாக் நகரிலே வாழ்கின்ற ஏழை, எளிய மக்கள் தற்காலிகமாக குடிசைகள் போட்டுக் கொள்ள அனுமதிக்கப்படுவார்களா அல்லது மாற்றிடம் அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா? அல்லது வீடு ஒதுக்கீடு செய்யப் படுகின்ற வரையிலாவது மனிதாபிமான அடிப்படையில் வேறு நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லாக் நகர் பகுதியைப் பொறுத்தவரையில் வெளியேற்றப்பட்டவர்கள் 35 பேர்கள். அந்த 35 பேர்களும் தாங்கள் செய்தது தவறு என்று ஒத்துக் கொண்டார்கள். ஏற்கனவே ஒருமுறை குடிசை போட்டும் அப்பொழுதும் ஒருமுறை அவர்களை அகற்றியிருக்கிறார்கள். இப்பொழுது இரண்டாவது தடவையாக நடைபெற்ற காரணத்தினால் அந்த 35 பேர்களும் குடிசை மாற்று வாரியத்திடம் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். இனி அப்படிப்பட்ட தவறுகளைச் செய்யமாட்டோம் என்று அவர்கள் சொன்னதற்குப் பிறகு, வேறு இடத்தினை முடிவு செய்து, அதை பரிசீலனையில் எடுத்துக்கொள்ளும்.



## 4. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

### நிதி ஒதுக்க (உடனடிச் செலவிற்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு, 1985.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (உடனடிச் செலவிற்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 21/1985) @ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2, 3 மற்றும் அட்டவணை ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (உடனடிச் செலவிற்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 21/1985) நிறைவேற்றப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

---

@ 1985 ஆம் ஆண்டு மார்ச் 27 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

## 5. வரவு-செலவுத் திட்டம் 1985—86 பொது விவாதம்.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த 1985-86 ஆம் ஆண்டிற்குரிய வரவு-செலவுத் திட்டத்தின்மீது பேசுகின்ற வாய்ப்பினை எனக்கு நல்கிய ஸ்ரீபெரும்புதூர் வாக்காளப் பெருமக்களுக்கும் இத்தகு சூழ்நிலையை உருவாக்கித் தந்த பாரதத்தினுடைய பிரதமராகப் பொறுப்பேற்றிருக்கிற எங்கள் மாபெரும் தலைவர் ராஜீவ் காந்தி அவர்களுக்கும் இந்த மன்றத்தின் வாயிலாக என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

வரவு-செலவுத் திட்டத்தை அறிவித்த நேரத்திலே வெளியிலே பல தலைவர்கள் பல கருத்துக்களைச் சொன்னாலும் என்னைப் பொறுத்த மட்டிலும் நான் குறிப்பிட்டுச் சொல்ல கடமைப்பட்டிருப்பதெல்லாம் இதிலே அதிகமான வரிகளும் இல்லை, அதே போல் அதிகமான திட்டங்களும் இல்லை, இதைத்தான் நான் இங்கே சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

(முற்பகல் 9-50.)

இங்கே பல திட்டங்களை அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே சிலவற்றை நான் இங்கே குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் செயற்கை முறை கருத்தரிப்புக்கு கால்நடைத் துறைக்கு சென்ற ஆண்டு 15.26 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்தமுறை அது 13 இலட்சமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. அதைப் போன்று, முன்னால் 125 செயற்கைமுறை கருத்தரிப்பு நிலையங்கள் உருவாக்கப்பட்டன. இந்தமுறை அது 100 ஆக குறைக்கப்பட்டிருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதைப்போன்று கால்நடை மருந்தகங்களுக்கு 19.7 இலட்சம் ரூபாய் இந்த நிதிநிலை அறிக்கையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இந்த கால்நடை மருத்துவ நிலையங்களை ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் போது, மருந்து இல்லாத நிலையங்களாகத்தான் பல நிலையங்கள் இயங்குகின்றன.



மாட்டுக்கு உடல்நலக் கேடு ஏற்பட்டு அந்த மருத்துவ நிலையங்களுக்கு எடுத்துச் செல்லும்போது, ஐ.ஆர்.டி.பி. திட்டத்தின்கீழ் லோன் பெற்று மாடு வாங்கிய ஏழை எளிய மக்கள் மாடுகளை அந்த நிலையங்களுக்கு அதிகமாக செலவு செய்து கொண்டு போகும்போது மருந்து இல்லை: நீ வாங்கிக் கொண்டு வந்து கொடுத்தால் மாட்டுக்குச் செலுத்துகிறோம் என்று சொல்லும் நிலையிலேதான் இன்றைக்கு கால்நடை மருந்தகங்கள் இருக்கின்றன என்பதை என்னால் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது.

அதைப்போன்று பால் விநியோகச் சங்கங்கள் இருக்கின்றன. செயல்படாமல் இருக்கிற சங்கங்களை எல்லாம் மறுபடியும் அவற்றுக்கு உயிர்கொடுத்து புதுப்பிக்க வேண்டுமென்ற நிலையிலே இன்றைக்கு இந்த அரசு செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்பது வரவேற்கக்கூடிய ஒன்றாக இருந்தாலும் கூட உண்மையிலேயே நல்லமுறையில் செயல்படக்கூடியவையாக எந்தவிதமான அரசியல் கண்ணோட்டமும் இன்றி அவற்றை நாம் உருவாக்குவதற்கு இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு ஒரு கிலோ அரிசி ரூ. 1.75-க்கு கொடுக்கிறோம். அதனால் 90 கோடி ரூபாய் அரசுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. ஆந்திராவிலே ஒரு கிலோ அரிசி 2 ரூபாய்க்கு கொடுக்கிறார்கள். அதற்கு அதிகமாக விளம்பரம் இருந்தாலும் கூட நாம் ரூ. 1.75-க்கு கொடுப்பதை நினைக்கும்போது பாராட்டாமல் இருக்க முடியவில்லை. ஆனால் அரசின் இப்படிப்பட்ட நல்ல திட்டங்கள் ஏழை எளிய மக்களுக்குப் போய் சேருகின்ற சூழ்நிலை இருக்கிறதா என்றால் இல்லை. காரணம் அங்கே இருக்கிற அதிகாரிகள் அதைச் செயல்படுத்துகிற விதம் எப்படி இருக்கிறது என்பதை நாம் பார்க்கும்போது வேதனையாக இருக்கிறது, வருத்தமாக இருக்கிறது. நான் சென்ற சட்டமன்றக் கூட்டத்திலே கூட இதுபற்றி தெரிவித்திருக்கிறேன்.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் நான் கூட ரேஷன் கார்டு வாங்கக்கூடிய சூழ்நிலையில்தான் இருக்கிறேன். சட்டமன்ற உறுப்பினருடைய வருமானத்தைக் கணக்கில் எடுத்துக்

கொண்டதால் எனக்கு அரிசி கிடையாது, சர்க்கரை உண்டு, பாமாயில் உண்டு. ஆனால் அவை மாதாமாதம் கிடைப்பதில்லை. என்னுடைய ரேஷன் கார்டை வேலைக்காரி எடுத்துச்செல்லும் போது, எழுதப் படிக்கத் தெரியாததால், அந்தக் கார்டிலே பொருள்கள் கொடுக்காமல் கொடுத்துவிட்டதாகக் கையெழுத்துப் போடுகின்ற சூழ்நிலை இருக்கிறது. வேலைப்பளு காரணமாக இதை எல்லாம் கேட்க முடியாத சூழ்நிலையில் நான் இருக்கும் போது, இதைப்போன்று படிக்காத மக்கள், எதுவும் அறியாத அப்பாவி மக்கள், இந்த அரசின்மீது முழுமையாக நம்பிக்கை வைத்திருக்கிற அந்த அப்பாவி மக்கள் உண்மையிலேயே அரசாங்கத்தின் நல்லத் திட்டங்களை முழுமையாகப் பெற முடியாத தடைக்கற்களாக இருக்கிறவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள்மீது உரிய காலத்தில் தக்க நடவடிக்கை எடுத்தால் நிச்சயமாக எதிர்காலத்தில் தமிழ்நாட்டு ஏழை எளிய மக்களுக்கு ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்கித் தரமுடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போன்று அளவிலேயும் கோளாறு இருக்கிறது. ஒரு கிலோ சர்க்கரை வாங்கினால் அது ஒரு கிலோவாக இருக்காது, 100 கிராம் குறைவாக இருக்கும்.

அதைப்போன்று இன்றைக்கு மண்ணெண்ணெய்க்கு விலை ஏறியிருக்கிறது. முன்னால் 26 காசு ஏறியது. மத்திய அரசு அதை பரிசீலனை செய்து, இன்றைக்கு குறைத்திருக்கிறார்கள். அப்படி இருந்தாலும் 26 காசுக்கும் அதிகமாகத்தான் நாம் சென்ற ஆண்டிலே கூட வாங்கியிருக்கிறோம். வெளியிடங்களில் மண்ணெண்ணெய் விலை அதிகமாக இருக்கிறது.

அதைப்போன்று இன்றைக்கு நாம் அத்தியாவசியப் பொருள்களை எல்லாம் நியாயவிலைக் கடைகள் மூலமாக விநியோகம் செய்கின்றபோது நிச்சயமாக விலைவாசி உயர்வைத் தடுக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கும்மிடிப்பூண்டி, கடலூர், புதுக்கோட்டை, மானாமதுரை போன்ற பகுதிகளில் எல்லாம் தொழில் வளர்ச்சி மையங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதிலே எனக்கு கொஞ்சம் வருத்தம்



தான். ஏனென்றால் சென்னைக்குப் பக்கத்தில் இருப்பது என்னுடைய ஸ்ரீபெரும்புதூர் தொகுதி. அந்தத் தொகுதியில் ஏராளமான ஏக்கர் புறம்போக்கு நிலம் இருக்கிறது.

அதுமட்டுமல்ல. அங்கே குடிநீர் வசதி இருக்கின்றது. மின்சார வசதி இருக்கின்றது. அப்படியிருந்தும்கூட அங்கே தொழிற் சாலைகள் நிறைய கிடையாது. அங்கேயிருப்பது எல்லாம் ஒரே ஒரு தொழிற்சாலை, ஆக்சில் இந்தியா என்ற தொழிற்சாலை. அந்தத் தொழிற்சாலையைத் திறப்பதற்கு நம்முடைய தமிழகத்தின் முதல்வர் அவர்கள் வந்தார்கள். அன்றைய நிதியமைச்சராக இருந்த ஆர். வெங்கட்ராமன் அவர்கள் வந்தார்கள். வந்ததற்குப் பிறகு அவர்கள் சொன்னார்கள். 125 பேர்களுடைய குடும்பங்களை தத்து எடுத்து இருக்கிறீர்கள். அந்தக் கம்பெனியைச் சேர்ந்தவர்கள் 125 பேர்கள், தத்து எடுத்துக்கொண்டவர்கள், இங்கே சென்னையிலிருந்து அங்கே வந்து குடியேறியிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கிறோம். அந்த 125 குடும்பங்களுக்கு கிட்டத்தட்ட 7 கோடி ரூபாய் செலவில் அந்தத் தொழிற்சாலை அமைக்கப்பட்டும் கூட, அந்தத் தொகுதியிலே இருக்கிற மக்களுக்கு எந்தப் பலனும் கிடைக்க வில்லை என்பதை நான் சொல்லவிரும்புகிறேன்.

அதேபோல் பணிக்கர் கம்பெனி ஒன்று இருக்கிறது. அதிலே வேலை செய்கின்ற பெண்களுக்கு ஒரு நாளைக்கு, 2.50 ரூபாய் அல்லது 3 ரூபாய் சம்பளம் கிடைக்கிறது. இவற்றைத் தவிர அந்தத் தொகுதியிலே வேறு எதுவும் கிடையாது. மிகவும் பின்தங்கிய பகுதி. நம்முடைய நிதியமைச்சர் நாவலர் அவர்கள் அடிக்கடி வந்திருக்கின்ற தொகுதி. அவர்கள் பார்வையிட்ட தொகுதி. அந்தப் பகுதியிலே எந்தவிதமான தொழிற்சாலை யையும் ஏற்படுத்தவில்லை. அந்தப் பகுதியில் உள்ள இடையார் பாக்கம் என்ற இடத்தில் 800 ஏக்கருக்கு மேல் இருக்கின்றது. அங்கே நீர்வளத்தோடு, மின்சார வசதியும் இருக்கின்றது. இவைகளை ஒப்பிட்டுப் பார்த்து, அங்கே ஒரு தொழில் மையத்தை உருவாக்குவதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அந்தப் பகுதியில் முதல்தரமான வெள்ளைக் களிமண் அதிகமான அளவில் கிடைக்கிறது. அதைப் பயன்படுத்திக் கூட ஏதாவது ஒரு தொழிற்சாலையை உருவாக்குவதற்கு அரசு முன்வர வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதேபோல், 10 சர்க்கரை ஆலைகளைத் துவங்குவதாக நம்முடைய இந்த பட்ஜெட்டிலே குறிப்பிட்டு இருக்கிறார்கள். நான் உங்களுக்கு மிகுந்த வணக்கத்தோடு தெரிவித்துக்கொள் கிறேன். மறைந்த பெருந்தலைவி அன்னை இந்திராகாந்தி அவர்கள் தமிழகத்திலே 10 கிராமங்களை தத்து எடுத்தார்கள் என்றால் அது என்னுடைய ஸ்ரீபெரும்புதூர் தொகுதியில் உள்ள சோமங்கலம், இன்னும் அதைச்சுற்றியுள்ள 10 கிராமங்களைத் தான் தத்து எடுத்து இருக்கிறார்கள். அந்த 10 கிராமங்களைச் சுற்றி ஏராளமான புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றன. இவைகளைப் பயன்படுத்தி நீங்கள் அன்னை இந்திரா காந்தி அவர்கள் பெயரால் அந்தப் பகுதியிலே ஒரு சர்க்கரை ஆலையை உண்டாக்கினால், நாங்கள் பெரிதும் நன்றி உடையவர்களாக இருப்போம் என்பதை நான் குறிப்பிட்டுச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

கல்வியைப் பொறுத்தவரையில்468 கோடி ரூபாய் இன்றைக்கு ஒதுக்கப் பட்டிருக்கிறது. இன்றைக்கு கல்வியில் 5 முதல் 11 வயது வரையிலும், அனைத்து இந்திய அளவிலே 95 விழுக்காடு என்று கொடுத்திருக்கிறார்கள். ஆனால் நம்முடைய சாதனையோ 98.66 விழுக்காடு என்று நாம் பெற்று இருக்கிறோம், அதிகமாகவே. அதைப்போலவே 11 வயது முதல் 14 வயது வரையிலும் அனைத்து இந்திய அளவிலே நிர்ணயித்துள்ளது 50 விழுக் காடாகும். நாம் அதையும் தாண்டி 72.18 விழுக்காட்டைப் பெற்றிருக்கிறோம். 1984-85 ஆம் ஆண்டில் இந்த வயதுத் தொகுதியிலே கிட்டத்தட்ட 2.98 லட்சம் பேர்கள் கூடுதலாக பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். ஆறாவது திட்டக் காலத்தில் 13.67 லட்சம் பேர்கள் கூடுதலாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். நாம் 13.67 லட்சம் பேர்களைக் கூடுதலாகச் சேர்த்தும், நாம் ஆசிரியர் களை எந்த அளவிற்கு நியமித்து இருக்கிறோம் என்றால்,





இடைநிலை ஆசிரியர்கள் 500, தமிழாசிரியர்கள் 75 பேர்கள், உடற்பயிற்சி ஆசிரியர்கள் 50 பேர்கள், பட்டதாரி ஆசிரியர்கள் 150 பேர்கள், பட்டமேற்படிப்பு ஆசிரியர்கள் 75 பேர்களாகும். கிட்டத்தட்ட 13.67 லட்சம் பேர்கள் புதிதாகச் சேர்க்கப்பட்டு இருக்கும் இந்த நேரத்திலே, இவ்வளவு குறைவாக ஆசிரியர்களை நியமித்து இருப்பது நிச்சயமாக இதற்குப் பொருந்துமா? அது தேவைக்கு உகந்ததாக இருக்குமா? என்பதைப் பார்க்கும் போது, இது யானைப் பசிக்கு சோளப்பொறி போடுவதைப் போலத்தான் இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. இன்னும் கூட சொல்ல வேண்டும் என்றால், கல்வியினுடைய தரம் சிறப்பாக இருக்க வேண்டும் என்ற ஆதங்கத்தோடு தான் நான் இவைகளைச் சொல்கிறேன். நம்முடைய கல்வியின் தரம் சிறப்பாக இல்லை என்பதை நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டியவர்களாக இருக்கிறோம். தனியார் துறைகளில் இன்றைக்கு நடத்தப்படுகின்ற பள்ளிக் கூடங்களாக இருந்தாலும் சரி, கல்லூரிகளாக இருந்தாலும் சரி, அதனுடைய தரம், அரசாங்கத்தின் மூலமாக நடத்தப்படுகின்ற பள்ளிக்கூடங்களின் கல்லூரிகளின் தரத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அரசாங்கத்தின் மூலமாக நடத்தப்படுகின்ற கல்வி நிலையங்களில் தரம் குறைவாக இருக்கின்றது. தனியார் பள்ளிகளின் தேர்வு பர்சன்டேஜ் அதிகமாக இருக்கின்றது. ஆனால் அரசாங்கக் கல்லூரிகளிலும், பள்ளிக்கூடங்களிலும் தேர்வுநிலை பர்சன்டேஜ் மிகவும் குறைவாக இருக்கின்றது.

(முற்பகல் 10-00.)

அதனுடைய காரணம் என்ன என்பதைப் பற்றி நாம் ஆராயக் கடமைப் பட்டிருக்கிறோம். அரசாங்கத்திலே இருக்கின்றவர்கள். பணிபுரிகின்றவர்கள், அதை ஏதோ ஒரு கடனாக, நாம் அரசாங்கத்திலே வேலை செய்கிறோம், நம்முடைய கடமையை நாம் செய்துவிட்டோம் என்று நினைக்கிறார்களே தவிர, புதிய வருங்கால நவபாரத சிற்பிகளை நாம் தான் உருவாக்க வேண்டும்; கல்வியினாலேதான் இந்த நாட்டிலே உண்மையான செழிப்பை கொண்டுவர முடியும், கல்வியினாலே தான் இந்த நாட்டிலே இருக்கிற ஏற்றத் தாழ்வுகளை அகற்ற முடியும் என்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையிலே செயல்படுவதில்லை. ஆனால்

அந்த அடிப்படையிலே எல்லா ஆசிரியப் பெருமக்களும் செயல்படுவார்களேயானால், கல்வியினுடைய தரத்தை சாதாரண அரசாங்கப் பள்ளி கூடங்களிலே கூட உயர்ந்த நிலைக்கு கொண்டு வர முடியும்.

இன்றைக்கு நாம் உதாரணத்திற்கு எடுத்துக் கொள்வோமே யானால் பள்ளிக் கூடங்களில் இன்னும் பரீட்சை முடியவில்லை. நாம் மார்ச் மாதத்திலே இருக்கிறோம். ஆனால் இப்பொழுதே ஆங்கிலப் பள்ளிக் கூடங்களிலே இடம் கிடைக்காமல், ஆங்காங்கே பெற்றோர்கள் அலைய வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால் காரணம் என்ன? அங்கேயிருக்கிற கல்வியின் தரத்தை தெரிந்துக் கொண்டு, பெற்றவர்கள், பணக்காரர்கள் வசதி படைத்தவர்கள், படித்தவர்கள், தேடி தேடி ஓடுகிறார்கள் நல்ல பள்ளிக் கூடங்களை. எவ்வளவு ரூபாய் செலவானலும் பரவாயில்லை என்று போகிறார்கள். ஆனால் நம்மையே நம்பி இருக்கிற ஏழை எளிய மக்களின் குழந்தைகளுக்கு அத்தகைய உயரிய தரம் கிடைக்கவில்லை என்று சொன்னால், அதற்கு நாம் பொறுப்பேற்க வேண்டியவர்களாக இருக்கிறோமா இல்லையா என்பதைத்தான் இந்த நேரத்திலே கவனப்படுத்த விரும்புகிறேன்.

அதேபோல கல்விப் பாடங்களிலே கூட இன்றைக்கு இரண்டு வித நிலைமை இருக்கின்றன. குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்று சொன்னால் தனியார்கள் பள்ளிகளிலே அவர்கள் ஒரு சிலபஸை மேற்கொண்டு சொல்லிக் கொடுக்கிறார்கள். நம்முடைய அரசாங்கத்தினுடைய சிலபஸ் வேறு ஒன்றாக இருக்கிறது. ஆக இரட்டைத் தடத்திலே ஓடுகின்ற இந்த சூழ்நிலையை கட்டுப் படுத்தி நிறுத்தி ஒரே வழியாகச் செல்வதற்கு அரசு முயற்சி எடுக்க வேண்டும் என்பதை இந்த நேரத்திலே நான் குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

அடுத்தாற்போல, முதியோர் கல்வி நிலையங்களிலே அதிக மான பெண்களைச் சேர்த்ததற்காக, மத்திய அரசாங்கம் கிட்டத்தட்ட 25 லட்சம் ரூபாயை நமக்கு பரிசாகக் கொடுத் திருக்கிறார்கள் என்று சொன்னால், அதை உண்மையிலேயே வரவேற்கக் கடமைப் பட்டிருக்கிறேன். அதிலும் 1983-84, 1984-85 ஆகிய இரண்டு நிதி ஆண்டுகளிலேயும் நாம் அந்த





பரிசைப் பெற்றிருக்கிறோம் என்று சொன்னால் இது உண்மை யிலேயே வரவேற்று பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகத்தான் இருக்கிறது. நான் கல்வியைப் பற்றி பேசிக் கொண்டிருக்கிற போது எங்களுடைய உறுப்பினர் அவர்கள் ஒன்றைச் சொல் கிறார்கள். பத்மா சேஷாத்திரி பள்ளிக் கூடத்தில் எல்.கே.ஜி. வகுப்பில் சேர்வதற்கு 15 ஆயிரம் ரூபாய் அட்மிஷனுக்கு கேட்கிறார்களாம். எதிர் தரப்பிலே இருக்கிற ஆளும் கட்சி உறுப்பினர்களும் இதைச் சொல்லியிருக்கிறார்கள். இதுபோல தனியார் பள்ளிக்கூடங்கள் அதிகமாக சுய லாப வேட்டை ஆடுகின்ற மிகப் பெரிய இயக்கங்களாக மட்டுமல்ல கொள்ளை லாபம் அடிக்கக் கூடியவர்களாகவும் விளங்கி கல்வியை வியாபாரப் பொருளாக்கக் கூடிய சூழ்நிலை இருப்பதை பார்த்து, நாம் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம் என்று குறிப்பிட்டுச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து கிராமப்புறங்களில் வேலை வாய்ப்புத் திட்டத்தைப் பொறுத்த வரையில் ஆண்டுக்கு 100 நாட்களுக்கு, அதாவது 3 மாதம் மட்டும்வேலை கொடுப்பதற்காக சென்ற ஆண்டிலே 44.50 கோடி ரூபாய் ஒதுக்கிடு செய்திருக்கிறோம். ஆண்டிலே 100 நாட்கள் என்று சொல்வது, நிச்சயமாக நான்கிலே ஒரு பங்கு என்ற நிலை. 3 மாதத்திற்கு மட்டும் நாம் கிராமப்புறங்களிலே இருக்கிற ஏழை எளியவர்களுக்கு வேலை கொடுத்தோ மேயானால் மீதியிருக்கின்ற 9 மாத காலங்களில் அவன் வயிற்றிலே ஈரத் துணியைப் போட்டுக் கொண்டிருக்க வேண்டும் என்பதை சிந்தித்துப்பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம். 1985-86-ல் இதற்காக 65 கோடி ரூபாயை ஒதுக்கியிருப்பதாகச் சொல்லப் படுகிறது. 3 மாத காலம் தான் இதன் மூலம் ஏழை எளியவர் களுக்கு வேலை அளிக்கப்படும் என்று இருக்கின்ற திட்டத்தை மாற்றி 6 மாத காலத்திற்காவது அந்த ஏழைக்கு வேலை கொடுத்து உதவுகிற நிலைக்கு அமைத்துத்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

சொற்ப நிலம் உள்ள விவசாயிகளுக்கு உதவும் நோக்கோடு, பெருந்திட்டமொன்றை செயலுக்குக் கொண்டு வந்து அதில் மத்திய அரசாங்கமும், மாநில அரசாங்கமும் சம அளவில் நிதி ஒதுக்கிடு செய்து உதவுவதற்கு முன் வந்திருப்பதை நான் பாராட்டி வரவேற்கிறேன்.

[திருமதி டி. யசோதா] [1985 மார்ச் 28

மருத்துவத் துறையைப் பொறுத்த மட்டில் 7-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 2,978 மினி ஹெல்த் சென்டர்களை ஏற்படுத்த திட்டம் தீட்டி, அந்த வகையில் சமவெளிப் பகுதியில் 5 ஆயிரம் பேர்களுக்கு ஒன்று என்ற விதத்திலும், மலைப் பகுதிகளில் 3,000 பேர்களுக்கு ஒன்று என்ற விதத்திலும் இந்த மினி ஹெல்த் சென்டர்களை உருவாக்க திட்டம் தீட்டி, 1985-86-ல் 20 துணை நிலையங்களைத்தான் உருவாக்க 46.6 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. நான் மிக வருத்தத்தோடு இந்த மன்றத்திலே இருக்கிற உறுப்பினர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மருத்துவ மனைகள் என்று எடுத்துக் கொண்டால், அதிலும் பிரசவ மருத்துவ மனைகள் என்று சொன்னால், அது மிகவும் பரிதாபகரமான சூழ்நிலையில் கிராமப்புறங்களில் இயங்கிக் கொண்டிருக்கிறது. உதாரணத்திற்கு சொல்ல வேண்டும் என்று சொன்னால், சென்னைக்குப் பக்கத்திலே இருக்கிற குன்றத்தூரிலே இதுபோன்ற ஒரு மருத்துவமனை இருக்கிறது. அந்த மருத்துவ மனையிலே கிராமப்புறங்களில் இருக்கின்ற ஏழை எளிய மக்கள் பிரசவத்திற்கு அவஸ்தை பட்டுக்கொண்டு அவர்கள் இரவோடு இரவாக. சேர்க்கப்படுகின்ற நேரத்திலே, அங்கே அவர்களுக்கு அதிகமான வலி எடுக்கின்ற சூழ்நிலையில் அதற்குரிய மருந்தை அங்கே உள்ள டாக்டர்கள் கொடுப்பதற்கு தயாராக இல்லை. கேட்டால் சொல்கிறார்கள். எங்களிடத்திலே இருந்தால் நாங்கள் நிச்சயமாக கொடுப்போம். அந்த மருந்து மருந்து எங்களிடம் இல்லை என்கிறார்கள். அதன் காரண எங்களிடம் இல்லை என்கிறார்கள். அதன் காரணமாக, வலி அதிகமாக எடுத்தால், அவர்கள் அந்த இரவிலே தங்களிடம் இருக்கின்ற சொற்ப நகைகளான, காதிலே போட்டிருக்கின்ற கம்மல்களையும், மூக்கிலே போட்டிருக்கின்ற சிறு மூக்குத்தியையும் கழற்றிக் கொண்டுபோய், மார்வாடியைத் தட்டி எழுப்பி, அவனிடத்திலே கொடுத்து அதிலே வருகின்ற காசை எடுத்துக் கொண்டு போய், எங்கே மருந்து இருக்கிறது என்று தேடி அலைந்து வெளியிலே அதிகமாக விலை கொடுத்து வாங்கிக் கொண்டு வந்து கொடுத்து, அதற்குப் பிறகு பிரசவம் பார்க்கின்ற கொடுமை இருக்கின்றதே, அந்த நிலைமை, ஏழை மக்கள் மீது நம்பிக்கை வைத்திருக்கின்ற, ஏழைகளுக்காக



1985 மார்ச் 28] [திருமதி டி. யசோதா]

தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருக்கின்ற தமிழக முதல்வருடைய ஆட்சியிலே ஏற்படக் கூடாது என்பதைத்தான் நான் உங்களுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல. அவர்கள் பிரசவித்ததற்கு பிறகு அதிகமாக ஏற்படுகின்ற அந்த ரத்தப் போக்கினை நிறுத்துவதற்கு மருந்து கேட்டால் அதுவும் அங்கு இல்லை, அதையும் அந்த ஏழைகளே போய், அந்த நேரத்தில் தேடி வாங்கிக்கொண்டு போய் கொடுத்தால், அதைப் பயன்படுத்தி ரத்த சேதாரத்தை நிறுத்துகின்ற கொடிய நிலைமை இருக்கிறது. இன்னும் ஒரு படி மேலே போய் சொல்கிறேன். பிறக்கின்ற குழந்தையைக் கழுவுவதற்கு கூட அந்த மருத்துவ மனை சுடுதண்ணீர் கொடுக்கத் தயாராக இல்லை. யார் அந்தப் பெண்ணைக் கூட்டிக் கொண்டு வந்தார்களோ, அவர்களே போய் மண்ணெண்ணெய் வாங்கி, ஸ்டவ்வை பற்றவைத்து சுடு தண்ணீர் கொண்டுவந்து கொடுத்தால்தான் அந்தத் தாதியர்கள் வேலை செய்வதற்கு தயாராக இருக்கிறார்கள் என்று சொல்கின்ற நிலைமை. எத்தனையோ கோடி மருத்துவ மனைக்காக செலவிடுகின்றபோது சாதாரண ஏழை எளிய மக்களை நிறைவு செய்கின்ற இதுபோன்ற விவகாரங்களிலே நாம் கோட்டை விட்டுவிடக்கூடாது என்பதை மிக வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

நகர்ப்புற சொத்துக்களுக்கு நாம் உச்ச வரம்பு விதிக்கிறோம். நகரிலே இருக்கின்றவர்கள் பல சொத்துக்களை வைத்திருக்கிறார்கள். அந்தச் சொத்துக்களை வைத்துக்கொண்டிருப்பது மட்டும் அல்ல. இன்னும் கூட சட்டத்தின் அடிப்படையிலே குடியிருக்கின்றவர்கள் காலி செய்ய வேண்டும் என்று சொன்னால் அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுத்துத்தான் காலி செய்யவேண்டும் என்றெல்லாம் நாம் சட்டம் போட்டுக்கொண்டிருக்கிறோம். இது எத்தனை பேருக்கு பயன்பட்டிருக்கிறது என்பதை பரிசீலனை செய்யவில்லை. சட்டங்கள் அழகாக இருக்கின்றன. நாம் சட்டங்களை ஏழை எளியவர்களுக்காக போடுகிறோம். இந்தச் சட்டங்கள் எத்தனை பேருக்கு பயன்பட்டிருக்கிறது என்று

சொன்னால் இல்லை என்று தான் சொல்ல வேண்டும். வட சென்னையிலே லட்சுமி அம்மாள் என்பவர் கிட்டத்தட்ட 40 வருடத்திற்கு மேலாக இருக்கிறார்கள். அவருடைய தாயார் பெயர் அலமேலு. அந்த அம்மையார் ஒரு குடிசை வீட்டிலே ரூ. 5-ஐ வாடகையாக கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த அம்மையாரை காலி செய்யும்படி ஒரு பணக்காரர் கோர்ட்டிலே வழக்கு தொடுத்து இருக்கிறார். வழக்கு தள்ளுபடி செய்யப் பட்டது. உயர் நீதி மன்றத்திற்கு சென்றிருக்கிறார். அந்த ஏழை 5 ரூபாய் வாடகை கொடுத்துக் கொண்டிருப்பவள், அந்த பணக் காரரை எதிர்த்து வாதாடக் கூடிய சூழ்நிலையிலா இருக்கிறாள்? அரசாங்கத்தின் துணை கொண்டு அவருக்கு ஒரு நல்ல ஏற்றமிகு எதிர்காலத்தை உருவாக்கித் தருவதற்கு நாம் தயாராக இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டுச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

நம்முடைய இந்த பட்ஜெட் உரையின் போது நம்முடைய முன்னவர் அவர்கள் அழகாகச் சொல்லியிருக்கிறார்கள். தமிழ் நாட்டில் போதிய அளவிற்கு இயற்கை வளங்கள் இல்லை என்பதை ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அதற்கு நான் உண்மையிலேயே நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். நான் கூட இந்த மாமன்றத்திற்கு வருவதற்கு முன்னால் நினைத்தது உண்டு. எதிர்தரப்பிலே பேசுகின்றபோது 'என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில், ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்?' என்று சொல்வார்கள். தட்டினால் தங்கம், வெட்டினால் வெள்ளி, இடித்தால் இரும்பு, மூழ்கினால் முத்து — இவ்வளவு வளங்கள் நம்முடைய தமிழ்நாட்டிலே இருக்கின்றன என்று சொன்னார்கள். நான் கூட இந்த மன்றத்திற்கு வருவதற்கு முன்னால், தட்டினால் தங்கம் வரும், வெட்டினால் வெள்ளி வரும், இடித்தால் இரும்பு வரும், மூழ்கினால் முத்து வரும் என்று நினைத்தேன். இன்றைக்கு கவர்னர் உரையிலே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் போதிய அளவிற்கு இயற்கை வளங்கள் இல்லை, இருக்கின்ற வளத்தை வைத்துத் தான் நாம் பாசன வசதி செய்ய வேண்டியிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டியதற்கு உண்மையிலேயே பாராட்ட கடமைப்பட்





டிருக்கிறேன். இன்றைக்கு இருக்கின்ற நிலைகளை எல்லாம் வைத்துப் பார்க்கின்றபோது தமிழகத்தின் முதல்வர் 'ஏழை எளிய குழந்தைகளுக்கு சீருடைகள் வழங்குவது, புத்தகங்கள் வழங் குவது என்பதை ஒரு நல்ல திட்டமாக கொடுத்து இருக்கிறார்கள்.

(முற்பகல் 10-10)

நான் ஒன்றை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல ஆசைப்படு கிறேன். உண்மையான ஏழை மக்களாக இருக்கக் கூடியவர் களுக்கு அந்த நன்மைகள் போய்ச் சேருமாறு செய்யவேண்டும். அதையும் கிராம சேவக்குகளிடத்திலே கொடுத்தால் ஏதாவது தப்பு பண்ணிவிடப் போகிறார்கள். அதன் மூலமாக அரசாங்கத்திற்கு—இந்தத் திட்டத்தின் அடிப்படையில் வரக் கூடிய நல்ல பெயர்—நாசமாகக் கூடிய சூழ்நிலையை எய்தப் போகிறது. நீங்கள் கவனத்தில் அதை வைத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, வேட்டி, சேலை வழங்கும் திட்டம் ஒரு அருமையான திட்டம். ஆனால் அதுவும் ஏழை எளிய மக்களுக்குக் கிடைக் காமல் வசதி உள்ளவர்களுக்குக் கிடைக்கக்கூடிய சூழ்நிலை பல இடங்களில் இருக்கிறது. நானே திருமங்கலம் பகுதியிலே பார்த்தேன். வேட்டி, சேலை, கம்மலும், மூக்குத்தியும் செயினும் போட்டுக்கொண்டு வருகிறவர்களுக்குக் கொடுக்கப்படுகிற நிலை மையை நானே பார்த்தேன், வருத்தப்பட்டேன். அந்த இடத்தி லேயே கேட்டேன். வோட்டுப் போட்டிருக்கலாம். வசதி படைத்தவர்களுக்காகக் கொடுப்பதற்குத் திட்டம் இல்லை, ஏழை எளியவர்களுக்கு பொருளாதாரத்தின் அடித்தளத்திலே இருக்கிறவர்களுக்கு வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர் களுக்குக் கொடுக்கிற திட்டமாகும் இது. பல அதிகாரிகள் ஊருக்குள்ளேயே போகாமல் புளியமரத்தின் அடியில் உட்கார்ந்து ஒரு லிஸ்டை தயாரித்து மேல் அதிகாரிகளிடத்திலே கொடுத்து அதன் மூலமாக விநியோகம் செய்கிற நிலைமை மாற்றப்பட்டால் தான் இந்தத் திட்டத்தினால் உண்மையான பலன் ஏற்படும்.

அறநிலையத் துறையைப்பற்றி ஒரு வார்த்தையைச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள் என்பதால் அந்தத் துறையிலே என்னுடைய தொகுதியிலே உள்ள பிரச்சினையைச் சொல்வதற்கு வாய்ப்புப் பெறுகிறேன். மாங்காடு மிகப் பெரிய தலமாக இருக்கிறது. காமாட்சியம்மன் கோயில் என்று சொல்லப்படுகிற அந்த இடத்திற்கு வராதவர்கள் யாரும் இருக்கமுடியாது. குறிப்பிட்ட சில அமைச்சர்கள்கூட அந்த அம்மனிடத்திலே பக்தியாக இருக்கிறார்கள் என்பதை நான் வரவேற்கிறேன். அந்த அம்மன் எதற்காக அங்கே தியானத்தில் இருக்கிறார், எதற்காக அங்கே தவக் கோலத்திலே இருக்கிறார் என்றால் தன்னுடைய கணவனாக இருக்கக்கூடிய வெள்ளீஸ்வரப் பெருமான் கண்ணை மூடிய காரணத்தினால், அந்த ஒரு சில நிமிடங்களிலே உலகம் அழியப் போகிறது என்பதால் உலகத்திற்கு ஏற்படும் துன்பத்தைப் போக்குவதற்காக, நீ என்னை நினைத்து தவம் இருக்க வேண்டுமென்று சிவபெருமான் கட்டளையிட்ட காரணத்தினாலே காமாட்சியம்மன் தவக் கோலம் பூண்டிருக்கிறார்கள். வெள்ளீஸ்வரன் கோயிலைப் பார்த்தால் தெரியும். கோட்டான்களும், பாம்புகளும், தேரைகளும் இருக்கக்கூடிய சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. அமைச்சர் தனி கவனம் செலுத்தி அதை சீர்திருத்திப் புதுப்பிக்கவேண்டும். கடவுளர்களுக்கும் நல்ல காலம் வரவேண்டும் போலிருக்கிறது. அவர்களுக்கு டைம் சரியாக இல்லையென்று நான் நினைக்கிறேன். காமாட்சியம்மனுக்கு வந்த அந்த நேரம் வெள்ளீஸ்வரனுக்கு வரவேண்டும். அந்த வெள்ளீஸ்வரன் கோயிலைப் புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, அரிசன நலத்துறையைப் பொறுத்தமட்டில் குறிப்பிட விரும்புகிறேன். பல நல்ல காரியங்களை இந்தத் துறை மேற்கொண்டிருக்கிறது. ஆனால் இடைத்தரகர்கள் மூலமாக ஏழை எளிய மக்களுக்கு கிடைக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. கோயில் நிலங்கள், அரசாங்கத்திற்குச் சொந்தமான நிலங்கள் எல்லாம் வசதி படைத்தவர்கள், விவரம் தெரிந்தவர்கள்





அனுபவிக்கக் கூடிய நிலைமை இருக்கிறது. பணக்காரர்களிடத்திலே கோயில் நிலங்கள் அதிகமான அளவுக்கு இருக்கிறது. என்னுடைய தொகுதியினை எடுத்துக் கொண்டால் மிகப் பெரிய பணக்காரர்கள் பல ஏக்கர் நிலத்தை அனுபவித்துக் கொண்டு, கோயிலுக்கு குத்தகையும் செலுத்தாமல் அனுபவிக்கிற நிலைமையைப் பார்க்கிறபோது, அதைவிட ஏழை எளிய அரிசன மக்களுக்கு அந்த நிலங்களைக் கொடுத்து அதன் மூலமாக வருகிற வருமானத்தை அந்தக் கோயிலுக்குக் கொடுத்து அந்தக் காரியங்களை செய்வதற்கு உதவிகரமாக இருக்கக்கூடிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அரசாங்கம் இதை சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். அரிசன மக்களுக்கு வீட்டு மனைப் பட்டாக்கள் தயாள சிந்தையோடு கொடுப்பதைப் போன்று அவர்கள் பயிர் செய்வதற்காக அந்த அந்த இடங்களிலே பணக்காரர்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிற கோயில் நிலங்களை எடுத்துக் கொடுத்து, 1, 2 ஏக்கர் கொடுப்பார்களானால் நிச்சயமாக உங்களுக்கு அவர்கள் விசுவாசமாக இருப்பார்கள் என்பதை நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து காவல்துறையைப் பொறுத்தவரை, இன்று தமிழகத்தில் எங்கு பார்த்தாலும் போலி சாமியார்கள் அதிகமாக இருக்கிறார்கள். இந்த போலி சாமியார்களைப்பற்றி படிக்கிறபோது உண்மையிலேயே பயங்கரமாக இருக்கிறது. அவர்கள் அத்தனை பேரும் சாமியார் வேடம் போட்டுக்கொண்டு, அவர்கள் அத்தனை பேரும் தெய்வத்தின் மேல் பழியை போட்டுக்கொண்டு, அவர்கள் அத்தனைபேரும் தெய்வ நம்பிக்கையை தவறான முறையில் பயன்படுத்தி, ஒரு கொடுமையான சூழ்நிலையில் அவர்கள் அத்தனை பேரும் இன்றைக்கு ஒட்டுமொத்தமாக பெண்களை கற்பழித்தும், ஏமாற்றியும் அவர்கள் பயங்கரமாக பாழ்ப்படுத்திக் கொண்டு இருக்கும் சூழ்நிலையை நாம் பத்திரிக்கையின் வாயிலாக படிக்கிறபோது உண்மையிலேயே இதுபோன்ற நிலைமை தமிழகத்தில் தானா நடைபெறுகிறதா என்ற அச்ச உணர்வு தோன்றுகிறது. அதிலும் ராயப்பேட்டையில் ஒரு போலி சாமியார் கைது செய்யப்பட்டு இருக்கிறார். அவர் போலீசாரை ஏமாற்றிவிட்டு தப்பி ஓடியிருக்கிறார் என்பதை

நினைக்கும்போது காவல்துறையை சவாலுக்கு அழைப்பதுபோல் இந்த போலி சாமியார் இருப்பதை நாம் பார்க்கிறோம். இன்றைக்கு ஒருவர் தர்மபுரியில் இருக்கிற அந்த போலி சாமியார் கோர்ட்டுக்கு வந்து இருக்கிறார். ஜாமினில் விடுபட்டு இருக்கிறார். எத்தனையோ பெண்களை கற்பழித்தவர். எத்தனையோ குடும்பங்களை கெடுத்தவன் இன்றைக்கு அந்த் சாமியார் வெளியே வரக்கூடிய அளவுக்கு நம்முடைய சட்டத்தின் கருணை இதற்கு இடம் கொடுக்கிறது என்று சொன்னால், அதை இந்த மன்றம் தடுத்து நிறுத்துவதற்கான முயற்சி செய்யவேண்டும். இப்படி போலி சாமியாகள் எங்கே இருந்தாலும் சரி இப்போது இருந்தே அரசு காவல்துறை, அதிலும் துப்பறிவு பிரிவை சேர்ந்தவர்கள், அந்த சாமியார்கள் எங்கு இருந்தாலும் அவர்கள் மீது ஒரு கண் வைத்துக்கொள்ள வேண்டும. நான் எல்லா சாமியார்களையும் குற்றம் சொல்கின்றேன் என்று நினைக்கவேண்டாம். ஆனால் நாம் நல்லவர்கள் என்று நினைப்பவர்கள் தான் இதுபோன்ற கொடுமை யான காரியங்களை செய்து கொண்டு வருகிறார்கள். ஆகவே, அவர்களை நாம் கண்காணிப்பதில் தவறு இல்லை. அவர்கள் குற்றவாளிகள் என்று தெரிந்தவுடன் அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு இந்த அரசு எந்த நேரத்திலும் தயாராக இருக்க வேண்டும் என்பதையும் நான் இங்கே குறிப்பிட்டு சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இறுதியாக, நான் ஒன்றை கூற கடமைப்பட்டு இருக்கிறேன். காவல் துறையைப் பொறுத்தவரை எனக்கு ஒரு கடிதம் வந்து இருக்கிறது. அந்தக் கடிதத்தை நான் மாண்புமிகு நாவலர் அவர்களிடம் தர ஆசைப்படுகிறேன். ராஜேஸ்வரி என்ற பெண். கணவர் பெயர் பரமேஸ்வரன் 30 சி, காசூர்கான் வீதி, உடுமலைப் பேட்டையில் வசிக்கிறார்கள். அந்த அமமையார் சத்துணவுக் கூடத்தில் ஆசிரியையாக பணியாற்றுகிறார்கள். அந்த அம்மையார் ஒரு வீட்டில் குடியிருந்து கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் குடியிருக்கும் வீட்டில் கணவரை அவர்கள் பிரித்து இருக்கி றார்கள். அந்த குழந்தைகள் கூட ரத்தத்தில் கையெழுத்துப் போட்டு அந்த மகஜரை அனுப்பியிருக்கிறார்கள். அந்த அம்மை யாரின் பெரிய மகன் பெயர் பழனிவேல் ராஜா, அனந்தபத்ம





நாபன் நாகன், அந்த அம்மையாரின் பெரிய பெண் பெயர் லஷ்மி பிரபா, தாயார் பெயர் ராஜேஸ்வரி, இவர்கள் கையெழுத்துப் போட்டு அனுப்பியிருக்கிறார்கள். மனு என்ன என்று சொன்னால் குறிப்பாக அந்த அம்மையாருடைய கணவன் அந்த வீட்டுக் காரரிடம் ஏதோ கடன் பெற்றாராம் அதற்காக அந்த அம்மை யார் சத்துணவுக் கூடத்திற்கு சென்று இருக்கும் நேரத்தில், குழந்தைகள் எல்லாம் பள்ளிக்குச் சென்று இருக்கும்போது அந்த வீட்டுக்குள் புகுந்து அந்த வீட்டுக்குச் சொந்தக்காரர் கிட்டத் தட்ட 103 பொருள்களை எடுத்துச் சென்று இருக்கிறார். இரும்பு பீரோவிலிருந்து, கட்டிலிலிருந்து அத்தனை பொருட்களையும் அவர் எடுத்துச் சென்று இருக்கிறார்கள். அந்த வீட்டைக் கொடுத்து இருக்கிறார்கள். அதற்காக அவர்கள் போலீஸில் புகார் செய்திருக்கிறார்கள். ஆனால் போலீசார் நடவடிக்கை எடுக்கவில்லை. அதற்கு பதிலாக அந்த வீட்டுச் சொந்தக்காரர் சின்னதம்பி என்பவர் அந்த அம்மாவுக்கு ஒரு லெட்டர் போட்டி ருக்கிறார். மதுரையிலிருந்து, மதுரை டி-5 போலீஸ் ஸ்டேஷனுக்கு நீ வரவேண்டும் என்று, அதற்கு அந்த அம்மா பயந்து போய் தன்னை கொலை செய்துவிடுவார்களோ என்ற அச்சத்தின் காரணமாக இன்றைக்கு அவர்கள் போகாமல் இந்த மனுவை தந்து இருக்கிறார்கள். சாதாரண ஏழை மக்களுக்கு பாதுகாப்பு கொடுப்பதற்கு இன்றைக்கு போலீஸ் துறை தங்களை தயார் செய்துகொள்ள வேண்டும். காரணம், இந்த அரசு ஏழை எளிய மக்களுக்காக இருக்கிற அரசு என்பதில் அவர்கள் நிச்சய மாக நினைவு கூற வேண்டும் என்பதற்காகத்தான் இதை நான் மாண்புமிகு துணைத்தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு நாவலர் அவர்களிடம் சமர்ப்பிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து குறிப்பிட்டுச் சொல்ல ஆசைப்படுவது, இன்றைக்கு இருக்கின்ற சத்துணவுத் திட்டம் மிகச் சிறப்பான முறையில் அந்த திட்டத்தை நாம் கொண்டு வந்து இருந்தாலும் கூட அதை நடைமுறைப்படுத்துகிறபோது சில குறைபாடுகள் இருக்கத்தான் செய்கிறது. அந்தக் குறைபாடுகள் இல்லாமல் இருக்க வேண்டு மென்பதுதான் எல்லோருடைய விருப்பமும்கூட. அங்கே இருப்பவர்களின் விருப்பமும் அதுவாகத்தான் இருக்கும். இங்கே

[திருமதி டி. யசோதா] [1985 மார்ச் 28

(முற்பகல் 10-20.)

விருப்பவர்களின் விருப்பமும் அதுவாகத்தான் இருக்கும். ஆனால் அதை நடத்துகின்றவர்கள், இந்த சிஸ்டத்திலுடைய உண்மையான நிலையைப் புரிந்து கொள்ளாமல் இருக்கிறார்கள். இந்தத் திட்டமானது நல்ல எண்ணத்தின் அடிப்படையில், அடிப்படையில், உயர்ந்த நோக்கத்தின் அடிப்படையில் கொண்டுவரப்பட்டிருக்கிறது, ஏழைக் குழந்தைகளின் பசிப் பிணியைப் போக்க வேண்டுமென்று கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று நினைத்து, இதைச் சேவையின் அடிப்படையில் செய்தால் நிச்சயமாக இந்தத் திட்டம் மிகப்பெரிய எடுத்துக் காட்டாக விளங்கும். ஆனால் பலபேர் தங்களுடைய சுய இலாப வேட்டைக்கு இதைப் பயன்படுத்திக் கொள்ளுகின்ற சூழ்நிலை இருக்கிறது.

கூட்டுறவுத் துறையின் மூலம் காய்கறிகளை விநியோகம் செய்ய வேண்டுமென்று அரசாங்கம் சொல்லியிருக்கிறது. எதற்காக அப்படிச் சொன்னது என்றால், தனியார் காய்கறிகளைப் போட்டால் அதில் கொள்ளை இலாபம் அடித்து விடுவார்கள் என்று கருதித்தான் கூட்டுறவுத் துறை அந்தக் காய்கறிகளைக் கொடுத்தால் உண்மையிலேயே அதனுடைய இலாபம் கூட்டுறவுத் துறைக்குப் போகும், அங்கேயுள்ளவர்கள் அதன் பலனை அனுபவிப்பார்கள்; அதைப் போல இந்தப் பக்கம் பார்த்தாலும் ஏழைக் குழந்தைகளுக்குப் பலன் கிட்டும் என்ற இந்த நல்லெண்ணத்தின் அடிப்படையிலே சொல்லப்பட்டது. ஆனால் இப்பொழுது அங்கே கூட்டுறவுத் துறையின் மூலம் வழங்கப்படுகின்ற காய்கறிகளுக்கு விலை என்னவென்று பார்த்தால், வெளியிலே 8 ரூபாய்க்கு விற்றால், கூட்டுறவுத் துறையின் மூலம் 16 ரூபாய்க்கு — இரண்டு மடங்கு அளவிற்குத் தொகை வைத்து காய்கறிகள் விற்கப்படுகின்றபொழுது, அங்கே உள்ளவர்கள் அச்சப்படுகிறார்கள், பயப்படுகிறார்கள். இந்தத் திட்டம் முதலமைச்சருடைய திட்டம்; ஆனால் இந்தத் திட்டத்தின் மூலம் வேலை செய்யும் ஆசிரியர்களும் சரி, தாதியர்களும் சரி, எந்த நேரத்திலே யார் வருவார்களோ, எந்த நேரத்திலே யார் வந்து என்ன கேட்பார்களோ, எந்த நேரத்திலே



1985 மார்ச் 28] [திருமதி டி. யசோதா]

தம்முடைய சீட்டைக் கிழிப்பார்களோ என்று அச்சவுணர்வோடு இருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. எனவே, யார் எதைச் சொன்னாலும் அவர்கள் 'ஆமாம் சாமி' போடுகின்ற சூழ்நிலை இருக்கிறது. உண்மையான சூழ்நிலையை எடுத்துச் சொல்லி, அவர்கள் விளக்கிக் காட்டுகின்ற நிலைமை இல்லை. எனவே, அவர்களைப் பற்றியும் நாம் கருத்திலே கொள்ளவேண்டும்.

அவர்களுக்குச் சம்பளம் மிகவும் குறைவாக இருக்கிறது. இந்தச் சம்பளத்தைப்பற்றி நாம் மறுபரிசிலனை செய்ய வேண்டும். நல்லதொரு திட்டத்திற்கு நாம் கொடுக்கின்ற இந்த 175 ரூபாய் சம்பளம் என்பது மிகக் குறைந்த ஊதியம். இப்பொழுது நிலவுகின்ற கடுமையான சூழ்நிலையில் இந்தச் சம்பளத்தை வைத்துக்கொண்டு வாழ முடியுமா என்பதை அரசாங்கம் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தம்முடைய சட்டமன்ற விடுதிகளில் வேலை செய்கின்ற பெண்கள் — கிட்டத்தட்ட எட்டு வருஷங்களாக, பத்து வருஷங்களாகத் தற்காலிகமாக வேலை செய்கின்றார்கள். அவர்களுக்கு நிரந்தரமான உத்தியோகம் கொடுப்பதற்கு நாம் தயாராக இல்லை. அதற்கும் நாம் முன் வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்னையில் கமிஷனர் அலுவலகத்தில் பெண் காப்பாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு நாளைக்கு ஐந்து ரூபாய் சம்பளம் கொடுக்கப்படுகிறது. மாதத்திற்கு 150 ரூபாய் கிடைக்கும். அப்படியாவது மாதம் முழுவதும் வேலை கிடைத்தாலும் பரவாயில்லை. ஆனால் 10 நாட்கள், 15 நாட்கள் என்று வேலை கிடைக்கின்றபொழுது, ஒரு நாளைக்கு ஐந்து ரூபாய் என்றால், 15 நாட்களே வேலை கிடைப்பதாக வைத்துக் கொண்டாலும் 75 ரூபாய்தான் கிடைக்கும். அந்த 75 ரூபாயை வைத்துக் கொண்டு ஒரு குடும்பத்தை நிர்வகிக்க முடியுமா என்பதைக் கவனித்து, அரசாங்கம் இதைப்பற்றிப் பரிசீலனை செய்து பார்க்க வேண்டுமென்பதைத்தான் இந்த நேரத்தில் நான் குறிப்பிட்டுச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாடு ஊராட்சி பகுதி நேர எழுத்தாளர்கள் இருக்கிறார்கள். அவர்களை முழு நேர எழுத்தாளர்களாக ஆக்குவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்கின்ற சூழ்நிலையை உருவாக்கித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இலங்கைத் தமிழர்கள் பிரச்னையைப் பொறுத்தவரையில், தமிழகத்திலே உள்ள சிலர் அது தங்களுக்கே உரியது என்று நினைத்துக்கொண்டு பேசுவது வேதனைக்குரிய விஷயமாகும். இலங்கைத் தமிழர் பிரச்னை என்பது தமிழகத்திலே உள்ள அத்தனைபேர்களுக்கும் ஒட்டுமொத்தமாக சொந்தமாக உள்ள பிரச்னை இது.

நேற்றைய தினம் கூட நம்முடைய தமிழறிஞர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதன் அவர்கள் தலைமையிலே, பாராளுமன்றத்தின் முன்பு ஊர்வலமாகச் சென்றிருக்கிறார்கள். பாரதப் பிரதமர் இராஜீவ் காந்தி அவர்களைச் சந்தித்து மகஜர் கொடுத்திருக்கிறார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேர்களும் கலந்து கொண்டிருக்கிறார்கள். அதிலே மத்திய அமைச்சரவையில் நம்முடைய தமிழ் நாட்டின் பிரதிநிதியாக விளங்குகின்ற திருமதி மாகதம் சந்திரசேகர் அவர்களும் கலந்து கொண்டு, கிட்டத்தட்ட 25 நிமிடங்கள் பேசி மகஜர் கொடுத்து வந்திருக்கிறார்கள். அவர்கள் சொல்லியிருப்பது என்னவென்றால், நாங்கள், வெளிநாட்டு விவகாரத் துறைச் செயலாளராக இருக்கின்ற ரமேஷ் பந்தாரி அவர்களை அனுப்பியிருக்கிறோம், அவர்கள் நல்ல முடிவோடு வருவார்கள் என்று எதிர்பார்க்கிறோம், நிச்சயமாக இலங்கைத் தமிழர்கள் விஷயத்தில் மத்திய அரசாங்கம் கவனக் குறைவாக இல்லை என்று சுட்டிக்காட்டியிருக்கின்றார்கள்..

நான் இந்த மன்றத்திலே ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். காங்கிரஸ் பேரியக்கமும், மத்திய அரசாங்கமும் இந்த மக்களுக்காக நடவடிக்கை எடுப்பதற்குத் தயங்காது; தயக்கம் காட்டாது; உரிய நேரத்தில், உரிய சூழ்நிலையில் அதனுடைய நடவடிக்கையை எடுத்துக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



இன்னொன்றையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். காங்கிரஸ் அரசாங்கம் இல்லாத காலத்திலேயே, சுதந்திரத்திற்காகக் காங்கிரஸ் போராடிக்கொண்டிருந்த காலத்திலேயே, இலங்கையிலேயிருந்து இதுபோன்ற பிரச்னைகள் எழுந்த நேரத்தில், இந்தியாவின் பிரதிநிதியாக பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் இலங்கைக்குச் சென்றார்கள்; அங்கே இந்திய-இலங்கை தேசீய காங்கிரஸ் என்ற அமைப்பை உருவாக்கினார்கள்.

அங்கே இந்த அமைப்பிலே இருப்பவர்களுக்கு எந்த அரசாங்கம் வந்தாலும் சரி, அது பண்டார நாயகாவாக இருந்தாலும் சரி, சிரிமாவோ பண்டார நாயகாவாக இருந்தாலும் சரி, யாருடைய அரசாக இருந்தாலும் அந்த இலங்கை காங்கிரஸ் கட்சியின் சார்பிலே ஓர் அமைச்சர் பொறுப்பேற்க முடியும் என்ற சூழ்நிலை இன்றைக்கும் அங்கே இருந்துவருகின்றது என்று சொன்னால் அதை உருவாக்கித் தந்தவர்கள் காங்கிரஸ்காரர்கள் தான் என்பதை நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

அதுபோல மலேயாவை எடுத்துக்கொண்டாலும், இந்திய-மலேசியா காங்கிரஸ் என்ற அமைப்பை ஏற்படுத்திக் கொடுத்தார்கள் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள். அன்றைய தினம் காங்கிரஸ் அரசாங்கம் இல்லை. அப்போது நேரு அவர்கள் இதை உருவாக்கித் தந்த காரணத்தால் அங்கே 45 சதவீதம் சீனாக்காரர்கள் வாழ்கின்ற நிலையில் 10 சதவீதமே தமிழர்கள் இருக்கின்ற நிலையில் எந்த அமைச்சரவை அங்கே அமைந்தாலும் அங்கே தமிழர்களுக்கு பிரதிநிதித்துவம் கொடுக்கப்படுகின்றது என்று சொன்னால் இதை உருவாக்கித் தந்தது காங்கிரஸ் பேரியக்கம் என்பதை நான் நினைவு படுத்த விரும்புகிறேன். எனவே அனைத்து மன்ற உறுப்பினர்களுக்கும் வருத்தத்தோடும் வேதனையோடும் நான் தெரிவித்துக்கொள்கிறேன், காங்கிரஸ் பேரியக்கமும், மத்திய அரசும் நிச்சயமாக இலங்கைத் தமிழர்கள் பிரச்னையில் எதுவும் செய்யவில்லை என்று நினைக்காமல் நிச்சயமாகச் செய்யும், செய்துகொண்டிருக்கின்றது, அதற்கான சூழ்

நிலையை எதிர்பார்த்து காத்துக்கொண்டிருக்கின்றது என்பதை மட்டும் இந்த நேரத்தில் கூறிக்கொண்டு இந்த பட்ஜெட் மீது என்னுடைய கருத்துக்களை வைப்பதற்கு வாய்ப்பினைத் தந்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றியையும் வணக்கத்தையும் கூறிக்கொண்டு விடைபெறுகிறேன்.

* திரு. எப். எம். இராசரத்தினம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே நமது புரட்சித் தலைவருடைய வழிகாட்டுதலோடு டாக்டர் நாவலர் அவர்களால் இங்கே வைக்கப்பட்டிருக்கின்ற நிதிநிலை அறிக்கையின் மீது விவாதிக்கின்ற வாய்ப்பினை வழங்கிய தங்களுக்கு முதற்கண் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்து உலகத் தமிழர்களின் ஒளிவிளக்கு, மூன்று பிறவி கண்ட முத்தமிழ் நாயகன், இதய தெய்வம், புரட்சித் தலைவர் இருக்கின்ற திசை நோக்கி வணங்கி இன்றைக்கு இந்தப் பாரம்பரியம் மிக்க மாமன்றத்தில் பணியாற்றுகின்ற ஒரு வாய்ப்பை வழங்கிய குளச்சல் சட்டமன்றத் தொகுதி வாக்காளர் பெருங்குடி மக்களுக்கும், நான் வெற்றிபெறவேண்டும் என்பதற்காக அல்லும், பகலும் அயராது உழைத்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் உடன் பிறப்புக்களுக்கும், தோழமைக் கட்சித் தோழர்களுக்கும் என்னுடைய பணிவான வணக்கங்களைத் தெரிவித்து அவர்கள் இருக்கின்ற திசை நோக்கி வணங்கி ஒருசில உணர்வுகளை இந்த மாமன்றத்தில் வைத்து நான் என்னுடைய உரையை நிறைவு செய்யலாம் என்று கருதுகிறேன்

இன்றைக்கு தமிழகத்தினுடைய முதலமைச்சர் எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலோடு டாக்டர் நாவலர் அவர்களால் வைக்கப்பட்டிருக்கின்ற இந்த நிதி நிலை அறிக்கையைப் பொறுத்த வரையில் நல்ல திட்டங்களுக்குத் தொடக்கமாகவும், கருத்துக் கருவூலமாகவும் வரலாற்றுப் பேழையாகவும், ஏழை எளியவர்களுக்கு வரப்பிரசாதமாகவும், தெவிட்டாத தித்திக்கும் தேனமுதமாகவும் இன்றைக்கு இந்த நிதிநிலை அறிக்கை இருக்கின்றது என்பதைக் கூறி இந்த நிதி நிலை அறிக்கையை நான் வரவேற்கிறேன்.





இங்கே எனக்கு முன்னால் பேசிய அருமை நண்பர்கள் உரையாற்றும்போது வரியைக் குறைப்போம், வசதியைப் பெருக்குவோம் என்று நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், அந்த அளவுக்கு வரியைக் குறைத்திருக்கிறீர்களா, வசதியைப் பெருக்கி இருக்கிறீர்களா என்கிற கேள்விக் கணைகளை எதிர்க்கட்சி நண்பர்கள் எடுத்து வைத்தார்கள். வரியைக் குறைப்போம், வசதியைப் பெருக்குவோம் என்றுதான் நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் என்பதை நாங்கள் ஏற்றுக்கொண்டு தான் அந்த அடிப்படையில்தான் இன்றைக்கு நிறைய வரிகளைக் குறைத்திருக்கிறோம் என்பதைச் சொல்வது என்னுடைய கடமை.

அன்றைக்கு ஒரு காலத்தில் விவசாயத் தோழர்கள் எல்லாம் போர் முரசு கொட்டி, புரட்சிக் குரல்கொடுத்து ஒரு காசு மின் கட்டணம் குறைக்கவேண்டும் என்று கேட்டு கிளர்ந்தெழுந்து போராடியவர்களை துப்பாக்கித் தோட்டாக்களால் துளைத்தெடுத்து, 16, 17 வயதுடைய இளைஞர்கள் எல்லாம் சுட்டு வீழ்த்தப்பட்ட காட்சியைத் தமிழ்நாடு கண்டது. ஆனால்

(முற்பகல் 10-30)

இன்றைக்கு நிலை என்ன? சிறு உழவர்களுக்கு, மற்றும் சொந்த நிலம் வைத்து உழுபவர்களுக்கு உதவி செய்யும் வகையில் இயற்கை உரங்களின் மீதான 5 சதவீதம் பலமுனை வரிகளை மொத்தமாக ரத்து செய்திருக்கிறோம் என்று சொன்னால் இது ஏழை எளியவர்கள்மீது, விவசாயப் பெருங்குடி மக்கள் மீது கருணை காட்டுகின்ற அரசுதானா என்பதை ஒரு கணம் நல்லவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அதே போலத்தான் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கின்ற வகையிலே 12 சதவீதம் விற்பனை வரியை இன்றைக்கு 10 சதவீதமாகக் குறைத்திருக்கிறோம். இது சாதனை இல்லையா? வரியைக் குறைத்திருக்கவில்லையா என்பதை எதிர்க்கட்சி நண்பர்கள் ஒரு முறை எண்ணிப் பார்க்க வேண்டும்.

1985 மார்ச் 28] [திரு. எப். எம். இராசரத்தினம்]

அதே போலத்தான் நம்முடைய நெடுநாள் கோரிக்கையாக இருப்பது நெல்லுக்கு விலை கூட்ட வேண்டுமென்பது. அதற்காக விவசாயத் தோழர்கள் எல்லாம் கிளர்ந்தெழுந்தகாலத்தில் ஒன்றும் செய்யப்படவில்லை. இன்றைக்குக் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 15 அதிகப்படுத்தி இருக்கிறோமே இது சாதனை இல்லையா ?

அது மட்டுமல்ல, இந்தியப் பெருகண்டம் சுதந்திரம் அடைந்து ஏறத்தாழ 30 ஆண்டுக்காலத்திற்குப் பின்னாலே, புரட்சித் தலைவர் அரசுதான் இன்றைக்கு 7,226 கிராமங்களுக்காக ரூ. 107.69 கோடி குடிநீர் திட்டத்திற்காக ஒதுக்கியிருக்கிறது என்றால், இது எந்த அளவிற்குப் பெரிய சாதனை, அடித்தளத்திலே இருக்கிற மக்களை உயர்த்த வேண்டுமென்பதற்காக புரட்சித் தலைவர் எந்த அளவிற்குத் திட்டங்களைத் தீட்டி இருக்கிறார் எனபதை ஒரு கணம் எண்ணிப் பார்க்க வேண்டுமென்பதற்காக நான் இந்தக் கருத்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

அது மட்டுமல்ல, இன்றைக்கு ஏழை எளியவர்களுடைய குடும்பங்களிலேயிருந்து படித்த பட்டதாரிகள் வரவேண்டும், விஞ்ஞானிகள் வரவேண்டும், மருத்துவ நிபுணர்கள், டாக்டர்கள் போன்றவர்கள் எல்லாம் வரவேண்டும், உருவாக்கப்பட வேண்டுமென்பதற்காக, கல்வியினுடைய தரத்தைக் கூட்டுகிற மூகத்தான் இந்த அரசு இந்த ஆண்டு கல்விக்காக ரூ. 468 கோடி ஒதுக்கியிருக்கிறது.

அதோடு சத்துணவுத் திட்டத்திற்காக ரூ. 163 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. சிலர் கவர்னர் உரையிலே பேசும்பொழுது சத்துணவுத் திட்டம் ஒரு அடிப்படை மாறுதலை உண்டாக்கும் திட்டமா என்று கேட்டார்கள். புரட்சித் தலைவர் அவர்களைப் பொறுத்தவரையில் தொலைதூரப் பார்வையோடு, நெடுந்தூரப் பார்வையோடு, இளைய தலைமுறையை, வலிவுற்ற தலைமுறையாக மாற்றவேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையிலேதான் இந்தச் சத்துணவுத் திட்டத்தைத் தமிழகத்திற்குத் தந்திருக்கிறார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.



1985 மார்ச் 28] [திரு. எப். எம். இராசரத்தினம்]

அது மட்டுமல்ல, இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள புள்ளி விவரத்தை, அருமை அண்ணன், நிதி அமைச்சர் நாவலர் அவர்கள் தெளிவாகச் சொல்லி இருக்கிறார்கள். இந்தியத் துணைக் கண்டத்தினுடைய புள்ளி விவரத்தின்படி 5 முதல் 11 வயது உள்ளவர்களுடைய கல்வித்தரம் 95 சதவீதம் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆனால், தமிழகத்தில் அப்பிரிவினரின் கல்வித் தரம் 98.6 சதவீதம். 5 வயது முதல் 11 வயது வரை உள்ளவர்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது என்று சொன்னால் இது சத்துணவுத் திட்டத்தினுடைய பெருமை இல்லையா என்பதை அருள்கூர்ந்து எண்ணிப் பார்க்க வேண்டும். அதே போல், 11 முதல் 14 வயது வரை உள்ளவர்களுடைய கல்வித் தரத்தைப் பார்க்கும்போது, இந்திய துணைக் கண்ட அடிப்படை 50 சதவீதம் என்று சொல்கிறார்கள். ஆனால், தமிழகத்தில் 72.18 சதவீதம் என்ற அளவு கல்வியினுடைய தரம் உயர்ந்திருப்பதாகப் புள்ளி விவரங்கள் சொல்லுகின்றன. சத்துணவுத் திட்டத்தின் அடிப்படையிலேதான் ஒரு சரித்திர மாறுதலை, எங்களது தத்துவத் தலைவன், சரித்திர நாயகன், தமிழகத்திலே உருவாக்கி இருக்கிறார் என்பதற்கு இதைவிட வேறு என்ன புள்ளிவிவரம் தேவை என்பதை நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, இன்றைக்கு அரசுப் பணியாளர்களுக்கு, குடும்ப நலத் திட்டத்தின்கீழ் ரூ. 10,000 வழங்கப்பட்டிருக்கிறது. அதை ரூ. 20,000 ஆக உயர்த்தி இருக்கிறோம். எந்த அளவுக்குப் பெரிய சாதனையை இந்த அரசு செய்திருக்கிறது என்பதை ஒரு கணம் எண்ணிப் பார்க்கவேண்டும்.

அதுபோல, ஓய்வுகாலப் பணிக்கொடை உச்ச வரம்பை ரூ. 36,000 லிருந்து ரூ. 50,000 ஆக உயர்த்தி இருக்கிறோம். இது எந்த அளவு பெரிய சாதனை என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

அதே போல, நமது நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் நிதிநிலை அறிக்கையை வைக்கின்றபொழுது, மத்தியிலே கூட்டாட்சி வலுவுள்ளதாக இருக்க வேண்டுமென்றால், மாநிலத்தில் தன்னாட்சி வேண்டுமென்பதற்கான காரண காரியங்களை, நம்முடைய உணர்வுகளைத் தெளிவாகச் சொல்லி

[திரு. எப். எம். இராசரத்தினம்] [1985 மார்ச் 28

யிருக்கிறார்கள். மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் தன்னாட்சி என்றால், உடல் உறுப்புகள் எல்லாம் வலுவுள்ளதாக இருந்தால் தான் உடல் முழு நலத்தோடு திகழும் என்பதுபோல், மாநிலங்கள் தன்னாட்சி பெற்றால்தான் மத்திய அரசு வலுவுள்ளதாக அமையும் என்ற உணர்வு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் ஒன்றைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். மத்திய அரசைப் பொறுத்தவரையில் அதிகாரங்களைக் குவித்து வைத்திருக்கிறார்கள். நம்மாலே முடிந்த அளவிற்குத்தான் இந்த அரசு செய்திருக்கிறது; ஆனால், நல்ல பெரிய திட்டங்கள் நிறைவேற்றுகின்ற பொறுப்பு மத்திய அரசாங்கத்தின் கையிலேதானிருக்கிறது. அந்த அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டு, மாநில அரசாங்கத்திற்குக் கொடுக்கப்பட வேண்டுமென்ற உணர்வினை நம்முடைய நிதியமைச்சர் நிதிநிலை அறிக்கையிலே தெளிவுபடுத்தியிருக்கிறார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே கோடிட்டுக் காட்டுவதும், சுட்டிக் காட்டுவதும் என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன். இந்த அளவிற்கு அண்ணாவினுடைய கொள்கைகளை நாம் வலியுறுத்தி இருக்கிறோம். அதுமட்டுமல்ல, இலங்கை தமிழர்களுடைய விழிநீரை துடைத்திட வேண்டும் என்பதற்காக, அவர்களுடைய கண்ணீரை அகற்ற வேண்டும் என்பதற்காக, அந்த வீர மறவர்களின் தியாக உணர்வை நெஞ்சிலே நிலைநிறுத்தி, உலகத்தின் பார்வையை ஈழத்தமிழர்களின் பக்கம் திருப்ப வேண்டும் என்பதற்காக ஐக்கிய நாடுகள் சபைக்கு நம்முடைய பண்ருட்டியார் அவர்களை அனுப்பிய தலைவர் தான் தமிழக முதலமைச்சர், எங்கள் இதய தெய்வம், புரட்சித் தலைவர் என்பதை இன்றைக்கு எண்ணிப் பார்க்க வேண்டும்.

அதேபோல இந்தி இந்த திராவிட பூபாகத்திலே, தென் பூபாகத்திலே நுழைந்துவிடக் கூடாது என்பதற்காக 1977-78 ஆம் ஆண்டில் புரட்சித் தலைவர் அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்ற அந்தக் கணத்தில் திராவிட பூபாகத்தில் முதலமைச்சர்களாக இருந்த கேரளத்து அந்தோணியையும், ஆந்திரத்து சென்னா ரெட்டியையும், கர்நாடகாவின் தேவராஜ் அர்சையும், பாண்டிச்சேரி இராமசாமியையும் அழைத்து தென்



1985 மார்ச் 28] [திரு. எப். எம். இராசரத்தினம்]

பூபாகத்தின் மாநாட்டைக் கூட்டி இந்தி என்னும் அந்நிய மொழி இந்த தமிழக பூமியில் நுழைந்து விடக்கூடாது என்று தீர்மானம் போட்ட தலைவர் தான் எங்களுடைய இதய தெய்வம், புரட்சித் தலைவர் என்பதை அருள்கூர்ந்து எண்ணிப் பார்க்க வேண்டும். எந்த எண்ணங்களை எடுத்துக் கொண்டாலும் பேரறிஞர் அண்ணா அவர்களின் வழிகாட்டுதலோடு, பேரறிஞர் அண்ணா அவர்களின் மறுவடிவமாக அண்ணாவின் இதயக்கனி மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தமிழ் சமுதாயத்தின் ஒப்பற்ற தளநாயகனாக இருந்து வருகிறார் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒருகாலத்தில் நெல்லை எங்கள் எல்லை என்று சொன்னவர்கள் உண்டு. ஆனால் புரட்சித் தலைவர் அவர்கள் இன்றைக்கு குமரி மாவட்டத்தை தன்னுடைய சொந்த பிள்ளையாகக் கருதி பல கோடி ரூபாய் செலவழித்து அந்த மாவட்டத்தை வளம் கொழிக்கிற மாவட்டமாக ஆக்குகிற பணியை செய்து வருகிறார் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்களுடைய குமரி மாவட்டத்தில் கல்வி கற்றவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். வேலையற்றவர்கள் உள்ளங்களில் விபரீத எண்ணங்கள் என்று அண்ணா அவர்கள் சொல்வார்கள். ஆகவே கல்வி கற்று வேலையற்றவர்கள் அதிகமாக இருக்கிற காரணத்தினால்தான் அந்த அளவிற்கு மதக் கலவரங்களும், இனக்கலவரங்களும் உருவாகிற அளவிற்கு சூழ்நிலைகள் ஏற்பட்டன. எனவே அந்தச் சூழ்நிலைகளை தடுக்கிற அளவிற்கு குமரி மாவட்டத்திற்கு ஒரு பொறியியல் கல்லூரியையும், விவசாயக் கல்லூரியையும் தந்திட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மண் வளமும், கடல் வளமும் உள்ள எங்களுடைய குமரி மாவட்டத்தில் தொழில் வளம் இல்லை. எனவே எங்களுடைய மாவட்டத்தை பின்தங்கிய மாவட்டமாக இணைத்திட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நல்ல தரமான ரப்பர் எங்களுடைய மாவட்டத்தில்தான் கிடைக்கிறது. ரப்பர் பக்குவப் படுத்தப்பட்டு பல்வேறு பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. எனவே குமரி மாவட்டத்தில் அரசு ரப்பர் தொழிற்சாலையை அமைப்பது சிறப்பாக அமையும் என்பதை அரசின் பார்வைக்கு கொண்டு வர விரும்புகிறேன்.

[திரு. எப். எம். இராசரத்தினம்] [1985 மார்ச் 28

அதேபோல மீனைப் பிடித்து பக்குவப்படுத்தி வெளிநாடுகளுக்கு அனுப்புகிற பணியாக இருந்தாலும், கயிறு சம்பந்தமான தொழிலாக இருந்தாலும் அதற்கான வாய்ப்புகள் எங்கள் குமரி மாவட்டத்தில் அதிகமாக இருக்கின்றன என்பதைக் கோடிட்டு காட்ட விரும்புகிறேன். அவற்றை மேலும் மேம்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கன்னியாகுமரி முக்கடலும் சங்கமம் ஆகும் ஒரு பகுதியாகும். உலகத்தின் எல்லா பகுதிகளிலிருந்தும் சுற்றுலாப் பயணிகள் வந்துபோகிற அந்தச் சரித்திர சிறப்பு வாய்ந்த கன்னியாகுமரிக்கு கருணை உள்ளம் கொண்ட மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசு ஆய்வுசெய்து ஒரு விமான தளம் அமைக்க பரிந்துரை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்களுடைய கொளச்சல் தொகுதியில் கடற்கரை இணைப்பு பாலமான கொளச்சல்—சைமன் காலனி பாலத்தை உடனடியாக கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்தப் பாலம் மிகவும் அவசியமானதால் அதை கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல மணவாளக்குறிச்சியில் ஒரு பாலம் கட்டுகிற பணி இன்றைக்கு துரிதமாக நடந்து வருகிறது. அந்தப் பணியும் துரிதப்படுத்திதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல மீனவ மக்களைப் பொறுத்தவரையில் பெரும்பாலும் படிப்பறிவற்றவர்களாக இருக்கிறார்கள். அவர்களை மேற்குவங்கம், ஓரிசா போன்ற மாநிலங்களில் இருப்பதைப்போல ஷெட்யூல்ட் ட்ரைப், மலைவாழ் மக்கள் பட்டியலில் சேர்த்திட வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல எங்கள் தொகுதியில் விவசாயப் பெருங்குடி மக்கள் பெரும்பாலும் எங்களுடைய தொகுதியில் கடைவரம்பு பகுதிகளுக்குச் சொந்தக்காரர்களாக இருக்கிறார்கள். பேச்சிப்பாறையில் எவ்வளவு தண்ணீர் இருந்தாலும் அதை கடைவரம்பு பகுதிகளுக்கு பயனுள்ளதாக செய்வது என்பது சிரமமாக உள்ளது. ஆகவே மாம்பழத்தாறு அணைத் திட்டத்தை உடனடியாக எங்களுக்கு முடித்துத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1985 மார்ச் 28] [திரு. எப். எம். இராசரத்தினம்]

அதேபோல ராஜாக்கமங்களம், பன்றிவாய்க்கால் போன்ற ஆறுகளில் நீரேற்றுத் திட்டத்தையும், இரணியல, வள்ளியாறு பகுதிகளில் ஒரு நீரேற்றுத் திட்டத்தையும் ஏற்படுத்தித் தந்திட வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது பேச்சிப்பாறையின் கொள்ளளவு 48 அடியாக இருக்கிறது. 48 அடியாக இருந்தாலும் அதற்கு கீழே மணலும், சேறுமாக நிரம்பி இருக்கிறது. ஆகவே அதிக தண்ணீர் சேகரிக்கும் வகையில் மணலையும், சேறையும் அப்புறப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல அனந்தனாறு கால்வாய்க்கு இன்றைக்கு சிமிண்ட் தளம் போடுகிற பணி முடிவடைய இருக்கிறது. முட்டம், இரட்டைக்கரைச் சானல் போன்றவற்றிற்கும் சிமிண்ட் தளம் போட்டுத் தரவேண்டுமென்று இந்த நேரத்தில் கோரிக்கையாக வைக்கிறேன்.

பேச்சிப்பாறையில் 30 அடிக்கு மேலே தண்ணீர் இருந்தால் தான் இராதாபுரம் சேனலுக்கு தண்ணீர் விடவேண்டுமென்று ஒரு ஒப்பந்தம் உள்ளதாக தெரிகிறது. எனவே 30 அடிக்கு கீழே இருக்கிறபோது இராதாபுரம் சேனலுக்கு தண்ணீர் விடுவதாலே இங்கேயும் பாதிப்பு இருக்கிறது, நெல்லை மாவட்டத்தில் இருப்

(முற்பகல் 10-40)

பவர்களும் பாதிக்கப்படுகிறார்கள். எனவே அந்தப் பகுதியிலே உள்ள விவசாயிகள் பிரச்சனையை தீர ஆராய்ந்து, கடவரம்புப் பகுதியிலே இருக்கிற விவசாயிகள் நன்மையைக் கருதிப்பார்த்து அப்பகுதி நிலவரியை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் குளச்சல் துறைமுகத்தை 2 கோடி ரூபாய் திட்டத்தில் விரிவுபடுத்தும் ஒரு திட்டம் இன்றைக்கு அரசின் தீவிரமான ஆய்வில் இருக்கிறது என்று கேள்விப்படுகிறோம். குளச்சலிலிருந்து உலக நாடுகளுக்கு உலோக மணல் ஏற்றுமதி மணவாளக் குறிச்சியிலிருந்து செய்யப்படுகிறது. அந்தத் துறைமுகத்தை விரிவுபடுத்தினால் இந்த ஏற்றுமதி சிறப்பாக நடைபெற வசதி ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். குளச்சல்

[திரு. எப். எம். இராசரத்தினம்] [1985 மார்ச் 28

துறைமுகத்தை விரிவுபடுத்தும் திட்டத்தில் 50 சதவீதத்தை மத்திய அரசு ஏற்றுக்கொள்வதாகச் சொல்கிறார்கள். எனவே இந்த விரிவுபடுத்தும் திட்டத்திற்கு 15 இலட்சம், 20 இலட்சம் என்று துண்டு, துண்டாக நிதி ஒதுக்கீடு செய்யாமல் ஒரே நேரத்தில் தேவையான நிதியை ஒதுக்கி, குளச்சல் துறைமுகத்தை விரைவிலே விரிவுபடுத்த ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான முந்திரித் தொழிற்சாலைகள் இருக்கின்றன. அந்தத் தொழிற்சாலைகளுக்கு குளச்சல் துறைமுகத்தின் மூலமாக முந்திரி இறக்குமதி செய்து கொண்டுவர ஏற்பாடு செய்யலாம்.

அடுத்து, இராஜாக்கமங்கலத்தில் ஒரு அனல் மின்நிலையம் அமைக்க ஆய்வில் இருப்பதாகச் சொல்கிறார்கள். அந்தத் திட்டம் வருமானால் அதற்குத் தேவையான நிலக்கரியை குளச்சல் துறைமுகம் வழியாகப் பெற்றுக் கொள்ள வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. இன்றைக்கு எல்லாப் பகுதி மக்களும் பாராட்டுகின்ற வகையிலே சிறப்பான பணிகளை செய்து வருகின்றது நம்முடைய புரட்சித் தலைவர் அரசு என்பதை நானும் ஒத்துக்கொண்டு நம்முடைய இதய தெய்வமாக இருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இருக்கிற திசை நோக்கி வணங்கி, நன்றி தெரிவித்து, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. மு. இராமநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த மாமன்றத்தில் நிதிநிலை அறிக்கைமீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு முன்பாக இந்த மன்றத்தில் நான் இடம் பெறுவதற்கு வாய்ப்பை உருவாக்கித் தந்த கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் என்னைத் தேர்ந்தெடுத்திருக்கிற கோவை—மேற்கு தொகுதி வாக்காளர் பெருமக்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.



1985 மார்ச் 28] [திரு. மு. இராமநாதன்]

1985—86 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை நம்முடைய அருமை நாவலர் அவர்கள் இந்த மன்றத்தின் முன்னால் வைத்து, அதன் மீது கருத்துப் பரிமாற்றம் செய்கின்ற வாய்ப்பை நான் பெற்றிருக்கிறேன். நம்மை எல்லாம் அரசியலிலே ஈடுபடுத்திய பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒருமுறை சொன்னதை இந்த நேரத்திலே நினைவுபடுத்த கடமைப்பட்டிருக்கிறேன். எந்த ஒரு நல்ல அரசும் திட்டமிடுவது என்பதும், அந்தத் திட்டத்திற்கான நிதியை ஒதுக்கீடு செய்வதும், அந்த நிதி எந்த அளவுக்கு மக்களுக்குப் பயன்படக்கூடிய அளவுக்குச் செயல்படுத்தபடுகிறது என்பதைக் கண்காணிப்பதும் என்கின்ற, மூன்று வகையிலே வகுத்துச் சொன்னார்கள். ஆகவே, இந்த நிதிநிலை அறிக்கையில் கல்விக்கு, விவசாயத்திற்கு, மின்சாரத்திற்கு, காவல் துறையின் வளர்ச்சிக்கு அல்லது மாணவ மாணவியர்களுக்கு இலவச சீருடை வழங்குவதற்கு என்று பல்வேறு தலைப்பின் கீழ் பல விவரங்கள் தரப்பட்டுள்ளன. ஆனால் தரப்பட்டிருக்கிற விவரங்களுக்கு உள்ளே சென்று பார்க்கும்போது உத்தேசிக்கப்பட்டிருக்கிறது, செய்ய தீர்மானிக்கப்பட்டிருக்கிறது, திட்டமிடப்பட்டிருக்கிறது என்ற வகையிலேதான் இதிலே முக்கால் பகுதி அறிவிக்கப்பட்டிருக்கிறது: இறுதியான நிலை அறிவிக்கப்படவில்லை. எப்படிப்பட்ட ஒரு நிலையில் இந்த தமிழ்நாட்டிலே இருக்கிற மக்கள், நம்மைத் தேர்ந்தெடுத்து அனுப்பியிருப்பவர்கள், சக்தியற்ற நம்மை சக்தி பெறச் செய்வார்கள், நன்மைகளைப் பெற்றுத் தருவார்கள் என்ற நம்பிக்கையோடு தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கும், விலைவாசியைக் குறைப்பதற்கும், நல்வாழ்வு வாழ்வதற்கும், இந்த ஆட்சி வழிவகுக்கும் என்று நம்பிக்கொண்டிருக்கிறார்கள். அப்படி நம்பிக்கொண்டிருக்கிற மக்களுக்கு நாம் என்ன செய்யப் போகிறோம், என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்பதை இந்த நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்திலே நாம் எடுத்துச் சொல்ல வேண்டியவர்களாக இருக்கிறோம். ஒரு குறிப்பை நான் பார்த்தேன். சாராயக் கடைகள், கள்ளுக் கடைகளின் மூலமாக உத்தேசமாக நடப்பு ஆண்டிலே வருமானம் 222 கோடி ரூபாய் என்றிருக்கிறது. ஏறக்குறைய 250 கோடி என்று வைத்துக்கொள்ளலாம். 250 கோடி ரூபாய் சாராயத்தின் மூலமாகவும், கள்ளுக்கடைகளின் மூலமாகவும் இந்த அரசுக்கு வருமானம் வருகிறது என்று கணக்கெடுத்துக்கொண்

டால், 10 மடங்கு சாராயம், கள் விற்பனையானால்தான், 250 கோடி ரூபாய் அரசுக்கு அவர்கள் வரியாகக் கட்ட முடியும். அப்படியானால், தோராயமாக 2500 கோடி ரூபாய்க்கு சாராயம், கள் இவைகள் விற்பனையானால்தான், 250 கோடி ரூபாய் அவர்கள் வரியாகக் கட்ட முடியும். ஆக இந்த மக்களை குடிக்க வைத்து, 2500 கோடி ரூபாய்க்கு மேல் சாராயத்தை, கள்ளை விற்று, அதிலே வருகின்ற 250 கோடியை எதிர்பார்த்து, அதில் 200 கோடி ரூபாயை சத்துணவுத் திட்டத்திற்கும், அதில் 13 கோடி ரூபாயை இலவச சீருடை வழங்குவதற்கும், அதிலே ஒரு 11 கோடி ரூபாயை இலவச பாடப் புத்தகங்கள் வழங்குவதற்கும் திட்டம் போட்டிருக்கிறீர்கள். நான் ஏதோ அரசாங்கத்தைக் குறை சொல்ல வேண்டும், எதிர்க்கட்சியாக வந்து விட்டால் குறை சொல்லிப் பேசுவதுதான் வாடிக்கை, அப்படி ஒரு இலக்கணத்தை சொல்லிப் பேசுவதுதான் வாடிக்கை, என்று அப்படி ஒரு இலக்கணத்தை வகுத்து நான் பேசவில்லை. அண்ணா சொன்னதை, ஆளும் கட்சியினருக்கு இங்கிதமாக இருக்கும் என்று நான் சொல்ல விரும்புகிறேன். லாலி பாடுவதற்காக எதிர்க்கட்சி வரிசையிலே நாங்கள் அமர்ந்திருக்கவில்லை அரசாங்கத்தினுடைய குறைகளைச் சுட்டிக் காட்டுவது ஜனநாயகத்திலே எதிர்க்கட்சிகளின் கடமை. ஆகவே எதிர்க் கட்சியிலே இருப்பவர்கள் சில கருத்துக்களைச் சொல்லும்போது, பதட்டமில்லாமல் அவற்றை ஆளும் கட்சியிலே இருப்பவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நான் கருதுகிறேன். நீங்கள் தந்திருக்கின்ற இந்த அறிக்கையைக்கூட நான் பார்த்தேன். பொதுக்கணக்குக் குழு சென்ற காலங்களிலே, இந்த அரசு, எந்தந்தத் திட்டங்களுக்காக நிதி ஒதுக்கீடு செய்தது, அதிலே என்னென்ன காரியங்கள் நிறைவேற்றப்படாமல் முடங்கிக் கிடக்கின்றன என்ற விவரங்களையும், அதற்கான கண்டனத் தையும், அதற்கான எச்சரிக்கையையும் தெரிவித்து இருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்றால், 1931-82 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு மாதம் 50 ரூபாய் வழங்க வேண்டும் என்று அரசு முடிவு எடுத்து, 1½ கோடி ரூபாய் அதற்காக நிதிநிலை அறிக்கையிலே ஒதுக்கப் பட்டது. அப்படி ஒதுக்கிய தொகையில் வேலையில்லாப் பட்ட தாரிகளுக்கு மாதம் 50 ரூபாய் தந்தார்களா? என்றால்,—தருவ





தற்காக ஒதுக்கினார்கள், பாராட்டவேண்டும்—ஆனால் 27—7—84 வரையிலே பொதுக் கணக்குக் குழு ஒரு கணக்கை எடுத்து குறிப்பு தந்திருக்கிறது. அது என்ன குறிப்பு என்றால், இந்தப் பணத்தை வினியோகிப்பதற்கு சரியான பணியாளர்கள் (ஸ்டாப்ஸ்) இல்லாத காரணத்தால், 7,394 பேர்களுக்கு இந்த உதவித் தொகை கொடுக்கவில்லை. இன்னும் ஒரு வேடிக்கை என்னவென்றால் 27—7—84 வரைக்கும் இன்னும் 1580 பேர் களுக்குக் கொடுக்கவில்லை! திட்டங்களுக்கு ஒதுக்கக்கூடிய தொகை, முறையாக யாருக்குப் போய்ச் சேர வேண்டுமோ, அவர் களுக்குப் போய்ச் சேர்ந்ததா என்றால், இல்லை என்பதை பொதுக் கணக்குக் குழு இடித்து உரைத்திருப்பதை நான் நிதி அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

அதுமட்டுமல்ல, கோட்டூர்புரத்திலே பாலம் கட்டுவது 1977 ஆம் வருடத்திலே தொடங்கப்பட்டது. என்னுடைய குறிப்பின்படி, நம்முடைய அருமை நாவலர் அவர்கள்தான் அடிக்கல் நாட்டு விழாவிலே பங்கு பெற்றிருக்கிறார்கள். நகர்ப்புற வளர்ச்சித் திட் டத்தில் சேர்க்கப்பட்ட 18 பணிகளில் கோட்டூர்புரம் பாலமும் ஒன்று. இன்னும் அந்தப் பணி முடியவில்லை. 1985 ஆம் நிதி யாண்டுக்குள் அதை முடிக்கவேண்டும் என்று பொதுக் கணக்குக் குழு அதனுடைய குறிப்பிலே சுட்டிக் காட்டியிருக்கிறது.

அதுமட்டுமல்ல, "அண்ணா, அண்ணா" என்று எல்லோரும் பேசுகிறோம். அந்த அண்ணாவினுடைய பெயரால், காஞ்சி மாநகரத்தில் கட்டப்பட்ட புற்றுநோய் மருத்துவமனையில் 150 படுக்கைகள் கொண்ட ஒரு பிளாக் 1977-லே கட்டி முடிக்கப் பட்டது. ஆனால் கட்டி முடிக்கப்பட்ட அந்த பிளாக், நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு, 1981-ல், பொதுப் பணித்துறை, மெடிக்கல் டிபார்ட்மெண்டுக்கு ஒப்படைத்திருக்கிறது. இன்றைக்கு 77-லே கட்டி முடிக்கப்பட்டு, 81-லே பொதுப்பணித்துறையால், மெடிக்கல் டிபார்ட்மெண்டுக்கு ஒப்படைக்கப்பட்ட பிறகு, 1983லே நம்முடைய அமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்படுகிறது.

(முற்பகல் 10·50)

கட்டியது 77-லே! ஆனால் திறப்பு விழா செய்ய 6 ஆண்டுகள் ஆகியிருக்கின்றது. ஏனென்றால் நிதிநிலை அறிக்கையில் கி.பி. 2000-ல் எல்லோருக்கும் வாழ்வு வரப்போகிறது. நோயாளிகளாக

[திரு. மு. இராமநாதன்] [1985 மார்ச் 28

இருப்பவர்கள், கவலைப்படாதீர்கள். 2 ஆயிரம் வரை பொறுத்திருங்கள் என்பதைப் போன்ற சாதனை விளக்கம் இருக்கிதே அதனால்தான்.

1977-லே கட்டி முடிக்கப்பட்ட ஒரு பிளாக்கை திறந்து வைப்பதற்கு 6 ஆண்டுக்காலம் ஏற்பட்டிருக்கிறது என்றால் நல்லாட்சியைப் பற்றி சிந்திக்கின்ற இந்தப் பேரவை, இதையும் பற்றி சற்று சிந்திக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, கோவை மத்திய சிறைச்சாலையில் வீவிங் & டையிங் மெஷினரீஸ் இருக்கின்றன. இவைகளை நவீனப்படுத்தி செயல் திறன் அதிகம் உள்ளவைகளாக மாற்ற வேண்டும் என்பதற்காக அரசு 1978-லே 12 லட்சமும், 1979-லே 6¾ லட்சமும் ஆக மொத்தம் 18¾ லட்சம் ஒதுக்கீடு செய்தது, ஆனால் 19.74 லட்சத்தில் சிறைத்துறை புதிய மெஷினரிகளை வாங்கித் தந்து, வாங்கி தந்த மெஷினரிகளுக்கு மின் இணைப்பு, ஸ்டீம் லைன், வாட்டர் லைன், இவைகளை இணைப்பதற்கு ஒரு தனியாரிடத்திலே ஒப்பந்தம் கோரி, அந்தத் தனியார், 1.74 லட்சத்திற்கு ஒரு கொட்டேஷன் தந்து, அது அரசாங்கத்தினுடைய பரிசீலனைக்கு வந்து, அதை இரண்டாண்டு காலம் தாமதமாக்கி, பிறகு மீண்டும் அந்த ஒப்பந்தக்காரர்களை அழைத்தபோது, 1.74 லட்சத்திற்கு முடியாது, 2 லட்சத்திற்குத்தான் எங்களால் அந்த வேலையைச் செய்து தர முடியும் என்று சொல்லி, அதன் பிறகு மீண்டும் அரசாங்கத்திற்கு எழுதி, அரசாங்கத்தினுடைய பதில் வருவதற்குள், அந்த வேலையை எங்களால் செய்ய முடியாது என்று அந்த ஒப்பந்தக்காரர்கள் அந்த ஒப்பந்தத்தை கேன்சல் செய்து விட்டதற்கு பின்னர், மறுபடியும் சிறைத் துறை, பி.டபிள்யூ. டிபார்ட்மெண்ட்டுக்கு எழுதி, அந்த டிபார்ட்மெண்ட்டிலே அந்த வேலையை முடித்துத் தருவதற்கு 7.36 லட்சத்திற்கு ஒரு ஒப்பந்தம் தந்து, இரண்டு லட்சத்திற்கு தனியார் முடித்துத் தருகிறேன் என்று சொன்ன அந்த வேலையை செய்ய 7.96 லட்சம் கொடுக்கலாமா என்று பரிசீலனை செய்து இன்றுவரைக்கும்—அந்தப் பணி முடியவில்லை.



1985 மார்ச் 28] [திரு. மு. இராமநாதன்]

இப்போது நம்முடைய நாவலர் அவர்கள் இறுதி ஆணை மதிப்பீட்டில் 9.18 லட்சம் ஒதுக்கியிருக்கிறார்கள். பொதுப் பணித்துறை உடனடியாக இந்த மாதிரியான தாமதத்தை எச்சரித்து, இனிமேலாவது இப்படிப்பட்ட தாமதங்கள் வராமல் செயலாற்றுங்கள் என்று சுட்டிக் காட்டியிருக்கிறது. எதற்கு இந்த குறைபாட்டை குறிப்பிட்டுச் சொன்னேன் என்றால் திட்டம் இடுவது என்பது ஒன்று. அந்தத் திட்டத்திற்கு பணத்தை ஒதுக்கிடு செய்வது என்பது மற்றொன்று. அந்த ஒதுக்கீடு செய்த பணம் அந்தத் திட்டத்திற்காகவே செலவழிக்கப்பட்டு, அந்த திட்டம் மக்களுக்கு நலம் பயக்கக்கூடிய திட்டமாக மலர்கிறதா என்று கவனிப்பதற்கு அரசாங்கத்தின் இயந்திரங்கள் திறமை உடையதாக இருக்க வேண்டும். அதுபோல அதைக் கவனிக்கிற அமைச்சர் பெருமக்களும் அதில் அக்கறையுடைய அமைச்சர்களாக இருக்க வேண்டும் என்று சுட்டிக் காட்டத்தான் சொன்னேனே தவிர, மற்றபடி எதற்கெடுத்தாலும் கையை காட்டி குறை சொல்லவேண்டும் என்பதற்காக அல்ல.

நாவலர் அவர்கள் நிதிநிலை அறிக்கையிலே முன்னுரையிலேயே சொல்லியிருக்கிறார்கள். என்ன செய்வது மத்திய அரசாங்கத்தினுடைய நிலைமைகளுக்கு தகுந்தவாறெல்லாம் இந்த மாநில அரசினுடைய செயல்பாடுகள் தயக்கத்தோடு மட்டுமல்ல, செயல்பட முடியாத நிலையில்கூட—"கை கட்டப்பட்ட நிலையிலே நாங்கள் இருக்கிறோம்" என்று—இதுதான் யதார்த்தமான உண்மை.

நாவலர் அவர்கள் 1982-83 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் எந்த வாசகத்தைச் சுட்டிக்காட்டிச் சொன்னாரோ அதே வாசகங்கள் அதே வரிகள் 1985-86 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலேயும் ஒரு எழுத்துக்கூட பிசகாமல் அப்படியே இந்த நிதிநிலை அறிக்கையிலே பிரிண்ட் ஆகியிருக்கிறது.

நான் நாவலர் அவர்களுடைய கருத்தை முழுமையாக ஏற்றுக் கொள்ளக் கூடியவன், இந்தப் பிரச்சினையைப் பொறுத்த வரையிலும். ஆளும் கட்சி தரப்பிலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே சுட்டிக்காட்டியதைப்போல, மத்திய அரசாங்கத்தோடு மோதிக் கொள்ள வேண்டும் என்பது நம்முடைய நோக்கம் அல்ல. சண்டை போட வேண்டும்

என்பதும் நம்முடைய நோக்கம் அல்ல. ஆனால் நம்முடைய உரிமைகளைப் பற்றிப் பேசும்போது நாம் தயக்கம் காட்ட வேண்டிய அவசியம் இல்லை.

நான் ஒரு சம்பவத்தை நினைவுபடுத்த விரும்புகிறேன். 1952-ல் திரு. ராஜகோபாலாச்சாரியார், மொழிவாரியாக பிரிக்கப்படாத சென்னை ராஜதானிக்கு பிரதம அமைச்சராக இருந்தார். அவர் பொறுப்புக்கு வந்தவுடனே ரூ. 10 கோடியை மத்திய அரசாங்கத்திடம் ஒரு நெருக்கடியான கட்டத்தில் கேட்டார். சீர் கெட்டு போயிருக்கும் இந்த சென்னை ராஜதானியை செம்மைப்படுத்துவதற்கு ரூ. 10 கோடி வேண்டும் என்றார். சரியான பதில் கிடைக்கவில்லை. அதன் பிறகு அவர் சொன்னார். நிலைமை இப்படியே நீடிக்குமானால் நான் ஈ.வே. இராமசாமி பெரியார் அவர்களோடும், அண்ணா அவர்களோடும் சேரவேண்டிய அவசியம் ஏற்படும் என்று டெல்லிக்கு எச்சரிக்கை விடுத்தார். எதற்காக சொல்கிறேன் என்றால், அப்போது அமைச்சரவையிலே நிதியமைச்சர் பொறுப்பிலே இருந்த அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள், மாநில அரசின் வருவாயைப் பெருக்குவதற்கு வெளி மாநிலங்களிலிருந்து வருகின்ற துணிகளின் மீது out of State cloth or goods மீது 1¼ அணா எக்சைஸ் டியூட்டி, ¼ அணா செஸ் டியூட்டி என்று அந்தக் காலத்தில் 1½ அணா வரி போட்டார். இப்போதுள்ள இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் வெளி மாநிலங்களிலிருந்து வரக்கூடிய துணிகளின் மீது இன்னொரு மாநில சர்க்கார் வரி போடுகின்ற யோக்கியதை இல்லாத காரணத்தினால் கோர்ட்டிலே அது அடிபட்டுப் போய்விட்டது.

நாவலர் அவர்கள் கூறினார்கள் வரியை பெருக்குவது எப்படி என்று தெரியவில்லை. மத்திய அரசு போடுகின்ற சட்டங்களினால் ஏற்படுகின்ற விளைவுகளை சமாளிக்கின்ற பொறுப்பு மாநில அரசுக்குத்தான் சேருகிறது. அந்த பளுவை நாம்தான் சுமக்க வேண்டியிருக்கிறது என்று சொன்னார்கள். நாங்கள் மறுக்கவில்லை. கிராமத்திலே சொல்வார்கள். புலி வேஷம் ஆடுகின்றவர்களுக்கு சிரமம் கிடையாது. காரணம் அவன் எப்படி வேண்டுமானாலும் ஆடலாம். ஆனால் புலி வேஷம் போட்டு ஆடக்





கூடியவனுக்கு வால் பிடித்துக்கொண்டு ஆடுகின்றானே அவன் பாடுதான் திண்டாட்டம். புலி வேஷம் போட்டு ஆடுகின்றவர்கள் ஒரு அடி வைத்து ஆடினால், வால் பிடித்து ஆடுபவன் 3 அடி வைத்தால்தான், அவன் ஆட்டத்திற்கு ஈடு கொடுத்து இவன் ஆட முடியும். அப்படி ஆடத் தெரியாவிட்டால், 'புலி' தனி, 'வால்' தனி என்று வந்துவிடும். ஆகவே அதுபோல, மத்திய அரசு எடுத்து வைக்கின்ற அடிகளுக்குத் தகுந்தபடி மாநில அரசு, அடி வைக்க வேண்டிய நிலைமை இருக்கிறதே என்று நாவலர் அவர்கள் சொன்னார்கள். இதில் எங்களுக்கு மறுப்பு கிடையாது. மாநில அரசுகளின் அதிகாரங்களை பெருக்குவதற்குத்தான் நாங்கள் மாநில சுய ஆட்சி கேட்டோம். ஒருவேளை வார்த்தையிலே வித்தியாசம் இருக்கலாம். மாநில சுய ஆட்சி என்று கேட்டுவிட்டால் அது ஏதோ ஒரு வேறு வகையான பொருளை தருகிறதோ என்ற அச்சம் நாவலர் அவர்களுக்கு இருக்கிறதோ இல்லையோ, ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களுக்கு இருக்கலாம். நான் அதை ஆராய்ச்சி செய்ய விரும்பவில்லை. மாநிலங்கள் சுய நிர்ணய உரிமையோடு செயலாற்றக்கூடிய வல்லமை படைத்ததாக இருக்க வேண்டும் என்ற கருத்தை அண்ணா அவர்கள் ஒரு கட்டத்தில் கூறினார்கள். இந்திய நாட்டை முழுமையாக பரிபாலனம் செய்த காங்கிரஸ் கட்சி, அதைப் பற்றி சிந்திக்காவிட்டாலும், 10 ஆண்டுகளுக்கு பிறகாவது, மத்திய மாநில உறவுகளை மறுபரிசீலனை செய்து, மாநிலங்கள் செயல்படக்கூடிய வாழ்விற்கு, அவர்களுடைய சகலவிதமான வளத்திற்கு பொறுப்பு ஏற்றுக் கொள்வது மாநில அரசு தான் என்ற அடிப்படையில், அந்த மாநில அரசுகளுக்கு சில குறிப்பிட்ட அதிகாரங்கள் வேண்டும் என நாவலர் அவர்களே பல முறை சொல்லியிருக்கிறார்கள். தபால், தந்தி, போக்குவரத்து போன்றவற்றை மத்திய அரசு வைத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். நான் அதைப்பற்றியெல்லாம் இப்போது பேசி நேரத்தை வீணாக்க விரும்பவில்லை—சில குறிப்பிட்ட அதிகாரங்களை மத்திய அரசு வைத்துக்கொண்டு, மாநிலங்களுக்கு, நாவலர் பாணியிலே ஸ்டேட் அட்டானமி—மாநில சுயாட்சி என்று

[திரு. மு. இராமநாதன்] [1985 மார்ச் 28

சொல்லாவிட்டாலும், தன்னாட்சி உரிமை கொடுத்து இயங்குவதற்கு இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் திருத்தப்பட்டால ஒழிய வாதப் பிரதிவாதங்களினால் லாபம் இல்லை.

(முற்பகல் 11-00)

பல திட்டங்களை இங்கே அறிவித்து நீங்கள் பெருமைப்பட்டு இருக்கிறீர்கள். அதிலே ஒன்று, மின்னிணைப்புக் கொடுப்பதில் நாங்கள் இந்திய நாட்டுக்கே வழிகாட்டியாக இருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். வரவேற்கிறேன். அதோடு இன்னொன்றையும் சேர்த்துக் கொள்ளுங்கள். வெள்ளைக்காரன் காலத்திலிருந்து மோட்டர் பம்புசெட் கனெக்ஷன் என்று சொல்லுகிறபோது—1937 ஆம் ஆண்டிலே அவன் கொடுக்க தொடங்கினான்—1937 முதல் 1947 ஆம் ஆண்டு வரையிலே கணக்கிடப்பட்டால் 50 ஆயிரம் பம்புசெட்டுகள் கொடுக்கப்பட்டது. 1947 முதல் 1967 வரையிலே காங்கிரஸ் ஆட்சி செய்த 20 ஆண்டு காலத்திலே கொடுத்த பம்புசெட்டு கனெக்ஷன்களின் எண்ணிக்கை 2 லட்சம் தான். ஆனால் 1967 ஆம் ஆண்டிலேயிருந்து 1976 ஆம் ஆண்டு வரையிலேயும்—அண்ணா அவர்கள் ஓராண்டும் அதற்குப் பிறகு டாக்டர் கலைஞர் அவர்கள் 8 ஆண்டுக் காலமும் ஆட்சியில் இருந்தபோது—நாம் கொடுத்த மோட்டார் பம்பு செட்டுகளின் எண்ணிக்கை 6 லட்சம் என்பதையும் கணக்கிலே எடுத்துக் கொண்டு இந்தியாவிற்கே தமிழ்நாடுதான் அதிலே வழிகாட்டியாக இருக்கிறது என்கிறபோது இந்த ஒரு வார்த்தையையும் தயக்கமில்லாமல் சேர்த்துக் கொள்ளவேண்டும், இதற்கு வெட்கப்பட வேண்டியதில்லை உங்களுடைய நல்ல திட்டங்களையும் நாங்கள் வரவேற்பதிலே வெட்கப்படமாட்டோம். நாங்கள் உங்களிடத்திலே எதிர்பார்ப்பது, உங்களிடத்திலே தெரிவிக்கவேண்டுமென்று நாங்கள் விரும்புவது இப்போது நம்மைப் பதைபதைக்க வைக்கிற பிரச்சினைகள் பல இருக்கின்றன. அதைச் சொல்வதற்கு முன்பு நான் இன்னொன்றைச் சொல்லியாக வேண்டும். தமிழ்நாட்டிலே இருக்கிற இயற்கை வளங்கள் பயன்படுத்தப்பட வேண்டும். ஒரு கேள்விக்குப் பதில் சொல்கிற நேரத்திலே இந்த மன்றத்திலே நகைச்சுவையை ஏற்படுத்துகின்ற வகையிலே தட்டினால் தங்கம்,



1985 மார்ச் 28] [திரு. மு. இராமநாதன்]

வெட்டினால் வெள்ளி, இடித்தால் இரும்பு என்றெல்லாம் சொல்கிறார்கள் என்று எங்களைக் கேலி செய்வதற்கு முன்பு ஒன்றை எண்ணிப் பார்க்க வேண்டும், அதை எங்களுக்குச் சொல்லித் தந்தவர்கள் நாவலர் அவர்கள் தான் என்பதை நான் சுட்டிக் காட்டி அந்தக் கனிவளங்களைப் பயன்படுத்தவேண்டும் என்ற அளவுக்கு ஒரு காலத்திலே குரல் எழுப்பிய காரணத்தினாலேதான் நெய்வேலியிலே அனல் மின்நிலையம் மலர்ந்திருக்கிறது. ஒரு காலத்திலே அப்படி குரல் எழுப்பிய காரணத்தினாலேதான் தூத்துக்குடியிலே அனல் மின்நிலையம் மலர்ந்திருக்கிறது. ஒரு காலத்திலே அப்படிக் குரல் எழுப்பிய காரணத்தினால்தான் சேலத்திலே இரும்பு உருக்குத் தொழிற்சாலை என்று தொடங்கப்பட்டு அது நிறைவு பெறாமல் உருக்கு என்று தொடங்கி உருட்டாலையாக வந்து இருக்கிறது. இதையெல்லாம் அவர்கள் எண்ணிப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கனிவளங்கள் இன்னும் பயன்படுத்தப்படவேண்டும்.

நான் இந்த அறிக்கையைத் திருப்பித் திருப்பிப் படித்துப் பார்த்தேன். பினாமி நில ஒழிப்புச் சட்டம் என்ன ஆயிற்று? அப்படியே மௌனமாக இருக்கிறது, ஏன்? பினாமி நில ஒழிப்பு பற்றி ஏன் இதிலே கருத்துத் தெரிவிக்க விரும்பவில்லை. இந்தப் பிரச்சினையை ஆறப்போட்டுவிட்டீர்களா அல்லது மறந்துவிட்டீர்களா எனக்குப் புரியவில்லை. காங்கிரஸ் கட்சியின் சார்பிலே பேசிய திருமதி யசோதா அவர்கள் குறிப்பிட்டதை இதிலே நான் வழிமொழிந்து சொல்கிறேன். அறநிலையத் துறைக்குச் சொந்தமான அல்லது கோயில் நிலங்கள், மடங்களின் நிலங்கள் பெரும் செல்வந்தர்களிடத்திலே இன்றைக்கு முடங்கிக் கிடக்கின்றன. அதை எடுத்து ஏழை எளிய தாழ்த்தப் பட்டோர்க்குப் பிரித்துக் கொடுத்தால் ஏழை வாழ்வு பெறுவான். அண்ணா வழியில் ஆட்சி நடத்துகிறோம் என்று சொல்கிற நீங்கள் யாருக்குப் பயந்து இதிலே தயக்கம் காட்டுகிறீர்கள்?

அதேபோன்று அவர்கள் சுட்டிக் காட்டியதைப் போன்று அண்மைக்காலமாக தமிழ்நாட்டிலே இப்போது சாமியார்கள் பெருகி மோசடிகள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. அண்ணா அவர்கள் சொன்னார்கள் துறவிகள் உடையில்—காஷாய உடையில் களவு நடக்கிறது என்று நான் யாரையும் புண்படுத்தவேண்டு

[திரு. மு. இராமநாதன்] [1985 மார்ச் 28

மென்பதற்காக இதைச் சொல்லவில்லை. இந்த சாமியார்கள் ஊடுருவல் அண்மைக் காலமாக தமிழ் நாட்டிலே அதிகம் வந்து சேருகிறதே அதைப் பற்றி இந்த அரசு நுட்பமாகக் கண்காணிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

காவல் துறையினருக்கும் வழக்கறிஞர்களுக்கும் சரியோ தவறோ ஏதோ ஒரு வகையிலே நல்ல இணக்கம் இல்லாத ஒரு சூழ்நிலை உருவாகிவிட்டது. அவைத் தலைவர் அவர்களே, ஒரு நாட்டிலே காவல் துறையும் வழக்கறிஞர் பிரிவும் இரண்டு கண்கள் போன்றவை. அவர்கள் உறவு கெட்டிருப்பது ஒரு நல்லாட்சிக்கு நல்லதாக இருக்காது. நான் அதற்குள்ளே இறங்கி ஆராய எனக்கு இப்போது நேரம் இல்லை. காவல் துறையினருக்கும் வழக்கறிஞர்களுக்கும் இடையில் ஒரு நல்லுறவு ஏற்படுவதற்கும் நல்லிணக்கம் ஏற்படுவதற்கும் எதிர்காலத்திலே வழக்கறிஞர்கள் காவல் நிலையத்தைத் தாக்கக்கூடிய நிலை வரக்கூடாது என்ற உறவு நிலையை ஏற்படுத்தவேண்டுமென்றும் நான் இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதை அடுத்து, ஈழத் தமிழர்கள் பிரச்சினை. நாவலர் அவர்கள் அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள், "வேதனைப் படுகின்றேன்," இலங்கையிலிருந்து வருகின்ற தமிழர்களுக்கு வாழ்வு அளிப்பதற்கு இலங்கை அரசோடு பேச்சு வார்த்தை நடத்த ஒரு நல்ல முடிவு எடுப்பதற்கு மத்திய அரசு முன்வரும் என்ற நம்பிக்கை கொண்டிருக்கிறோம் என்று எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். எனக்கு அதிலே மறுப்பு இல்லை. ஆனால் இந்த மன்றத்தின் மூலம் பணிவான ஒரு கருத்தைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்த தமிழ்நாட்டில் நாம் 5 கோடி தமிழர்கள் இருக்கிறோம். மொழியாலே அல்லது உணர்வாலே தமிழர்கள். இந்த 5 கோடி தமிழர்களிலே ஒரு அங்கம் தான் 35 லட்சம் இலங்கை வாழ் தமிழ்மக்கள். அவர்களுக்காக குரல் கொடுப்பதற்கு இந்ததமிழ்நாட்டில் இருக்கின்ற நம்மைத் தவிர வேறு நாதி இல்லை. யார் யாருக்கோ குரல் கொடுக்கின்ற இந்திய பேரரசு இடத்தில் இந்த 5 கோடி மக்கள் இந்திய பேரரசுக்குள் அங்கம் வகிக்கின்ற நாம் நம்முடைய இனத்தின் நம்முடைய இனத்தோடு ஒரே ரத்தமாக அமைந்து இருக்கின்ற



1985 மார்ச் 28] [திரு. மு. இராமநாதன்]

இலங்கை வாழ் 35 இலட்சம் தமிழ் மக்கள் இதே நிலையில் போனால் 2 ஆண்டு காலத்திற்குள் கொல்லப்பட்டு முழுமையாக இலங்கைத் தீவில் தமிழனே இருக்கமாட்டான். கொல்லப்பட்டு விடுவான் என்ற சூழ்நிலையுள்ளது நம்முடைய பேராசிரியர் அவர்கள் ஆளுநர் உரையில் எடுத்துச் சொன்னது போல் இனி தமிழச்சி தமிழ் மகனை பெற மாட்டாள், அவள் புலியை பெற மாட்டாள், அவள் சிங்களத்தவனுடைய ரத்தத்தோடு கலந்து ஒரு சிங்கத்தை பெறுவாள் என்ற நிலைக்கு மானபங்கப் படுத்தக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இது நிம்மதியாக இருக்கத்தக்க சூழ்நிலை அல்ல. யாசர் அராபத்திற்கு வரவேற்பு தந்து பாலஸ்தீனிய விடுதலைக்காக குரல் கொடுக்கின்ற இந்திய பேரரசு, நமிபியா விடுதலைக்கு குரல் கொடுக்கின்ற இந்திய பேரரசு இலங்கை வாழ் தமிழ் மக்கள் பிரச்சினையிலே பேச்சு வார்த்தை என்று காலத்தை நீட்டிக் காமல் இலங்கை மக்களை காப்பாற்ற வேண்டும். இங்கே இவ்வளவு பேசுவதற்கு காரணம் தமிழனுக்கு வேறு நாடு இல்லை. இலங்கையில் செத்துக்கொண்டு இருக்கிற தமிழனை காப்பாற்று வதற்கு நாம் தான் இருக்கிறோம். நம்முடைய காங்கிரஸ் உறுப்பினர் திருமதி யசோதா அவர்கள் இங்கே சொன்னார்கள் எங்களுக்கும் அக்கறை இருக்கிறது என்று. நான் வரவேற் கிறேன். நாம் அக்கறை படாமல் வேறு யார் அக்கறைப் படுவார்கள். ஆகவே அக்கறை என்று வார்த்தையில் நிறுத்தி விடாமல் செயலிலே காட்டுங்கள் என்பதுதான் எங்களுடைய வேண்டுகோளே தவிர அக்கறை இல்லை என்று நாம் சொல்ல முடியுமா? வேறு யார் அக்கறைப் படுவது, நாம்தான் அக்கறைப் படவேண்டும். ஆகவே, இலங்கை தமிழர்கள் அநாதையாக இருக்கிற நிலையிலிருந்து அவர்களை காப்பாற்ற வேண்டும். அதற்குரிய நடவடிக்கையை மத்திய அரசு விரைந்து செய்ய வேண்டும் என்பதையும் இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஒன்றை இன்று உங்கள் கவனத்திற்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன். புலவர்களுக்கு சங்க கால புலவர்களுக்கு நினைவுச் சின்னம், அதைப்போல சான்றோர்கள் திரு. வி. க. பெயரால் எப்படி பரிசுகள் வழங்கப்படுகிறதோ அதுபோல் பல பரிசுகள் வழங்க உத்தேதிக்கப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இங்கே சொன்னார்கள். நான் ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், துணைத்தலைவர் அவர்களே உங்கள் அனுமதியோடு, கவிச் சக்கரவர்த்தி பாரதியார்

"யாமறிந்த புலவரிலே
கம்பனைப்போல் வள்ளுவர்போல்
இளங்கோ வைப்போல்
பூமிதனில் யாங்கணுமே
பிறந்ததிலை, உண்மை வெறும்
புகழ்ச்சியில்லை;
ஊமையராய்ச் செவிடர்களாய்க்
குருடர்களாய் வாழ்கின்றோம்
ஒருசொற் கேளீர்
சேமமுற வேண்டு மெனில்
தெருவெல்லாம் தமிழ்முழக்கம்
செழிக்கச் செய்வீர்"

என்று பாடினார். அப்படி தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்ய தமிழிலே பணியை தொடங்கியிருக்கிறோம் எனும் இந்த தமிழக அரசை நான் பாராட்டுகின்றேன், வாழ்த்து கின்றேன், இதில் எந்த வஞ்சகமும்இல்லை.

மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, உங்கள் மூலம் ஒன்றை கேட்டுக்கொள்ள விரும்புகிறேன், இங்கே அமர்ந்து இருக்கும் காங்கிரஸ்கட்சி மாண்புமிகு உறுப்பினர்கள் தவறாக எண்ணிக்கொள்ளக்கூடாது. 150 ஆண்டு காலம் நம்மை அடிமைப் படுத்தி ஆண்ட வெள்ளைக்காரன் கூட ஒரு ரூபாய்க்கு 192 தம்பிடி என்று அடித்துத் தந்த தம்பிடியில் கூட ஒரு காசு என்று தமிழில் அச்சு அடித்திருந்தான். ஆனால் 15, 16 மொழிக்கு தேசீய அந்தஸ்த்து இருக்கிறது என்று சொல்லக்கூடிய இந்த இந்திய பேரரசில் அண்மை காலமாக இந்த ஒரு ரூபாய் நாண





யத்திலே, துணைத்தலைவர் அவர்களே, உங்கள் மூலம் இந்த அவைக்கு காட்டுகிறேன், இந்த ஒரு ரூபாயில் ஒரு ரூபாய் என்று தமிழ் உண்டா? இந்த 10 பைசாவில் 10 காசு என்று தமிழ் உண்டா? இந்த 5 பைசாவில் 5 காசு என்று தமிழ் உண்டா? ஏன் இல்லை. 6 ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்த எஜமானன் மதித்த அளவுக்கு கூட 2 ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இருக்கிற எஜமான் நம்மை மதிக்கவில்லை என்ற ஒரு ஏக்கம் நமக்கு வாராதா? இந்திய அரசு போட்டுள்ள நாணயங்களிலே தமிழே இல்லை. காசிலே தமிழ் இல்லை. ரேடியோவில் தமிழ் குறைந்து கொண்டு வருகிறது. டெலிவிஷனில் தமிழ் குறைந்து கொண்டு வருகிறது ஆகவே, ஒரு காலத்தில் இந்தி ஆதிக்கம் என்று இந்தியைத் திணிக்கிறபோது, அதை எதிர்த்து கழகத்தின் கட்டளைப்படி வம்புக்கு இந்தி மொழியை திணிக்கிற அரசியல் சட்டத்தின் 17-வது பிரிவை கொளுத்தியவன்

(முற்பகல் 11-10)

நான். என்னோடு கூட இருந்தவர்கள் நம்முடைய அவை முன்னவர் நிதியமைச்சர் நாவலர் அவர்கள். ஆகவே, இந்தியைப் படிக்கக் கூடியவர்கள் படிக்க வேண்டாம் என்று சொல்வது நம் நோக்கம் அல்ல. ஆனால் பாரபட்சம் அற்ற முறையில், 16 மொழி களுக்கும் இருக்கின்ற தேசீய அந்தஸ்தை ஒரு சட்டத்தின் மூலம் மத்திய அரசாங்கம் பறித்தால் அந்தச் சட்டம் கேள்விக் குறியாக ஆகிவிடும் என்பதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிலை யாக இருக்க முடியும்.

இந்த நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்து முடிப்பதற்கு முன்பு ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

காவல்துறையைப் பற்றிக்கூட இங்கே சொன்னார்கள். காவல் துறையைப் பற்றி நான் அதிகமாகச் சொல்லத் தேவையில்லை. காரணம், ஆறுங்கட்சித் தரப்பில் பேசிய மாண்புமிகு உறுப்பினர் வளர்மதி அவர்கள் 25 ஆம் தேதி கருத்து தெரிவிக்கின்ற நேரத்தில் மைலாப்பூர் சாந்தோம் பீச் பகுதியில் பெண்கள் நடமாட முடியவில்லை, அதுவும், சனிக்கிழமை, ஞாயிற்றுக் கிழமைகளில் அங்கே போய்விட்டால், அங்கு யார் யார் நடமாடு

கிறார்கள் என்று சொல்லக்கூட முடியாத அளவிற்கு சமூக விரோதிகள் நடமாடுகிறார்கள். எனவே பாதுகாப்பற்ற நிலைமை இருக்கிறது என்று பேசினார்கள். பட்டணத்திலுள்ள உறுப்பினரே இவ்வாறு சொல்லிவிட்ட பிறகு நான் வேறு ஆதாரங்களுக்கு வர விரும்பவில்லை. லாக்கப்பிலே கொலை, லாக்கப்பிலே கற்பழிப்பு, எந்தக் காரணத்திற்காக யார் கைது செய்யப்படுகிறார்கள் என்று தெரியாத நிலை ஆகிய இவ்வளவும் இருக்கிறது.

துணைத் தலைவரவர்களே, கல்வியை எடுத்துக்கொண்டால் அந்தக் கல்வியைக் கற்றுத் தருவதற்கான வகுப்பறைகள் இல்லை; இருக்கின்ற வகுப்பறைகளில் மாணவர்கள் உட்காருவதற்கான பெஞ்சுகள் இல்லை; ஆசிரியப் பெருமக்களுக்கு நாற்காலிகள் இல்லை: இதுதான் இப்பொழுது இருக்கின்ற கல்வி. புள்ளி விவரங்களில் என்ன இருக்கிறது? ஏட்டிலே காட்டுகின்ற புள்ளி விவரத்தைப் பார்த்தால் தெரியாது. யதார்த்த நிலையிலே மக்களுக்குப் பயன்படுகின்ற அளவிற்கு கல்வி பயனுடைய கல்வியாக இருக்க வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். பாலிடெக்னிக்குகளில் 15,000 ரூபாய்க்கும், 20,000 ரூபாய்க்கும் கல்வி என்று சொல்வது ஏதோ எஜுகேஷன் என்பது இன்டஸ்ட்ரியாக இருக்கிறது என்று ஒரு உறுப்பினர் இங்கே தெரிவித்ததைப் போல, ஒரு தொழிற்சாலை போல செயல்படும் நிலை தமிழ் நாட்டு மக்களுக்கு ஏற்படுவது நல்லது அல்ல. ஆகவே, கல்விக் கொள்கையிலே நல்ல நிலைமைகளை நடைமுறைப்படுத்துவதைப் பற்றி மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில் பார்த்தால், உடல் உழைப்பு உள்ள தொழிலாளர்கள்—ஸ்கில்ட் லேபரர்ஸ் உழைப்பதற்கான வாய்ப்பு இந்த நிதி நிலை அறிக்கையில் காணப்படவில்லை. 1974 ஆம் ஆண்டிலிருந்து எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்ச்சில் கணக்கெடுத்தால் எத்தனை இலட்சம் பேர் படித்தவர்கள், பட்டதாரிகள் வேலையற்றிருக்கிறார்கள் என்பது தெரியும். ஆகவே, வேலைவாய்ப்பு தரப்படவில்லை; நம்முடைய பஞ்சம் தீரவில்லை: நம்முடைய பட்டினி தீரவில்லை: ஏழை மக்கள் வாழ முடியவில்லை; வறுமையை ஒழிக்க முடியவில்லை.





கண்டதெல்லாம் என்னவென்றால், தகப்பன் சாராயத்திற்காகக் கொடுக்கின்ற பணத்திலிருந்து மகனுக்குச் சத்துணவும், இலவச உடையும், இலவச நோட்டுப் புத்தகங்களும் தருகின்ற நிலையில் இது தகப்பனிடத்தில் வாங்கி மகனுக்குத் தானம் செய்யக்கூடிய அரசாகவே இருக்கிறதே தவிர, க்ஷேமநல சர்க்காராக இல்லை; க்ஷேமநல சர்க்காரை உருவாக்குகின்ற ஏற்பாட்டை நீங்கள் விரைவில் செய்து அவ்வாறு செயல்பட வேண்டுமென்று கேட்டு இந்த நிதிநிலை அறிக்கையின்மீது என்னுடைய கருத்தைத் தெரிவித்து அமைகின்றேன். வணக்கம்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமநாதன் அவர்கள் பேசுகின்றபொழுது குறுக்கிட வேண்டாமென்று நான் கருதினேன். ஒரு விளக்கத்தை மட்டும் சொல்லிவிடுகிறேன்; மற்றவைகளையெல்லாம் என்னுடைய இறுதி உரையிலே வைத்துக்கொள்ளலாம். இங்கே காங்கிரஸ் உறுப்பினர் திருமதி யசோதா அவர்கள் பேசுகின்றபொழுது, வெட்டினால் வெள்ளி, தட்டினால் தங்கம், இடித்தால் இரும்பு என்று சொன்னீர்களே என்று சொன்னார்கள். அதைப் பற்றிச் சொல்லும்பொழுது திரு. இராமநாதன் அவர்கள் சொன்னார்கள். இதை நெடுஞ்செழியன்தான் சொன்னார் என்று. இப்பொழுதும் நான் அதைத்தான் சொல்கிறேன். ஆனால், வெட்ட வேண்டிய இடத்தில் வெட்டினால் வெள்ளி கிடைக்கும்; தட்ட வேண்டிய இடத்தில் தட்டினால் தங்கம் கிடைக்கும்; இடிக்க வேண்டிய இடத்தில் இடித்தால் இரும்பும் கிடைக்கும்; தோண்ட வேண்டிய இடத்தில் தோண்டினால் எண்ணெயும் கிடைக்கும். மாட்டினிடத்தில் பால் கறக்க வேண்டுமென்றால் அதன் மடியிலே தான் கை வைக்க வேண்டுமே தவிர, எந்த இடத்தில் வைத்தாலும் பால் கறக்காது. இப்பொழுது தமிழகத்தில் இரும்பு இருக்கிறது. ஆனால் இவை அத்தனையையும் செய்ய வேண்டிய பொறுப்பு மத்திய அரசாங்கத்தினிடத்திலே இருக்கிறது. ஆகவே, அதை நான் சுட்டிக்காட்ட வேண்டிய அவசியம் இருக்கிறது. இப்பொழுதும் கூட, காவேரிப் படுகையிலே எண்ணெய் வளம் கண்டுபிடிக்கப்பட்டு,

அந்த எண்ணெய் வளம் இந்தியாவில் பிற இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டதைவிட மிகச் சிறப்பான முறையில்—விமானத்திற்குக்கூடப் பயன்படும் அளவிற்கு அந்த எண்ணெய் இருக்கிறது என்று சொல்லப்படுகிறது.

இதை எடுக்கவேண்டிய உரிமை மத்திய அரசுக்கு இருக்கிறது. திருவண்ணாமலைக்குப் பக்கத்திலே இருக்கின்ற குன்றுகளிலே 15 இலட்சம் டன் இரும்பு இருக்கின்றது என்றெல்லாம் அறிஞர்கள் சொன்னால் அங்கே இடித்தால் இரும்பு கிடைக்கும். சேர்வராயன் மலை, கஞ்சமலை, தீர்த்தகிரி மலை ஆகிய இடங்களில் எல்லாம் இரும்பு உள்ளது என்றால் அதை எடுக்க உரிமை இருக்கின்றது. அப்படி எடுக்கிறேன் என்று சொன்ன அளவிலே கூட சேலத்திலே ஸ்டீல் ப்ளாண்ட் அதாவது உருக்கு செய்யாமல் இப்போது ஸ்டீலை வரவழைத்து அங்கே பட்டையாக அதாவது ஸ்டீல் தகடுகள் செய்கின்ற பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று சொன்னால் சில குறைபாட்டைச் சொல்கிறேனே தவிர யாரையும் குறை சொல்லவில்லை. இருக்கின்ற சூழ்நிலையைச் சொல்கிறேன்.

சகாரா பாலைவனத்தைப்போல தமிழகம் மிக மோசமாக இருக்கின்றது என்றுச் சொல்லவில்லை. இந்தியாவிலுள்ள பிற மாநிலங்களான பீகார், இராஜஸ்தான், ஒரிஸ்ஸா போன்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது இயற்கை வளங்கள், கனி வளங்கள் நமக்குக் குறைவு என்று சொன்னேனே தவிர அறவே இல்லை என்று நான் சொல்லவில்லை.

திரு. ஆர். தியாகராசன்: மரியாதைக்குரிய மாமன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ராமநாதன் அவர்கள் இந்திய அரசு நயா பைசா என்ற பெயரைக்கூட இந்தியில் வைத்து இந்தியைப் புகுத்தி இருக்கின்றது என்று சொன்னார்கள். 6,000 மைல்களுக்கு அப்பால் இருந்து வந்த வெள்ளைக்காரன் ஆட்சி இந்த நாட்டிலே இருந்த அதே நிலையில் இன்றைக்குக் கல்யாணப் பத்திரிகை கூட பிரசுரிக்கப்படுவதைப் பார்க்கிறோம். இன்றைக்கும் ஆங்கிலத்திலே திருமணப் பத்திரிகை அச்சடிக்கப்படுகின்றது. ஒரே அங்கமாக, ஒரே உருவத்தில் உள்ள இந்திய நாட்டிலே இந்தி



மொழியைப் பொறுத்தவரையில் அவர்கள் விரும்பும் வரையில் திணிக்கப்படக்கூடாது என்றுதான் நேரு அவர்கள் உறுதியளித்திருக்கின்றார்கள். ஆனால் இந்தி மொழியை விரும்பி ஏற்றுக் கொள்ள முடியாத நிலைமையில் இருக்கக்கூடியவர்கள் ஆங்கில மொழியை எந்த அளவுக்கு ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் பார்க்க முடிகிறது. ஆறு ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்து வந்த அந்த ஆங்கில ஆட்சியின் அடிவருடிகளாக இருந்தவர்கள் எல்லாம் கூட இன்றைய தினம் சுதந்திரத்தின் பெருமையை அடைந்து வருகிறார்கள். அப்படி சுதந்திரத்தை அடைந்திருக்கின்ற நிலையில் இந்திய நாட்டினுடைய ஒருசில மொழிகளைப் பழித்து குறை கூறிப் பேசுவது தவறு என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன்.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சுட்டிக்காட்டியது 1985—86 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் 40-வது பக்கத்தில் நாவலர் அவர்கள் சொல்லி இருப்பதைத்தான். 'தமிழ் நாட்டில் போதிய அளவுக்கு இயற்கை வளங்கள் இல்லாமல் இருந்த போதிலும், என்று சொல்லப்பட்ட வரிக்காகத்தான் நான் அதைச் சொன்னேனே தவிர வேறல்ல. கனிம வளங்களை எடுக்க வேண்டிய இடத்திலிருந்து எடுக்கிறார்கள் என்றால் அதைச் செய்வதற்கு அவர்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள். அப்படி எடுக்கத் தவறுகிறார்கள் என்று சுட்டிக்காட்டினால் அதற்கு துணையாக நின்று தோள் கொடுக்க நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதை இங்கே சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

திரு. துரை கோவிந்தராசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்போம் என்று சொன்ன பேரறிஞர் அண்ணாவின் வழி நடக்கின்ற புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சியில் மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்களால் 1985—86 ஆம் ஆண்டுக்காக இங்கே வைக்கப்பட்டிருக்கின்ற நிதிநிலை அறிக்கையை வரவேற்று என்னுடைய கருத்துக்களைச் சொல்வதை என்னுடைய கடமையாக நான் கருதுகிறேன். கருத்துக்

களைச் சொல்வதற்கு முன்னால் இந்த மாமன்றத்தில் நான் பேசுகின்ற ஒரு வாய்ப்பை ஏற்படுத்தித் தந்த புரட்சித் தலைவர் அவர்களுக்கும் எனக்கு வாக்களித்து இந்த மன்றத்திற்கு வருகின்ற வாய்ப்பை ஏற்படுத்திய திருவையாறு தொகுதி மக்களுக்கும் நான் இந்த மன்றத்தின் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் இந்த மாமன்றத்தில் இதற்கு முன்னால் பல்வேறு உறுப்பினர்கள் இப்படிப்பட்ட நிதிநிலை அறிக்கையில் கலந்துகொள்கின்றபோது பேசுவதைக் கேட்டிருக்கிறேன். ஆளுகின்ற கட்சியிலே இருப்பவர்கள் ஆதரித்துப் பேசுவதும், எதிர் வரிசையில் எதிர்க்க வேண்டும் என்ற உணர்வோடு இருப்பவர்கள் எதிர்த்துப் பேசுவதும் வாடிக்கையாகவும், வழக்கமாகவும் இருக்கின்றது. சில நேரங்களில் அந்த அறிக்கைக்குள்ளே இருக்கின்ற நிலைமை களைப் பற்றி ஆராயாமல் இந்த நிதிநிலை அறிக்கையிலே உப்பில்லை, அப்படி உப்பில்லாத காரணத்தால் சப் என்று இருக்கின்றது என்றெல்லாம் கருத்துப்பட பேசுகின்ற நிலைமைகள் இருப்பதைத்தான் நாம் கண்டு வருகிறோம். நான் முன்னாலே குறிப்பிட்டதுபோல் பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்லிச் சென்ற அந்த ஏழையின் சிரிப்பைக் கண்டு கொண்டிருக்கிற நேரத்தில் ஏழைக்கு உப்பிட்டுப் பார்ப்பதற்கு மாறாக ஏழையின் இல்லங்களிலே உள்ள குழந்தைகளைப் பார்க்கின்றபோது அவர்களுடைய உள்ளங்களை எட்டுகின்ற செய்தி இனிப்பான செய்தியாக, மிகவும் இனிக்கின்ற பாயசம் போன்ற செய்தியாக இருக்கின்றது. அந்த நேரத்தில் பருகுகிற இனிப்பான அந்தப் பாயசத்திற்கு ஒப்பிட்டால் சரியாக இருக்காது. அதனாலே, ஏழை எளிய மக்கள் அந்த உணர்வோடு இந்த நிதிநிலை அறிக்கையைப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தான் இந்த நேரத்திலே நான் எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.





(முற்பகல் 11-20)

இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் மதிப்பிற்குரிய இராமநாதன் அவர்கள் துவக்கத்திலே ஒன்றைக் கோடிட்டுக் காட்டினார்கள். இன்றைக்கு மொத்தத்திலே சுமார் ரூ. 2,500 கோடிக்கு வருவாய் வந்து, அதில் மதுவிலக்கைத் தளர்த்தி சுமார் ரூ. 225 கோடிக்கு அரசுக்கு வருவாய் வந்து, அதில் ஏறத்தாழ ரூ. 40 கோடிக்கு ஒரு திட்டம், அதிலே ஏறத்தாழ ரூ. 10 கோடி வரையிலே பொதுமக்களிடமிருந்து வசூல் என்ற வகையிலே பெற்றிருக்கிறது. அவ்வளவு பேர்களையும் இந்த அரசு குடிக்கச் செய்திருக்கிறது என்கிற ஒன்றை இங்கே எடுத்துக் காட்டினார்கள். நான் எண்ணிப் பார்த்தேன். 1971-72-வது ஆண்டில் இந்த மன்றத்திலே அன்றைக்கு ஆளுகிற கட்சியிலே இருந்தவர்கள் என்ன செய்தார்கள், என்பதை. அதற்கு முன்னாலே பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தார்கள். இன்றைக்கு மதுவிலக்கு ரத்து செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்கிற அந்த வார்த்தையை, வார்த்தை ஜாலங்களால் சொன்னார்கள். சில நேரங்களில் நானே கூட சொல்வேன், மாநில சுயாட்சியா, அல்லது மாநிலத்திற்கு அதிக அதிகாரமா என்று இரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்தால், இரண்டுக்கும் உட்பொருள் ஒன்றாக இருப்பதைப் போல, 1971—72-ல் மதுவிலக்கு ஒத்திவைக்கப்பட்டது என்று இந்த மாமன்றத்திலே வாதத்தை எழுப்பியபொழுது, அன்றைக்கு ஆளுகிற கட்சியில் இருந்தவர்கள், கொழுந்து விட்டு எரிகிற கற்பூர வளையத்திற்குள் கொளுத்தப்படாத கற்பூரம் எத்தனை நாளைக்கு உள்ளே இருக்க முடியும் என்ற நிலையை எடுத்துச் சொல்லி, அதோடு மட்டும் விட்டுவிடாமல், பின்லாந்து நாட்டில், 1907 ஆம் ஆண்டு மதுவிலக்கை அமுல்படுத்தி அதன்மூலமாக அங்கே பெரும் குற்றங்களும் குடிப்போரும் அதிகமாகி, அதற்குப் பின்னாலே 1932-ல் மீண்டும் மதுவிலக்கு சட்டம் ரத்து செய்யப்பட்டது என்ற நிலையை எடுத்துக் காட்டி, நார்வே நாட்டில் 1919-ல் மதுவிலக்கைக் கொண்டு வந்து, அது 1927-ல் ரத்து செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் கோடிட்டுக் காட்டி, நியூ பவுன்ட்லாண்டு நாட்டில் 1915-ல் மதுவிலக்கை அமுல் செய்து, 1924-ல் அது ரத்து செய்யப்பட்டதைச் சுட்டிக்காட்டி, துருக்கி நாட்டில் 1920-ல் மதுவிலக்கை அமுல்படுத்தி, 1924-ல் அதை ரத்து

செய்ததைச் சுட்டிக்காட்டி, அதோடு 1926-ல் அந்த அரசாங்கமே அந்த வியாபாரத்தை ஏற்று நடத்தியிருக்கிறது என்பதை இந்த மாமன்றத்திலே புள்ளிவிவரமாகத் தந்து, அதுவரையில் இந்த மக்கள் கண்டிராத ஒரு நிலையை, அந்தப் பழக்கத்தை இந்த அரசுக்கு முன்னோடியாகக் காட்டி, அன்றைக்கு எந்த காரண காரியங்களுக்காக இந்த அரசினுடைய வருமானம் உயரவேண்டுமென்கிற அடிப்படையில் இதைத் தெரிவித்தார்களோ, அப்படிப்பட்ட உணர்வோடுதான் இன்றைக்கு அரசு மதுவிலக்கை ஒத்தி வைத்ததை ஆய்ந்து கொண்டிருக்கிறது என்றாலும், அதே நேரத்தில் குடிப்பழக்கத்தைப்பற்றி மக்களுக்குக் கெட்ட பழக்கம் என்பதை எடுத்துக்காட்ட, குழுக்களை அமைத்து, அதற்குப் பல்வேறு விளக்கங்களையும் கூட்டங்களையும் நடத்தி வருகிறது என்பதை இந்த நேரத்திலே எடுத்துச்சொல்ல கடமைப் பட்டிருக்கிறேன். ஏதோ அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு வந்ததற்குப் பின்னால் இந்த மது விலக்கை ரத்து செய்திருக்கிறது, அதற்கு முன்னாலே இருந்தவர்கள் இந்த நாட்டு மக்களை அப்படிப்பட்ட நிலைக்கு ஆளாக்கவில்லை, இது ஒரு புதுமையாக வந்திருக்கிறது என்று எண்ணுவார்களேயானால், நான் முன்னாலே கோடிட்டுக் காட்டிய அவற்றையெல்லாம் இந்த மாமன்றத்திலே செய்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் எடுத்துச் சொல்வது என்னுடைய கடமையாகும்.

அதை விட இன்னும் சொன்னார்கள், பல்வேறு நிலைகளிலே இந்த மன்றத்திலே அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் எல்லாம் இப்பொழுது இல்லையே என்று. நான் புரட்டிப் பார்த்தேன், 1970—71-லே இருந்து 1974 வரையில் இந்த மன்றத்திலே பலர் கையொலி எழுப்பத் தக்க அளவுக்கு தட்டி வரவேற்கத்தக்க அளவுக்கு அன்றைக்கு உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்று இந்த மன்றத்திலே தெரிவித்ததனுடைய நிலை என்ன? அந்த உழவு நிலம் ஏழை விவசாயிகளுக்குச் சொந்தமாக்கப்பட்டிருக்கிறதா என்பதை என்னாலே தெரிந்து கொள்ள முடியவில்லை. இதையெல்லாம் சொல்கிற நேரத்தில் இந்திய நாட்டின் அரசியல் அமைப்புச் சட்டத்தில் இருக்கிற அரசியல் அமைப்பு முறைகளில், ஆங்காங்கு இருக்கிற மன்றங்கள், ஆட்சி நடத்துகிறவர்கள்



வருகிற வருவாய்க்கு ஏற்றவாறு, அந்த வருவாயை அடிப்படையாக வைத்து அடித்தளத்தில் இருக்கிற மக்களுக்கு உடுப்பதற்கு உடை, உண்பதற்கு உணவு என்ற முன்னோடி திட்டங்களைச் செய்யவேண்டுமென்று இருக்கிறது. அந்த அடிப்படையிலே வருகிற வருவாயை வைத்துக்கொண்டு இந்த நிதிநிலை அறிக்கையிலே வந்திருப்பதை ஒரு கணம் பாராட்டவில்லை என்றாலும், இவை கீழே இருக்கிற பாமர மக்களுக்கு கிடைக்கிறதே என்று மகிழ்ந்திருந்தால் நான் வரவேற்று இருப்பேன்.

இன்றைக்கு குழந்தைகளைப் பற்றி சொல்கிறபோது பசியாற உணவு கிடைத்துக் கொண்டிருக்கிறது. உணவைப் பெற்றிருக்கிற அந்தக் குழந்தைகள் பள்ளிக்குச் சென்று படிக்கிற நேரத்தில் தாய், தந்தையர்கள் ஆண்டு ஒன்றிற்கு ஒன்றிரண்டு உடைகளை கூட வாங்கிக் கொடுக்க முடியாத நிலையில், வறுமைக்கோட்டிற்கு கீழே இருக்கிறார்கள் என்பதால் அதையும் போக்க வேண்டும் என்ற எண்ணத்தில் மற்ற வசதியான குழந்தைகள் பள்ளிக்கு வருகிறபோது அந்தக் குழந்தைகளோடு சுத்தமாக, சுகாதாரமாக இவர்களும் இருக்கிற அளவிற்கு இந்த அரசு வழி வகை செய்திருக்கிறது. அதற்காக புத்தகத்திற்கும், துணிக்குமாக 25 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது என்றால் இந்த அரசு அடித்தளத்து மக்களுக்காக சிந்தித்து தீட்டியிருக்கிற திட்டம் அல்லவா இதையாவது பாராட்ட வேண்டாமா? எதையும் பாராட்ட மனம் இல்லாதவர்கள் இதைப் பாராட்டுவது ஒரு பாராட்டாகாது என்கிற காரணத்தினால்தான் அப்படிப்பட்ட நிலைகளை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். விவசாயிகளைப் பொறுத்தவரையில் இங்கே பல உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் சொல்லிய கருத்திலே உடன்பட்டு நானும் அதனை வழிமொழியத்தக்க நிலையில் இருக்கிறவன். இந்த நிதிநிலை அறிக்கையில் சொல்லியிருக்கிற மூவாயிரத்திற்கும் மேற்பட்ட கோடிகளை ஒதுக்கி மன்றத்திலே வைத்து, பற்றாக்குறையாக ஏறத்தாழ 260 கோடி அளவிற்கு வைத்து இந்த அறிக்கையை செய்திருக்கிறார்கள். விவசாயிகளுக்கு பல்வேறு சலுகைகளை அளித்துக்கொண்டிருக்கிறது இந்த அரசு என்பதை நான் வரவேற்கிறேன். இங்கே காலையில் கேள்வி—பதில் நேரத்தில் கூட மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சரிடத்திலே

பல உறுப்பினர்கள் கேள்வியாக கேட்டார்கள். இந்த அறிக்கையிலே அது கொஞ்சம், விளக்கமாகத் தரப்படவில்லை என்பது தான் என்னுடைய உள்ளார்ந்த வருத்தமாகும். அடித்தளத்து ஏழை எளிய மக்களுக்கு வரி தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. உயர்ந்த இடத்தில் இருக்கிற பெரிய பணக்காரர்கள் என்று சொல்கிறவர்களுக்கு வட்டி தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. இடையில் இருக்கிற நடுத்தர விவசாயிகளுக்கு அதிலே கொஞ்சம் கவனம் செலுத்தவில்லை: இப்படி கவனம் செலுத்தாதது அரசினுடைய குறை என்று சொல்லமாட்டேன். ஆனால் தயாரித்து தந்த புள்ளி விவரங்களை அந்த அதிகாரிகள் எந்த முனைப்போடு தயாரித்து தந்திருக்கிறார்கள் என்பதைதான் இந்த நோத்தில் என்னாலே புரிந்து கொள்ள முடியவில்லை. காரணம் ஆயிரக் கணக்கில், லட்சக் கணக்கில் நிலவள வங்கிகளில் பெற்றிருக்கிற கடன்களுக்கு, மூன்று ஆண்டுகள், நான்கு ஆண்டுகள் கட்டாமல் வைத்திருக்கிற கடன்காரர்களுக்கு ஒவ்வொருவருக்கும் 20 ஆயிரம், 30 ஆயிரம், 10 ஆயிரம் என்று தள்ளுபடி செய்கிற அதே நேரத்தில், கீழே இருக்கிற கிராம கூட்டுறவுச் சங்கங்களில் கடன் பெற்றிருக்கிற விவசாயிகளுக்கு, அவர்களின் கடன் கணக்கை இதோடு சேர்க்காத நிலை இருக்கிறது. அப்படித்தான் இல்லையென்றாலும் கூட 264 கோடி ரூபாய் அளவிற்கு நிதிநிலை அறிக்கையிலே குறைவு ஏற்படுகிறபோது, இன்னும் 10 கோடி, 15 கோடி அந்தக் குறைவு அதிகமானாலும், அந்தக் கடன்களையும் தள்ளியிருந்தால் தமிழகத்தின் மூலை முடுக்குகளில் இருக்கிற விவசாயப் பெருங்குடி மக்கள் நிச்சயமாக மகிழ்ச்சி அடைந்திருக்க முடியும். இதை அரசினுடைய குறை என்று நிச்சயமாகச் சொல்ல மாட்டேன். அதிகாரிகள் தந்த புள்ளி விவரங்களில் அதை விட்டுவிட்டார்கள் என்பதை இந்த நோத்தில் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

விவசாயத்தில் பசுமை புரட்சியை ஏற்படுத்தி இருக்கிறோம். தஞ்சை மாவட்டத்து விவசாயிகளுக்கு கடந்த ஆண்டு விளைந்த நெல்லுக்கு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒவ்வொரு விவசாயிக்கும் ஒரு குவிண்டாலுக்கு 15 ரூபாய் தர வேண்டும், அதையும் உரமாகத் தர வேண்டுமென்று ஊக்கத்தை அளித்து இருக்கிறார்கள். அதனால் விவசாயிகள் மகிழ்ச்சி





அடைந்தார்கள். சிலநேரங்களில் அதைக்கூட மாண்புமிகு உறுப்பினர்கள் பணமாகத் தரவேண்டுமென்று இங்கே சொன்னார்கள். பணமாக தந்தால் வயலில் உற்பத்தி செய்கிற அளவிற்கு அது போய் சேராது என்ற நிலையில் தான் உரமாகத் தந்தால் குறுவை சாகுபடியை செய்கிறவர்கள் உரத்தைப் பெற்று இரண்டாம் முறையாக விவசாயத்திற்கு பயன்படுத்தி உற்பத்தியை பெருக்க முடியுமென்று நல்ல உள்ளத்தோடு அவர்கள் உரமாக அதைத் தந்திருக்கிறார்கள். கரும்பு விவசாயிகளுக்கு விலையை அரசு உயர்த்தித் தந்திருக்கிறது.

(முற்பகல் 11.30)

அதைப்போன்று விவசாயிகளுக்கு பல்வேறு சலுகைகளைச் செய்திருந்தாலும் இன்றைக்கு தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மட்டுமல்ல; தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை மாவட்ட மக்களுக்கு வெண்மைப் புரட்சியாக, பால் வளத்தைப் பெருக்க ஏழை எளிய மக்கள் ஒவ்வொருவர் வீட்டிலும் ஒவ்வொரு மாடு இருக்கிறது. அதை வைத்து அவர்கள் பால் கறந்து, விற்று, இங்கே சத்துணவு போடுவதைப்போல அந்த ஏழை எளிய மக்கள் வீட்டிலே இருக்கின்ற குழந்தைகள், விவசாயப் பெருங்குடி மக்களுடைய குழந்தைகள் இதுவரையில் பாலையோ, மோரையோ கண்டிராத குழந்தைகள், அந்தப் பாலைப் பெற்று சத்துள்ள குழந்தைகளாக, வலுவுள்ள குழந்தைகளாக அழகுள்ள குழந்தைகளாக வளர அந்த ஏழை எளிய குடும்பங்களுக்கு இந்த அரசு சலுகை அளித்திருக்கிறது. அவர்களுக்கு பல்வேறு வகைகளிலே மானியம் தந்து இந்த ஆட்சி கீழே இருக்கிற மக்களுக்கு இப்படிப்பட்ட காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு காவேரி நதிநீர்ப் பிரச்னை இருக்கிற தஞ்சை மாவட்டத்திற்கு 102 கோடி ரூபாய் திட்டத்தைத் தீட்டி, பல காரியங்களைச் செய்வதாக இங்கே சொல்லியிருக்கிறார்கள். நான் அதை வரவேற்கிறேன். தஞ்சை மாவட்டத்தைப் பார்க்கிறபோது அங்கே இருக்கிற வறட்சிப் பகுதி சில நேரங்களில் தெரிவதில்லை. திருச்சியில் இறங்கி, கல்லணை வழியாக பூம்புகார் வரை செல்கின்றவர்களுக்கு பச்சைப்பசேலென்று

காட்சியளிக்கின்ற தஞ்சைதான் தெரியும். அதைப்போன்று வேறு சில சாலைகளில் செல்கிறவர்களுக்கும் இந்த பச்சைபசே சென்ற காட்சி தோன்றும். அதை வைத்துக்கொண்டு தஞ்சை முழுவதும் அப்படி இருக்கிறது என்று கருதிவிடக்கூடாது. ஒரு காலத்திலே 'சோழ நாடு சோறுடைத்து' என்று சொல்லியதை வைத்துக்கொண்டு, தஞ்சை நெல் கொழிக்கும் பகுதி என்ற முடிவுக்கு இப்போதும் வந்துவிடக்கூடாது. இன்றைக்கு தஞ்சை மாவட்டத்தில் இருக்கிற நிலைமை என்னவென்றால் தஞ்சை விவசாயி தண்ணீருக்குத் தடுமாறுகின்ற விவசாயியாக இருக்கிறான். இன்றைக்கு தஞ்சை தண்ணீர் பற்றாக்குறை மாவட்டமாக இருக்கிறது. அதனால் விவசாயம் பாதிக்கப் பட்டிருக்கிறது. இப்படிப் பாதிக்கின்ற சூழ்நிலையைப் போக்கு வதற்காக இன்றைக்கு 102 கோடி ரூபாய் முன்னோடித் திட்டமாக இந்த காவேரி திட்டத்தை சீர்படுத்த இருக்கிறார்கள். அதற்காக இந்த அரசை நான் பாராட்டுகிறேன்.

அதேநேரத்தில் என்னுடைய ஞாபகம் கொஞ்சம் முன்னால் செல்கிறது. 1924 ஆம் ஆண்டில் இந்த காவேரி நதிநீர் பற்றிய ஒப்பந்தம் ஒன்று போடப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டுக்கு எவ்வளவு தண்ணீர் தரவேண்டும் என்று அந்த ஒப்பந்தத்திலே சொல்லியிருக்கிறார்கள் 1924-ல். அந்த ஒப்பந்தம் முடியும் காலம் 50 ஆண்டு. ஆக, அந்த ஒப்பந்தம் போடப்பட்ட 50-வது ஆண்டில் மறுபடியும் புதுப்பிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் ஏதோ காரணத்தால் 1974 ஆம் ஆண்டில் ஆட்சியில் இருந்தவர் களால் அந்த ஒப்பந்தம் புதுப்பிக்கப்படவில்லை. 1972-லே ஆட்சியிலே இருந்தவர்கள், 1973-லே ஆட்சியில் இருந்தவர்கள், 1975 வரையில் ஆட்சியிலே இருந்தவர்கள் அந்த ஒப்பந்தத்தைப் புதுப்பிக்க தவறி இருக்கிறார்கள். அந்த நேரத்தில் ஆட்சியில் இருந்தவர்களுக்கு காவேரி நதியைப்பற்றி கவலையில்லை. தஞ்சை மாவட்ட விவசாயிகளைப்பற்றி அவர்களுக்கு கவலை இல்லை. அப்படி கவலைப்படாமல் இருந்த காரணத்தால்தான் அந்த ஒப்பந்தம் புதுப்பிக்கப்படவில்லை என்று நான் இங்கே எடுத்துச்சொல்ல கடமைப் பட்டிருக்கிறேன்.





அதோடு விட்டுவிடவில்லை. அந்த ஒப்பந்தத்தை சுப்ரீம் கோர்ட் வரை கொண்டு சென்றார்கள். அந்த வழக்கின் முடிவு என்னவாகும் என்று தெரிந்துகொள்ளும் வரையில் வழக்கை சுப்ரீம் கோர்ட்டில் விட்டு வைக்கவில்லை. அந்த வழக்கைத் திரும்பப் பெற்றுக்கொண்டார்கள். பலர் கூட முடிவு செய்து, சுப்ரீம் கோர்ட்டில் வழக்குத் தொடரப் பட்டது; ஆனால் யாருக்கும் தெரியாமல் அன்றைக்கு ஆட்சியில் இருந்தவர்கள் திரும்பப் பெற்றிருக்கிறார்கள். அதன் விளைவுதான் இன்றைக்கு இந்தப் பற்றாக்குறை. கர்நாடக அரசுக்கும் நமக்கும் அடிக்கடி பேச்சு வார்த்தை நடக்கிறது. பேச்சுவார்த்தை நடக்கிறதே தவிர, பேச்சு வார்த்தை நடக்கும்போதும் கர்நாடக மாநிலத்தில் அணைகளை ஆண்டு தோறும் கட்டிக்கொண்டிருக் கிறார்கள். பேச்சுவார்த்தை அதிகம் என்பதை விட அவர்கள் கட்டுகிற அணைதான் அதிகம். எனவே நம்முடைய அரசு கொஞ்சம் தீவிரமான நடவடிக்கையில் ஈடுபட்டு, தஞ்சை மாவட்ட மக்களுக்கு, நீண்டகாலமாக இந்தத் தண்ணீரை நம்பிக்கொண் டிருக்கிற தஞ்சை மாவட்ட விவசாயப் பெருங்குடி மக்களுக்கு போதுமான தண்ணீர் கிடைக்க தகுந்த ஏற்பாடுகளைச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆண்டுதோறும் மின்சாரத்திற்கும் கல்விக்கும் நாம் அதிகமான தொகை செலவிடுகிறோம். இங்கே பலர் கேட்டார்கள். மின்சாரம் பல இடங்களுக்கு வருவதே இல்லை என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் கோவை இராமநாதன் அவர்கள் கூட அந்த ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட பம்புசெட்டுகளின் எண்ணிக் கையைப் பற்றிக் குறிப்பிட்டு, இப்போது இல்லையே என்று கோடிட்டுக் காட்டினார்கள். நாம் பலமுறை இங்கே கேள்விப் பட்டு இருக்கிறோம் மின்சார உற்பத்தியிலே சில இடங்களில் பழுது ஏற்படுகிற காரணத்தால், அந்த உற்பத்தியைப் பெருக்கு வதிலே காலதாமதம் ஏற்படுகிற காரணத்தால் மின்சாரப் பற்றாக்குறை ஏற்படுகிறது என்று இங்கே அமைச்சர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். இன்றைக்கு திட்டங்களை நாம்தான் போடுகிறோம். எல்லா விவசாயிகளும் தங்களிடத்தில் இருக்கிற மின்சாரப் பம்புசெட்டுகளுக்கு இணைப்பு வேண்டும், ஏழை எளிய மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், தங்களுடைய வீட்டுக்கு ஒரு லைட் போட்டுத் தரவேண்டும், இன்னும் பாதுகாக்கப்பட்ட

[திரு. துரை கோவிந்தராசன்] [1985 மார்ச் 28

குடிநீர் தருவதற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளை கட்டி, அதற்கு பம்புசெட்டுகளை அமைத்து, அதன் மூலமாக பாதுகாக்கப்பட்ட தண்ணீரைத் தரவேண்டும் என்று கேட்கிறார்கள். ஆக இவைகளை எல்லாம் நிறைவேற்ற, எல்லா இடங்களிலும் ஒட்டு மொத்தமாக மின்சாரம் இருந்தாக வேண்டும். அதோடு சிறுசிறு தொழில்களைத் தீட்டியாக வேண்டும். அதற்கும் மின்சாரம் வேண்டும். இத்தனையும் உள்ளடக்கி மின்சாரம் தருகிற நேரத்திலே நம்முடைய மாநில அரசு மின்சாரத்தைப் பொறுத்த வரைக்கும் விவசாயிகளுக்கு எந்த அளவிற்கு கட்டணங்களைக் குறைத்து வழங்க முடியுமோ, அந்த அளவிற்கு வழங்கிக்கொண்டிருக்கிறது. இதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இதைப்போல, புதிய பள்ளிக் கட்டிடங்களைக் கட்டுவதற்காக ரூ. 1 கோடி ஒதுக்கியிருக்கிறார்கள். நீண்டகாலத்திற்கு முன்பு அமைக்கப்பட்டு இருக்கிற உயர்நிலைப் பள்ளிக் கூடங்கள், பல்வேறு இடங்களிலே ஒரே ஒரு கட்டிடத்தில் தான் இயங்கிக் கொண்டு வருகின்றது. இந்த நிலையை மாற்றவேண்டும் என்று தான் புதிய கட்டிடங்கள் உருவாக்க வேண்டும் என்பதற்காகத் தான் இன்றைய தினம் 1 கோடி ரூபாய் இந்த கல்வி நிதியில் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. கொஞ்சம் சிந்தித்துப் பார்த்தால், ஒரு காலத்திலே பெரிய வசதி படைத்தவர்களுடைய குழந்தைகள் அல்லது பெரிய நகர்ப்புறங்களில் வாழக்கூடிய பெரிய அதிகாரிகளுடைய குழந்தைகள் மட்டும் தான் நல்ல மேல்நிலைக் கல்வியைப் படித்து வந்த நிலை மாறி, இன்றைக்கு ஏழை எளியவர்கள் வாழ்கிற பகுதியில் இந்த மேல்நிலைப் பள்ளிகளைத் துவக்கியதன் காரணமாக, அங்கேயிருக்கிற ஏழை எளிய மாணவர்கள் மேல்நிலைக்கல்வி பயிலுகின்ற அளவிற்கு நிலைமையை மாற்றி, அதன்மூலமாக அவர்கள் என்ஜினியர்களாகவும், டாக்டர்களாகவும், இன்னும் வழக்கறிஞர்களாகவும், அப்படிப்பட்ட துறையிலே வளர்வதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்திருக்கிறது என்று சொன்னால், உயர்ந்த இடத்திலே இருந்த அந்தக் கல்வியை தாழ்ந்த இடத்திற்கு கொண்டு வந்து, அந்த அறிவைப் பெருக்கிக் கொள்கிற அளவிற்கு நிலைமைகளை இந்த அரசு உருவாக்கியிருக்கிறது என்றால், அதைக்கூட பாராட்ட உங்களுக்கு மனம் இல்லை.



1985 மார்ச் 28] [திரு. துரை கோவிந்தராசன்]

நான் இதையெல்லாம் சொல்லுவதற்குக் காரணம் புரட்சித் தலைவருடைய ஆட்சியிலேதான் இன்றைக்கு முனைப்பாக தேர்தல் காலங்களிலே வைத்ததைப் போல திட்டங்கள் தீட்டப் பட்டு வருகின்றன. ஒரு நாட்டினுடைய பிரதமர், வரியைப் போடாமல், தேர்தல் நடத்துகிறேன் என்று தேர்தலிலே ஈடுபட்ட போது நாட்டு மக்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து, கொதித்து எழுந்து, வரியில்லாமல் எப்படி ஒரு ஆட்சியை நடத்த முடியும் என்று கருதி அவருக்கு வாக்கு அளிக்காமல் அவரை வீட்டுக்கு அனுப்பியதாக ஒரு நிலை உண்டு. அதைபோல வரி போடுகிறபோது, அதாவது குறைவாக வரி போடுகிறபோது, அதுவும் ஏழைஎளியவர்களைப் பாதிக்காமல் வரி போடுகிறபோது வரியைக் கூட்டி விட்டார்கள் என்று சொல்கிறார்கள். எதற்காக வரியைக் கூட்டுகிறார்கள் என்றால், கருங்கற்களை ஏற்றி, மற்றைய நாடுகளுக்கு அனுப்பி அதன்மூலமாக அதிக லாபம் பெற்றுக் கொண்டிருக்கிற, அவர்களிடத்திலே வரியைக் கூட்டுவதன் மூலமாக அதிலே வருகிற ரூபாய் ஒரு 10 கோடி அல்லது 4 கோடி என்கிற நிலை வருகிறது. இதையெல்லாம் வைத்துப் பார்க்கிறபோது இந்த நிதிநிலை அறிக்கை பாராட்டுக்குரிய நிதிநிலை அறிக்கையாக இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து தன்னிறைவுத் திட்டங்கள். இந்தத் திட்டத்தில் சில குறைபாடுகள் கீழே நடந்தன என்று சொன்னார்கள், இல்லை என்று நாம் சொல்ல முடியாது. அது தன்னிறைவுத் திட்டமாக இருந்தாலும் சரி, அல்லது சத்துணவுத் திட்டமாக இருந்தாலும் சரி, அல்லது இன்ன பல திட்டங்களாக இருந்தாலும் சரி, அரசாங்கம் நல்ல உணர்வோடுதான் கொண்டு வருகிறது. எப்படி மேட்டூரிலே திறந்துவிடப்படுகிற தண்ணீர் தஞ்சையிலே இருக்கிற விவசாயப் பெருமக்களுடைய வயல் மடைகளுக்குப் பாயவேண்டும் என்று எண்ணி, தண்ணீர் திறக்கப்படுகிற போது, இடையிலே, சிலபல இடங்களில் தண்ணீர் தெரியாத வகையில் எடுத்து குறைக்கப்படுகிறதோ, அதைப்போல இந்த அரசினுடைய நல்ல திட்டங்கள் கீழே உள்ள மக்களுக்குச் சென்று அடையவேண்டும் என்றுதான் அமைச்சர் பெருமக்களும், முதல்வர் புரட்சித்தலைவர் அவர்களும், திட்டங்களைத் தீட்கிறார்கள். அப்படித் தீட்டுகிற

போது, சில பல குறைபாடுகள் கீழே நடக்கிறது. அந்தக் குறைபாடுகளுக்குக் காரணம் யார் என்று சொன்னால், எல்லோரும் காரணமாவோம். சில நேரங்களில் மாற்றிமாற்றி, நடைபெறுகிற குறைபாடுகளை கட்சியிலே உள்ளவர்கள் சுட்டிக்காட்டுகிறபோது, இந்தக் கட்சியிலே இருப்பவர்கள் அதை ஆதரிக்க வேண்டும். அதைப்போல், இந்தக் கட்சியிலே இருப்பவர்கள் குற்றங்களைச் சொன்னால், அந்தக் கட்சியிலே இருப்பவர்கள் அதை ஆதரிக்க வேண்டும். அப்படிப்பட்ட நிலை உருவாக வேண்டும், அதுபோல தான் பல்வேறு குறைபாடுகள் கீழே நடக்கிறது என்று எடுத்துச் சொன்னார்கள். மாதம் 150 ரூபாய்க்கு அமுதம் சிறப்பங்காடியில் பணியாற்றுகிறார்கள் என்று சொன்னார்கள். அதைப்போல சத்துணவு மையங்களில் பணியாற்றுகிறார்கள் என்று சொன்னார்கள். அவர்களுக்கு தரப்படும் மாத ஊதியம் குறைவு என்றார்கள். அதிலும் கூட சில இடங்களில் அந்த சத்துணவு மையத்தில் பணியாற்றுகிற பெண்கள் ஏழைக் குடும்பத்தில் பிறந்த பெண்கள் பணியாற்றுகிறார்கள்.

(முற்பகல் 11-40)

ஆனால் சமைக்கப்பட்ட உணவை எல்லாக் குழந்தைகளுக்கும் போட்டது போக, மீதம் இருக்கிற கொஞ்சம் சாப்பாட்டை அந்த சத்துணவு மையத்திலே வேலை செய்கிற பெண்மணி பார்த்ததும், அவள் எண்ணிப் பார்க்கிறாள். தன்னை ஈன்றெடுத்த தாய் தந்தையர்கள் வீட்டிலே இருக்கிறார்களே பசியோடு, ஆகையினால் நாம் போகிறபோது, கொஞ்சம் கையிலே எடுத்துக் கொண்டு போனால் என்ன என்று சொல்லி அதைக் கொஞ்சம் எடுத்துக் கொண்டு போகிறாள். அதைப் பக்கத்திலே இருந்து பார்க்கிற பலர், அதிலே சாதம் போகிறதா உப்புமா போகிறதா என்று பார்ப்பது இல்லை. அதிலே போவது எண்ணெயா, பருப்பா என்றுதான் பார்க்கிறார்கள். இப்படிப்பட்ட நிலையிலேதான் அவர்கள் கவனத்தைச் செலுத்துவதால், அப்படியே தோன்றி, ஏதேதோ ஒரு பக்கம் போய்க் கொண்டிருக்கிறது; அதனால் பருப்பு குறைகிறது, எண்ணெய் குறைகிறது என்று சொல்லக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.



(முற்பகல் 11-40)

அதைப்போலவே தன்னிறைவுத் திட்டத்திற்கென கோடிக் கணக்கான ரூபாய்களை இன்றைக்கு புரட்சி தலைவர் அவர்களுடைய அரசு செலவழித்து நகர்ப்புறத்தைப் போல கிராமப்புறங்களும் இருக்க வேண்டும். அந்தக் கிராமப்புறங்கள் எல்லாம் எல்லா வசதிகளையும் பெற்றாக வேண்டும் என்ற எண்ணத்தில், அவர்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வேண்டும்; பஸ் வசதிகளை பார்க்காத இடங்கள் இருக்க கூடாது; சாலை வசதிகள், பள்ளிக் கூடங்கள், மருத்துவ மனைகள் போன்ற எல்லா வசதிகளையும் குக்கிராமங்களும் பெறவேண்டும் என்ற அடிப்படையில் புரட்சித் தலைவர் அவர்கள் இந்த தன்னிறைவுத் திட்டத்தை கொண்டு வந்து காரியங்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அதிலேயும் சில இடங்களில் குறைபாடு இருக்கத்தான் செய்கிறது. ஆனால் அந்த குறைபாடுகளுக்கு ஆட்சிதான் காரணம், ஆட்சிதான் பொறுப்பு என்று யாரும் சொல்வார்களேயானால் இங்கே இந்த மாமன்றத்திலே இருக்கிற நாமும் தான் அதற்கு பொறுப்பு என்று சொல்ல வேண்டுமே தவிர வேறல்ல. ஒட்டு மொத்தமாக இதிலே எல்லோரும் கவனக் குறைவாக இருப்பதுதான் அதற்குப் பொறுப்பாக முடியுமே தவிர, ஆட்சி மட்டுமே இதற்கு பொறுப்பல்ல.

ஆட்சி, திட்டத்தைப் போட்டு ஒதுக்க வேண்டிய பல்வேறு முறைகளிலே பணம் ஒதுக்கி நடைமுறைப் படுத்துகிற நேரத்திலே ஏற்படுகிற சின்னஞ்சிறு குறைபாடுகளால்தான் இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் வருகின்றன என்பதை இந்த நேரத்திலே நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏராளமான மக்களுக்காக நம்முடைய டாக்டர் நாவலர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையிலே பல நல்ல திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். பல கோடி ரூபாய்க்கு வளர்ச்சிப் பணி என்ற பெயரிலே இங்கே பல்வேறு திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. கூட்டுறவு நாணயச் சங்கத்தினிடத்தில் கடனே பெறமுடியாதவர்களுக்கு முன்வைப்புத் தொகையாக அரசாங்கமே கட்டி, அந்தக்

கடனைப் பெற்று, அதன் மூலமாக பால் சொசைட்டி அல்லது மற்ற பல வழிகளில் கடனைப் பெறுவதற்கு இந்த அரசு வழி செய்திருக்கிறது என்றால் உள்ளபடியே நாம் அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அது போல அரிசன மக்களுக்கு கையிலே பணம் இல்லாத நிலையில் பணத்தையும் அரசே தந்து, கடனையும் பெற்றுத் தந்து, பெறுகிற கடனிலே 50 சதவீதம் மானியம் என்கிற நிலையிலே அவர்களுக்கு பல்வேறு சலுகைகளைத் தந்து வீடுகளைக் கட்ட அவர்களுக்காக இந்த அரசு பல காரியங்களைச் செய்கிறது. அதோடு மட்டுமல்ல, இன்றைக்கு ஏறத்தாழ 20 ஆயிரம் வீடுகளை, ஏழை எளிய தாழ்த்தப்பட்ட மக்கள் குடியிருப்பதற்காக, நல்ல பாதுகாப்பான தீ பிடிக்காத வீடுகளைக் கட்டித் தர இந்த அரசு முனைந்து செயலாற்றி இந்த திட்டத்தைக் கொண்டு வந்திருப்பது, அடித்தள மக்களின் நலனில் எத்துணை அக்கறை கொண்டிருக்கிறது என்பதைக் காட்டுகிறது என நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது போல புதிய சர்க்கரை ஆலைகள் 10 ஆலைகளை இந்த ஆண்டு திறந்து, விவசாயப் பெருங்குடி மக்களுக்கு பயன் அளிக்கத்தக்க அளவிலேயும்; 102.44 கோடி ரூபாய் செலவில் ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களை வலுப்படுத்துவதற்கான அளவிலேயும்; 250 கோடி ரூபாய் செலவில் 10,900 குடியிருப்புகளுக்கு குடிநீர் கிடைக்கத் தக்க அளவிலேயும் இன்றைக்கு இந்த நிதிநிலை அறிக்கையிலே பல திட்டங்களை அறிவித்திருப்பதை காணுகிறபோது நான் மகிழ்ச்சியோடு இந்த அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல பெரும் தொழில்களை துவங்குவதற்காக 108 கோடி ரூபாயை ஒதுக்கியிருப்பதையும்; குடிசைமாற்று வாரியத்தின் மூலமாக நெசவாளர்களுக்கு, அவர்கள் இதுவரையில் இருந்து வந்த நிலையை மாற்றி, 5 ஆயிரம் வீடுகளைக் கட்டித் தருவதற்கும்; கிராம தொழிலிலே ஈடுபட்டிருப்பவர்களுக்கு, பணம் கொடுத்து வீடுகளைக் கட்டித் தருவது போன்ற பல்வேறு திட்டங்களை எல்லோரும் பாராட்டுகிற வகையில் இந்த நிதிநிலை



அறிக்கையிலே ஒட்டு மொத்தமாகக் காணுகிற நேரத்தில் நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மட்டும் சட்டமும், ஒழுங்கும், நீதியும் நிலை நாட்டப்படவில்லை என்று அவர் பாணியிலேயே கோடிட்டுக் காட்டினார்களே என்று நினைக்கும் போது வருத்தப்படாமல் இருக்க முடியவில்லை.

நான் எண்ணிப் பார்த்தேன். நாட்டினுடைய மக்களுக்காக சட்டத்தையும் நீதியையும் நேர்மையையும் நிலை நாட்ட வேண்டியது இந்த மாமன்றம் தான். அவர்களுக்காக சட்டத்தையும், திட்டத்தையும் எங்கே உருவாக்க வேண்டுமோ அந்த இடமும் இந்த மாமன்றம் தான். ஆனால், நமது மாண்புமிகு உறுப்பினர், அவரை ஏதோ காவல் நிலையத்தில் சரியாக கவனிக்காத காரணத்தால், இங்கே ஏதேதோ நடக்கிறது, சட்டம் ஒழுங்கு சரியாக இல்லை என்றெல்லாம் சொன்னார்களே, அவருடைய இயக்கத்தினர் இங்கே எவ்விதம் நடந்து கொண்டார்கள் [ நான் நினைத்துப் பார்க்கிறேன். அப்போது நானும் இந்த மாமன்றத்திலே அமர்ந்திருந்தேன்.

ஆனால் இப்போது இந்த நேரத்திலே சபாநாயகர் இருக்கையிலே துணை சபாநாயகர் இருக்கிறார். அன்றைக்கு இருந்த துணை சபாநாயகர் அவர்கள் நான் இருக்கிற இருக்கையிலே இருந்தார்கள். சபாநாயகர் அவர்கள் அந்த இருக்கையிலேயே இருந்தார்கள். அன்றைக்கு சபாநாயகராக இருந்தவர் மரியாதைக்குரிய மதியழகன் அவர்கள். அவர்கள் இன்றைய தினம் இல்லை. ஆனால் அந்த நேரத்திலே இருந்த ஆட்சியாளர்கள், கீழே இந்த இடத்திலே இருந்த துணை சபாநாயகரை வைத்து சபையை நடத்தச் சொல்லி, எதிர் வரிசையில் இருந்த மற்றவர்களுக்கெல்லாம் இருந்த அத்துணை மைக் இணைப்புகளையும் துண்டித்து விட்டு அன்றைக்கு அந்த எதிர் வரிசையிலே நானும் இருந்தேன், சபாநாயகர் இருக்கையிலே சபாநாயகர் உட்கார்ந்து இருந்தபோதே, அவருக்கு இருந்த இணைப்பையும் துண்டித்து விட்டு, கீழே இருந்த துணை சபாநாயகரை வைத்து சபை நடத்திக் காட்டிய ஜனநாயக நெறியற்ற ஆட்சியாளர்களின் தரப்பிலே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்தான், இன்றைக்கு இந்த மாமன்றத்திலே நின்றுக் கொண்டு,

சட்டத்தையும், ஒழுங்கையும் நீதியையும் பற்றி பேசுகிறார்கள். அன்றைக்கே ஜனநாயகப் படுகோலையை செய்துக் காட்டியதிலே முதல் தரமானவர்கள் அவர்கள் தான் என்பதை இந்த நேரத்திலே கோட்டிட்டுக் காட்ட நான் விரும்புகிறேன். (கரவொலி) அப்படிப்பட்ட நிலையெல்லாம் கண்டதற்கு பின்னாலே தான், பேரறிஞர் அண்ணா அவர்களை நீங்களும் சொல்கிறீர்கள். நாங்களும் சொல்லுகிறோம். அண்ணா அவர்களுடைய கொள்கைகள், லட்சியங்கள், தத்துவங்கள் இவற்றை இரண்டு பேரும் எடுத்துக்கொண்டிருக்கிறோம். உண்மையாக அந்தத் தத்துவ வழியிலே, கொள்கை வழியிலே நின்று, நாட்டிலே இருக்கின்ற மக்களுக்கு, பேரறிஞர் அண்ணா அவர்கள் கோடிட்டு காட்டியதைப் போல அடித்தளத்திலே இருக்கின்ற மக்களுக்கு முன்னுரிமை என்றும், அதற்காக அமைக்கப்பட்டிருக்கின்ற ஆட்சி முறைக்கு இரண்டாவது இடம் என்றும், அந்த ஆட்சி முறை பொறுப்பிலே தலைமை ஏற்று இருக்கின்றவர்கள் மூன்றாவது இடத்திலே இருக்க வேண்டும் என்று அப்படிப்பட்ட நிலையில் இன்றைக்கு அந்த உணர்வோடு, இந்த நிதி நிலை அறிக்கையை டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களும், நாவலர் அவர்களும் கொண்டு வந்திருக்கின்றதை வாழ்த்தி, பாராட்டி முடிக்கின்றேன். வணக்கம்.

**திரு. அ. ரகுமான்கான்:** தலைவர் அவர்களே, ஒரு அவையிலே இரண்டு சபாநாயகர் இருக்க முடியாது. ஒரு உறையில் இரண்டு கத்திகள் இருக்க முடியாது. அது தான் விவகாரம்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** துணைத் தலைவர் அவர்களே, அன்றைக்கு இருந்தார்கள். அதுதான் விவகாரம். (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ரகுமான்கான், இருந்ததை அன்று இருந்தவர்கள் சொல்கிறார்கள், அன்றைக்கு நீங்கள் இல்லை.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** துணைத் தலைவர் அவர்களே, அதனால்தான் ஆபத்து ஏற்பட்டது. அதுதான் விவகாரம்.





**திரு. அ. ரகுமான்கான்:** துணைத் தலைவர் அவர்களே, அன்றைக்கு நடைபெற்ற சம்பவம் குறித்து அவையில் இருந்தால் தான் தெரியும் என்று சொன்னால், நான் சொல்கிறேன், எந்த நிகழ்ச்சியுமே யாருமே பேசமுடியாத நிலைமை ஏற்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் பேசக் கூடாது என்று சொல்லவில்லை. பேசிய உறுப்பினரும், அமைச்சர் அவர்களும் அன்றைக்கு அவையிலே இருந்தவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** துணைத் தலைவர் அவர்களே, அன்றைக்கு நாங்கள் அவையிலே இருந்தவர்கள். அன்றைக்கு பாதிக்கப்பட்டவர்கள். வேதனைக் குரல் எழுப்புவதற்கு உரிமை இருக்கிறது.

**திரு. அ. ரகுமான்கான்:** துணைத் தலைவர் அவர்களே, அவையிலே இருந்தாலும், இல்லாவிட்டாலும், அவையினுடைய நிகழ்ச்சிகள் பதிவு செய்யப்பட்டு இருக்கின்றன. அன்றைக்கு இந்தப் பேரவையிலே, சட்டவிரோதமாக சபாநாயகருக்கு எதிராக இன்னொரு சபாநாயகரை திணிக்கின்ற முயற்சி ஏற்பட்டபோது, அந்த முயற்சியைத் தடுக்க வேண்டும் என்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கை. அன்றைக்கு சபையிலே இருந்தவர்கள் சொல்கின்ற கருத்துக்கள் தான் சரி என்று சொல்வது சரியாகாது. சபைக் குறிப்பில் இடம் பெற்றிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர்கள் சொல்லுவதுதான் சரி என்று சொல்லவில்லை. இல்லாதவர்களைவிட, அன்று இருந்தவர்கள், பார்த்தவர்கள், அவர்கள் சொல்லுகிறார்கள். அதிலே தவறு இருந்தால் சொல்லுங்கள், ஒத்துக்கொள்கிறேன்.

**திரு. அ. ரகுமான்கான்:** துணைத் தலைவர் அவர்களே, காந்தியாரைப்பற்றி பேசுகிறோம். காந்தியாரைத் தெரியாதவர்கள் காந்தியாரைப்பற்றி பேசக்கூடாது என்று அல்ல.

[டாக்டர் க. நல்லமுத்து] [1985 மார்ச் 28

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தெரிந்தவர்கள் சொல்வது அதைவிட தெளிவாக இருக்கும் என்ற கருத்தில்தான் நான் சொல்கிறேன்.

*டாக்டர் க. நல்லமுத்து: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னை அரசியல் உலகிற்கு அறிமுகப்படுத்திய பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களுக்கும், நான் சார்ந்துள்ள காங்கிரஸ் பேரியக்கத்தின் பொதுச் செயலாளர் மாண்புமிகு ஜி. கே. மூப்பனார், எம்.பி. அவர்களுக்கும் எனது பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, அத்துடன் எனது வெற்றிக்கு பெருந்துணையாக இருந்த மாண்புமிகு டாக்டர் எம்.ஜி.ஆர். பேரியக்கத்திற்கும், மாண்புமிகு தலைவர்களுக்கும், என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, இந்த நிதிநிலை அறிக்கை விவாதத்தில் என்னையும் இணைத்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

மிகவும் பின்தங்கிய மாநிலமான தமிழ்நாட்டிற்கு வேலை இல்லா திண்டாட்டத்தைப் போக்கக்கூடிய, பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தக்கூடிய பெரிய சிறிய தொழில் திட்டங்கள் இந்த நிதி நிலை அறிக்கையில் இல்லாதது எனக்கு சிறிது மனக்குறையை ஏற்படுத்திய போதிலும் ஏழை எளிய மக்களின் அபிலாஷைகளையும், எண்ணங்களையும் பிரதிபலிக்கும் வண்ணம் சிறப்பு அம்சங்களைக் கொண்டுள்ள இந்த அறிக்கையை வரவேற்கிறேன். பாராட்டுகிறேன். தமிழ்நாட்டில், பல துறைகளில், பல திட்டங்கள் வகுக்கப்பட்டு, நாம் ஒவ்வொரு ஐந்தாண்டுத் திட்டங்களிலும் செயல்பட்டுக் கொண்டு வருகின்ற இந்த வேளையிலே இந்தத் திட்டங்கள் எல்லாம் முறையாக செயல்படுத்தப்பட்டு, ஏழை மக்களுக்கும், தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் உதவுகின்றதா என்ற ஒரு ஆய்வினை மேற்கொண்டு பார்க்கின்ற போது, மிகவும் குறைவாக இருக்கிறது. இதில் ஏழை எளிய மக்கள் அடையும் பயன்கள் மிகவும் குறைவாக இருக்கிறது என்பதை இந்த மன்றத்தில் உள்ளவர்கள் அனைவரும் அறிவார்கள்.



1985 மார்ச் 28] [டாக்டர் க. நல்லமுத்து]

(முற்பகல் 11.50)

உதாரணமாக எடுத்துக் கொண்டால் கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டங்கள் போன்ற பல நல்ல திட்டங்களை மாநில அரசுகளும் மத்திய அரசும் 20 அம்சத் திட்டம் என்ற தலைப்பிலே செயல்படுத்தி வருகின்றன. அதற்காக பல கோடி ரூபாய்களை ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால் சம்பந்தப்பட்ட அரசாங்க அதிகாரிகளிடம் அந்தத் திட்டங்களை ஒப்படைக்கிறபோது எந்த அளவுக்கு அவர்கள் அவைகளைச் செயல்படுத்தி மக்களுக்கு அவைகளின் பலன்கள் போய்ச் சேருகிற அளவுக்குச் செய்கிறார்கள் என்பதைப் பார்க்கிறபோது மிகவும் வேதனையாகத்தான் இருக்கிறது. 20 அம்சத் திட்டம் என்பது வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்களுக்கு உதவி செய்யக்கூடிய முறையிலே வகுக்கப்பட்ட திட்டமாகும். அறிஞர் அண்ணா அவர்கள் இறைவனை ஏழையின் சிரிப்பிலே பார்க்கலாம் என்று சொன்னார்கள். ஆனால் ஏழை எளிய மக்களுக்காக வகுக்கப்பட்டிருக்கிற இந்தத் திட்டங்களின் பலன்கள் எல்லாம் ஏழை எளியவர்களைச் சென்று அடையவில்லை, ஆகவே அவர்கள சிரிப்பிலே இறைவனைப் பார்க்கவும் முடியவில்லை என்பதை நான் வேதனையோடு இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள கிறேன்.

காவல் துறையைப் பொறுத்தவரையில் சட்டமன்ற உறுப்பினர்களும் பொதுமக்களும் நன்கு விமர்சித்துக்கொண்டு வருகிறார்கள். காவல் துறையை மிகவும் நவீனப்படுத்த வேண்டும். அதோடு காவல் துறை அதிகாரிகளுக்கு இன்னும் சிறப்பான பயிற்சிகள் கொடுக்கப்பட வேண்டும். நாட்டிலே இப்போது போலிச் சாமியார்கள், முகமூடிக் கொள்ளையர்கள், கற்பழிப்புகள் கைதிகள் தப்பியோடல் போன்ற பிரச்சினைகள் அதிகமாக இருப்பதால் நாம் நமது உயிருக்குப் பாதகம் ஏற்படுமோ நம்முடைய உடமைகளுக்கு பாதிப்பு ஏற்படுமோ என்று பயப்படக் கூடிய நிலைமை இருக்கிறது, மக்களிடமும் நம்மிடமும் அப்படிப்பட்ட உணர்வு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே காவல் துறையினருக்கு நல்ல பயிற்சிகளை அளிக்க வேண்டும்.

[டாக்டர் க. நல்லமுத்து] [1985 மார்ச் 28

வேளாண்மைத் துறையைப் பொறுத்தவரையில் நல்லபல திட்டங்கள் இருக்கின்றன. விளைபொருட்களுக்கு ஒரு முனை திட்டங்கள் ஏழை எளிய மக்களுக்கு பயன்படக் கூடிய வரி விதித்து இருக்கிறார்கள். அது விவசாயிகளுக்கு பயன் அளிக்கக்கூடியது. அதைப் போன்று எல்லாப் பொருட்களுக்கும் ஒருமுனை வரி என்று அறிவித்து இருக்கிற நிலையில் வெல்லத்திற்கு ஏன் ஒரு முனை வரி விதிக்கவில்லை என்று என்னுடைய வினாவை நான் இங்கே வைக்க விரும்புகிறேன்.

அடுத்து கல்வித் துறைப்பற்றி நான் விமர்சிக்க விரும்புகிறேன். கல்வித் துறை எந்த அளவுக்குச் சிறப்புற்று இருக்கிறது, எந்த அளவுக்கு கல்வித் தரம் உயர்ந்திருக்கிறது என்பதையெல்லாம் நாம் உணர்ந்தவர்கள் தான். கல்வி மிகவும் சிறப்பாக இருக்கிறது என்று கூறும் அளவுக்கு பெரும்பான்மையான மக்களிடம் உணர்வுகள் இல்லை. கல்விக் கூடங்கள் பல இடங்களிலே கட்டடங்கள் இல்லாமல் இருக்கின்றன. என்னுடைய தொகுதியில் கட்டடங்கள் இல்லாத பள்ளிகள், ஆசிரியர்கள் இல்லாத பள்ளிகள் பல இருக்கின்றன. இப்படிப் பல பிரச்சினைகள் இருக்கின்றன என்பதை நான் இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்வருகிறேன்.

விவசாயத் துறையிலே கூட்டுறவுச் சங்கங்கள் ஏழை எளிய மக்களுக்கு சில சலுகைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆதிதிராவிட மக்களுக்கு 100 ரூபாய் அரசு மானியம் கொடுத்து அவர்களை அந்த சங்கங்களிலே உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்கிற திட்டத்தை நான் பாராட்டுகிறேன். அதே நேரத்திலே அந்த மக்களுக்கு வட்டியில்லாத கடன்கள் கொடுத்து அதன் மூலமாக அவர்கள் பொருளாதாரத்திலே முன்னேறிடவும் அவர்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள நிலைமையை மாற்றியமைக்கவும் வாய்ப்பு ஏற்படுத்த வேண்டும்.



1985 மார்ச் 28] [டாக்டர் க. நல்லமுத்து]

ஆதிதிராவிட நலத் துறையை எடுத்துக் கொண்டால் ஒவ்வொரு திட்டத்திற்கும் பணம் ஒதுக்கப்பட்டு இந்த ஆண்டு 125 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள் என்று அறிகிறேன். இந்தத் திட்டங்கள் எல்லாம் நல்ல திட்டங்கள்தான். அவைகளுக்காக நிறையப் பணமும் ஒதுக்குகிறார்கள். இந்தத் திட்டங்களின் பலன்கள் செம்மையாகச் செயல்படுத்தப்பட்டு குறிப்பிட்ட மக்களுக்குப் பலன்கள் போய்ச் சேரக்கூடிய முறையிலே அவைகளை நிறைவேற்ற வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து தண்ணீர் இல்லாத வறட்சிப் பிரதேசங்களைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். என்னுடைய தொகுதியான பெரம்பலூர் திருச்சி மாவட்டத்திலே மிகவும் வறண்ட பகுதி, பின்தங்கிய பகுதி. இதைக் கருத்தில் கொண்டுதானோ என்னவோ மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதைத் திருவள்ளுவர் மாவட்டமாகப் பிரிக்கக் கருதியிருக்கிறார்கள் என்று நான்நினைக்கிறேன். திருவள்ளுவர் மாவட்டத்தை ஏற்படுத்தி பெரம்பலூரைத் தலைநகராக்கி அந்த மாவட்டத்தின் ஆட்சிப் பொறுப்பை அந்த மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே கொடுத்தால்தான் அந்தப்பகுதியின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலே பல இடங்களிலே சாலை வசதிகள் இல்லாமல் இருப்பதை நான் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

இங்கே பச்சைமலை அடிவாரத்தில் உள்ள என்னுடைய தொகுதி மிகவும் வானம் பார்த்த பூமியாக இருக்கிறது. பச்சைமலையில் காட்டாறுகள் எல்லாம் வீணாக ஓடிக்கொண்டு செல்கிறது. ஆகவே இந்த பச்சைமலையில் ஓடிவரும் கல்லாற்றில் மலையாளப்பட்டி என்ற இடத்தில் ஒரு அணை கட்டி ஏறத்தாழ பல ஆயிரக்கணக்கான நிலங்களுக்கு பாசன வசதி செய்து கொடுத்தால் நன்றாக இருக்கும் என்பதையும் இந்த மன்றத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இதனால் நல்ல விளை பொருள்கள் விளைந்து, பருத்தி போன்ற பொருட்கள் விளைகிற சூழ்நிலை இங்கே இருப்பதால், பஞ்சாலை ஒன்றை அமைத்து அந்த மக்களுக்கு வாழ்க்கை வசதியை மேம்படுத்தி தரவேண்டும்

என்று கேட்டுக்கொள்கிறேன். இங்கே வரகூர் தொகுதியில் காரை என்ற இடத்தில் களிமண் அதிகமாக இருப்பதால் அங்கே பீங்கான் தொழிற்சாலை ஆரம்பித்தால் நல்லது என்று தொழில் வல்லுநர்கள் அறிவித்தார்கள். ஆகவே அங்கே தொழில் வளர்ச்சியை ஏற்படுத்தி தொழிலை உண்டாக்கி அந்த மக்களுக்கு உதவி செய்தால் அங்கே மக்களின் வாழ்க்கைத்தரம் உயரும். அதனால் மக்கள் நம்மை மிகவும் பாராட்டுவார்கள். அவர்களுக்கு ஒருஉதவியாக இருக்கும் என்பதை இந்த அரசு கவனத்தில் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இந்தப் பகுதியில் உள்ள மக்கள் மிகவும் பிற்படுத்தப் பட்ட மக்கள். இங்கே கல்விவசதி மிகவும் குறைவாக உள்ளது. உயர்கல்விகளை இங்கே துவக்கப்பட வேண்டும் என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தப் பகுதியில் ஒரு கல்லூரி யையும், தொழில் கல்வியையும், நிலையத்தையும் ஏற்படுத்தினால் இந்த பிற்பட்ட மக்களுக்கு அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்ள மேம்பாடு அடைவதற்கு வாழ்வு உயர்வதற்கு இது உதவியாக இருக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலையில் எனது தொகுதியில் உள்ள பிரச்சினை களுக்கும், மிகவும் பின்தங்கிய பகுதியாக இந்த பகுதிகள் இருப்பதால் மேற்கூறிய எல்லா வசதிகளையும் செய்து கொடுத்து இந்த நிதிநிலை அறிக்கையில் கூறியுள்ள இந்த பிரச்சினைகளை எல்லாம் நீக்குவதற்கு உரிய ஏற்பாடுகளை செய்தால் எனது தொகுதி மக்கள் மிகவும் சீர்படுவதற்கு வசதியாக இருக்கும். அந்த மக்கள் வாழ்க்கைத் தரம் உயரும் என்றும் கூறி விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

*திரு. த. பழனி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 8-வது சட்டமன்ற கூட்டத்தொடரில் முதன் முதலாக 1985-86 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது உரையாற்றுகின்ற வாய்ப்பை எனக்கு அளித்த மாண்புமிகு எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுக்கும் ஆற்காடு சட்டமன்ற தொகுதி வாழ் மக்களுக்கும் நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.





எங்கள் பகுதி மிகவும் தொன்மை வாய்ந்த பகுதி என்பது அனைவருக்கும் தெரியும். இருந்தாலும் அங்கே இருக்கிற பள்ளிக்கூடங்கள் மிகவும் பழமையான பள்ளிக்கூடங்களாக இடிந்த நிலையில் இருக்கின்றன. ஆற்காடு ஆண்கள், பெண்கள் பள்ளிக்கூட கட்டிடங்கள், காவனூர், தாமரப்பாக்கம் பக்கத்தில் இருக்கும் பள்ளிக்கட்டிடங்கள் அதைச் சுற்றி உள்ள பள்ளிக்கூட கட்டிடங்கள் இடிந்து இருக்கிற காரணத்தால் ஆளுநர் உரையில் கூறியது போல் அந்தப் பள்ளிக்கூட கட்டிடங்களை கட்டித் தருவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆணையிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் காவனூர், விளாப்பாக்கம், சக்கரமல்லூர் போன்ற பகுதியில் இருக்கின்ற பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றித் தருவதற்கு உத்திரவிடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பாராட்டப் படவேண்டிய நிகழ்ச்சிகள் 500 இடைநிலை ஆசிரியர்கள், 75 தமிழ் ஆசிரியர்கள், 50 உடல் பயிற்சி ஆசிரியர்கள், 150 பட்டதாரி ஆசிரியர்கள். 75 பட்டமேற்படிப்பு ஆசிரியர்களை நியமிப்பதற்கு இந்த நிதிநிலை அறிக்கையில் வழி ஏற்படுத்தித் தந்து இருக்கிற மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்களை நான் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

(நண்பகல் 12-00)

ஆற்காடு தொகுதியில் உள்ள கலவைப் பகுதி கிராமப்புறங்கள் நிறைந்த சூழ்நிலையில் இருக்கின்ற பகுதியாகும். அந்தப் பகுதியில் உள்ள மருத்துவமனையானது மிகவும் பழமைவாய்ந்த மருத்துவமனையாகும். அந்தப் பகுதியிலே உள்ள மருத்துவ மனையைப் பொதுப் பணித் துறை ஏற்கவில்லை. அதன் காரணமாக அந்த மருத்துவமனைக் கட்டிடம் சிதிந்து நிலையி லேயே உள்ளது. அந்த மருத்துவமனையைச் சீர் செய்து, உடனடியாகப் பொது பணித்துறை எடுத்துக்கொண்டு, அந்த மருத்துவ மனையை விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டு, அதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவரவர்கள் ஆணையிட வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் வலியுறுத்திக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, கிராமப் பகுதியில், 5,000 பேர்களுக்கு ஒரு P.H. sub centre சப்செண்டர் என்ற விதத்தில் ஏற்படுத்த அரசு திட்டமிட்டுள்ளதை வரவேற்கிறேன். 1984 டிசம்பர் வரை கூடுதலாக 2,284 சப் செண்டர்கள் மாண்புமிகு புரட்சித் தலைவரின் ஆட்சியில் உருவாக்கப்பட்டிருக்கின்றது. 2,924 சப் செண்டர்கள் ஏற்படுத்த வேண்டுமென்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இதை நான் மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விளாப்பாக்கம் பேரூராட்சி என்ற அந்தக் கிராமத்தில் உள்ள மக்களுக்கு ஒரு மருத்துவமனை வேண்டும் என்ற அந்தப் பகுதி மக்களின் தேவையை நிறைவு செய்ய அரசு, அந்த கிராமமக்களே கட்டிடம் மற்றும் இடம் தருவதாக சொல்லியுள்ளார்கள். அவர்கள் கொடுப்பதை பெற்று ஒரு மருத்துவமனையை அரசு வசதியுடன் கூடியதாக அந்த மருத்துவமனையை அமைத்துத் தரும்படி புரட்சித் தலைவரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆற்காடு நகர மக்களின் கோரிக்கைகள் நாளுக்குநாள் பெருகிக் கொண்டே வருகிறது. அதற்குக் காரணம் என்னவென்றால், பக்கத்தில் உள்ள இராணிப்பேட்டையைச் சுற்றிலும் இருக்கக் கூடிய சிப்காட், வாலாஜா போன்ற பகுதிகளில் மக்கள் வசிக்க முடியாத அளவிற்கு பொல்யூஷன் ஏற்பட்டு, குளோரின் ஆசிட் தொழிற்சாலைகளிலிருந்து வெளிவருகின்ற காரணத்தால் நாற்றம் ஏற்படுகிறது. அதன் காரணமாகப் பொதுமக்கள் அங்கே வசிப்பதற்கு இடமில்லாமல் அங்கே உள்ளவர்கள் பக்கத்தில் உள்ள ஆற்காட்டை நோக்கிக் குடிபெயர்ந்துகொண்டு வருகிறார்கள். இதன்காரணமாக அந்த நகரத்தில் வசிக்கின்ற பொதுமக்களின் அன்றாடத் தேவைகள் வளர்கின்ற விதத்தில் அமைந்திருப்பதால் ஆற்காடு நகரத்தின் வளர்ச்சிக்காகப் புரட்சித் தலைவரவர்கள் பல்வேறு திட்டங்களை உடனடியாக அறிவிக்க வேண்டுமென்று இந்த மாமன்றத்தில் நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். குறிப்பாக வீட்டு வசதி, குடிப்பதற்குக் குடிநீர் வசதி, சாலை வசதி போன்ற இன்றியமையாத வசதிகளை உடனடியாகச் செய்து தருமாறு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்





வாலாஜா, இராணிப்பேட்டை, ஆற்காடு, சிப்காட், விஷாரம் போன்ற அந்த ஐந்து பகுதிகளையும் ஐந்து கிலோமீட்டர் ரேடியசிலே உள்ள அந்த ஐந்து பகுதிகளையும் மூன்று நகராட்சி களும், ஒரு பேரூராட்சியும், ஒரு நகரியமும் என்று உள்ள அந்த ஐந்து பகுதிகளையும் இணைத்து, எல்லா மக்களும் எல்லா வசதிகளையும் பெறுகின்ற வகையில் ஒரு மாநகராட்சியாக ஆக்கித் தரும்படி மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவ ரவர்களை, இந்த மன்றத்தின் சார்பாகக் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இராணிப்பேட்டையிலே சிப்காட் பகுதியிலே மத்திய அரசாங்கத்தின் நிறுவனமான 'பெல்' தொழிற்சாலை அமைந் திருக்கிறது. அதேபோன்று, காட்பாடியில் Explosives தொழிற் சாலை ஒன்று அமைந்திருக்கிறது. ஆனால் அந்தத் தொழிற் சாலைகளிலே வேலைவாய்ப்பு அளிப்பதிலே அந்தப்பகுதியில் இருக்கின்றவர்களுக்கு முதலிடம் தரப்படுவதில்லை. குறிப்பாக, திருச்சியிலேயிருந்தும், சேலத்திலேயிருந்தும் வருகின்றவர்களை வேலைக்கு அமர்த்தி விடுகிறார்கள் என்ற குறைபாடு அந்தப் பகுதி மக்களிடத்திலே அதிகமாகப் பரவி வருகிறது. இதை உடனடியாகத் தடுத்து நிறுத்தி அந்தப் பகுதியிலே இருப்பவர் களுக்கு வேலைவாய்ப்பைத் தருவதற்கான முயற்சிகளைப், மாண்புமிகு புரட்சித் தலைவரவர்கள் ஏற்படுத்த வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

வடாற்காடு மாவட்டத்திலே மிகப் பெருமளவிற்கு விவசாயிகள் இருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்திற்கு அடுத்தப்படியாக நெல் உற்பத்தி செய்யும் மாவட்டம் எங்கள் மாவட்டம் தான் என்பது தெரிந்த விஷயமாகும். தஞ்சை மாவட்டத்திலே இருக்கின்ற விவசாயிகள் ஒரு குவிண்டாலுக்கு 15 ரூபாய் போனஸாகப் பெறுகிறார்கள். நாங்கள் ஆற்று நீரைப் பயன் படுத்துவது கிடையாது; கிணற்று நீரைப் பயன்படுத்தி, ஆயில் பம்பு செட்டுகளின் மூலமாகத் தண்ணீரை எடுத்து பயிரிட்டு நெல் உற்பத்தியை நாங்கள் செய்கிறோம். எனவே, எங்களுடைய மாவட்டத்து விவசாயிகளுக்கு குவிண்டால் ஒன்றுக்கு 50 ரூபாய் என்று உயர்த்தித் தரும்படி மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவரவர்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. த. பழனி] [1985 மார்ச் 28

எங்கள் பகுதியிலே கரும்பு பயிரிடுகின்ற விவசாயிகளைப் பதிவு செய்வதை வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுத்தி வைத்திருக்கிறது. ஏனென்று கேட்டால் இந்த ஆலைக்கு அறவைக்கு உண்டான ஷுகர் கேன் பதிவு முடிந்துவிட்டது என்று சொல்லி அந்த அதிகாரிகள் நிறுத்தி வைத்திருக்கிறார்கள். ஆற்காடு, செய்யாறு, ஆரணி, வாலாஜா, வேலூர், குடியாத்தம் ஆகிய இந்த ஆறு தாலுக்காக்களையும் சேர்த்து ஒரேயொரு மில்லை அந்த இடத்திலே வைத்திருப்பதன் காரணமாகத்தான், இந்த நிலைமையிருக்கிறது. எனவே மிகப் பரந்த அளவிற்குக் கரும்பு பயிரிடும் விவசாயிகளுக்கு மாற்று வழியாக மற்றுமொரு ஷுகர் மில்லைக் கூட்டுறவுத் துறையிலே ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வரப்போகின்ற நிதியாண்டிலேயிருந்து ஐந்தாண்டுக் காலத்தில் பத்து ஷுகர் மில்களை ஏற்படுத்தப் போவதாக நிதிநிலை அறிக்கையிலே மாண்புமிகு நாவலர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதில் ஒன்றை ஆற்காடு, செய்யாறு, ஆரணி ஆகிய மூன்று தாலுக்காக்களையும் இணைக்கின்ற பகுதியாக இருக்கின்ற மேச்சேரி என்ற கிராமத்தில் சுமார் 300 ஏக்கர் நிலம் இருக்கின்றது, அந்த இடத்தில் அமைத்தால் விவசாயிகளுக்கு மேலும் பலன் ஏற்படும். அவ்வாறு விவசாயிகள் பலன் பெறுகின்ற வகையில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அங்கே ஒரு ஆலையை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையின் வாயிலாக ஒரு மாபெரும் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதாவது காவிரி கால்வாயை நவீனப்படுத்துகின்ற அதாவது காவிரி சேனல் மாடர்னைசேஷன் என்ற திட்டத்திற்காக 102 கோடி ரூபாய் இந்த நிதிநிலை அறிக்கையில் அறிவித்திருக்கிறார்கள். அதேபோன்று வடாற்காடு மாவட்டத்தைச் செல்வம் கொழிக்கும் பூமியாக, நெல்விளையும் பூமியாக ஆக்கிக்கொண்டிருக்கின்ற பாலாறு அணைத் திட்டத்தையும் மாடர்னைசேஷன் செய்ய வேண்டும். அந்தப் பகுதியிலே 80 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பயிரிடப்படுகின்றன. எனவே காவிரி அணைத் திட்டத்திற்கு எப்படி முக்கியத்துவம் தந்து மாடர்னைசேஷனுக்காக 102 கோடி ரூபாய் ஒதுக்கி



1985 மார்ச் 28] [திரு. த. பழனி]

இருக்கிறார்களோ அதைப்போன்று பாலாறு அணைத் திட்டத்தையும் மாடர்னைசேஷன் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் நஞ்சை கூட புஞ்சையாக மாறிக் கொண்டு வருகின்ற இந்தக் காலத்தில் அங்கே தரிசாகக் கிடக்கின்ற நிலங்களில் கூட பாசனம் செய்யக்கூடிய நிலைமை ஏற்படும். எனவே அந்த வகையிலே பாலாறு மாடர்னைசேஷன் திட்டத்தை உடனடியாக அமல்படுத்தி அந்தப் பகுதியிலே இருக்கின்ற விவசாயிகளுக்கு உதவுமாறு நான் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களை மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்.

கர்நாடகாவிலே மேத்தமங்கலம் ஏரியிலிருந்து தண்ணீர் வந்துதான் பாலாற்றுக்குத் தண்ணீர் வரவேண்டி இருக்கிறது. ஆனால் அந்த மேத்தமங்கலம் ஏரி மேலும், மேலும் பலப்படுத்தப் பட்டு தண்ணீர் வராமல் தடைபட்டிருக்கின்ற காரணத்தால் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே எங்கள் பகுதி விவசாயிகளின் பாதிப்பை உடனடியாகப் போக்குவதற்கு புரட்சித் தலைவர் அவர்களின் அரசு உடனடியாக உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்களது பகுதியிலே உடனடியாகச் செய்யப்பட வேண்டிய பல்வேறு திட்டங்கள் என்ற அடிப்படையில் மோட்டுக் குடிசை, பள்ளக்குடிசை, கருங்காலிக் குப்பம் ஆகிய மூன்று இடங்களில் நீரூற்றுக்குட்டை அதாவது கசிவு நீர்க்குட்டையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

புதுப்பாடி கிளுப்பை சாலை பஸ் போக்குவரத்து சாலை. அதை உடனடியாகச் சீர் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தாழனூர்-அருங்குன்றம் போக்குவரத்துச் சாலையை உடனடியாகச் சீர் செய்ய வேண்டும். இவற்றை உடனடியாகச் செய்வதற்கு மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் உடனடியாக உத்தரவிட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதனால் பொதுமக்களுக்கு கடந்த 5 ஆண்டுகளாக போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

[திரு. த. பழனி] [1985 மார்ச் 28

அதேபோன்று சாத்தூர், வளையாத்தூர், திமிரி ஆகிய 500 ஏக்கருக்கு மேல் பாசனம் தரக்கூடிய ஏரிகள் எல்லாம் கடந்த 12, 13 ஆண்டுகளாக தண்ணீர் வராமல் காலியாக இருப்பதால் மிகுந்த சிரமமாக இருக்கின்றது. அந்தப் பகுதிகளிலே உள்ள அந்த ஏரிகளை எல்லாம் முறைப்படுத்துகின்ற வகையில் அந்தக் கால்வாய்களை எல்லாம் செப்பனிட்டுத் தருமாறு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று இந்த நிதிநிலை அறிக்கையில் ஃபோர்த் பே கமிஷனுடைய ரிப்போர்ட் 13—4—1985 அன்று பெறப்படும் என்ற அறிவிப்பை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதை உண்மையிலே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அரசு ஊழியர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற ஓய்வூதியத் தொகை 10 ஆயிரத்திலிருந்து 20 ஆயிரமாக உயர்த்தப்பட்டிருப்பதை பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோன்று புரட்சித் தலைவர் அவர்கள் கடந்த காலங்களில் கிராமப்புற அதிகாரிகளைப் பொறுத்தவரையில் நேட்டிவ் தாலூக்காவாக இருந்தால் அங்கே போடக்கூடாது என்று அறிவித்திருக்கிறார்கள். அந்த வகையில் உத்தரவு இருக்கின்றது. ஆனால் அவ்வாறு வேறு தாலுக்காகளில் போய் இருந்தால் அவர்களுக்குப் போதிய வசதிகள் இல்லாததன் காரணத்தால் பணி செய்வதில் மிகுந்த சிரமங்கள் ஏற்படுகின்றன. எனவே இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் தாலுக்கா என்பதை மாற்றி பிர்க்கா என்று போட்டால் அவர்கள் அந்தப் பகுதியிலே இருந்து பக்கத்திலே இருக்கின்ற பகுதிகளுக்குச் சென்று அந்த கிராமப்புற மக்களுக்கு பணியாற்றுகின்ற வாய்ப்பு ஏற்படும். அந்த கிராமப்புற மக்களுக்கு உடனடியாகச் செய்ய வேண்டும் என்ற உணர்வும் அவர்களுக்கு இருக்கும் என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.



1985 மார்ச் 28] [திரு. த. பழனி]

அடுத்து குடிநீர் திட்டத்தைப் பொறுத்தவரையில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசு 250 கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கின்றது. குறிப்பாக எங்கள் தொகுதியில் பாலாற்றைப் பக்கத்திலே வைத்துக்கொண்டிருந்தாலும் பல நூற்றுக்கணக்கான கிராமங்களிலே பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்காத நிலைமை இருக்கின்றது. மூப்பதுவட்டி, புதுப்பாடி, சக்கரமல்லூர். யசையனூர், வாழைப்பந்தல் ஆகிய ஐந்து குடிநீர்த் திட்டங்களை உடனடியாக இதில் எடுத்துக்கொள்ள வேண்டும். மூப்பதுவட்டியைத் தலைமையிடமாகக் கொண்டு மூப்பதுவட்டி, மாங்காடு, லப்பப்பேட்டை, கீரைக்காரத்தெரு, தக்கான்குளம், சர்வந்தாங்கல், புன்னப்பாடி, அத்தித்தாங்கல், கல்லேரி, பில்லேரி, கரிவேடு, செம்பேடு, கேவனூர், களியனூர் ஆகிய பகுதிகளிலும் புதுப்பாடியைத் தலைமையிடமாகக் கொண்டு புதுப்பாடி, கிளம்பாடி, சின்னகுக்குண்டி, பெரியகுக்குண்டி ஆகிய கிராமங்களுக்கும் சக்கரமல்லூரைத் தலைமையிடமாகக் கொண்டு சக்கரமல்லூர், கடப்பத்தாங்கல், கிராம்பாடி, கரித்தங்கல் ஆகிய கிராமங்களுக்கும் குடிநீர்த்திட்டங்களை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எசையனூரைச் சுற்றி எசையனூர்

(பிற்பகல் 12-10)

பெருங்கால்மேடு, புதேரி அனைத்தாங்கல், மேச்சேரி, அரும்பாக்கம், முள்வாடி போன்ற கிராமங்களுக்கும் வாழைப்பந்தலை சுற்றி வாழைப்பந்தல், மேலப்பழந்தை, மேல் புதுப்பாக்கம், மாம்பாக்கம், அரூர், சோலையூர், பொன்னமங்கலம், இருங்கூர், மருதம், தட்டச்சேரி, மேல் நெல்லி, பாலி, கோடாலில், பெண்ணகம் வேம்பி போன்ற அந்தக் கிராமங்களுக்கும் குடிநீர் வழங்கும் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றித் தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

அதே போன்று, இந்த அரசு பீடித் தொழிலாளர் பிரச்னையில் பீடித் தொழிலாளர் நலன் கருதி, மருத்துவ வசதியைச் செய்து தந்திருக்கிறது. அதற்காக நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இப்படிப்பட்ட பல்வேறு நலத் திட்டங்களை உருவாக்கிச் செய்து கொண்டிருக்கிற புரட்சித் தலைவர் அரசு ஆதி திராவிடர் நல மேம்பாட்டு திட்டத்தையும் அறிவித்திருக்கிறது. அவர்களுக்கு ரூ. 125.60 கோடி ஒதுக்கி திட்டங்களைச் செயல்படுத்துவதைப் போல, பிற்படுத்தப்பட்டோர் நல்வாழ்வுத் திட்டத்தையும் உடனடியாக அமுல் படுத்துவதன் மூலமாக கிராமப் பகுதியிலே இருக்கிற பிற்படுத்தப்பட்டோர் நலன்கள் பாதுகாக்கப்படும் என்று கூறி இந்த நிலையிலே இந்த நிதிநிலை அறிக்கை மீது பேச வாய்ப்பளித்த புரட்சித் தலைவர் அவர்களுக்கும் மாற்றுத் தலைவர் அவர்களுக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

* திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாற்றுத் தலைவர் அவர்களே, மார்க்சீய கம்யூனிஸ்ட் கட்சியின் ஒருசில கருத்துக்களை இந்த நிதிநிலை அறிக்கையின் மீது எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இந்த பட்ஜெட்டிலே 3-வது பாராவிலும், 5-வது பாராவிலும் இன்று கூட்டாட்சி முறையினுடைய தேவைகளைப் பற்றி, அதாவது உண்மையான வலுவான கூட்டாட்சி தேவை என்று சொல்லப் பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு 5-வது பாராவிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது? "மாநிலங்கள் நகராட்சி மன்றங் களைப் போல் ஆண்டுக்கு ஆண்டு விரைந்து மாற்றப்பட்டு வருகின்றன. . . . . நமது அரசமைப்புச் சட்டம் மெய்யான கூட்டாட்சித் தத்துவத்தின் அடிப்படையில் மறு ஆய்வு செய்யப் படவேண்டும்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக் கருத்தை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் ஆய்வு என்பதோடு மட்டும் நின்று பிரயோஜனம் இல்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தக் கருத்தை நீங்கள் சென்ற தேர்தல் நேரத்தில் சொல்லவில்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்று கூட உங்களுடைய தேர்தல் கால நண்பர்கள் அந்தக் கருத்தை ஏற்றுக் கொள் கிறார்களா என்பது எனக்குத் தெரியாது. ஆனால், ஒன்றுமட்டும் நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புவது என்ன வென்றால் இந்தப் பிரச்னையிலே ஒரு கான்ஸ்டிடியூஷனல் அமென்ட்மென்ட், அரசியல் அமைப்புச் சட்டத்திலே திருத்தங்கள் தேவைப்படுகின்றன என்பதுதான். நீங்கள் அப்படிப்பட்ட





திருத்தங்களை வலியுறுத்தினால்தான் இன்று ஏற்பட்டிருக்கக் கூடிய பிரச்னைகளுக்குத் தீர்வு காண முடியும். ஏனென்றால், இன்று அரசியலமைப்புச் சட்டம் மத்தியில் இருக்கும் அரசுக்கு அன்லிமிட்டெட் அரசியல் அதிகாரங்களை வழங்கியிருக்கிறது. அதற்கு அப்பால் நாட்டில் பொருளாதார ஏற்றுத்தாழ்வுகளைச் சரிகட்டுவதற்கு போதுமான அதிகாரங்களும் வழங்கப்பட்டிருக் கின்றன. ஆகவே அந்த அதிகாரங்கள் பற்றிய பிரச்சனை அல்ல. இந்த அதிகாரங்களை அமுல்படுத்த வேண்டிய வில் பவர் இல்லை என்பதுதான் பிரச்னை. ஆகவே இதைச் செய்வதற்கான பொலிட்டிக்கல் வில் இல்லை என்பதுதான் இன்று ஏற்பட்டிருக்கக் கூடிய முக்கியமான பிரச்னை. ஆகவே, இந்த அரசியல் சட்டத்தைத் திருத்தக் கூடிய பிரச்னை, வரக்கூடிய நேரத்திலே நான் ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்று இந்தியாவிலே ஏற்பட்டிருக்கக்கூடிய சில அரசியல் பிரச்சனைகள், அசாமிலே நடத்தப்பட்டிருக்கக்கூடிய போராட்டமானாலும் சரி, அல்லது மிசோ-நாகாலாந்து போன்ற நாடுகளிலே ஏற்பட் டிருக்கக்கூடிய பிரச்சனையானாலும் சரி, போதுமான அளவுக்கு அவர்களது பொருளாதார வளர்ச்சிக்காக வேண்டி மத்திய அரசு எந்த அளவுக்கு உதவி செய்ய வேண்டுமோ அதைச் செய்ய வில்லை என்ற காரணத்தினால்தான் இன்று அப்படிப்பட்ட போராட்டங்கள் இந்த நாட்டிலே ஏற்பட்டிருக்கின்றன என்று பார்க்கும் நேரத்தில்

'An ugly picture of this concentration of capital in fewer hands, is the growing pauperization of the vast majority of the people ".

என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதற்கு ஒரு எடுத்துக்காட்டு என்ற முறையிலே 1985 மார்ச் 26 ஆம் தேதி இந்து பத்திரிகையிலே வந்திருக்கக் கூடிய புள்ளி விவரத்தை நான் கொடுக்கிறேன். இன்று இந்த மத்திய அரசினுடைய கொள்கை காரணமாக, ஒருசில நபர்கள், ஒருசில குடும்பங்கள், கையிலே பொருளாதாரம் போய் கான்சன்ட்ரேட் ஆகக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. மத்திய அரசினுடைய திட்டத்தி னுடைய விளைவுதான் 1980 ஆம் வருஷத்தில் பிர்லா குடும்பத்திற்கு ரூ. 1,431.99 கோடி அசெட்ஸ் இருந்தது என்றால், 1981-லே அது ரூ. 1,691.49 கோடியாகவும். 1982-லே 2,004.74

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1985 மார்ச் 28

கோடியாகவும், 1983-ல் 2,839.94 கோடியாகவும் வளர்ந்திருக்கிறது. அதேபோல டாடாவை பொறுத்த வரையில் 1980-ல் 1,838.97 கோடியாகவும், 1981-ல் 1,840.16 கோடியாகவும் இருந்தது 1982-ல் 2,430.83 கோடியாக வளர்ந்திருக்கிறது.

**திரு. கே. எஸ். எம். இராமச்சந்திரன்**: இந்த விவரங்களை எல்லாம் உறுப்பினர்கள் அவர்கள் பார்லிமெண்டில் தான் போய் பேசவேண்டும். நம்முடைய நிதி அறிக்கையைப் பற்றி பேச வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. செம்மலை)**: அடுத்து பேசுகிற உங்கள் கட்சி உறுப்பினர் பதில் சொல்லலாம். உட்காருங்கள்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கையில் தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது. இந்தியாவின் ஒட்டுமொத்தமான பொருளாதாரத்தை பார்க்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த வகையில் நான் அதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 1983-ல் பார்க்கிறபோது டாட்டாவினுடைய அசெட்ஸ் 2,672.40 கோடியாக உயர்ந்திருக்கிறது என்பது எதைக்காட்டுகிறது என்றால் மத்திய அரசினுடைய கொள்கை காரணமாக ஒருசில குடும்பங்களில் இந்தப் பணம் இப்படி குவிகிறது என்பது தான் ஆகும். ஒரு ஸ்ட்ராங் சென்டர் வேண்டுமென்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால் ஸ்ட்ராங் சென்டர் என்டது அப்ரசிவ் சென்டராக இல்லாமல் மாநிலங்களைப் பொறுத்தவரையில் ஈக்குவலாக கன்சிடர் செய்து மாநிலங்களுடைய உரிமைகளை பாதுகாக்க வேண்டிய பொறுப்புணர்ச்சி உள்ள சென்டராக இருக்கவேண்டும். ஆகவே இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புவது மத்திய அரசை பொறுத்தவரையில் அவர்களுக்கு there is unlimited scope to borrow money.
அதேநேரத்தில் மாநிலங்களைப் பொறுத்தவரையில் அப்படி வாங்குவதற்கு ரிசர்வ் பாங்க் பல ரெஸ்ட்ரிக்ஷன்களை கொண்டு வருகிறார்கள். ஆகவே இதன் காரணமாக மாநிலங்களை பொறுத்தவரையில் எந்த அளவிற்கு பொருளாதார வளர்ச்சி ஏற்பட வேண்டுமோ அந்த அளவிற்கு ஏற்படவில்லை.



1985 மார்ச் 28] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

எட்டாவது நிதி கமிஷனைப் பொறுத்தவரையில் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பார்லிமெண்ட்டில் மார்ச் 25-ம் தேதி 'பினான்ஸ் கமிஷனுடைய' பரிந்துரைகள் அடிப்படையில் எப்படி மாநிலங்களுக்கு 'எச்சைஸ் டியூட்டி' போன்றவைகளை ஒதுக்குவது என்பதை மூன்று பில்களைக் கொண்டு வந்து தாக்கல் செய்து நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. இன்றைக்கு இந்த அறிக்கையில் இந்த அரசு 'பினான்ஸ் கமிஷனுடைய' பரிந்துரைகளைப் பற்றி சொல்லக்கூடியவர்கள் அந்த நேரத்தில் அதை எதிர்க்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அங்கே 'State Minister for Finance அவர்களால் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால் 1984-லிலிருந்து 1989 வரையில் 5 வருட காலத்திற்கு 22 மாநிலங்களுக்கு ஒதுக்கப்படுகிற பணம் 39,452 கோடிகள். அப்படியென்றால் இந்த மாநிலங்களுடைய வளர்ச்சிக்கு இந்தப் பணம் எப்படி போதுமானதாக இருக்கும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஆகவே இந்தப் பிரச்னைகள் பொறுத்தவரையில்,
Fiscal Recommendations பொறுத்தவரையில்

The proceeds of the Corporate tax be made sharable with the States;

the surcharge on income tax be abolished; alternatively, its proceeds be shared with the States;

the scheme of additional duties of excise be abandoned;

a review be made of the principles guiding decisions as regards "declared" goods and the rate of sales taxation with respect to such goods; and

Legislation be introduced in Parliament so that the provisions of Amendment 46 to the Constitution could be implemented properly;

இந்த பரிந்துரைகளை அமல்படுத்துவதற்கு, நடவடிக்கைகளை எடுப்பதற்கு இந்த அரசு திட்டமிடுமா என்று கேட்க விரும்புகிறேன். அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்பது

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1985 மார்ச் 28

தான் இன்றைக்குள்ள பிரச்னை. இந்தப் பிரச்னைக்கு தீர்வு காணவேண்டுமென்றால் நிச்சயமாக இந்த அரசு இன்றைக்கு ஜனநாயக சக்திகளோடு சேர்ந்து அப்படிப்பட்ட நிலையை எடுக்காமல், மத்திய அரசின் நல்ல எண்ணத்தில் மட்டும் நம்பிக்கை வைத்துக் கொண்டு இருக்குமானால் இந்தப் பிரச்னை களுக்கு தீர்வு ஏற்படாது என்பது எங்களுடைய ஆழமான கருத்து.

(பிற்பகல் 12-20)

இந்த நேரத்தில் நான் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 101 ஆவது பாராவில் பிளானிங் கமிஷன் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. இன்று நம்முடைய திட்டத்தைப் பொறுத்த அளவில், இந்த பட்ஜெட் ஏற்பாடுகளைப் பொறுத்த வரையில் கூட சரியான முறையில் அமைத்துக் கொள்ள முடியவில்லை. ஏனென்றால் பிளானிங் கமிஷன் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பற்றி இன்னும் திட்டவட்டமான முடிவு ஏற்படவில்லை. இந்த நேரத்திலே நான் ஒன்றை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

Planning Commission is not a Constitutional Body; It is not a statutory Body. It is only a body which was set up by a resolution of the Central Government.

இன்றைக்கு என்ன நிலைமை ஏற்பட்டிருக்கிறது? சென்ட்ரல் கவர்ன்மென்டினுடைய ஒரு அப்பன்டேஜ் என்ற முறையில்தான் இன்றைக்கு பிளானிங் கமிஷன் செயல்பட்டு வருகிறது. மத்திய அரசினுடைய உத்தரவுகளை அமுல்படுத்துகிற ஒரு பாடியாக இன்று பிளானிங் கமிஷன் இருக்கிறதே தவிர, மாநிலங்களுக்கு இருக்கக்கூடிய உண்மையான பிரச்சனைகளை ஆராய்ந்து என்ன முறையில் பணம் ஒதுக்கப்பட வேண்டுமோ அந்த முறையில் ஒதுக்கப்படவில்லை. ஆகவே இந்த பிளானிங் கமிஷனைப் பொறுத்த வரையில் நேஷனல் டெவலப்மென்ட் கவுன்சிலினுடைய ஒரு செக்ரெட்டேரியேட் என்ற முறையில், ஒரு முழுநேர அமைப்பு என்ற முறையில் இருந்தால் நேஷனல் டெவலப்மென்ட்



1985 மார்ச் 28] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

கவுன்சிலிலே ஏற்படக்கூடிய பிரச்சனைகளில் இந்த மாநிலங்களுக்கு சம உரிமை கிடைக்கக்கூடிய அடிப்படையில், பாப்புலேஷன் அடிப்படையில் இந்தப் பிரச்சனைகளுக்கு தீர்வுகாணும வாய்ப்பு ஏற்படும்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் பிளானிங் கமிஷன் பற்றி சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அது கடந்த 30 ஆண்டு காலமாக நாம் ஏற்றுக்கொண்டதுதான். அதனுடைய அறிவுரைகளின்படிதான் நாம் அரசுகளை நடத்தி வருகிறோம். இப்போது அது ஒரு ஸ்டாச்சுட்டரி பாடி அல்ல, அது சட்டப்படியான ஒரு அமைப்பு அல்ல என்பது உண்மைதான். அதை சட்டப்படியான ஒரு அமைப்பாக ஆக்கினோம். ஆனால் சூப்பர் காபினட்டாக மாறிவிடும். அது சட்டப்படியான அமைபபாக இல்லை என்பதால் அது நமக்குத் தேவையில்லை என்றால் அப்படிப்பட்ட அனுபவ மிக்கவர்களுடைய கருத்துக்கள், நல்ல திட்டங்களைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு ஒரு காபினட் அளவிலே அல்லது அசம்பிளியோ, பார்லிமென்டோ நடதது கின்ற அரசுக்கு வேறு வகைகளில் இல்லை. ஆகையால் தேவைப்படுகிறது என்பதால் பிளானிங் கமிஷனை வைத்திருக்கிறோம். வகை காபினட்டாக ஆக்கினால் சூபபா காபினட்டாகப போய்விடும் என்பதால் நாம் தருகின்ற மரியாதையின் அடிப்படையில், அந்தஸ்தின் அடிப்படையில் அது இப்போது செயல் படுகிறது.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** என்னுடைய கருத்தைத்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்களும் எடுத்துச் சொல்கிறார்கள். இது ஒரு ஸ்டாச்சுட்டரி பாடி அல்ல என்பதற்காக இதை ஸ்டாச்சுட்டரி பாடியாக ஆக்கவேண்டுமென்று நான் சொல்லவில்லை. சேஷனல் டெலப்மென்ட் கவன்சிலின் ஃபுல்டைம் செக்ரெட்டேரியேட்டாக பிளானிங் கமிஷன் செயல்படுமானால் இந்த மாநிலத்திற்கு என்ன உரிமைகள் கிடைக்க வேண்டுமோ அவை கிடைக்க வழி ஏற்படும். ஆகையால் காபினட் அப்பன்டேஜாகச் செயல்படுகிற நிலை மாறவேண்டுமென்பது என்னுடைய கருத்து.

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1985 மார்ச் 28

இந்த நேரத்திலே இன்னொன்றையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தப் பிரச்சனையைப் பொறுத்தவரையில் இதனுடைய பின்னணியில்தான் இன்றைக்கு வந்திருக்கக்கூடிய பட்ஜெட். மாநில சர்க்காரைப் பொறுத்த வரையில் இன்று போட்டிருக்கக் கூடிய சில வரிகள் மாநிலத்திற்கு சில பிரச்சனைகளை ஏற்படுத்தியிருக்கின்றன, சில சங்கடங்களை ஏற்படுத்தி இருக்கின்றன என்று பட்ஜெட்டை வைத்திருக்கிற நிதி அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அதனுடைய காரணம் என்ன? நான் இந்த நேரத்தில் பார்லிமெண்டில் மாண்புமிகு நிதி அமைச்சர் பட்ஜெட் விவாதத்திற்கு பதில் சொல்லும்போது ஒரு கருத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்; அதை இங்கே படித்துக்காட்ட விரும்புகிறேன்.

I quote from "The Hindu", March 26th 1985.

He said . . . . . "the repayment of the International Monetary Fund Loan and the oil prices having reached a plateau. It is necessary, therefore to tighten our belts and not go the way of some South American countries."

இன்றைக்கு நிலைமை என்னவென்றால் மத்திய நிதி அமைச்சர் சொல்கிறார். 'நீங்கள் உங்கள் வயிற்றுப் பெல்ட்டை இறுக்கிக் கட்டுங்கள்' என்று.

இன்டர்நேஷனல் மானிட்டரி ஃபண்ட் இருக்கிறது. இன்றைக்கு வாங்கிய கடனும் அதற்கு மேலே அதற்கு வந்திருக்கிற வட்டியும் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருப்பதால் இப்படிப் பட்ட வரிகளைப் போடவேண்டிய நிலைமை இந்த நாட்டுக்கு ஏற்பட்டிருக்கிறது என்று சுட்டிக்காட்டுகிறார்கள். நான் இந்த நேரத்திலே என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், இந்தப் பிரச்சனைக்குத் தீர்வு காண்பதற்கு 'ஃபாரின் டிரேட' நீங்கள் நேஷனலைஸ் பண்ணவேண்டும். அதற்கு இந்த மாநில அரசு மத்திய அரசை வலியுறுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்று மத்திய அரசைப் பொறுத்தவரையில்
"They have got unlimited power to borrow"
அவர்கள் விரும்புகிறபோது, கடன் வாங்குகிறார்கள். ஆனால் அதனுடைய நியாயமான பங்கை! இன்று மாநிலங்களுக்குக்



1985 மார்ச் 28] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

கொடுப்பதில்லை. மாநிலங்கள் நேரடியாக பாரோ பண்ணுவதற்கும் உரிமை கொடுப்பதில்லை. ஆகவே தான் இப்படிப்பட்ட பிரச்சனைகள் ஏற்பட்டு இருக்கின்றன. ஆகவேதான் இந்த நேரத்திலே நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், இந்த அரசைப் பொறுத்தவரையிலும், இந்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டு இருக்கிற சென்டர்—ஸ்டேட் ரிலேஷன்ஸ் என்று சொல்கிற பிரச்சனையானாலும் சரி, அல்லது பைனான்ஸ் கமிஷன் பிரச்சனையாக இருந்தாலும் சரி, அல்லது பிளானிங் கமிஷன் பிரச்சனையாக இருந்தாலும் சரி, இந்த நாட்டிலே இருக்கக்கூடிய ஜனநாயக இயக்கத்தோடு சேர்ந்து மத்திய அரசினுடைய அந்தக் கொள்கைக்கு எதிராக போராடாமல் இந்தப் பிரச்சனைக்கு தீர்வு ஏற்படாது என்பது எங்களுடைய கருத்து. அந்த முறையிலே ஏற்கனவே பெங்களூரிலே நான்-காங்கிரஸ் கவர்ன்மென்ட்டினுடைய ஒரு கூட்டத்தைக் கூட்டி, அந்தக் கூட்டத்திலே சில முடிவுகள் எடுக்கப்பட்டு இருக்கின்றன. அதை அமுல் படுத்துவதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு விஷயத்தையும் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். என்னுடைய மாவட்டம் உள்பட, இந்த மாநிலத்தின் பல பகுதிகளில் வறட்சி ஏற்பட்டு இருக்கிறது. குடிநீர் பற்றாக்குறை ஏற்பட்டு இருக்கிறது. நாகர்கோவில் நகரத்திற்கு நான் முன்பு சென்றிருந்தபோது, அங்கேயுள்ள மக்கள் சொன்னார்கள். நான்கு நாட்களாக எங்களுடைய பகுதிக்கு தண்ணீர் வரவில்லை என்று. இன்று நம்முடைய சென்னை நகரத்தினுடைய அனுபவம் என்ன? வறட்சிக் காலத்திலே எந்த அளவுக்கு நிதி இந்த மாநிலத்திற்கு ஒதுக்க வேண்டும் என்று கேட்டோமோ, அந்த அளவுக்கு மாநிலத்தினுடைய தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவிற்கு இன்று பணம் ஒதுக்கப்படவில்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்று மாநிலம் முழுவதும் வறட்சி நிலை வந்திருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டம், புதுக்கோட்டை மாவட்டம் போன்ற இடங்களில் வறட்சி மாநாடுகள் நடக்கப்பட்டு, மக்கள் பல இயக்கங்களை நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே இந்தப் பிரச்சனைகளுக்குத்

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1985 மார்ச் 28

தீர்வு காண்பதற்கும், வறட்சி நிலையைப் போக்குவதற்கும் போதுமான பணம் தேவைப்படுகிறது. இப்படிப்பட்ட பணத்தை வாங்குவதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் நான் இன்னொரு விஷயத்தைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அது என்னவென்றால், சென்ட்ரல் பட்ஜெட்டினுடைய பின்னணியிலே இன்று எப்படி மத்திய அரசு ஒரு சில பொருள்களுக்கு வரி விதிப்பு கொண்டு வந்தார்களோ, அப்படிப்பட்ட பின்னணியில் அதே போன்ற வரி கொண்டுவர வேண்டிய அவசியம் மாநில அரசுக்கு ஏற்பட்டு இருக்கிறது. இன்று மோட்டார் வண்டிகளுக்கு டாக்ஸ் உயர்த்தப்பட்டு இருக்கிறது. நிச்சயமாக இது மக்களைப் பாதிக்கக்கூடிய ஒரு வரி என்பதிலே சந்தேகம் இல்லை. இன்று மிளகாய், மல்லி போன்ற பொருட்களுக்கு வரி சுமத்தப்பட்டு இருக்கிறது. இது மக்களைப் பாதிக்கக்கூடிய வரி என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவேதான் இப்படிப்பட்ட வரிகளை இன்று போட வேண்டிய நிர்ப்பந்தம் மாநில அரசுக்கு ஏற்பட்டு இருக்கிறது. இன்று பட்ஜெட்டிலே மற்றும் சில பிரச்சனைகளைப் பற்றிக் குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

கல்வியைப் பொறுத்தவரையில் நான் என்ன சொல்கிறேன் என்றால்? இப்போது 500 பதவிகள் உருவாக்கப்படும் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. நான் என்ன கேட்டுக்கொள்ள விரும்புகிறேன் என்றால், இன்றைக்கு டி.பி.ஐ. ஆபிசிலே கொடுக்கப்பட்டு இருக்கக்கூடிய விவரங்களின்படி, ஆயிரத்திற்கும் அதிகமான ஆசிரியர்களுடைய வேலையிடங்கள் காலியாக இருக்கின்றன. இந்த ஆயிரம் ஆசிரியர்களுடைய காலி இடங்களுக்கு அப்பால் இந்த 500 போஸ்ட் கிரியேட் பண்ணப் பட்டு இருக்கிறதா, அல்லது இந்த ஆயிரத்திலே இந்த 500-ம் ஃபில் அப் பண்ணப்படுகிறதா? அதாவது இந்த ஆயிரம் போஸ்ட் ஃபில்அப் பண்ணி, மேலும் இந்த 500 போஸ்கள் கிரியேட் பண்ணப்படுகிறதா? இல்லை, இந்த ஆயிரத்திலே அந்த 500-ம் ஃபில் அப் பண்ணப்படுகிறதா?



1985 மார்ச் 28]

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, ஆயிரம் பணியிடங்கள் ஒதுக்கப்பட்டு, அது பூர்த்தி செய்யப் படாமல் இருந்திருந்தால், அதைச் சேர்க்காமல்தான் இந்த 500.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அதைப்போலவே இன்றைக்கு பல பள்ளிக்கூடங்கள் பழையக் கட்டிடங்களிலேயும் ஓலைக் குடிசை களிலேயும் தான் நடந்து கொண்டு இருக்கின்றன. அந்தப் பழைய கட்டிடங்கள் எல்லாம் இடிந்து விழக்கூடிய நிலைமையில் இருக்கின்றன. அதுபோன்று இன்று சட்டக் கல்லூரி மாணவர்களைப் பொறுத்தவரையிலும், 5 வருட கால படிப்பு ஏற்படுத்தப்பட்ட பிறகு, போதுமான ஆசிரியர்கள், போதுமான புஸ்தகங்கள் கொடுக்கப்படவில்லை என்று சொல்லப்படுகிறது.

அதைப்போன்று எங்களுடைய மாவட்டத்திலும் சரி, நீலகிரி மாவட்டத்திலும் சரி, மலையாளம் ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படாத நிலைமை இருக்கிறது. அதனால் மலையாளம் படிக்க வேண்டிய மாணவர்கள் மலையாளம் படிக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. பொதுவாகவே மைனாரிட்டி களைப் பொறுத்தவரையிலே, அவர்களுக்கு ஸ்டேட் ரீ-ஆர்கனை சேஷன் ஆக்டின்படி என்னென்ன உரிமைகள் உண்டோ மற்ற மாநிலங்களில் அது ஆந்திராவிலோ, கேரளாவிலோ அல்லது கர்நாடகாவிலோ கொடுக்கக்கூடிய அந்த உரிமைகள் இன்றைக்கு வழங்கப்படவில்லை என்று மைனாரிட்டி சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் சொல்லுகிறார்கள்.

(பிற்பகல் 12-30)

அது நிச்சயமாக கவனிக்க வேண்டிய ஒரு விஷயம் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்த அரசைப் பொறுத்த வரையில் குடிசை மாற்று வாரியத்தின் மூலம் வீடுகளை கட்டிக் கொடுக்கும் திட்டத்தை நல்ல முறையில் நடத்தி வருகிறது. இன்று ஏற்கெனவே பல இடங்களில் குடிசைகள் மாற்றி அமைக்கப்பட்டு வருகின்றன. 1985-86 ஆம் ஆண்டை குடிசைகளை அகற்றும் வருடம் என்று சொன்னாலும் கூட அது மிகையாகாது. இப்படி குடிசைவாசிகளுக்கு வீடுகளைக் கட்டித்தரும் இந்த திட்டத்தை விரைவாகவும் நல்லமுறையிலும் இன்னும் அதிக அளவில் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1985 மார்ச் 28

அதேபோல தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் தெளிவான கொள்கை எதுவும இந்த அறிக்கையில் இல்லை. நான் கேட்டுக் கொள்ள விரும்புவதெல்லாம், மின்சார வாரியத்திலே உள்ள தொழிலாளர்களுக்கு ஒரு இக்கட்டான, சிக்கலான நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்த தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு கொடுக்கக்கூடாது என்ற நிலையை மின்சார போர்டு எடுத்ததன் காரணமாக தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவார்களோ என்ற சந்தேக நிலை ஏற்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட நிலை ஏற்பட்டால் நிச்சயமாக அது பெரிய அளவில் தமிழகத்தில் பாதிப்பை ஏற்படுத்தும். அப்படிப்பட்ட நிலை ஏற்படாமல் இருக்க லேபர் டிபார்ட்மெண்ட்டும் மின்சார வாரியமும் சேர்ந்து இந்தப் பிரச்சனைக்கு ஒரு ஏற்பாடு செய்ய வேண்டும். இது மட்டுமல்ல, இன்று அரசுத் துறையிலே உள்ள தொழிலாளர்களின் பிரச்சனைகளிலே மாநில லேபர் இலாக்காவும் பெரிய அளவுக்கு எஃபெக்டிவ்வாக ஒன்றும் செய்யவில்லை என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

கன்பர்மேஷன் அண்ட் பெர்மெனென்ஸி ஆக்ட் செல்லாது என்று உயர்நீதி மன்றம் தீர்ப்பு அளித்திருக்கிறது. அதற்கு இந்த அரசு உடனடியாக ஒரு ஆர்டினன்ஸ் போட்டு அந்தத் தொழிலாளர் களுக்கு பாதுகாப்புக் கொடுக்க வேண்டும். அதை இந்த அரசு இதுவரையில் செய்யவில்லை என்று வருத்தத்தோடு சொல்கிற அதேநேரத்தில் அதற்கான நடவடிக்கையை உடனடியாக எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு தொழிலாளர்களின் நிலை எப்படி இருக்கிறது என்று கேட்டால், பல ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக் கிறார்கள். எங்கு பார்த்தாலும் க்லோஷர்களும், லாக்-அவுட்டு களும் தான் தமிழகத்தில் நடக்கின்றன. இந்தப் பிரச்சனை களுக்கு தீர்வு காணுகிற வழி வகைகள் எதையும் இந்த அறிக்கையிலே குறிப்பிடவில்லை என்பதைச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1985 மார்ச் 28] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

அடுத்து இன்டஸ்ட்ரியல் டெவலப்மெண்ட்டைப் பொறுத்த வரையில் பேக்வார்டு ஏரியாக்களிலே போதுமான அளவுக்கு தொழிற்சாலைகளைக் கொண்டு வருவதற்கான வழி முறைகளைப் பற்றியும் இந்த அறிக்கையிலே இந்த அரசு எதுவும் சொல்ல வில்லை என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன். குறிப்பாக இன்று கன்னியாகுமரி மாவட்டத்திலே ஒரு ரப்பர் டயர் பேக்டரியை ஏற்படுத்த வேண்டும். அரசினுடைய ரப்பர் கழகத்திலேயிருந்து கிடைக்கக்கூடிய ரப்பரைப் பயன்படுத்தி போக்குவரத்துத் துறைக்கு தேவைப்படுகிற டயர்களை உற்பத்தி செய்யக்கூடிய பேக்டரி ஏற்படுத்த வேண்டும். அதற்கான வாய்ப்பு இருக்கிறது. ஆகவே அதற்கு நடவடிக்கை எடுத்து அந்த மாவட்டத்திலே தொழில் வளர்ச்சியை ஏற்படுத்து வதற்கான முயற்சியை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன்.

அதேபோல இந்த நிதிநிலை அறிக்கையிலே கயிறு டெவலப் மெண்டுக்காக மத்திய அரசு ஒரு திட்டத்தை அறிவித்து பணம் ஒதுக்கியிருப்பதை பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. இந்த அவையிலே நாங்கள் பல தடவை இதைப்பற்றி வற்புறுத்தியிருக் கிறோம். தமிழகத்திற்கு போதிய அளவு நிதியில்லை என்றால், மத்திய அரசிடம் அந்த திட்டத்தின்படி கேட்டு, கிடைக்க வேண்டிய பணத்தை வாங்கி கயிறு தொழிலை அபிவிருத்தி செய்து பல ஆயிரக்கணக்கான மக்களுக்கு வாழ்வு அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல கன்னியாகுமரி மாவட்டத்தில் கிடைக்கும் மினரல் பொருள்களைப் பொறுத்த வரையில் இல்மனைட், செலுகோஸ் போன்றவை ஏராளமாகக் கிடைக்கின்றன. இப்படிப்பட்ட பொருள்களை வைத்துக் கொண்டு டிடேனியம் டையாக்ஸைடு பேக்டரியை உருவாக்க ஏற்பாடு செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் அதேபோல கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களைப் பாதுகாக்கக் கூடிய

முந்திரி ஆலை மூடிக்கிடக்கிறது. ஆகவே நமது அரசு மத்திய அரசை அணுகி அயல்நாட்டிலிருந்து கச்சா முந்திரியை வரவழைத்து மூடிக்கிடக்கும் அந்த ஆலையைத் திறந்து அந்த தொழிலாளர்களுக்கு வாழ்வளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல ஏற்கெனவே ஒரு ஸ்பின்னிங் மில்லை எங்கள் மாவட்டத்தில் ஏற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டு என்ன காரணத்தினாலோ அரசு அதை அமல்படுத்தவில்லை. ஆகவே அப்படி ஏற்கெனவே முடிவு செய்யப்பட்ட அந்த கோவாப்பரேட்டிவ் ஸ்பின்னிங் மில்லை அப்பண்டைஜ் என்ற முறையிலே கன்னியாகுமரி மாவட்டத்திற்கு மீண்டும் கொண்டு வர ஏற்பாடு செய்து மேலும் ஒரு ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்புத் தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல எங்கள் மாவட்டத்திற்கு ஒரு மெடிக்கல் காலேஜ் ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல இன்னொரு விஷயத்தையும் இங்கே நான் சுட்டிக் காட்டி முடித்துக் கொள்ளலாம் என்று கருதுகிறேன்.

காவல் துறையை பொறுத்த அளவிலே, அவர்களுடைய வாழ்க்கைத்தரத்தை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதிலே எங்களுக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. கொடுக்கப்பட்டு இருக்கக்கூடிய ஊதியம், அதிகமாக கொடுக்க வேண்டும். அதே நேரத்தில் அவர்களை கண்ட்ரோல் பண்ண வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்று அவர்களை யாராலும் கட்டுப்படுத்த முடியாத அளவு நிலைமை தமிழகத்தில் ஏற்பட்டிருக்கிறது. சென்ற காலத்திலே மக்களை தாக்கி இப்போது வழக்கறிஞர்களை தாக்கக்கூடிய நிலை ஏற்பட்டு, லாக்கப்புகளிலே இன்று பல கைதிகள் இறந்து விட்டார்கள் என்ற விவரங்கள் இந்த அவையிலே வந்திருக்கிறது. எதிர்க்கட்சிகள் கூட்டம் நடத்துவதற்குக் கூட அனுமதி வழங்காத நிலை ஏற்பட்டிருக்கிறது. கன்னியாகுரி மாவட்டத்தில் காவல்துறை அப்படிப்பட்ட நடவடிக்கையை எடுத்து இருக்கிறது. ஆகவே, இந்த காவல் துறையினுடைய, காவலர்களுடைய நிலையை அபிவிருத்தி செய்யக்கூடிய அதே நேரத்தில் அவர்கள்,





ஜனநாயக இயக்கத்தை மதிக்கக்கூடிய அளவிற்கு கண்ட்ரோல் படுத்தி மக்களைத் தாக்காத நிலையை ஏற்படுத்த வேண்டும் என்று சுட்டிக்காட்டி விடைபெறுகிறேன்.

**திருமதி டி. யசோதா:** மாற்றுத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, மலையாள மொழி மற்ற மாநிலங்களிலே கற்றுக்கொடுப்பதற்கு உதவி செய்வதைப்போல, தமிழ்நாட்டில் மைனாரிட்டி மக்களுடைய உரிமையை காப்பாற்றுவதற்கு அரசு முன்வர வேண்டும் என்று கோரிக்கை விடுத்தது போல, இந்தி படிக்க விரும்புகின்றவர்களுக்கும் இந்த அரசாங்கம் உதவி செய்ய வேண்டும் என்று அவர்கள் வற்புறுத்த முன்வருவார்களா?

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. செம்மலை):** தனிக் கேள்வி போடுங்கள். அது இதிலே வராது.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாற்றுத் தலைவர் அவர்களே, மலையாள மொழி படிப்பதற்கு வாய்ப்புகள் தரப்பட்டு இருக்கின்றன. மலையாள பண்டிதர்களும் இருக்கிறார்கள். மைனாரிட்டி மொழி என்ற அந்தஸ்து மலையாள மொழிக்கும், தெலுங்கு, கன்னட மொழிகளுக்கும் இருக்கிறது. இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்களுக்கு ஒரு இந்தி பள்ளிக்கூடம் சென்னையிலே நடைபெற்று வருகிறது. குஜராத்தி, பஞ்சாபி போன்ற எல்லா மொழிகளுக்கும், மற்ற மாநிலங்களிலே தராத அளவிற்கு உரிமை தந்திருக்கிறோம். தமிழ் மொழிக்கு இணையாக தந்திருக்கிறோம். நம்முடைய தமிழ் மொழிக்குத் தான், மற்ற மாநிலங்களில் அந்த உரிமை வழங்கப்படாமல் இருக்கிறது. பம்பாய்க்கு சென்றிருந்தபோது மஹாராட்டிர மாநில அரசுடன் பேசியதில், இந்த ஆண்டு ஒரு உயர்நிலைப் பள்ளி துவங்க இருக்கிறது. பெங்களூரிலும் இந்த ஆண்டு துவங்க இருக்கிறார்கள். மற்ற மாநிலங்களில் தமிழுக்குத் தராத உரிமைகளை, இந்த மாநிலத்தில் மற்ற மொழிகளுக்கு நாம் தந்து இருக்கிறோம். இந்தியனைப் பொறுத்தவரையில் அதை நாங்கள் அரசியல் பிரச்சனையாக வைத்து இருப்பதால், இருமொழிக் கொள்கைக்கு விரோதமாக மாண்புமிகு உறுப்பினருடைய வேண்டுகோளை ஏற்றுக்கொள்வதற்கு இல்லை.

[1985 மார்ச் 28

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாற்றுத் தலைவர் அவர்களே, மலையாளம் கற்றுக் கொடுப்பதற்கு ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படவில்லை.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாற்றுத் தலைவர் அவர்களே, ஆசிரியர்கள் இல்லை, பெஞ்ச் இல்லை, நாற்காலி இல்லை என்பது வேறு பிரச்சனை. மைனாரிட்டி மக்களுக்கு உரிமை தந்து இருக்கிறோமா, இல்லையா எனபது வேறு பிரச்சனை. ஆகவே, பெஞ்ச் இல்லை, நாற்காலி இல்லை, ஆசிரியர்கள் இல்லை என்பது மலையாள மொழிக்கும் இருக் கலாம், தமிழுக்கும் இருக்கலாம், ஆங்கிலத்திற்கும் இருக்கலாம், கணக்கிற்கும் இருக்கலாம். நீங்கள் பேசுகின்ற பேச்சில் இந்த அரசு மலையாளம் பேசுகின்றவர்களுக்கு விரோதமாக இருப்பதை போன்ற ஒரு உணர்வு ஏற்படுகிறது. அதனால்தான், அம்மாதிரி இல்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே நீங்கள் முதலில் சொன்னமாதிரி பணியிடங்கள் காலியாக இருப்பது என்பது பல்வேறு பாடங்களுக்கும் இருக்கலாம். அவைகள் பூர்த்தி செய்துகொண்டும் இருக்கலாம். ஆசிரியர் இல்லை என்ற பிரச்சனை தானே தவிர, மைனாரிட்டி மொழிப் பிரச்சனை என்ற அடிப்படையில் அவர்களுடைய மொழி உரிமைக்கு விரோதமாக இந்த அரசு இல்லை என்பதைத்தான் நான் தெரிவித்துக் கொள்கிறேன் . . . . (குறுக்கீடு)

தலைவர் அவர்களே, நிதியாதாரங்களை பொறுத்து மற்ற முறைகளை பின்பற்றுவதன் மூலம் நாம் வசதிகளை கூட்டிக் கொள்ளலாம்.

* திரு. மு. பாண்டுரங்கன் :

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1985-86-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு சில கருத்துக்களை இந்த பேரவையின் முன் வைக்க விழைகின்றேன். தந்தை பெரியார் பேரறிஞர் அண்ணா



1985 மார்ச் 28] [திரு. மு. பாண்டுரங்கன்]

ஆகியோரின் அடிச்சுவட்டை பின்பற்றி இந்த அரசை கட்டிக் காத்துவரும் மாண்புமிகு இதயத் தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களின் மலர் பாதத்தை தொட்டு வணங்குகிறேன்.

(பிற்பகல் 12-40)

என்னை சுமார் 20 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்த கலசப்பாக்கம் தொகுதி வாழ் மக்களுக்கும், கழக நண்பர்களுக்கும் என் அரசியல் ஆசான் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. ப. உ. ச. அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் நடமாடும் பல்கலைக்கழகம் நாவலர் அவர்கள்.

"பொருள் அல்லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்லது இல்லை பொருள்"

என்ற குறளை மிகத் திட்பமாகவும் தெளிவாகவும் வலியுறுத்தி உள்ளார்கள். இந்த அரசு நல்ல அரசாக, வலிவுள்ள அரசாக விளங்க வேண்டுமானால் பொருள் தேவை என்னும் குறிக் கோளைச் சுட்டிக்காட்டி அவர்கள் இந்தக் குறளை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள் என்று தெளிவாகத் தெரிகிறது. ஒரு பொருளுமில்லாமல், ஒரு பொருட்டாக மதிக்கத் தகாதவராய் இருப்பவரையும், மதிக்கத் தக்கவராகச் செய்யக்கூடியது பொருளே அல்லாமல், வேறு சிறப்புடைய பொருள் எதுவும் இல்லை என்று கருதும் எண்ணத்துடன் வள்ளுவப்பெருந்தகை அந்தக் குறளைச் சொல்லியிருக்கிறார்கள். அதை நம்முடைய நாவலர் அவர்கள் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள் என்பது அரசுக்குப் பொருள் தேவை என்ற காரணத்தாலேதான். ஆகவே பொருளைப்பற்றி அவர்கள் சொல்லியிருக்கிற காரணத் தினால் அந்தப் பொருள் எந்த அளவுக்கு இந்த அரசுக்கு தேவை என்பதைக் குறிப்பிடுகிறது. மாற்றுக் கட்சி நண்பர்கள் சொன்னார்கள், அனுதாப அலை வீசிற்று என்று. நாங்கள் தொகுதியிலே சென்று வாக்குகளைச் சேகரிக்கிற நேரத்திலே, மக்கள் எல்லாம் புரட்சித் தலைவர் நன்றாக இருக்கிறாரா, எப்போது வருவார், நலமாக இருக்கிறாரா என்றுதான்

கேட்டார்கள். அவர்கள் கொள்கைமீது வைத்திருந்த உறுதியும் புரட்சித் தலைவர் அவர்கள் மீது வைத்திருந்த நம்பிக்கையும்தான் அந்த அளவுக்கு வெற்றி வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்துள்ளது என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். ஆகவே அனுதாப அலை வீசவில்லை. புரட்சித் தலைவர் அவர்கள் மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கை அலை தான் இந்த வெற்றிக்குக் காரணம் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே சத்துணவு, சீருடை, இலவசப் பாடப்புத்தகங்கள் என்றெல்லாம் தெள்ளத் தெளிவாகச் சொல்லப் பட்டு உள்ளது. 80 லட்சம் குழந்தைகளுக்கு சத்துணவு அளித்து மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அரசு 15—9—1985 முதல் 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு சீருடை வழங்க ஆண்டொன்றுக்கு 13½ கோடி ரூபாய் செலவு செய்யவும், சீருடைகளைத் தைப்பதற்கு கிராமப்புற மகளிருக்குப்பயிற்சி அளிக்கவும் அவர்களுக்கு அதற்கான தையல் இயந்திரங்களை வழங்கி அவர்களுடைய பொருளாதாரநிலையை உயர்த்தவும் திட்டமிட்டிருக்கிறது. இது தவிர 11 ½ கோடி ரூபாய் செலவில் இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்கும் திட்டத்தையும் அறிவித்து உள்ளார்கள். இவைகளையெல்லாம் எப்படிப் பாராட்டாமல் இருக்கமுடியும்? அண்ணா அவர்கள் தெள்ளத் தெளிவாகச் சொன்னார்கள், மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணக்கும் என்று. ஆகவே கோடிக்கணக்கான ரூபாய்களை இளம்சிறார்க்கு அள்ளி வாரிவழங்கி இருக்கிறது இந்த அரசு. நல்லவைகளை ஏற்றுக்கொள்ள வேண்டாமா? மாற்றுக் கட்சி நண்பர்கள் இதைப் பாராட்டக் கடமைப்பட்டவர்கள் அல்லவா? இளம் சிறார்க்கும் இவ்வளவு வசதிகளை அறிவித்து இருக்கிற இந்த நிதிநிலை அறிக்கையை அவர்கள் உளமாரப் பாராட்ட வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.





அறிஞர் அண்ணா அவர்கள் ஜூன் திங்கள் 27 ஆம் நாளன்று இந்த மாமன்றத்திலே எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் சொன்ன சில வார்த்தைகளை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். வரியே போடாமல் ஆட்சி நடத்த வேண்டுமென்று நான் குறிப்பிட மாட்டேன். போடுகிற வரியைப் போடத்தக்க இடத்தில் போடவேண்டிய முறைப்படி போடவேண்டும், போடுகிற வரிமூலம் வருகிற வருமானத்தை தக்க முறையிலே செலவழிக்க வேண்டுமென்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். திருவள்ளுவரும் இறைமாட்சி என்ற அதிகாரத்திலே 5-வது குறளாகக் கூறியிருப்பது,

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு"

என்ற குறளாகும். அதாவது பொருள் வரும் வழிகளை மேலும் இயற்றலும், வந்த பொருளைச் சேர்த்தலும், காத்தலும் காத்த வற்றை வகுத்துச் செலவு செய்தலும் வல்லவனே சிறந்த அரசன் என்று திருவள்ளுவர் தெள்ளத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் தாக்கல் செய்துள்ள இந்த நிதிநிலை அறிக்கையில் இந்த குறளைத்தான் பின்பற்றி இயற்றியிருக்கிறார்கள். வந்த பொருள்களை எப்படிப் பட்ட வகையில் செலவு செய்ய வேண்டும் என்ற தெள்ளத் தெளிவாக எடுத்து கையாளப்பட்டிருக்கிறது. குறள் வழி அரசு நடத்தும் அரசு இந்த அரசுதான் என்பதை நான் தெள்ளத் தெளிவாக எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

மற்றும் 1985—86 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் சாராயத்தின் மீது உள்ள தீர்வையை பல்க் லிட்டர் ஒன்றுக்கு 4 ரூபாயிலிருந்து 6 ரூபாயாக உயர்த்த திட்டமிட்டு இருக்கிறார்கள். அதே மாதிரி விற்பனை வரியை 6 விழுக்காட்டிலிருந்து 25 விழுக்காடாக உயர்த்த திட்டமிட்டு இருக்கிறார்கள். அந்த அளவிலே இந்த அரசுக்கு 40 கோடி ரூபாய் வருமானம் வரும் என்று கணக்கிடப்பட்டு இருக்கிறது.

[திரு. மு. பாண்டுரங்கன்] [1985 மார்ச் 28

அதேபோல் மோட்டார் வாகனங்கள் மீது வரியை உயர்த்த நடவடிக்கைகள் எடுத்ததன் மூலம் 10 கோடி ரூபாய் வருமானம் வரும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. பெருவகை கனிமப் பொருள்கள் மீது தற்போதுள்ள உரிமை, வரித் தொகைக்குச் (ராயல்டி) சமமான அளவில் கனிம உரிமை வரி விதிப்பது அவசியம் என்று இந்த அரசு கருதியிருக்கிறது. மேலும் சிறிய கனிம வகைகளுக்கு விதிக்கப்படும் உரிமை வரியை Mineral Rights உயர்த்தவும் கருதியுள்ளது. அதாவது கறுப்பு வண்ணம் கருங்கற்கள், சாம்பல் வண்ணக் கருங்கற்கள் ஆகியவற்றிற்கான உரிமை வரியை 1 கன மீட்டருக்கு 200 ரூபாயிலிருந்து 400 ரூபாயாக உயர்த்தவும், ஏற்றுமதிக்காக பெரிய சதுர வடிவில் வெட்டி எடுக்கப்படும் சாம்பல் வண்ணக் கற்களுக்கு கன மீட்டர் ஒன்றுக்கு ரூ. 200 உரிமை வரி விதிக்கவும் அரசு உத்தேசித்துள்ளது. இதன் மூலம் அரசுக்கு சுமார் 4 கோடி ரூபாய் வருமானம் கிடைக்கும். ஆகவே, சாராயத்தின் மீது போடப்படுகின்ற வரியிலிருந்து 40 கோடி ரூபாய், மற்றும் மோட்டார் வாகனங்கள் மீது வரி போடுவதால் 10 கோடி ரூபாய், அந்த கறுப்பு வண்ணக் கருங்கற்கள், சாம்பல் வண்ணக் கருங்கற்கள் ஆகியவற்றிற்கு போடப்படுகின்ற வரியிலிருந்து 4 கோடி ரூபாய் ஆக மொத்தம் 54 கோடி ரூபாய் இந்த அரசுக்கு வருமானம் வரும் நிலை இருக்கிறது. இந்த வரி விதிப்பால் ஏழை எளிய மக்களுக்கு ஏதாவது பாதகம் வருமா என்று சிந்தித்துப் பாருங்கள். நிச்சயமாக ஏழை எளிய மக்களுக்கு இந்த வரி போடுவதன் மூலமாக எந்தவிதமான கஷ்டமோ, நஷ்டமோ ஏற்பட்டு விடாது. இடையில் இருக்கின்ற வியாபாரிகளுக்கு வேண்டுமானால் கஷ்ட நஷ்டம் ஏற்படலாமே ஒழிய, ஏழை எளிய மக்களுக்கு எந்தவிதமான கஷ்டமோ நஷ்டமோ ஏற்பட்டு விடாது. ஆகவே இந்த நிதிநிலை அறிக்கையை மாற்றுக் கட்சி நண்பர்கள் வாயார உளமார வாழ்த்த கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இயற்கை உரங்களுக்கு போடப்பட்டுள்ள பலமுனை வரி முற்றிலும் ரத்து செய்துள்ளார்கள். 1 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை படிக்கும் வறுமை கோட்டுக்கு கீழே உள்ள மாணவர்களுக்கு இலவச சீருடை, இலவச பாட புத்தகத்தை



1985 மார்ச் 28] [திரு. மு. பாண்டுரங்கன்]

வழங்க இந்த அரசு திட்டமிட்டு இருக்கிறது. மிளகாய், புளி, மஞ்சள், கொத்துமல்லி, மிளகு ஆகிய ஒரு சில வேளாண்மைப் பண்டங்கள் மீது 5 விழுக்காடு பலமுறை வரி 8 விழுக்காடு ஒருமுனை வரியாக மாற்றப்பட்டு இருக்கிறது. ஆகவே ஏழை எளிய மக்களுக்கு அன்றாடம் தேவையான பொருள்களின் விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதிலும் விலை குறைப்பு ஏற்பட்டு இருக்கிறது. ஆகவே, ஏழை எளிய மக்களுக்கு லாபமே தவிர நஷ்டம் ஒன்றும் இல்லை. ரூபாய் 250-க்குள் ஆதி திராவிடர்களுக்கு வட்டியில்லா கடன் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. 10 ஆயிரம் ஆதி திராவிட குடும்பங்களை கூட்டுறவின் கீழ் கொண்டுவர 10 லட்சம் ரூபாய் உதவித் தொகை என்று திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறு எத்தனையோ திட்டங்கள் இந்த நிதிநிலை அறிக்கையில் உள்ளது. இதை மக்கள் வரவேற்பார்களே தவிர, வெறுத்து ஒதுக்க மாட்டார்கள். ஆகவே, மாற்றுக் கட்சி நண்பர்களைக் கேட்டுக் கொள்கிறேன், நீங்களும் மக்களோடு சேர்ந்து இதை நிறைவேற்றுவதற்கு வாழ்த்துக்கள் என்று உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-50)

இந்த நேரம் மின் வெட்டு உள்ள நேரமாகும். தமிழ்நாட்டு மக்கள் இதைத் தெளிவாக உணர்ந்துள்ளார்கள். ஆனால் ஒருவருக்கு இரண்டு பம்பு செட்டுகள் இருந்தால் அந்த இரண்டு பம்பு செட்டுகளுக்கும் காவல் இருக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. மின்சாரம் எப்பொழுது வரும், எப்பொழுது வராது என்று தெளிவாகத் தெரியவில்லை. மக்கள் இதை உணர்ந்திருப்பதால், எந்த நேரத்தில் இந்த ஊருக்கு மின்சாரம் வரும் என்று தெளிவாக மக்களுக்கு அறிவிக்க வேண்டிய சூழ்நிலை வந்திருக்கிறது. அவர்கள் மோட்டாருக்கு அருகிலேயே காத்துக்கொண்டு, இரவும் பகலும் கண்விழித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, சூப்பரின்டெண்டிங் என்ஜினியர் மூலமாகவோ, டிவிஷனல் என்ஜினியர் மூலமாகவோ, உரிய நேரத்திலே சொல்லி, நோட்டீஸ் மூலம் அறிவிப்பு செய்து, இந்த நேரத்தில்தான் மின்சாரம் வரும் என்று தெள்ளத் தெளிவாகச் சொல்லிவிட்டால் அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறார்கள். அதைச் செய்யுமாறு இந்த அரசை இந்த நேரத்திலே வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்

[திரு. மு. பாண்டுரங்கன்] [1985 மார்ச் 28

இந்த அரசு, தமிழ்நாட்டில் பத்து சர்க்கரை ஆலைகளை நிறுவப்போவதாக அறிக்கையிலே குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் ஒன்றை கலசப்பாக்கத்திற்கு அருகே ஓடுகின்ற செய்யாற்றின் கரையில் அமைத்துத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன். கலசப்பாக்கம் தொகுதியில் நிறையக் கரும்புப் பயிர் விளைந்திருக்கிறது. ஆகவே, அங்கே சர்க்கரை ஆலையை நிறுவினால் இலாபகரமாக நடக்கும், அங்குள்ள மக்களுக்கும் வேலைவாய்ப்பு கிடைக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

கலசப்பாக்கம் தொகுதியில் பத்து பதினைந்து ஊர்களுக்கிடையிலே பஸ் வசதி இல்லாமல், ரோடு வசதி இல்லாமல் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். பத்தியவாடி, அணியாலை, காம்பட்டு பெலாசூர், பாடகம், லாடவரம், சிட்டம்பட்டு, கோவூர், கமலப்புத்தூர், வெருங்கனந்தல், மாதகம்பாடி என்னும் ஊர்கள் வழியாக எந்தவிதமான ரோடு வசதியும் சரியாக இல்லை. ஆகவே, அந்த ரோட்டைப் புதுப்பித்து பேருந்து விடும்படி கேட்டுக்கொள்கிறேன். நடந்து முடிந்த தேர்தலிலே பெலாசூர் மக்கள் வாக்களிக்கவில்லை என்பதை இந்த அவையில் இன்றைக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். காரணம் என்னவென்றால், அவர்களுக்குச் சாலை வசதி இல்லை என்றும், பஸ் வசதி இல்லை என்றும் வாக்களிக்க மறுத்துவிட்டார்கள். ஆகவே, இந்த நேரத்தில் இதைச் சொல்லிக்கொள்வது என்னுடைய கடமை என்று நினைத்து இங்கே எடுத்துச் சொல்லிக்கொள்கிறேன். சாலை வசதி செய்து தரும்படியும், பஸ் வசதி ஏற்படுத்தித் தரும்படியும் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

கலசப்பாக்கத்தில் பெண்கள் கல்லூரி ஒன்றை நிறுவும்படியும், பாலிடெக்னிக் ஒன்றை நிறுவி உதவிடும்படியும் இந்த நேரத்தில் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆதமங்கலம் என்னும் ஊரிலே உள்ள மேல்நிலைப்பள்ளியில் 250 அரிஜன மாணவர்கள் படிக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு ஹாஸ்டல் அமைத்துத் தரவும், ஒரு புதிய வகுப்பறையை கட்டித் தரவும் வேண்டுகிறேன்.



1985 மார்ச் 28] [திரு. மு. பாண்டுரங்கன்]

ஆதமங்கலம் புதூரில் அமைந்துள்ள சப் ஸ்டேஷனைக் கூடிய விரைவில் திறக்க ஏற்பாடு செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன். அங்கே எல்லா வேலைகளும் முடிந்து சப் ஸ்டேஷன் திறக்கும் தறுவாயில் இருக்கிறது. இப்பொழுது அதைக் கூடிய விரைவிலே திறந்துவிட்டால் அங்கே உள்ள விவசாயிகள் மின்சாரம் பெறுவதற்கு உதவியாக இருக்கும் என்று இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லிக்கொள்கிறேன்.

31—3—1985 க்குள் நிலவள வங்கி கடனை வட்டி இல்லாமல் செலுத்தலாம் என்று அரசு அறிவித்துள்ளது. மின்வெட்டின் காரணமாக விவசாயிகள் பெருமளவில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்தக் காரணத்தினாலே இந்தச் சலுகைகளை மேலும் 6 மாத காலம் நீட்டித்துத் தந்து உதவுமாறு இந்த மன்றத்தின் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

துரிஞ்சாபுரம் ஒன்றியத்தில் உள்ள பாடகம் கிராமத்தில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தை நிறுவிட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். சுற்றுப்புறத்தில் சுமார் இருபதாயிரம் மக்கள் வசிக்கிறார்கள். அவர்கள் எந்தவிதமான சுகாதார வசதியுமின்றி துன்பப்பட்டுக் கொண்டு வருகிறார்கள். ஆகவே, துரிஞ்சாபுரம் ஒன்றியத்தில் உள்ள பாடகம் கிராமத்தில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தை அமைத்து உதவிட வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

மங்கலத்தில் ஒரு போலீஸ் ஸ்டேஷனும், மாதாகோயில் நம்மியந்தலில் ஒரு சப்-ரிஜிஸ்ட்ரார் ஆபீசும் நிறுவும்படியும் கோருகிறேன். கலசப்பாக்கத்தில் தீயணைக்கும் நிலையம் ஒன்றை நிறுவி உதவும்படி இந்த நேரத்தில் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய கலசப்பாக்கம் தொகுதியிலே ஜம்னாமத்தூர் என்ற ஊர் ஜவ்வாது மலையில் அமைந்துள்ளது. அங்கே வனத்துறை ஒரு உயர்நிலைப்பள்ளியை அமைத்து ஏற்கனவே உதவியுள்ளது. அதில் பத்தாம் வகுப்புவரையில்தான் உள்ளது. அங்கே மேல்நிலைப்பள்ளி இல்லை. எனவே, அதை மேல்நிலைப் பள்ளியாக ஆக்கித் தர வேண்டுகிறேன். அந்தப் பகுதியிலே ஒரு

இலட்சம் மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். எனவே, அதை மேல் நிலைப் பள்ளியாக ஆக்கித்தர, பிளஸ் 2 வரையில் ஏற்படுத்தித் தர வேண்டுகிறேன்.

அங்கே இலவச விடுதி ஒன்றை அரசு வனத் துறை நடத்து கிறது. அதில் 150 மாணவர்கள் உள்ளனர். மேலும் 100 மாணவர்களைச் சேர்க்க வழிவகை செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன். அரிசன நலத் துறை மேற்படி பள்ளியில் பெண்கள் விடுதி ஒன்றை அமைத்துள்ளது.

அதில் 75 மாணவிகள் தங்கிப் படிக்கின்றனர். மேலும் 100 மாணவிகளைச் சேர்க்க வழிவகை செய்து தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

ஜம்னாமத்தூரில் நிறைய சந்தன மரங்கள் இருக்கின்றன. அடுக்கடுக்காக அங்கே சந்தன மரங்களை அரசு சேகரித்து வைத்திருக்கின்றது. ஆனால் பட்டை சீவும் தொழிற்சாலையை அங்கே அமைக்காமல் வேறிடத்திலே அமைத்திருக்கிறார்கள். அங்கே பட்டை சீவும் தொழிற்சாலையை ஜம்னாமத்தூரில் நிறுவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஜவ்வாது மலையில் சுமார் ஒரு இலட்சம் மக்கள் வாழ்கிறார்கள். ஜம்னாமத்தூரை மையமாகக் கொண்டு ஒரு பஞ்சாயத்து யூனியனைத் தனியாக அமைத்து மலைவாழ் மக்களுக்கு உதவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எனக்கு வாய்ப்பளித்த உங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்து விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**திரு. மா. சுந்தரதாஸ்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் என்னுடைய உரையைத் தொடங்குவதற்கு முன்னால் என்னை இந்த மாமன்றத்தில் சட்டமன்ற உறுப்பினராக ஆக்கிய எங்கள் அன்புத் தலைவர் திரு. ராஜீவ் காந்தி அவர்களுக்கும், விளவங்கோடு சட்டமன்ற வாக்காளர் பெருமக்களுக்கும் நன்றியைத் தெரிவித்து உரையைத் தொடங்குகிறேன்





இந்த நிதிநிலை அறிக்கையில் எங்களுடைய கருத்தைச் சொல்கின்றபோது நல்ல காரியங்களை நாங்கள் வரவேற்கத் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். 8 ஆம் வகுப்பு வரையில் குழந்தைகளுக்குச் சத்துணவும், உடையும் கொடுக்கிறோம் என்று சொன்னால் அது நிச்சயமாக நல்ல திட்டம்தான். அதை காங்கிரஸ் கட்சியின் சார்பாக நாங்கள் வரவேற்கிறோம். அப்படி 8 ஆம் வகுப்பு வரை படித்து முடித்ததற்குப் பிறகு என்ன வேலை கொடுக்கப் போகிறீர்கள், அவர்களை என்ன செய்யப்போகிறீர்கள் என்பது பற்றிய எந்தத் திட்டமும் இந்த பட்ஜெட்டிலே குறிப்பிடப்படவில்லை.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் குறிப்பாக படித்த இளைஞர்கள் அதிகமாக இருக்கின்ற மாநிலங்களில் ஒன்றாக இருக்கின்றது. அப்படிப்பட்ட படித்த இளைஞர்களுக்கு என்ன வேலைவாய்ப்பு கொடுக்கப்போகிறோம் என்று எந்தவிதமான திட்டமும் இந்த பட்ஜெட்டிலே குறிப்பிடப்படவில்லை. ஆனால் மத்திய அரசைப் பொறுத்தவரையில் பல்வேறு திட்டங்களை இந்த நாட்டுக்காகச் செய்து தந்திருக்கின்றது. அந்தத் திட்டங்களைத்தான் மாநில அரசு செய்துகொண்டிருக்கின்றது. வரிப்பணம் என்று சொல்கிறபோது மத்திய அரசுக்கும் வரிப்பணம்தான் வருகின்றது. மாநில அரசுக்கும் வரிப்பணம்தான் வருகின்றது. ஆகவே நாம் மத்திய அரசு மாநில அரசு என்று வேறுபடுத்திப் பேசத்தேவையில்லை, நாம் எல்லாம் இந்தியர்கள் என்ற உணர்வுதான் இருக்கவேண்டும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அந்த உணர்வோடு பேசவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பல நண்பர்கள் இங்கே பேசும்போது மத்திய அரசைப் பழி சொல்லவேண்டும் என்ற வகையில் சொன்னார்கள். தமிழக அரசின் பணமும் வரிப்பணம்தான். மாநில அரசின் பணமும் வரிப்பணம்தான். அதை நாம் நன்கு உணர்ந்துகொள்ள வேண்டும். மத்திய அரசு கொண்டு வந்திருக்கின்ற ஐ.ஆர்.டி.பி., ஆர்.எல்.இ.ஜீ.பி., என்.ஆர்.இ.பி., செல்ஃப் எம்ப்ளாய்மென்ட் ஸ்கீம் என்று சொல்லப்படுகின்ற பல்வேறு திட்டங்களை மத்திய அரசு தீட்டி இருக்கின்றது. அவற்றைத்தான் மாநில அரசு செய்துகொண்டிருக்கிறது. இதற்கு முன்னால் நடந்த விவாதத்

[திரு. மா. சுந்தரதாஸ்] [1985 மார்ச் 28

தில்கூட உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அது முழுக்க முழுக்க மத்திய அரசின் பணம் என்று சொன்னார்கள். அந்த பணம் சரியான முறையில் செலவழிக்கப்படுகிறதா என்றால் நிச்சயமாக இல்லை.

எங்களுடைய குமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் எனக்கு நன்றாகத் தெரியும். 2½ கோடி ரூபாய் செல்ஃப் எம்ப்ளாய்மென்ட் ஸ்கீமிற்காக ஒதுக்கப்பட்டது. ஆயிரம் படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் வரையில் திட்டங்களைத் தீட்டினார்கள். அப்படி ஆயிரம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுத்தால் 5 ஆயிரம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்திருக்கும். ஆனால் அங்கே இருக்கின்ற அதிகாரிகள் அவர்களும் ஒன்றேகால் கோடி ரூபாயைத் தான் வழங்கி இருக்கிறார்கள், 500 பேருக்குத்தான் கொடுப்போம் என்று சொன்னார்கள். நான் இந்த ஊருக்கு வரும் வரையில் 126 பேருக்குத்தான் கொடுத்திருக்கிறார்கள். அது குறித்து நான் விதி 54-ன்கீழ் கால் அட்டென்ஷன் நோட்டீஸ் கொடுத்திருந்தேன். அதற்கு இன்னும் பதில் வரவில்லை. ஆயிரம் பேர்களுக்கு லோன் கொடுக்கிற வகையில் 2½ கோடி ரூபாயை என்னுடைய மாவட்டத்திற்கு ஒதுக்கி இருந்தால், சரியான முறையில் அதிகாரிகள் செய்திருந்தால் ஆயிரம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்திருக்கும். எனவே அதை மாநில அரசு சரியான முறையில் நடத்தித் தரவேண்டும் என்று நான் வலியுறுத்துகிறேன்.

அதேபோன்று நாசி ப்ரோகிராமில் ஒரு கோடி ரூபாய் மத்திய அரசு கொடுத்திருக்கிறார்கள். இத்தகைய நிர்வாகங்களைப் பொறுத்தவரையில் அதிகாரிகளை அரசு கண்காணிக்கவேண்டும். எனவே அரசு செய்தாலும் அதிகாரிகள் சரியாகச் செய்யவில்லை என்பதைச் சொல்லிக்கொள்கிறேனே தவிர அரசைக் குறை சொல்லக் கடமைப்பட்டவன் அல்ல நான்.

இங்கே இருக்கின்ற அனைத்து திட்டங்களையும் மத்திய அரசு செய்து கொண்டிருக்கிறது. ஆனால் மாநில அரசு வேலை வாய்ப்பு பிரச்சினையைத் தீர்ப்பதற்கான எந்தத் திட்டத்தையும் தீட்டவில்லை. தொழிலாளர் நலனுக்கான எந்தவிதமான திட்டமும் இந்த பட்ஜெட்டிலே சொல்லப்படவில்லை. இந்த நாட்டிலுள்ள தொழிலாளர்களுக்கு பல சலுகைகளை மத்திய அரசு செய்து கொண்டிருக்கின்றது. குறிப்பாக தமிழகத்தைப்



1985 மார்ச் 28]

பொறுத்தவரையில் ஓடுகின்ற பேருந்துகள் எல்லாம் மிகச் சிறப்பான முறையில் இயங்கிக்கொண்டிருக்கின்றன. ட்ரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் ஆஃப் தமிழ்நாடு என்று சொன்னாலே இந்தியாவில் மிகச் சிறப்பான இடத்தைப் பெறுகின்ற நிலைமை இருக்கின்றது. அந்த அளவுக்குப் பாராட்டப்படுகின்றது. ஒரு சில கார்ப்பரேஷன்களைத் தவிர அனைத்து கார்ப்பரேஷன்களும் கோடிக் கணக்கில் இலாபத்தில் ஓடிக்கொண்டிருக்கின்றன.

(பிற்பகல் 1-00)

குறிப்பாக, என்னுடைய மாவட்டத்திலே நேசமணி டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் பல கோடி ரூபாய் இலாபத்திலே ஓடிக்கொண்டிருக்கிறது. ஆனால், அங்கே வேலை செய்கின்ற ஊழியர்களுக்கு பென்ஷன் கிடையாது. பக்கத்து மாநிலமான காங்கிரஸ் கட்சி ஆளுகின்ற கேரளாவிலே கே.எஸ்.ஆர்.டி.சி. என்று சொல்லப்படுகின்ற கேரளா ஸ்டேட் ரோட்வேஸ் டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் பல கோடி ரூபாய் நஷ்டத்தில் ஓடிக் கொண்டிருக்கிறது. அங்கே கூட எங்களுடைய மாண்புமிகு அமைச்சர் திரு. சுந்தரனார் அவர்கள் அந்தப் பணியாளர்களுக்கு பென்ஷன் கொடுக்கிறார்கள். 58 வயதுவரை நம்முடைய நாட்டுக்கு உழைத்த பிறகு, பல கோடி ரூபாய் இலாபம் ஈட்டிக் கொடுக்கின்ற அவர்களுக்கு அந்த இலாகாவிலேயிருந்து நம்மால் பென்ஷன் கொடுக்க முடியும். ஆகவே, அனைத்து டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன்களுக்கும் குறிப்பாக நேசமணி கார்ப்பரேஷனில் பணிபுரியும் அனைத்துத் தொழிலாளர்களுக்கும் பென்ஷன் வழங்க வேண்டுமென்று நான் அரசை வலியுறுத்த விரும்புகிறேன். அதற்கான திட்டங்கள் இந்த பட்ஜெட்டில் குறிப்பிடப்படவில்லை.

அதேபோல், விவசாயம் என்று சொல்வது நம்முடைய நாட்டில் முதுகெலும்பாக விளங்குகிறது. 3 ஆண்டுக் காலமாக, தமிழகம் வறட்சியினால் பாதிக்கப்பட்டதால், நாச்சுரல் கலாமிட்டிசால் பாதிக்கப்பட்டதால், சரியான முறையிலே ஆதாயம் கிடைக்கவில்லை. குறிப்பாக புயல் காரணமாகவும், வெள்ளத்தின் காரணமாகவும், வறட்சியின் காரணமாகவும் அவர்களுக்குச் சரியான முறையிலே ஆதாயம் கிடைப்பதில்லை. விவசாய நிபுணர்கள் என்ன சொல்கிறார்கள், ஓராண்டு கலாமிட்டி வந்து

[1985 மார்ச் 28 [திரு. மா. சுந்தரதாஸ்]

விட்டால் 3 ஆண்டுக்காலம், 5 ஆண்டுக் காலம் நிற்கும் என்று சொல்கிறார்கள். ஆனால், தொடர்ச்சியாக 3 ஆண்டுக்காலம் இங்கே விவசாயிகள் பலவிதமான முறைகளிலே பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு என்ன செய்யப் போகிறோம் என்று இதிலே குறிப்பில்லை. மத்திய அரசு பல்வேறு திட்டங்களைத் தீட்டி இருக்கிறது. ஆனால், இங்கே இருக்கிற சிக் இன்டஸ்ட்ரீசுக்கு பல்வேறு கோடிக்கணக்கான ரூபாய்களை நாம் ஒதுக்குகிறோம். மத்திய அரசும், மாநில அரசும் பல கோடிக்கணக்கிலே, இலட்சக்கணக்கிலே உதவியாகக் கொடுக்கின்றன. குறிப்பாக, மதுரை மில்ஸ், மகாலட்சுமி மில்ஸ், கோயம்புத்தூர் மில்ஸ், திருப்பத்தூர் காட்டன் மில்ஸ் போன்ற மில்களுக்கெல்லாம் ரூ. 86 இலட்சம், ரூ. 55 இலட்சம், ரூ 15 இலட்சம், ரூ. 10 இல்ட்சம் என்று மத்திய அரசு ஒதுக்கியிருக்கிறது. ஆனால், அங்கே 4,000 பேர்கள் தான் வேலை செய்கிறார்கள். 3 கோடி மக்கள் வேலை செய்கிற விவசாயத் துறைக்கு நாம் என்ன ஒதுக்கியிருக்கிறோம்? சிக் இன்டஸ்ட்ரீஸ் என்று சொன்னால், ரூ. 10,000 வேலை செய்பவர்களுக்கு மத்திய—மாநில அரசுகள் மானியமாக, இனாமாக பணம் கொடுக்கின்றன. வட்டியில்லாமல் நீண்டகாலக் கடன்கள் கொடுக்கப்படுகின்றன. ஆனால், ஏழை எளிய விவசாயிகளுக்கு 3 ஆண்டுக்காலம் தொடர்ச்சியாக வறட்சியால் பாதிக்கப்பட்ட பின்னாலும் எந்தத் தொகையும் கொடுக்கப்படவில்லை என்பதை நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

கல்வித் துறையைப் பொறுத்தவரையில் குமரி மாவட்டம் இந்தியாவிலே இரண்டாவது மாவட்டமாக விளங்குகிறது. அந்த மாவட்டத்தில் ஒரு பொறியியல் கல்லூரியோ, மருத்துவக் கல்லூரியோ, விவசாயக் கல்லூரியோ, கால்நடைக் கல்லூரியோ இல்லை. இந்தியாவிலேயே இரண்டாவது மாவட்டமாக இருக்கக்கூடிய குமரி மாவட்டத்திற்கு நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் எதுவும் சேர்க்கவில்லை. இந்தியாவிலேயே இரண்டாவதாக இருக்கிற எங்கள் மாவட்டத்தை ஏன் புறக்கணிக்கிறார்கள் என்று புரியவில்லை. எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதைப் போல, தமிழகத்தைப் பொறுத்தவரையில் ரப்பர் கிடைக்கின்ற ஒரே மாவட்டம் குமரி மாவட்டம்தான். அது யாவரும் அறிந்த உண்மை. குமரி மாவட்டத்தில் ஒரு விவசாயக் கல்லூரியை ஆரம்பித்தால் அது



1985 மார்ச் 28] [திரு. மா. சுந்தரதாஸ்]

நல்ல முறையில் இயங்கும். அனைத்துப் பொருட்களும் இருக்கின்றன. அனைத்து வகை விவசாயமும் செய்கின்றனர் அங்கே. அந்த மாவட்டத்தில் கல்லூரி அமைக்கத் தேவையான இடம் இருக்கிறது. அனைத்து மாவட்டங்களிலும் பல்வேறு கல்லூரிகளைத் துவங்குகிறார்கள். ஆனால், கன்னியாகுமரி மாவட்டத்திலே துவக்குவதற்கான எந்தத் திட்டமும் இல்லை. ஆகவே, எங்கள் மாவட்டத்திலும் ஒரு விவசாயக் கல்லூரியைக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போன்று, கல்வித் துறையைப் பொறுத்த வரையில், எங்கள் மாவட்டத்தில் பள்ளிக்கூடங்கள் அரசாங்கத்திலுடைய கண்காணிப்பிலே இருந்து வந்தன. அந்தப் பள்ளிக்கூடங்களில் சரியாக மெயின்டெனன்ஸ் வேலைகள் செய்வதில்லை. அதற்காக பண்ட் ஒதுக்கப்படுவதில்லை. மற்ற மாவட்டங்களைப் பொறுத்த வரையில் ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள், அரசாங்கப் பள்ளியாக இருந்தால்கூட மெய்ன்டெய்ன் செய்யலாம். பள்ளிகளை மெய்ன்டெயின் செய்வதற்கு ஊராட்சி ஒன்றியத்திற்குப் பணம் ஒதுக்குகிறார்கள். ஆனால் ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள் செய்யாமல் இருக்கிறார்கள். ஆனால், குமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நேரடியாக அரசு கண்காணிப்பில் இருக்கிற காரணத்தால், அந்த மாவட்டம் எல்லைப் புறத்தில் இருக்கின்ற காரணத்தால், இவர்கள் ஒதுக்குகின்ற பணம் அங்கே சென்று சேருவதில்லை. அனைத்துப் பகுதிகளிலும், குறிப்பாக, விளவங்கோடு சட்டமன்றத் தொகுதியைப் பொறுத்தவரையில் ஒரு பள்ளிக்கூடத்தில் கூட மெயின்டெனன்ஸ் இல்லை. ஆகவே, மாணவர்கள் உள்ளே படிக்க முடியாமல் வெளியே படிக்கின்ற நிலைமை இருக்கிறது. அதற்கு என்னுடைய கருத்து என்னவென்றால், அந்தப் பள்ளிக் கூடங்களின் மெயின்டெனன்சை ஊராட்சி ஒன்றியங்களே ஏற்றுக்கொண்டால் நன்றாக இருக்கும். இல்லையென்றால் இந்தப் பிரச்னை தீராது. ஓராண்டு நாங்கள் அமைச்சரிடம் சொன்னால், ரூ. 1 இலட்சம் ஒதுக்குவார்கள். ஆனால் அடுத்த ஆண்டு செய்யவில்லை. கடந்த 3 ஆண்டுக்காலமாக ஒரு காசு கூட மெயின்ட்டென்சுக்கு ஒதுக்காத காரணத்தால், பள்ளிகள் மோசமான நிலையிலே இருப்பதை நாம் காண்கிறோம்.

அதே போன்று குடிதண்ணீர் பிரச்னையைப் பொறுத்தவரையில், தமிழக அரசானது திட்டங்களை அறிவித்திருக்கிறது. குறிப்பாக குமரி மாவட்டத்தில் குடிதண்ணீர் பிரச்னை இருக்கிறது. எல்லா உறுப்பினர்களும் தண்ணீர் பிரச்னையைப் பற்றி பேசும்போது சொன்னார்கள். அதற்கு நிரந்தரமான தீர்வு காண்பதற்கு அரசு எந்தத் திட்டமும் உருவாக்கவில்லை. அதற்கு நிச்சயமாகத் தீர்வு உருவாக்கித் தர வேண்டுமென்று நான் வலியுறுத்துகிறேன்.

அதேபோன்று இந்தியைத் திணிப்போம் என்று சொல்லி இந்தியைத் திணித்தால் சிறைக்குச் செல்பவர்களில் நானும் ஒருவன்தான். இந்தியைத் திணித்தால், தமிழகத்து மக்கள் அதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஆனால், ஒன்று சொல்லிக் கொள்வேன். இந்தி படிப்பதற்கு ஒருவர் விரும்பினால், அவருடைய ரைட்டை எடுப்பது நல்லது அல்ல என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்தித் திணிப்பை எதிர்த்து, சிறைக்குச் செல்ல வேண்டுமென்றால், நான் செல்லத் தயார். ஆனால், ஒருவன் இந்தி படிக்க வேண்டுமென்றால், அதற்கு வாய்ப்பு இருக்க வேண்டும்.

ஆனால் ஒருவர் இந்தி படிக்க விரும்பினால் அது அவருடைய பண்டமெண்டல் ரைட். அவர் படிக்க விரும்பினால் படிக்கட்டும் என்று சொல்கிற அளவிலே அரசினுடைய கொள்கையை மாற்றுவது நல்லது என்று சொல்கிறேன்.

அதேபோல எங்களுக்கு சிலோன் பிரச்னையில் அக்கறையில்லை என்று எல்லோரும் சொன்னார்கள். சிலோன் பிரச்னையைப் பொறுத்தவரையில் அது ஒரு இண்டர்நேஷனல் பிரச்னை. வருகிற அகதிகளுக்கு மத்திய அரசு பணம் கொடுக்கிறது. அப்படியென்றால், அது அக்கறையில்லையா? இங்கே பேசிய திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் சொன்னார்கள். எங்களுக்கு அக்கறை இல்லையென்று சொன்னார்கள். தமிழ் சகோதரர்களுக்கு கஷ்டம் என்றால் எங்களுக்கு கஷ்டம் இல்லையா? நாங்கள் கடமைப்பட்டவர்கள் தான். மாநில அரசு என்ன செய்கிறது என்று கேட்கிறேன். மத்திய அரசு தருகிற உதவிகள் குறைவு என்று கருதினால் மாநில அரசு கொடுக்கலாமே என்று தான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.





அதேபோல திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் பேசிய போது நாணயங்களில் தமிழ் இல்லையென்று சொன்னார்கள். இந்தியாவில் எத்தனையோ மொழிகள் இருக்கின்றன. இந்தியை விட்டு வேறு ஏதாவது மொழி இருந்து நம்முடைய தமிழ் மொழி இல்லையென்று சொன்னால் நாங்களும் போராடத் தயாராக இருக்கிறோம். தமிழ் நமக்கு தாய்மொழி. வேறு ஏதாவது மொழிகள் நாணயத்தில் இருக்கிறதா? தெலுங்கு இருக்கிறதா? மலையாளம் இருக்கிறதா? அப்படி வேறு ஏதாவது மொழிகள் எழுதியிருந்தால் நாங்களும் போராடத் தயாராக இருக்கிறோம். நாங்களும் தமிழர்கள் தான். ஆகவே நாங்கள் மத்திய அரசிற்கு வக்காலத்து வாங்குகிற நிலைமையில் இல்லை. மாநில அரசைப் பொறுத்தவரையில் எந்தப் பொறுப்பாக இருந்தாலும் மாநில அரசுக்கு ஒத்துழைக்கிற பொறுப்பு உள்ளவர்கள்தான் நாங்கள்.

அடுத்து திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் பேசுகிறபோது ஒன்றைச் சொன்னார்கள். மத்திய அரசை குறை கூறுவது அவருடைய கட்சியின் கொள்கையாக இருக்கலாம். மத்தியிலே ஒரு நிலையான அரசு வேண்டுமென்று நினைத்தார்கள் மக்கள். அதற்கு வாக்களித்து விட்டார்கள். எதிர்க்கட்சியே இல்லாத அளவிற்கு மக்கள் ஆக்கிவிட்டார்கள் என்பது ஊர் அறிந்த விஷயம். அதற்குப் பின்னாலும் மத்திய அரசை ஏதாவது பிரச்னைகளில் வலியுறுத்த வேண்டுமென்று சொன்னால் அங்கே இருக்கிற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் தான் அதைச் செய்ய வேண்டும். இங்கே இருக்கிற மார்க்சிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் அவ்வாறு செய்யத் தேவையில்லை. இங்கே இருக்கிற உறுப்பினர்கள் நம்முடைய அறிக்கையைக் குறித்து பேசுவதுதான் நலமாக இருக்கும். உறுப்பினர்களுக்கு உரிமையிருக்கிறது என்றாலும், நான் சொல்ல விரும்புவது நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் மத்திய அரசைக் குறித்து வலியுறுத்தி எந்தக் கருத்தும் சொல்லாத அளவிற்குச் சொல்லலாம். அகில இந்திய காஸ்ட் ரைஸ் குறித்து அவர்கள் சொன்னார்கள். அது குறித்து நம்முடைய பட்ஜெட் அறிக்கையில் பேசுகிற நிலையில்லை என்று தான் சொல்கிறேன். ஏனென்றால் மத்தியிலே நிலையான அரசு வேண்டுமென்று மக்கள் தீர்மானித்து விட்டார்கள். மத்திய அரசும் இப்போது பல்வேறு திட்டங்களைத் தீட்டிக் கொண்டிருக்கிறது. அதிலே ஏதாவது குறை

[திரு. மா. சுந்தரதாஸ்] [1985 மார்ச் 28

இருந்தால் அதைச் சொல்வதற்கு பார்லிமெண்டில் இருக்கிற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் சொல்லவேண்டுமே தவிர இங்கே இருப்பவர்கள் சொல்ல வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியைப் பற்றி ஒருசில கருத்துக் களை சொல்லி முடித்துக் கொள்கிறேன். என்னுடைய விளவன் கோடு தொகுதியிலே அரசி பற்றாக்குறை இருக்கிறது. 1967ஆம் ஆண்டில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில், அதற்கு முன்னால் காமராஜர் அவர்கள் ஆட்சிக்காலத்தில் நாங்கள் எல்லாம் சிறைக்குச் சென்று வாங்கிய ஒரு சட்டம் இருக் கிறது. ஒரு நபருக்கு இரண்டு கிலோ அரிசி வழங்க வேண்டு மென்று சட்டம் இருக்கிறது. அதை தமிழக அரசு கொடுக்க வேண்டும். இப்போது 20 கிலோ அரிசி கொடுக்கிறார்கள். அதுவும் எங்கள் மாவட்டத்தில் மலையோரப் பகுதி, கடலோரப் பகுதி மக்களுக்கு கிடைக்காமல் இருக்கிற காரணத்தால் நாங்கள் அரசை வலியுறுத்துவது நாங்கள் போராடி வாங்கிய அந்த ஒரு நபருக்கு 2 கிலோ அரிசி என்பதை எங்களுக்கு வழங்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல மீனவச் சமுதாயத்தைப் பொறுத்தவரையில் ஒருவர் இறந்துவிட்டால் ஐந்து ஆயிரம் என்று இருப்பதை 10 ஆயிரம் ரூபாய் என்று மாற்றியதை நாங்கள் மனமார பாராட்டு கிறோம். அதில் ஒரே ஒரு பிரச்னை இருக்கிறது. 10 ஆயிரம் ரூபாய் கிடைக்க வேண்டுமென்றால் இறந்தவரின் பிணத்தைக் கொண்டு வரவேண்டுமென்று சொல்கிறார்கள். ஆழ்கடலில் எங்கே சென்று பிணத்தை தேடிக் கண்டுபிடிப்பது? ஆகவே இறந்தவரின் உடலைக் கொண்டு வந்து போஸ்ட் மார்ட்டம் செய் தால் தான் 10 ஆயிரம் ரூபாய் உதவி கிடைக்கும் என்று இருப் பதை மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதில் மாவட்ட ஆட்சித்தலைவருக்கு பொறுப்பைக் கொடுத்து, அவர் விசாரித்து அதன் மீது நடவடிக்கை எடுத்து பணம் வழங்கினால் நலமாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.



1985 மார்ச் 28] [திரு. மா. சுந்தரதாஸ்]

பனை ஏறு தொழிலாளர்களுக்கு சில நன்மைகளை அரசு அறிவித்திருக்கிறது. அது நல்ல காரியம். அதேநேரத்தில் அவர்களுக்கு அந்த உதவிகள் சீக்கிரமாக கிடைக்கிற விதத்தில் அரசு ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன். பனை ஏறு தொழிலாளர்களுக்கென்று தனிப்பட்ட வாரியம் கிடையாது. ஆகவே அவர்களுக்கு உதவுகிற விதத்தில் தனிப்பட்ட வாரியம் ஒன்றை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு விடைபெறுகிறேன்.

(பிற்பகல் 1-10)

திரு. மு. இராமநாதன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஒரு விளக்கத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன். மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர் அவர்கள் பேசும்போது, என்னுடைய பேச்சிலே நாணயங்களில் தமிழ் இல்லை என்று குறிப்பிட்டேன், அதைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். 16-க்கு மேற்பட்டதேசிய மொழிகளை ஏற்றுக்கொண்டிருக்கிற இந்திய அரசு வெள்ளைக்காரன் தந்த உரிமையைக்கூட நமக்குத் தராமல் இருப்பது வருத்தத்திற்குரியது என்று நான் குறிப் பிட்டேன். வெள்ளைக்காரர்கள் நாணயங்களை அச்சிடும்போது தமிழ்நாட்டிலே தமிழ், ஆங்கிலம்; அதைப்போன்று கேரளத்திலே மலையாளம், ஆங்கிலம் என்று இப்படி அந்தந்த மாநில மொழி யையும் சேர்த்து அச்சிட்டார்கள். அந்த உரிமை இப்போது பறிக்கப்பட்டிருக்கிறது: அதை மீண்டும் வழங்க வேண்டும் என்பது என்னுடைய கருத்து.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவரவர்களே, நானும் ஒரு சிறு விளக்கத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு தவறான தகவலைத் தருகிறார்கள். நாணயத்தில் வெள்ளைக்காரர்கள் காலத்தில்

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1985 மார்ச் 28

அப்படி அச்சிட்டதாக எனக்குத் தெரியவில்லை: ரூபாய் நோட்டு களில்தான் அச்சிட்டார்கள் (குறுக்கீடு) நாணயத்தில் எப்படி பதினாறு மொழிகளும் இடம்பெற்றன? இல்லை என்பது என் ஞாபகம்.

**திரு. மு. இராமநாதன்:** நாணயத்தில் மட்டுமல்ல; ஒரு தம்படியில் கூட அச்சிட்டிருந்தார்கள்.

2. அறிவிப்புகள் (தொடர்ச்சி)

(ஆ) பேரவை அலுவலில் மாற்றம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் வேண்டுகோளுக் கிணங்க அவரது பொறுப்பிலுள்ள மானியக் கோரிக்கை எண் 24-தொழில்கள் மற்றும் 51-தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு ஆகிய மானியக் கோரிக்கைகள் 12—4—1985 ஆம் தேதி யன்று பேரவையில் விவாதத்திற்கும் வாக்கெடுப்பிற்கும் எடுத்துக் கொள்ளப்பெறும்.

ஏற்கெனவே முடிவு செய்யப்பெற்ற மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் பொறுப்பிலுள்ள மானியக் கோரிக்கை எண் 29-தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் மற்றொரு நாளில் விவாதத்திற்கும் வாக்கெடுப்பிற்கும் எடுத்துக் கொள்ளப் பெறும்.

மேலும் மானியக் கோரிக்கை எண். 49-குடிநீர் வழங்கல் இவ்வாண்டு புதிதாக சேர்க்கப் பெற்றுள்ளது. இம்மானியக் கோரிக்கை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் பொறுப்பிலுள்ளதால் அவரது மானியக் கோரிக் கைகள் எடுத்துக்கொள்ளும் நாளன்று, அதாவது 8—4—1985 ஆம் தேதியன்று இம்மானியக் கோரிக்கையும் சேர்த்து எடுத்துக் கொள்ளப்பெறும்.



1985 மார்ச் 28] [பேரவைத் தலைவர்]

எனவே, தொழில்கள், தொழில் வளர்ச்சிக் குறித்த மூலதனச் செலவு மற்றும் குடிநீர் வழங்கல் ஆகிய 24, 51 மற்றும் 49 ஆம் எண் மானியக் கோரிக்கைகள் மீது வெட்டுத் தீர்மானங்கள், 1985 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாள் திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

5. வரவு-செலவுத் திட்டம், 1985-86—பொது விவாதம் (தொடர்ச்சி.)

**திரு. க. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1985-86 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைமீது எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்காக உங்களுக்கு நன்றி கூறி என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை இப்பேரவை முன்னால் வைக்க விழைகிறேன்.

தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு சாதாரண மக்களுக்குக் கொடுக்கக் கூடிய சாதாரண பொருள்கள் அனைத்துக்கும் வரி இல்லாமல் செய்திருப்பதால் அந்த மக்கள் எல்லாம் இன்றைக்கு தங்களுடைய மனமுவந்த பாராட்டுதல்களை அளித்துக்கொண் டிருக்கும் இந்த நேரத்தில் நம்முடைய மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் இந்த அவையிலே வைத்திருக்கிற நிதிநிலை அறிக்கையை மனமாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த அறிக்கையிலே மறைந்த அரசவைக் கவிஞர் கண்ணதாசன் அவர்களுக்கு காரைக்குடியில் மணிமண்டபம் எழுப்ப நிதி ஒதுக்கீடு செய்து, நிறைவேற்றுவதற்காக இந்த அரசை உண்மையிலேயே பாராட்டுகிறேன். காரணம் கண்ணதாசன் அவர்கள் ஒரு நேரத்திலே ஒரு பாடலை எழுதினார்கள்.

"எல்லோரும் எல்லாமும் பெறவேண்டும் இங்கு
இல்லாதார் இல்லாத நிலை வேண்டும்
வல்லான் பொருள் வகுத்தால் தனிவுடைமை இங்கு
வரவேண்டும் இந்நாட்டில் பொதுவுடைமை"

என்று கவிஞர் கண்ணதாசன் அன்றைக்கு கண்ட கனவை நனவாக்குகின்ற வகையிலே இன்றைக்கு தமிழக முதல்வர்

[திரு. க. பாலசுப்பிரமணியன்] [1985 மார்ச் 28

டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஏழை எளிய மக்களுக்கு நல்ல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள் என்பதை நாடறியும், நாமெல்லாம் அறிவோம்.

ஆகவே அப்படிப்பட்ட கண்ணதாசன் மணிமண்டபம் எழுப்பப்பட இருக்கிறது.

அதுமட்டுமல்ல. புரட்சித் தலைவர் அவர்கள் தன்னுடைய படத்தின் மூலமாக ஒரு பாடலிலே தமிழக மக்களுக்குச் சொல்லி வந்தார்கள். "என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில், ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில், ஒழுங்காய்ப் பாடுபடு வயல்காட்டில், உயரும் உன் மதிப்பு அயல்நாட்டில்" என்று சொன்னார்கள். அந்த அளவிற்கு வயல்காட்டில் பாடுபடுகின்ற அந்த விவசாய மக்களுக்கு இன்றைக்கு தமிழக அரசு கொடுக்கின்ற சலுகையாக உரத்திற்கு அளிக்கப்படுகின்ற வரியை குறைத்து இருப்பதை நான் மனமாரப் பாராட்டுகிறேன். இப்படிப்பட்ட வரி இல்லாமல் எந்த விதமான சிரமமும் இல்லாமல், நூற்றுக்கு 80 சதவீதமாக வாழ்கின்ற கிராமப்புற மக்களுக்கு நல்ல புரட்சிகரமான திட்டங்களைக் கொண்டு இருக்கிற இந்த அறிக்கையை எல்லோரும் பாராட்டுகிறார்கள். இதிலே ஒருசில நபர்கள் பாராட்டுவதற்கு மனம் இல்லை என்றாலும் கூட, அவர்கள் போராட்டம் நடத்துவதற்கு அதிலே பொருள் இல்லை என்பதை எண்ணிவருத்தப்படுகிறார்கள். அதற்கு நான் என்ன செய்ய?

தமிழகத்தில் முதல்வர் புரட்சித் தலைவர் ஆட்சியிலே பல சோதனைகள் இயற்கையினாலே வந்து, தமிழகத்திற்கு பற்றாக் குறை நிதிநிலை அறிக்கையாக இருந்தாலும், மேலும் மேலும் அதிகமான செலவுகளிலே ஈடுபட்டு, அதை நாம் ஈடுசெய்ய வேண்டிய நிலைமையிருக்கிறது. இதைச் சொல்லுகின்ற போது மாண்புமிகு உறுப்பினர்கள் சில பேர்கள் அவர்கள், ஒதுக்குகிற தொகையை அவர்கள் ஒதுக்கிக் கொள்கிறார்கள் என்று கூட சொன்னார்கள். இதை நான் சொல்வதற்குக் காரணம் அவர்கள் அனுபவித்ததை இங்கே பேசுவதிலே யாருக்கும் எந்தவிதமான தவறும் இல்லை. ஆகவே ஆண்டவர்கள், ஆண்டு அனுபவித்தவர்கள் மக்களுக்கு



1985 மார்ச் 28] [திரு. க. பாலசுப்பிரமணியன்]

ஒதுக்க வேண்டியவற்றை, தங்களுடைய மக்களுக்கு ஒதுக்கிக் கொண்டவர்கள், இங்கே நிதி ஒதுக்குவதைப் பற்றி கிண்டலாகப் பேசுவதில் ஒன்று வியப்பில்லை. ஆனால் என்னுடைய வருத்தம் எல்லாம், அவர்கள் இவ்வளவையும் செய்துவிட்டு, இப்போது எதிர்க்கட்சியிலே அமர்ந்துகொண்டு, ஏதோ பேசவேண்டும் என்பதற்காக சில கருத்துக்களைப் பேசி, அதிலே சில அரசியல் லாபம் சம்பாதிக்கலாம் என்று நினைக்கிறார்களே ஒழிய, அதிலே உண்மை இருப்பதாகத் தெரியவில்லை. இங்கே உதாரணத்திற்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். ஈழத் தமிழர்களைப் பற்றி இங்கே பல பேர்கள் அக்கரை உள்ளவர்கள் போல் பேசுகிறார்கள். அதற்குக் காரணம் என்ன என்று நான் எண்ணிப் பார்க்கிறேன். இந்த ஈழத் தமிழர்கள் எல்லாம் அக்கரையிலே இருப்பதால், இக்கரையிலே இருந்து கொண்டு, அவர்கள் அக்கறையாக கவலைப்படுகிறார்கள் என்று நான் கருதுகிறேன். ஒருவேளை இவர்கள் அக்கரைக்குச்சென்றால் என்ன செய்வார்கள் என்று நமக்குத் தெரியாது. அவர்கள் அக்கரையிலே இருப்பதாலே, இக்கரையிலே இருப்பவர்கள் எவ்வளவு அக்கறையாகப் பேசுகிறார்கள், பாராட்டுகிறேன். ஆனால் அப்படிப் பேசுகிற பேச்சு, புரட்சித் தலைவரை குறை சொல்லாத பேச்சாக இருக்க் வேண்டும் அதற்கு திறமையாக நட்வடிக்கை எடுக்கிற மத்திய அரசைக் குறை சொல்லக் கூடாது. அர்சியல் லாபத்திற்காக அவர்கள் பேசிவிட்டுப் போகலாமே தவிர, புரட்சித் தலைவரையோ, அல்லது முறையாக அவருடைய ஆலோசனையைக் கேட்டு, நடவடிக்கை எடுக்கிற மத்திய அரசையோ குறை சொன்னால், அதைக் கேட்டு ஈழத்திலே இருக்கிற நம்முடைய பாதிக்கப்பட்ட மக்கள் வேதனை அடைவார்களே தவிர, அது நமக்கு சாதனையாக இருக்கலாம். பத்திரிகைகளுக்குப் பயனாக இருக்கலாம், கட்சியை வளர்ப்பதற்கு அது காரியமாக இருக்கலாம். அப்படிப்பட்ட காரியங்கள் எல்லாம் இங்கே பேசிவிட்டு, தமிழக அரசு கொண்டு வந்திருக்கிற இந்த நிதிநிலை அறிக்கையைச் சுட்டிக்காட்டி, இதிலே ஒன்றும் இல்லை என்று சொல்கிறார்கள்: ஏதோ பல திட்டங்களைக் கொண்டு வந்தார்கள், பட்டதாரிகளுக்கு உதவித் தொகை கொடுப்போம் என்று நிதிநிலை அறிக்கையிலே நிதி ஒதுக்கினார்கள், ஆனால் பணம் கொடுத்தார்களா, என்று கேட்டார்கள். வேலையில்லாத்

[திரு. க. பாலசுப்பிரமணியன்] [1985 மார்ச் 28

திண்ணாட்டத்தைப் போக்கவில்லை, இதற்கு நீங்கள் என்ன திட்டம் வகுத்து இருக்கிறீர்கள் என்று கேட்டார்கள். புரட்சித் தலைவருடைய அரசு இந்த 7, 3 ஆண்டுக்காலத்திலே குறைந்தது 20 ஆண்டுக்காலத்திற்குப் பின்னாலே வரக்கூடிய பல திட்டங்களை இங்கே அவர்கள் செயல்படுத்திக்கொண்டு இருக்கிற, நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது. இந்த நிலைமையிலே, நாட்டு மக்களுக்குத் தொடர்ந்து நன்மைகள் போகுமானால், நிச்சயமாக இப்போது இருக்கிற திட்டங்களை வைத்து, 20 ஆண்டுக் காலத்திலே தமிழகத்திலே கண்ணதாசன் கண்ட கனைவை நிறைவேற்ற முடியும் என்பதிலே யாருக்கும் எந்தவிதமான ஐயமும் இருக்க முடியாது. இங்கே இந்த நிதிநிலை அறிக்கையிலே ஏற்கனவே கொடுத்த சலுகை போக ,நெல்லுக்கு குவிண்டாலுக்கு 15 ரூபாய் உற்பத்தி ஊக்கத் தொகையை கொடுத்திருக்கிறார்கள். கரும்புக்கு அதிக விலை கொடுப்பதன் மூலம், அந்த கரும்பு விவசாயி களுக்கு உதவித் தொகை கொடுத்து இருக்கிறார்கள். முதியோர் களுக்கு ஓய்வு ஊதியம் அளிப்பதன் மூலம் அரசு அதிகமான செலவை ஏற்றுகொள்ள வேண்டியதிருக்கிறது. மேலும் அநாதை இல்லங்களுக்கு அனுமதி வழங்குவதன் மூலமாகவும், உயர்நிலைப் பள்ளிகளுக்கு அதிகப்படியான கட்டிடங்கள் கட்டுவதன் மூலமாகவும், அரசு ஊழியர்களுக்கு 9 முறை அகவிலைப் படியை உயர்த்திக் கொடுத்ததன் மூலமாகவும் அவர்களுக்கு இடைக்கால நிவாரணம் அளித்ததன் மூலமாகவும் பல்வேறுபட்ட நல்ல திட்டங்களைச் செய்துவிட்டு விளம்பரம் இல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா அவர்கள் சொன்னதுபோல், செய்தவற்றை விளம்பரம் இல்லாமல் செய்திருக்கிற இந்த புரட்சித் தலைவர் அரசை எதிர்க்கட்சியிலே இருப்பவர்கள் ஏளனம் செய்கிறார்கள். நான் இங்கே ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தளழக முதல்வர் அவர்களும், நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்களும் இந்த அறிக்கையை திறமையாக தயாரித்திருக்கிறார்கள். எப்படி என்றால், ஏாட்கில் வகுத்த விதிமுறைகளின்படி மாநிலங்களுக்கு அளிக்கப்பட்ட மத்திய உதவித் தொகை தமிழகத்திற்கு குறைவாகக் கிடைத்துக்கொண்டு வருகிறது என்பதைச் சுட்டிக்காட்டுவதன் மூலம், மத்திய அரசு



1985 மார்ச் 28] [திரு. க. பாலசுப்பிரமணியன்]

அப்படிக் குறைவாகத் தொகையைக் கொடுத்தாலும் கூட மாநில அரசு-மத்திய அரசினுடைய உறவு முறை முறையாக இருக்கிறது என்பதையும் வலியுறுத்தி இருக்கிறார்கள்.

(பிற்பகல் 1-20)

அத்தோடு எங்களுக்கு நிதியைக் குறைத்துக் கொடுத்தாலும் அதை நாங்கள் மனத்திலே தான் வைத்திருக்கிறோம். குறைத்துக் கொடுத்ததினாலே நாங்கள் மகிழ்ச்சியடையவில்லை என்பதையும சுட்டிக் காட்டி இந்த அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட திறமையான அறிக்கையை புரட்சித் தலைவர் அவர்கள் நோய் வாய் பட்டிருக்கக்கூடிய ஒரு காலத்திலே, நோய்வாய் பட்டு, இங்கே வந்திருந்தபோதும் கூட, எல்லா மக்களுக்கும் மன நிறைவை ஏற்படுத்துவதற்காக, எல்லா மக்களுடைய வாட்டத்தையும் போக்கு வதற்காக என்றே, இந்த அறிக்கையிலே லக்சூரியஸ் ஆர்ட்டிகல்ஸ் என்று சொல்லக்கூடிய பொருள்களுக்கு மட்டும் இந்த வரிகள் போடப் பட்டிருக்கிறதே தவிர, எல்லா மக்களும் பயன்படுத்தக் கூடிய எந்த பொருளுக்கும் வரி போடப்படவில்லை. இப்படிப்பட்ட அறிக்கையை இங்கே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் பாராட்ட வேண்டாம், ஆனால் ஓரளவாவது இதிலே இருக்கின்ற உண்மைகளைப் புரிந்துக் கொண்டால் போதும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

ஆகவே, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஏழை எளிய மக்களுடைய வாட்டத்தைப் போக்க சின்னஞ்சிறிய சிறுவர்களுக்கு சத்துணவு திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள் என்று சொன்னாலும் அது மிகையாகாது. 8-வது வரையில் படிக்கின்ற குழந்தைகளுக்கு உணவோடு, புத்தகங்களும், உடைகளும் இலவசமாகக் கொடுக்கிறார்கள். இதையெல்லாம் இங்கே சிறப்பாக எடுத்துச் சொன்னால், இவைகளை ஏற்கெனவே காமராசர் செய்யவில்லையா? எங்களுடைய அரசு செய்ய வில்லையா என்று சொல்கிறார்கள். செய்தார்கள் தான். அதை பாராட்டுகிறோம். ஆனால் நிரந்தரமாக எல்லா மக்களுக்கும் கிடைக்கக்கூடிய அளவுக்கு ஒரு திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள்தான் செய்திருக்கிறார்கள் என்று ஒப்புக் கொள்வதில் தப்பில்லை.

இங்கே கூட ஒரு சர்ச்சையைக் கிளப்பினார்கள். காமராசர் கொண்டு வந்த மதிய உணவு திட்டத்தை சத்துணவு திட்டத்தோடு ஒப்பிட்டுப் பேசினார்கள். எங்கே புரட்சித் தலைவர் அவர்களுக்கு எல்லா மரியாதையும் இந்தத் திட்டத்தினால் போய்விடுமோ என்ற பயத்தில் அதைக் குறைக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் காமராசர் கொண்டு வந்த திட்டம் தான் இது என்றெல்லாம் சொன்னார்கள். இப்படி எல்லாம் மூலத்தைப் பார்க்கப் போனால் உலகத்திலே யாருக்குமே சரியான மரியாதையை நாம் தேடித் தர முடியாது. ஆனால் நிதிநிலை அறிக்கையோடு அந்த திட்டத்தை சேர்த்து அறிவிக்காமல் தனியாக ஒரு திட்டத்தை அறிவித்து அதைத் தொடர்ந்து செயல்படுத்தக் கூடிய அளவுக்கு ஒரு திறமைசாலி என்றால் அது இந்த தமிழகத்தில் மட்டுமல்ல, இந்தியாவிலேயே, ஏன் உலகத்திலேயே அவர் ஒருவரைத் தவிர வேறு யாரும் இருக்க முடியாது என்று சொல்ல முடியும்.

அப்படிப்பட்ட சத்துணவு திட்டத்தை நிறைவேற்றித் தந்த முதல்வர் அவர்கள், அந்த சத்துணவுச் சாப்பிடுகின்ற 8-வது வரையில் படிக்கின்ற குழந்தைகளுக்கு, உணவோடு புத்தகத்தையும், உடையையும் இலவசமாகக் கொடுக்கிறார்கள் என்றால் அது எவ்வளவு மிகச் சிறந்த திட்டம். ஏற்கெனவே ஆதி திராவிட குழந்தைகளுக்கு இலவசமாக புத்தகம் கொடுக்கிற திட்டம் அமலில் இருக்கிறது. ஆனால் இப்படி இந்த திட்டத்தின் மூலம் உணவையும் உடையையும் புத்தகத்தையும் கொடுப்பதன் மூலம் பாரதி கண்ட கனவை நனவாக்கிக் கொண்டிருக்கிறார்கள் புரட்சித் தலைவர் அவர்கள் என்று சொன்னால் அது மிகையாகாது.

தனி ஒருவனுக்கு உணவு இல்லையெனில் ஜகத்தினை அழித்து விடுவோம் என்று சொன்னார் பாரதி. ஆகவே அப்படிப்பட்ட நிலை இருக்கக்கூடாது என்று திட்டத்தை தீட்டியதால், நம் எல்லோருக்கும் எல்லாமும் கிடைக்கிறது. ஆனால் அது நிரந்தரமாக உடனடியாகக் கிடைக்கவில்லையே என்ற ஆதங்கம் கிடைக்காதவர்களுக்கு இருக்கலாம். இன்றைக்கு இருக்கிற பொருளாதார நிலையிலே உடனடியாக எல்லோருக்கும் கிடைக்க





வாய்ப்பு இல்லை. ஆனால் அதற்குண்டான அடித்தளங்களை இன்றைக்கு புரட்சித் தலைவர் அவர்கள் போட்டிருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்த்து நாம் பாராட்ட வேண்டும்.

இப்படிப்பட்ட நல்ல திட்டத்தை நாம் ஒவ்வொரு பகுதியாக விமர்சனம் செய்து பார்த்தால், நிச்சயமாக அதைக் குறை சொல்வதற்கு யாருக்குமே, அதுவும் மனசாட்சி உள்ளவர்களுக்கு மனம் வராது. ஆனால் மற்றவர்களுக்கு எப்படி மனம் இருக்கிறதோ நமக்குத் தெரியாது. ஆகவே இப்படிப்பட்ட நல்ல திட்டங்களை கொடுக்கிற புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியிலே புதிய திட்டங்கள் புதிய தொழிற்சாலைகள் எதுவுமே இல்லையே என்று சிலர் குறைகூறினார்கள். ஆனால் பல புதிய தொழிற்சாலைகள் பல புதிய திட்டங்கள் எல்லாம் அப்படியே பாதியில் கிடப்பதாலே தான் அப்படி தேக்கநிலை போல் தோன்றுகிறது என்றாலும், இவைகள் எல்லாம் தற்போது செயலுக்கு வந்துக் கொண்டிருக்கிறது என்பதையும் நான் உதாரணத்தின் மூலமாகவே சொல்ல முடியும்.

என்னுடைய தொகுதியிலே சீர்காழிக்குப் பக்கத்தில் எருப்பூர் என்ற ஒரு கிராமம், அந்தக் கிராமத்திலே மிகப் பெரிய ஒரு நவீன அரிசி ஆலை வரப்போகிறது. இன்னும் சொல்லப்போனால் தமிழகத்திலே இருக்கிற அரிசி ஆலைகளிலேயே மிகப் பெரிய அரிசி ஆலையாக ஒரு நாளைக்கு 100 டன் நெல்லை அரவை செய்யக் கூடிய ஒரு ஆலையாக, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு என்னுடைய தொகுதிக்கு கொடுத்திருக்கிறது. அதை மாண்புமிகு நாவலர் அவர்கள் உணவுத் துறை அமைச்சராக இருந்தபோது என்னுடைய தொகுதிக்கு அளித்தார்கள். இப்போது தீவிரமாக வேலை நடைபெற்றுக் கொண்டு வருகிறது. அதற்காக உண்மையிலேயே தமிழகத்திலே உள்ள மற்ற சட்டமன்ற உறுப்பினர்களை விட நான் பெருமைப்படுகிறேன். மகிழ்ச்சி அடைகிறேன். மனமார புரட்சித் தலைவர் அவர்களை பாராட்டுகிறேன்.

[திரு. க. பாலசுப்பிரமணியன் [1985 மார்ச் 28

அதே போல என்னுடைய தொகுதியில், கொள்ளிடம் கடலில் கலக்கின்ற இடமாகிய பழையாறு என்ற இடத்திலே மிகப் பெரிய மீன்பிடி துறைமுகத்தை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அனுமதித்து இருக்கிறார்கள். இன்றைக்கு அது செயல்பட்டுக் கொண்டு வருகிறது. என்னுடைய தொகுதியிலே இன்னொரு மூலையிலே இருக்கின்ற திருமுல்லைவாசல் என்ற இடத்தில் இன்னொரு மீன் பிடி துறைமுகத்தை அனுமதி வழங்கி அதுவும் செயல்பட இருக்கிறது. ஆக இப்படிப்பட்ட புரட்சிகரமான சாதனைகள் புரட்சிகரமான தொழிற்சாலைகள் போன்றவற்றை ஏற்படுத்தும் புரட்சித் தலைவர் அவர்கள் இந்த அறிக்கையிலே எதுவுமே அறிவிக்கவில்லையே என்று சில உறுப்பினர்கள் கேட்டார்கள். இதுவரையில் அறிவித்து இருப்பவைகள் அனுமதி கொடுத்தவைகள், மத்திய அரசு முறையாக அனுமதி வழங்கி, முறையாக நமக்கு ஒதுக்க வேண்டிய தொகைகளை வழங்கினார்கள். அவ்வாறு வழங்கினால் நிச்சயமாக நல்ல முறையிலே தமிழக அரசு செயல்படும் என்பதில் ஐயமில்லை. தமிழக அரசிற்கு மைய அரசு கொடுக்க வேண்டிய தொகைகளை கொடுத்தாலும், மைய அரசு சில விகிதாச்சார கணக்குகளை எடுத்து இருக்கிறது. குடும்ப கட்டுப்பாடு திட்டத்திலே நாம் முன்னேறியிருக்கிறோம், 20 அம்சத் திட்டம் செயல்படுத்துவதிலே நாம் நல்ல முன்னேற்றம் காட்டி இருக்கிறோம். அப்படி இருந்தும் கூட தமிழக அரசுக்கு கிடைக்க வேண்டிய தொகை, மைய அரசிடமிருந்து கிடைக்கவில்லை. அது மைய அரசினுடைய குறையா அல்லது மைய அரசிலே பணிபுரிகின்ற, தமிழகத்தை புறக்கணிக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்ட சில அதிகாரிகளின் குறையா, யாருடைய குறை என்பது தெரியவில்லை. நான் இதை சொல்வதற்கு காரணம், மாண்புமிகு காங்கிரஸ் பேரியக்கத்தைச் சார்ந்த உறுப்பினர்களும், மற்றவர்களும், தமிழக அரசு வைத்திருக்கின்ற திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு உறுதுணையாக இருந்து, தமிழகத்தை மேலும் முன்னேற்றுவதற்கு உதவி புரிய வேண்டும். அதிலே எனக்கு சந்தேகம் இல்லை. அப்படிப்பட்ட தலைவர்கள்,



1985 மார்ச் 28] [திரு. க. பாலசுப்பிரமணியம்]

திறமைசாலிகள் இங்கே இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் சேர்ந்து செயல்பட்டு தமிழகத்தை, புரட்சித் தலைவர் அவர்கள் பாதையிலே, முன்னேறச் செய்வதற்கு மிகவும் உறுதுணையாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நிதி நிலை அறிக்கையிலே, புரட்சித் தலைவர் அவர்களுடைய புரட்சிகரமான திட்டங்களை இங்கே சொல்லும் போது மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். தமிழகத்திலே போலிச் சாமியார்கள் அதிகமாக இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். நான் அவர்களுக்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். போலிச் சாமியார்கள் போல், போலி மடாதிபதிகள் இருக்கிறார்களே, அவர்களை ஏன் மறந்து விட்டார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை. ஆக மடாதிபதிகள் கூட, போலித்தனமாக அரசியல்வாதிகள் கூடாரத்தில் நுழைந்துக் கொண்டு, தாங்கள் தப்பித்துக்கொள்ள முயற்சி செய்கிறார்கள். அத்தகையவர்களை தமிழக அரசு முனைப்பாக கண்காணிக்க வேண்டும். ஆக, சாமியார்கள், அல்லது மடாதிபதிகள், அல்லது அரசியல்வாதிகள் யாராக இருந்தாலும் போலிகளை களைந்து, நல்லவர்களுக்கு வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து காவேரி நீர் தமிழகத்திற்கு கொண்டு வருவதிலே தமிழக முதல்வர், புரட்சித் தலைவர் இன்றைக்கு இருக்கின்ற மாண்புமிகு கர்நாடக முதல்வரிடம் பேசி திட்டங்களை செயல்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். புரட்சித் தலைவர் இந்தத் தடவை நிச்சயமாக வெற்றி பெறுவார்கள். ஏனென்றால் நம்முடைய புரட்சித் தலைவர் எந்த அளவிற்கு, நம் பக்கத்திலே இருக்கின்ற அண்டை மாநிலங்களுக்கு மதிப்பு கொடுத்து இருக்கிறார்கள் என்பதை இந்தியாவே அறியும். ஆகவே, காவேரி நீர்ப்பிரச்சனையில் அவர் நல்லமுறையில் தீர்வு காண்பார். தமிழக மக்கள் குறிப்பாக என்னுடைய தஞ்சை மக்கள், நல்ல முறையில் சீரும் சிறப்புமாக விளங்குவதற்கும், விவசாயிகள்

[திரு. க. பாலசுப்பிரமணியம்] [1985 மார்ச் 28

மேலும் உற்பத்தியை பெருக்குவதற்கும் தமிழகத்திற்கும், மத்திய அரசுக்கும் அதிகமான வருவாயை ஈட்டித்தருவதற்கும் வழி வகை செய்த புரட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, இந்த வாய்ப்பினை அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (29—3—1985) காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-20 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 6. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

131. தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு கள் மற்றும் சாராய கடைகள் (ஏல முறையில் விற்பனை செய்தல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து மதுவிலக்கு—ஆயத் தீர்வைத் துறையின் 4—9—1984 ஆம் நாளிட்ட 1183 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

132. தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் தலைவராக திரு. என். வி. என். செல்வம் அவர்களை நியமிப்பது குறித்து வீட்டு வசதி—நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 7—9—1984 ஆம் நாளிட்ட 747 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு குடிசைப் பகுதிகள் (மேம்பாடு—அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 41-வது பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]



1985 மார்ச் 28]

133. தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் அலுவல் சார்பற்ற உறுப்பினர்களாக இருவரை நியமிப்பது குறித்து வீட்டு வசதி—நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 9—10—1984 ஆம் நாளிட்ட 848 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு குடிசைப் பகுதிகள் (மேம்பாடு—அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 41-வது பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

134. ஈரோடு, கொடுமுடி மற்றும் சிவகிரியைச் சேர்ந்த அறிவிக்கப்பட்ட அங்காடிகள் பகுதிகளிலிருந்து சில கிராமங்களை நீக்கம் செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 18—1—1985 ஆம் நாளிட்ட 54 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்.

எதுவுமில்லை.

D
V211,51 N85
N85-4-1 92
136376
சென்னை-600 008.